தமிழர் சரித்திரம்

(இரண்டாம் பதிப்பு)

ஆக்கியோன் :
யாழ்ப்பாணத்து நவாலியூர்
திரு. ந. சி. கந்தையா பிள்ளை.

வெளியிடுவோர் :
ஒ ற் று மை ஆ பீ ஸ்,
தியாகராயநகர் : மதராஸ்.
1947.

ஆசிரியருக்கே] [விலை ரூ. 3.

Printed at the
Sri Magal Vilasam Press,
G. T. Madras.

Q. H. M. S. No. 85. C. 1000. 5-2-47.

UNIVERSAL LIBRARY
OU_208059
UNIVERSAL LIBRARY

முன்னுரை.

தமிழர் பழஞ் சரித்திரத்தை ஆரம்பத்திலிருந்து கூறும் தமிழ் நூல்கள் இல்லை. பழந்தமிழ் மக்களைக் குறித்தும், இடைக்காலத்தில் வந்து அவர்களோடு கலப்புற்ற ஆரியரைப் பற்றியும் தமிழ் மாணவரும் பிறரும் தெளிவாயறியுமாறு இந்நூல் எழுதப்படலாயிற்று. தமிழரின் சிந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம் முதல் (கி.மு. 5000) கிறித்துவுக்குப் பின் சில நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட காலம் வரையிலுள்ள நாகரிகம், மொழி உற்பத்தி, வாழ்க்கை முறை, சமயம் ஆதியவற்றை விளக்கமாக இந்நூல் கூறுகின்றது.

இவ்வுலகம் முழுமையிலும் வாழ்ந்த பழைய நாகரிக சாதியாருள் தமிழ்ச் சாதியாரே தொன்மையுடையவர்களென்பதும், அவர்களுடைய தமிழ்மொழியும் சிவமதமும், பிறமொழிகளும் சமயங்களும் தோன்றுவதன் முன் ஞால முழுமையும் பரவியிருந்தனவென்பதும் இந்நூலைக் கற்குந்தோறும் உள்ளத்தில் உறுதிப்படுவனவாகும்.

ஐயுறவுக்கு ஏதுவான பொருள்களைத் தக்கமேற்கோள்கள் காட்டி வலியுறுத்தியிருக்கின்றேம். தமிழ் மக்கள் தம் முன்னோரின் வரலாறறை எளிதிற் கற்றறிய வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் இந்நூல் எழுதப்படலாயிற்று.

நவாலியூர்
தமிழ் நிலையம்
5-3-1939.

ந. சி. க.

FOREWORD

BY

NALLUR, SWAMI GNANAPRAKASAR

(Author of "Etymological and Comparative Lexicon of the Tamil language; President : Jaffna Historical Society; Vice-President: Jaffna Oriental Studies Society; Member Royal Asiatic Society. C. B.)

No history of the Tamil people, worth the name, has been so far written in their own language. Only sporadic attempts are made from time to time, to put together anything like a connected narrative of the origin, progress, culture, &c. of the Tamil race, which, nevertheless, boasts of one of the oldest civilizations in the world. There are, indeed, many scholarly views on the Tamils and their history expressed by a number of writers in English. But they are not available to readers who know Tamil only. To all such, Mr. N. S. Kandiah Pillai has done a great service in this work, by bringing together views and conclusions on this subject scattered in various English writings, and adding to them a vast quantity of historical or quasi-historical material from the ancient Tamil classics known as Sangam works.

Although a small volume intended for the ordinary reader, it is a *multum in parvo* presenting a good summary of all that is known about the Tamils at the

present moment. Mr. Kandiah Pillai is a serious student of ancient history, and this is not the first book that has come out from his fertile pen. He is not afraid to depart from traditional beliefs where critical research has proved them false. His Tamil is simple and easy, but forceful. It makes a striking contrast with the highly involved bombastic style of a certain type of Tamil writers.

I should like to see this work in the hands of every Tamil teacher, who is sure to derive from it a wealth of information on things he ought to know. Many a hard passage in the classics will be easily explained by a knowledge of the customs and habits of ancient Tamil land. Another excellent idea would be, I think, to introduce this work into Tamil Training schools so as to give the students an early taste for making researches in the history for their own land. A great drawback among students coming out from Tamil schools is the want of a spirit of research. Works of this kind should be encouraged more and more, if one wishes to turn out young men with a spirit of enquiry and zeal for further study.

பொருளடக்கம்.

பக்கம்.

1. மனிதனின் தொன்மை 1
2. தமிழர் உற்பத்தி 5
3. மத்திய ஆசிய அல்லது சீதிய உற்பத்தி ... 6
4. மங்கோலிய உற்பத்தி 7
5. இந்து ஆபிரிக்க அவுஸ்திரேலிய உற்பத்தி ... 8
6. மத்திய தரைக் கடலுற்பத்தி 9
7. P. T. ஸ்ரீனிவாச ஐயங்காரின் கொள்கை ... 9
8. இலங்கை யுற்பத்தி 9
9. சிந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம் ... 10
10. சுமேரியர் தமிழரே 22
11. சரித்திர காலத்துக்கு முற்பட்ட தென்னிந்திய சமாதிகள் 24
12. இந்திய மொழி 26
13. பிறநாடுகளில் வழங்கும் தமிழோடு உறவுடைய மொழிகள் 28
14. தமிழரின் இந்திய உற்பத்தி 30
15. ஆரியருந்தமிழரும் 32
16. பாரதம் 30
17. இராமாயணம் 34
18. ஐவகை நிலம் 36
19. குறிஞ்சி 39
20. குறிஞ்சி நிலத் தோற்றம் 44
21. முல்லை நிலமக்கள் 46
22. முல்லை நிலத்தோற்றம் 52
23. மருத நிலமக்கள் 53

24. மருத நிலத்திலுள்ள பாணர் குடியிருப்பு 58
25. நெய்தல் நிலமக்கள் 59
26. பாலை நிலமக்கள் 64
27. தொழில் பற்றிய சாதிகள் 70
28. அந்தணர் 71
29. அரசர் 76
30. அரசனது கோயில் 81
31. பாசறை 82
32. வணிகர் 85
33. வேளாளர் 87
34. மேலோர் 89
35. கீழோர் 90
36. அந்தணர் பார்ப்பார் என்போர் தமிழ்மக்களே. 91
37. மெகஸ்தினும் இந்தியாவும் 92
38. இந்திய மக்களின் பழக்க வழக்கம் ... 95
39. அரசாங்க அமைப்பு 98
40. தத்துவ சாத்திரிகள் 100
41. கடவுட் கொள்கை 106
42. திருமால் ... ... ,,
43. முருகன் 109
44. வருணன் 111
45. இந்திரன் 112
46. கொற்றவை ... ... ,,
47. நாற்பெருங் கடவுளர் 113
48. சிவ வழிபாடு 114
49. மிருகபலி 115
50. வேதம் 119
51. தமிழ் மதம் 120
52. மொழி 122

53.	எழுத்து	...	...	123
54.	பாடல்களின் ஆரம்பம்	...	...	128
55.	தமிழ்ச் சங்கம்	...	...	130
56.	சங்க நூல்கள்	...	...	133
57.	பத்துப்பாட்டு	...	...	,,
58.	எட்டுத் தொகை	...	...	134
59.	அகத்தியர்	...	...	139
60.	தொல்காப்பியம்	...	...	138
61.	சிலப்பதிகார காலம்	...	...	141
62.	தமிழர் நாகரிகச் சிறப்பு	...	...	145
63.	வாணிகம்	...	...	,,
64.	உழவு	...	...	156
65.	கைத்தொழில்	...	...	158
66.	சிற்பம்	...	...	161
67.	ஓவியம்	...	...	,,
68.	வான ஆராய்ச்சி	...	...	162
69.	மருந்து	...	...	165
70.	நகர்	...	...	166
71.	கோட்டை	...	...	167
72.	ஆரியர் தமிழர் கலப்பு	...	...	171
73.	,,	...	...	175
74.	சிலகுறிப்புக்கள்	....	...	223

யாழ்ப்பாணத்து நவாலியூர்

திரு. க. சோமசுந்தரப்புலவர்

(உயிரிளங்குமரன், தாலவிலாசம், இலங்கைவளம்
முதலிய பலநூல்களின் ஆசிரியர்)

தந்த

மதிப்புரை

இந்நிலவுலகத்திலே நாகரிக வாழ்க்கையில் வளம்பட்டு விளங்கிய மக்களுள்ளே, தமிழ் மக்களே தலைசிறந்தோரா வர். அவர் தம் வரலாற்றைத் திட்ப நுட்பமாக எழுதினோர் ஒருவரும் இல்லையென்றே கூறலாம். ஒரு சிலர் தமது நோக்கங்களை நிறைவுபடுத்த வேண்டி யுண்மைகளுக்கு முழு வதும் விரோதமாக எழுதுகின்றனர். மேல்நாட்டு அறிஞர் களும் தமிழ் நாட்டு அறிஞர்களும் பழந்தமிழரின் வரலாற் றிலே ஒரு சில துறைகளை மாத்திரம் ஒருவாறு காலவரை யறைப் படுத்தி யெழுதினர். மொழி வளர்ச்சி, நூல்களின் வரலாறு, நூற்கொள்கை, புலவர் காலம் என்ற இத்துறை களிலே ஆராய்ச்சி செய்கின்ற அறிஞர்கள் தக்க ஏதுக்கள் காட்டி ஆராய்ந்து உண்மைகளை வெளியிட முடியாமை யினாலே தமிழரின் வரலாறு நாடோறும் மாற்றமடைந்து செல்லாநின்றது.

இவைகளை யெல்லாம் கருத்திற் பதியவைத்துத் தமிழர் வரலாற்றை வெளிப்படுத்தக் கருதிய நவாலியூர் பண்டிதர் திரு. ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் ' தமிழர் சரித்திரம் ' என்னும் இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். ஒரு பூஞ்சோலையிலே யுள்ள பல்வேறு மலர்களிலும் ஒரு வண்டு சென்று படிந்து ஆங்காங்குள்ள தேன்றுளிகளை யெல்லாம்

பலநாள் முயன்று எடுத்து ஓரிடத்தே தொகுத்துவைத்துப் பிறருக்குப் பயன்படச் செய்வதுபோல, இந்நூலாசிரியரும் மேலைப் புலவறிஞரும் தமிழ் நாட்டறிஞரும் ஆங்காங்கே கூறிய பொருளுரைகளாகிய தேன்றுளிகளை யெல்லாம் முயன்று தொகுத்துத் தமது மதி நுட்பங்களையும் ஆங் காங்கே காட்டி இந்நூலைப் பிறருக்குப் பயன்படுமாறு வெளியிட்டிருக்கின்றார்கள்.

இந்நூலாசிரியர் போன்ற ஆராய்ச்சியாளரைத் தமி ழுலகு ஆதரியாது விடுதலினாலே தமிழில் வரலாற்று நூல்கள் வெளிவராதிருக்க வேண்டியதாகின்றது.

இந்நூல் தமிழ்மக்களின் வரலாற்றை ஒரு கண்ணாடி போல இனிது புலப்படுத்துகின்றது. இது கல்லூரி மாண வருக்கும் ஆராய்ச்சியாளருக்கும் நூல் நிலையங்களுக்கும் மிக்க பயன்தருமென்று எண்ணுகின்றேன்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	F. N 1	discoveres	discoveries
1	,, 4	Inihe	In the
3	,, 2	fiuman	human
3	,, 10	pithecanthropus	pithecanthropus - erectus
3	,, 17	sinc	since
4	;; 6	ot	to
10	,, 7	Brahmala	Brahma a
15	;, 7	மாத்திரமன்று.	மாத்திரமன்று
20	,, 21	வசனநூற்	வானநூற்
20	F. N 9	sight	Light
25	7	வெங்கலம்	வெண்கலம்
39	23	அக்காமக்களா	அக்காலமக்கள்
49	15	வேவி	வேலி
52	7	ஆலங்கட்டி	ஆலாங்கட்டி
61	3	எற்றிதற்கு	எற்றுதற்கு
61	22	விளக்கின்ற	விளங்குகின்ற
65	2	குத்தியதால்	குத்திய
69	19	துடிகொல்லும்	துடிகொட்டும்
69	21	(கன்னுடை)	
74	2	பெயர்	பெயர
75	26	தாமிண்ணின்	தாமுண்ணின்
113	1	தத்துக்	தத்துவக்
120	3	பாடங்களை	பரடல்களை
10	5	பேரொழுக்கம்	போரொழுக்கம்
187	19	பாடங்களை	பாடல்களை
137	20	,,	,,

தமிழர் சரித்திரம்

1 பழமை

மனிதனின் தொன்மை.

இந் நிலவுலகில் மனிதன் * இலட்சக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றான். அவன் காலந்தோறும் வாழ்க்கையிற் றிருத்தமுற்றுப் பலவகை நாகரிகங்களுக் கூடாக வந்திருக்கின்றான். அவனது முற்பருவத்து வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளுதற்குரிய ஆதாரங்கள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. மனிதன் கற்கால நாகரிகத்தில் இருந்தகாலத்துப் பயன்படுத்திய கல்லாயுதங்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றையும், சரித்திர காலத்துக்கு முற்பட்ட சமாதிகளிற் கிடைத்த பொருள்களையும் கொண்டு மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்தது முதல் படிப்படியாக நாகரிகத்தில் வளர்ச்சியடைந்து திருத்தமடைந்தது வரையிலுள்ள வரலாறுகளை ஆராய்ச்சியாளர் வகுத்தெழுதியிருக்கின்றனர்.

§ சாமுவேல் லயங் என்னும் ஆசிரியர், "மனிதனின் தொன்மை" என்னும் நூலிற் கூறியிருப்பது வருமாறு:

---

* "Recent discoveres have eatablished the fact that the years of man's career must be estimated in hundreds of thousands and probably even more than a million "—Inihe beginning—The origin of cvilization-Prof Elliot Smith.

§ Samuel Liang—Antiquity of man.

மனிதன் இம் மண்ணுலகில் எல்லையில்லாத காலம் வாழ்ந்து வருகின்றானென்றும், அவன் காட்டுமிராண்டியா யிருந்து அறிவிலும் ஒழுக்கத்திலும் நாகரிகத்திலும் படிப் படியாக முன்னேறி வந்திருக்கிறானென்றும் தற்கால ஆராய்ச்சிகளால் வெளியாகின்றன. உலோக காலத்துக்கு முன் கற்காலம் இருந்ததென்பது நெடுநாளாக அறிந்த உண்மை. தீத்தட்டிக் கற்களாற் செய்த அம்புத்தலை, கற்கோடரி, கத்தி, உளி முதலிய ஆயுதங்களும் முரடான பானை சட்டிகளும், மனித எலும்புகளும் நிலத்தின் மேற் பாகங்களிலும், சமாதிகளிலும் கண்டெடுக்கப்பட்டன. பயிர்த் தொழில் விருத்திபடைதலும் சாதிகள் மறைந் தன.

"மனிதன் பூமியில் தோன்றிய காலத்தைப் பத்தாயி ரக் கணக்கான அல்லது நூறாயிரக்கணக்கான வருடங்களைக் கொண்டு அளவிடவேண்டுமென்று தெரிகின்றது. மேற்கு ஐரோப்பா தொடக்கம் திபெத் வரையிலும், மத்திய அவுஸ் திரேலியாவிலும், பனிக்கட்டிக்காலத்துப் பனி மூடியிருந்த வடபகுதிகளல்லாத பிறவிடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட மனிதன் பயன்படுத்திய கல்லாயுதங்கள் பதினாயிரக் கணக் கான நூதன பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட் டிருக்கின்றன. பாபிலோனிய கட்டிடங்கள் 9000 வரு டங்களுக்கு முற்பட்டனவென்று சொல்லப்படுகின்றன. மனிதன் இவ்வுலகில் உயிர்வாழத் தொடங்கியதில் இது ஒரு சிறு பகுதி எனக்கூறலாம்."

யாவாவிலுள்ள சோலோ ஆற்றங்கரையில் ஒரு மனித மண்டையோடும், இடது தொடை எலும்பும், இரண்டு கொடுப்புப் பற்களும் * யூகின் தூபோயிஸ் என்பவரால்

* Dr. Eugene Dubois.

1894-ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. அவ்வெலும்புக் குரிய யாவா மனிதனை நிமிர்ந்து நிற்கும் குரங்கு மனிதன் என்னும் பொருளில் 1 'பித்திகந்தரோபோஸ் எறக்டஸ்' என மக்கள் நூலார் கூறுவர். இந்த யாவா மனிதனின் காலம் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு அப்பாற்பட்ட தெனப்படுகின்றது. 2 யாவா மனிதனுக்கு அடுத்தபடியிலுள் ளவன் 'பீக்கிங் மனிதன்'3 இவனுடைய எலும்புகள் சீனாவி லுள்ள பீக்கிங் என்னுமிடத்திற் கண்டெடுக்கப்பட்டன. இம்மனிதனை மக்கணூலார் 'சினன்துரோபோஸ்' 4 என வழங்குவர்.

சமீபத்தில் யாவா மனிதனுக்கும் முற்பட்ட காலத்து ஒரு பெண்ணின் மண்டையோடும் கீழ்வாயெலும்பும் கண் டெடுக்கப்பட்டன. இவை மனிதனுடைய பழைமையை இன்னும் சில நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பாற் கொண்டுபோய்விடுகின்றன. 5

---

1 Pithecanthropus erectus.

2 The human being of whom we have any knowledge is the man of Java, whom as Pithecanthropus, became of his strong likeness to the apes. He lived probably about a million years ago.—Men of Dawn P. 40.

3 Peking man. 4 Sinanthropus.

5 "The Java anthropologist Kolningo Wald has recently found another example of prehistoric man, a female skull and mandible of Pithecanthropus. The prehistoric congress of the far east, recently held at Singapore was thrilled by the claim that Pithecanthro pus, the Java pre-historic man was probably older than Sinanthropus, the Peking prehistoric man. If investig- ation and discussion lead to general adoption of this opinion, the antiquity of prehistoric man must be put back further than at present considered probable sinc

மனிதன் எவ்வளவு காலத்துக்கு முன் இவ்வுலகிற் றோன்றி வாழ்ந்து வருகின்றானென்பது அறிய முடியாமலிருப்பது போலவே அவனது நாகரிகம் எப்போது ஆரம்பமாயிற்றென்பதும் அறியமுடியாமல் இருக்கின்றது.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட எகிப்திய சமாதிகள் இன்று உலக அதிசயங்களுள் ஒன்றாக விளங்குகின்றன. பல்லாயிர மாண்டுகளாக அங்கு வாழ்ந்த பின்னரே அம்மக்கள் பிரமாண்டமான கட்டடங்களை அமைக்கும் அறிவினைப் பெற்றிருப்பார்கள். எகிப்திய மக்கள் சிவப்படைந்த கபில நிறமுடையவர்களா யிருந்தார்கள். அக்காலத்து எகிப்தியர் அறிந்திருந்த மக்கட்சாதியினரின் உருவங்கள் முகவெட்டோடு நிறமும் புலப்படும்படி நிறமைகளால் சமாதிகளின் சுவர்களில் வரையப்பட்டிருக்கின்றன. இதனால் இக்காலத்தைப்போலவே அக்காலத்தும் தோற்றத்தால் வேறுபட்ட பலமக்கட் கூட்டத்தினர் வாழ்ந்தார்களென அறிகின்றோம்.

தார் நிறமனிதன் முதல் வெண்ணிற மனிதன் வரையில் உள்ள எல்லாச் சாதியினரும் ஒரே உற்பத்தியைச் சேர்ந்தவர்களென்றும், வாழும் இடங்களின் வெப்பதட்ப நிலை, உணவு, பழக்க வழக்கம் ஆதியவற்றால் ஒரே மக்கட் கூட்டத்தினர் பல கூட்டத்தினராகப் பிரிகின்றனரென்றும் மக்கணூலார் கூறுவர் 6. இவ்வாறு மக்கட் கூட்டத்தி

sinanthropus, the Peking prehistoric man is placed a million years ago. If the Java pre-historic man is older the antiquity of man is still greater by a few hundred thousand years—Daily News-Ceylon.

6 First, that all tribes of men from the blackest ot the whitest, the most savage to the most cultured

னர் பல இனங்களாகப் பிரிந்து வாழ்தற்கு மிகநீண்ட காலம் எடுத்திருக்கவேண்டுமென்பதிற் சந்தேகமில்லை.

இப்பொழுது உலகில் வழங்குகின்ற பிரதான மொழிகள் ஆயிரம் வரையில். அவற்றை லாத்தின் கெபுரு ஆரியம் திராவிடம் என்பனபோற் சில இனங்களாகப் பிரித்துவிடலாம். இச்சில இனங்கள் பின்சில இனங்களுள் அடங்கும். இவ்வினங்கள் இறுதியில் ஒன்று அல்லது இரண்டில் அடங்கும். மொழிநூலார் இவ்வுண்மையை நன்காராய்ந்து கூறுகின்றனர். மக்கட் தோற்றம் ஒன்றுனது போலவே ஆதியிற்றோன்றிய மொழியும் ஒன்றே என்பதும் புலனுகின்றது. ஒரு மொழியே ஆயிரக்கணக்கான மொழிகளாகத் திரிந்து வழங்குவதற்கு மிகநீண்ட காலம் வேண்டுமென்பது இதனுலும் பெறப்படும்.

தமிழர் உற்பத்தி

ஆராய்ச்சியாளர் தமிழரின் உற்பத்தியைக் குறித்து ஒரு தலைப்படக் கூறுது பல திறப் படக் கூறியிருக்கின்றனர். அவற்றை அறிதல் தமிழர் சரித்திரத்தின் சில பகுதிகளை விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரியும். அவற்றுட் பிரதானமான சில கொள்கைகளைக் கூறுகின்றேம்.

---

have such general likeness in the structure of their bodies and the working of their minds, as is easiest and best accounted for by their being descended from a common ancestry—Anthropology Sir. E. B. Tylor Kt. P 4.

" The whole migrating tribes underwent bodily alteration through change of climate, food, and habits, so that the peopling of the earth went on together with the growth of fresh races—Ibid. P. 5.

1. மத்திய ஆசிய அல்லது சீதிய உற்பத்தி

மத்திய ஆசியாவில் வாழ்ந்த ஓரின மக்கள் *சீதியரென்றழைக்கப்படுவர். சீதிய உற்பத்திக்கொள்கை கால்ட்வெல் பாதிரியாரால் கொண்டுவரப்பட்டது. இதற்கு ஆதாரம் இருமொழிகளுக்கும் பொதுவாயுள்ள இலக்கணம், சொல், நாசிவழியாய்ப் பிறக்கும் எழுத்தொலிகள் ஆகிய சிலவற்றின் ஒற்றுமைகளாகும். அவர் கூற்றின்படி, மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த ஆரியரல்லாத துரானிய வகுப்பினர் இமய மலையின் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவை அடைந்தனர். இவர்களுக்குப் பின் படை எடுத்து வந்த ஆரியர் இவர்களை வென்று தெற்கே துரத்தினார்கள். இக்கொள்கையை மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் பலர் ஆமோதித்திருக்கின்றனர். தற்கால ஆராய்ச்சியின்படி மற்றைய வகுப்பினரிலும் பார்க்கத் தமிழர் காக்கேசிய அல்லது இந்து ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். றேயின்ஹோல்ட் றோஸ்ட் (Reignhold Rost) என்னும் ஆசிரியர் மக்கிலின் (Macleane) கூறியதை எடுத்துக் காட்டித் தமிழர் சீதிய இரட்டை வகுப்பில் ஒருவரெனக் கொள்ளுதல், மக்களினங்களைக் குறித்து ஆராயும் எல்லா ஆராய்ச்சியாளராலும் மறுக்கப்படுகின்றது, என மொழிவர். யூலியன் வின்சன் என்னும் ஆசிரியர் (Prof. Julian Vinson) தமிழர் சீதிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்னுங் கொள்கை நம்பக்கூடாத மூடத்தனமானது எனக் கூறினர். கோவர் என்னும் ஆசிரியர் (C. F. Gover) கால்ட் வேல் பாதிரியார் காட்டிய சீதிய தமிழ் இலக்கண ஒற்றுமைகளை ஆராய்ந்து காட்டித் தமிழர் துரானிய வகுப்பினரல்லரெனக் காட்டுவர். வாறர் என்னும் ஆசிரியர் (Mr. Farrar) இலக்கியம் சரித்திரம் முதலியன

* Seytheans

இல்லாத ஒரு சாதியாரைக், கோட்டைகளையும் நிலைபா மான அரசியலையும், பிரமாண்டமான ஆலயங்களையும் உடையோரும், வான சாத்திரம், உழவு, சிற்பம், நெசவு திருத்தமான மொழி, இலக்கியம் நீதி நூல் முதலிய நாகரி கத்தின் சின்னங்களைப் பெற்றிருந்தோரு மாகிய தமிழரோடு ஒப்பிடுதல் தகா தெனக் கூறுவர்.

2. மங்கோலிய உற்பத்தி.

திபெத்தினின்றும் இந்தியநாடு போந்த மங்கோலிய வகுப்பினரே தமிழர் என 1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் என்னும் நூல் எழுதிய கனக சபைப் பிள்ளையவர் கள் சாதித்தனர். இக் கொள்கையை வெர்குசன் (Mr. Fergusson) ஹன்டர் (Sir. W.W. Hunter) மாஷ்மன் (Mr. Marshman) முதலிய ஆசிரியர்கள் ஆமோதித்திருக் கின்றனர். மக்கள் இனத்தைக் குறித்த ஆராய்ச்சியால் இக் கொள்கை அங்கிகாரம் பெறவில்லை. மொழியின் ஒலி சம் பந்தமாகிய ஆதாரமும் உறுதிப்படவில்லை. திபெத்திலுள்ள மங்கோலிய மொழிகளில் தமிழ்ழ்க்காணப்படுவது போலவே, ழ, ஞ, ங முதலிய எழுத்தொலிகள் காணப்படுதலும் சேரர் வானவர் எனப்படுவது போலச் சீனர் வானவர் எனப்படு தலுமாகிய இவையே தமிழர் மங்கோலிய வகுப்பினர் என்று கொள்வதற்குரிய ஆதாரங்களாகும்.

3. சுமேரிய உற்பத்தி.

தமிழரைச் சுமேரியர் எனச் சாதித்தோர் டாக்டர் ஒப் பேட், டண்டிதர், சவரிராய பிள்ளை ஆதியோராவர். இக் கொள்கையின்படி, சுமேரியர் பாரசீகக் குடாக்கடல் வழியாக வும், போலன் கணவாய் மார்க்கமாகவும் இந்தியாவை அடைந்து மேற்குக் கடலோரத்திலும், வட இந்தியாவி லும் குடியேறினர். இக்கொள்கைக்கு ஆதாரம் சுமேரியா

வுக்கும் இந்தியாவுக்கும் பொதுவாகிய சலப்பிரளயத்தைக் குறிக்கும் புராணக் கதையும், இரு நாடுகளுக்கும் பொதுவாகிய *எல்லமென்னும் மலைப் பெயரும், சுமேரிய மொழிக்கும் தமிழுக்கு முள்ள ஒலி ஒற்றுமையுமாகும். நோவாவின் பேழை எல்லம் அல்லது எல்மொன்ட் மலையிற் றங்கியதாகச் சுமேரிய வரலாறு கூறுகின்றது. இக்கொள்கையின்படி தமிழர் மெசபொதேமியாவிலிருந்து வந்தவராவர்.

4. இந்து ஆபிரிக்க ஆவுஸ்திரேலிய உற்பத்தி

இக் கொள்கையின்படி, இந்து சமுத்திரத்தினூடே, இந்தியா தென்னாப்பிரிக்கா ஆவுஸ்திரேலியா சீனு முதலிய நாடுகளைத் தொடுத்துக்கொண்டிருந்த பூகண்டத்தினின்று இந்தியாவை அடைந்தவர்களே தமிழராவர். இக் கொள்கையை ஆதரிப்போர் குறுக்ஸ் (Crooks) கின் (Keane) மொறிஸ் (Morris) என்னும் ஆசிரியர்களாவர். இந்து சமுத்திரத்தினூடே கிடந்த பூகண்டத்துக்கு லெமூரியா எனப் பெயரிட்டனர் ஹேக்கல் என்னும் பண்டிதர். லெமூரியாக் கண்டத்திலேயே மக்கள் உற்பத்தி ஆதியில் ஏற்பட்டதென்றும், லெமூரியாவே பழைய தமிழகமென்றும் தக்க காரணங்கள் காட்டிச் சாதித்தனர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள்.

5. மத்தியதரை உற்பத்தி

இக் கொள்கையின்படி மத்திய தரைக் கடலை அடுத்த நாடுகளிலுள்ள சாதியார் மெசபொதேமியாவிற் றங்கிப் பின் பலுசிஸ்தானம் வழியாக இந்தியாவை அடைந்து குடியேறினர். இது சுமேரிய நாகரிகம் உதயமாவதற்கு

* இளாவிருதம் மேருவின் சிகரத் தொன்று. எல்லவிருதம் இளா விருதமாயிற்றுப் போலும்.

முற்பட்ட செய்தி. சரித்திர காலத்துக்கு முற்பட்ட இந்திய சமாதிகளும், கிறீற், சைபிரஸ், அனடோலியா பபிலோனியா முதலிய மத்தியதரைக் கடலை அடுத்த நாடுகளின் சமாதிகளை ஒத்திருக்கின்றன. இக் கொள்கையை சிலாற்றர் (Dr. Slater) யேம்ஸ் ஹோர்ணல் ((James Hornell) முதலியோர் ஆதரிப்பர்.

கிறீற்றினின்றும் புறப்பட்டுச் சின்னாசியாவிலும் மெசபெதோமியாவிலுந் தங்கிச் சுமேரியரோடு பழகியவர்களாய்ச் சிந்துநதி தீரத்து வந்து தங்கிய மத்தியதரைச் சாதியாராகத் தமிழர் காணப்படுகின்றனர் என டாக்டர் சற்றேசி (Dr. Catterjee) என்னும் ஆசிரியர் சாதிப்பர்.

6. P. T. ஸ்ரீனிவாச ஐயங்காரின் கொள்கை

இவ்வாசிரியரின் கொள்கைப்படி ஆதிகாலந் தொட்டுத் தமிழர்கள் இந்திய நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். மனித உற்பத்தி ஆதியில் தண்டகாரணியத்துக்கும் கடலுக்கும் இடையில் ஏற்பட்டதென ஒரிடத்துக் கூறியிருக்கின்றனர். *

7. § இலங்கையுற்பத்தி

இக் கொள்கையின்படி மனிதன் ஆதியில் இலங்கையிலே உற்பத்தியாகி யாவா முதலிய நாடுகளுக்குச் சென்

* "Man therefore most probably rose and grew in the comparatively narrow strip of coast between the jungle (Dandakaraniam) and the Indian ocean"— Stone age in India P. 3.

§ "Dr. Dubois discovered in 1894 in Java the bones of what then was considered to be the most primitive man a kind of missing link. The tropical origin of man has gained some support from tradition. The origin of man in ceylon according to the old tradi-

றிருக்கின்றான். யாவா ளியருடைய பழைய நூல் ஒன்று, ஆதாமின் வமிசத்திலுள்ள பிரமா யாவாவிற் சென்று மக்கட் சந்ததியைப் பெருக்கினார் என்று கூறுகின்றது. இலங்கையி லுள்ள ஆதம்பாலம் ஆதம்மலை முதலியன இக் கொள் கைக்கு ஆதாரமாகும்.

"இதை (ஆதாம்மலையை) ஆதிபெற்றோர் சாபம் பெற்றபின் வாழ்ந்த இடமெனக்கொள்வர் அராபியர். பூர்வ கிறிஸ்தவர்கள் ஆதம் ஏவாள் இவ்விடத்திற் செழித்து வளர்ந்த ஒரு தருவின் கனியைப் புசித்து ஒரு விசாலித்த இலையை உடுத்தார்களென்றனர். இதன் சிகரத்துக்குச் செல்லும் பாதைகளுள் இலேசான பாதையை (ஆதாம் ஏறிச் சென்றதாதலால்) பிதாவின் பாதை என்றும் அழைப்பர். *

8. சிந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம்.

சிந்து நதிப் பள்ளத்தாக்கில் அரப்பா மொகஞ்சதரோ சங்குதாரோ முதலிய தமிழரின் பழைய நகரங்கள் புதை பொருள் ஆராய்ச்சியாளரா லகழ்ந்து கண்டு பிடிக்கப்பட் டுள்ளன. அங்குக் காணப்பட்ட மாடிகளோடு கூடிய வீடு கள், வீதிகள், கோயில் குளங்கள் எழுத்துப் பொறித்த

---

tion is illusrated by the names, Adam's peak and Adam's Bridge. The Koran which places the paradise in the seventh heaven says that, "after the fall Adam descended to Ceylon and propagated the human race." It may also be noted that according to some old Javanese manuscripts recenty published (Clarendon press) Brahmala descendant of Adam went from Ceylon and colonised Java—The Aryans—A lecture by the Hon. Mr. K. Balasingam 1920.

* இலங்கைச் சரித்திரம் பக்கம் 3—யோன் போதகர்

முத்திரைகள் ஆதியவற்றால் தமிழரின் சரித்திர காலத்துக்கு முற்பட்ட நாகரிகம் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அரப்பா மொகஞ்சதரோ முதலிய நகரங்களின் வாழ்ந்த மக்களின் நாகரிகத்தை விளக்கும் மூன்று பெரிய நூல்கள் சேர்யோன் மார்சல் (Sir John Marshall) என்னும் ஆசிரியரால் வெளியிடப் பட்டுள்ளன. அந் நூலிற்காணும் பொருட் சுருக்கம் வருமாறு.

பழஞ்சரித்திர ஆராய்ச்சி நம்மை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாற் கொண்டுபோய் விடுகின்றது. சிந்துநதியின் கிழக்குமேற்குப் பள்ளத்தாக்குகளையும், பலுச்சுஸ்தானத்தையும் நோக்குமிடத்து இந்தியா, சுமேரியாவோடும் * எல்லத்தோடும் தொடர்பும் ஒற்றுமையும் உடையதாயிருக்கின்றது. இதற்கு ஆதாரமாயுள்ள சின்னங்கள் பஞ்சாப்பிலுள்ள அரப்பாவிலும் மொகஞ்சதரோவிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அரப்பாவென்னும் நகர் சிந்து நதியின் கீழ் ஊற்றுவரையிலும் அகழப்பட்டது. செல்வ வளம் பொருந்திய அழகிய நகரொன்று அவ்விடத்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்ததாக அறியப் படுகின்றது. எவ்வகையான நாகரிகம் அங்கு நிலவியதென்று அறிதற்குரிய ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. நகர் செங்கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றது. சுவர்கள் நிலமட்டத்துக்குமேல் செங்கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றன. அத்திபாரம் முரடான செங்கல்லால் இடப்பட்டிருக்கின்றது. சில சுவர்கள் கற்களால் எடுக்கப்பட்டுள்ளன. மொகஞ்சதரோவிலும் அதன் சுற்றுடல்களிலும் கற்கள் கிடைப்பது அரிது. வீதிகள் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் பெரும்பாலும் கிணறுடையனவாயிருக்கின்றன.

---

* சுமேரியாவிலுள்ள ஓர் இடம்

கிணறுகளின் ஊற்றுகள் ஆற்றினின்றும் வந்தன. குளிக்கும் அறைகளோடுகூடிய வீடுகள் பல காணப்படுகின்றன. வீடுகளின் அழுக்குநீர் வெளியே கழிவதற்குச் செங்கட்டி பதித்த வாய்க்கால்கள் இருந்தன. வாய்க்கால்கள் வீதியில் முடிவெய்தின. வீதியில் கழிவுநீர் செல்லும் செங்கற் பதித்த வாய்க்கால்களிருந்தன. இவ்வாய்க்கால்கள் நகருக்கு வெளியே செல்லவில்லை. வீட்டுக்கூரையின் நாற்புறத்துமுள்ள அழுக்குகள் பீலிவழியாக வந்து தொட்டியில் விழக்கூடியதாகக் கூரைகளுக்குப் பீலிகள் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் மாடிகளோடு கூடியனவாயிருக்கின்றன. மாடிக்குச் செல்லும் படிகள் அழகாகக் கட்டப்பெற்றிருக்கின்றன. வீடுகளின் அமைப்பைக்கொண்டு அந்நகரம் மிகச் சிறப்புற்றிருந்ததெனத் தெரிகின்றது. மெசபெடேமியா இம்முறையில் ஒத்திருக்கவில்லை. அங்குள்ள சாதாரண வீடுகள் கீழான நிலைமையில் இருந்தன. சிறு குடிசைகள் இன்றேல் அரண்மனைகள் போன்ற மாளிகைகளே அங்கு காணப்படுகின்றன.

மொகஞ்சதாரோவில் வீடுகளல்லாத பெரிய கட்டிடங்களும் காணப்படுகின்றன. அவற்றின் உபயோகம் யாதென்று தீர்மானமாகக் கூறமுடியாது. ஒரு போது அவை வழிபாட்டுக்குரிய இடங்களாயிருக்கலாம். சாந்தினால் மெழுகப்பட்ட கட்டிடமொன்று சிறப்பாக அவ்விடத்திற் காணப்படுகின்றது. அது ஒரு போது அரசாங்க சபை கூடும் இடமாயிருத்தல் கூடும். அழகிய கட்டிடங்களோடு கூடிய கேணி ஒன்றும் அவ்விடத்திற் காணப்படுகின்றது. இது மக்கள் நீராடுவதற்கு அமைக்கப்பட்டதாயிருக்கலாம்.

அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ளக் கூடிய சின்னங்

கள் பல காணப்படுகின்றன. கோதுமையும் வாளியும் அங்கு பயிர் செய்யப்பட்டன. உணவின் பொருட்டு மக்கள் ஆடுமாடுகளையும் கோழிகளையும் வளர்த்தார்கள். உணவின் பொருட்டு மக்கள் ஆற்று மீனைப் பயன்படுத்தினர். பழைய ஆரியர் இவ்வுணவிற் கருத்துச் செலுத்தினார்களெனத் தெரியவில்லை. பல மிருகங்களின் என்புக்கூடுகள் அங்குக் காணப்பட்டன. அவற்றால், எருமை, ஒட்டகம், யானை பலவகை மானினங்கள் முதலியன அங்கு வாழ்ந்தன வென்று தெரிகின்றது. யூனிக்கோண் (unicorn) என்னும் ஒரு கொம்புடைய குதிரையும் அங்கு வாழ்ந்ததாகத் தெரிகின்றது. புலி குரங்கு முயல் முதலிய விலங்குகளின் உருவங்கள் கல் முத்திரைகளிற் காணப்படுகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் இவ்விலங்குகளை அறிந்திருந்தார்களெனத் தெரிகிறது.

மொகஞ்சதரோவிலுள்ள மக்கள் பொன் வெள்ளி செம்பு ஈயம் முதலியவற்றாற் செய்த பட்டயங்களைப் பயன்படுத்தினர். அவர்கள் வெள்ளியின் பயனை நன்கறிந்திருந்தனர். இருக்கு வேத கால ஆரியர் வெள்ளியை அறியார். வெள்ளியை அறிந்த காலத்து அவர் அதனை வெண்பொன் என வழங்கினர். அவர்கள் சாதாரண ஆபரணங்களையும், பானை சட்டிகளையும் செம்பினாற் செய்து உபயோகித்தனர். எலும்பு ஆனைத் தந்தம் சிப்பி, மணி ஆதியன ஆபரணங்களாகப் பயன்படுத்தப்பட்டன. நீலநிறக் கண்ணாடியாற் செய்த கைவளைகளும் காணப்பட்டன. கம்பளியும் பஞ்சும் நெசவு செய்யப்பட்டன. நூல் நூற்கும் இராட்டினங்கள் பல காணப்படுகின்றன.

ஈட்டி, கோடரி, குறுவாள், வில், கவண் முதலியன அவர்கள் உபயோகித்த போர்க் கருவிகளாகும். கவணில்

வைத்தெறியும் உருண்டைக்கற்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. வாள் அல்லது தற்காப்புக்குரிய ஆயுதங்கள் இருந்தனவென்று தெரியவில்லை. மட்பாண்டங்கள் திரிகையிற் செய்யப்பட்டன. வழுவழுப்பான நிறம் பூசிய பானை சட்டிகளும் காணப்பட்டன.

சிறுவர் விளையாடுதற்குரிய விளையாட்டுப் பொருள்கள் பெரிதும் காணப்படுகின்றன. அக்காலத்து ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விளையாட்டுப் பொருளை வைத்திருந்தது எனத் தெரிகின்றது. கிலு கிலுப்பை, பாவை, ஊதுகுழல், சிறுவண்டிகள் ஆதியன விளையாட்டுப் பொருள்களிற் சில. அக்கால விளையாட்டு வண்டிகளைப்போல இக்காலம் சிந்து நாடுகளில் பயன்படுத்தும் வண்டிகள் காணப்படுகின்றன.

அங்குக் கண்டெடுக்கப்பட்ட பொருள்களுள் அக்கால வழக்கிலிருந்த ஓவிய எழுத்துக்கள் பொறித்த கல்முத்திரைகள் முக்கியமானவை. அவ்வெழுத்துக்கள் சுமேரிய மொழிக் குரியனவா யிருக்கலாம். சுமேரிய மொழிக்கும் இம்மொழிக்கும் பொதுவான ஓர் உற்பத்தி இருத்தலுங் கூடும். மாடு எருமை ஒற்றைக் கொம்புள்ள குதிரை முதலியவற்றின் ஓவியங்கள் கல்முத்திரைகளிற் காணப்படுகின்றன. இவை அக்கால மக்களின் ஓவியம் வரையும் திறமையைக் காட்டுகின்றன. முத்திரைகளிற் காணப்படும் எழுத்துக்களைப்போன்று சட்டி பானைகளிலும் காணப்படுகின்றன. அவ்வெழுத்துக்கள் இன்னும் வாசிக்கப்படவில்லை. எழுத்துக்குப் பதில் பயன்படுத்தப்பட்ட சில குறிகளே அவ்வெழுத்துகளாகும். ஒவ்வொரு குறியும் ஒவ்வொரு சொல்லைக் குறிக்கும். சீனரின் எழுத்தெழுதும் முறை இதனோடு ஒத்திருக்கின்றது. ஒரு மரத்திற் பிரிந்த

இரண்டு கிளைகளுள் ஒன்று இவ்வெழுத்தும் மற்றது சீன எழுத்துமாயிருக்கலாம். அரப்பாவில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் முற்றாக மறைந்துவிட்டன. இவ்வெழுத்தைக் குறித்துப் பலவகையாக ஊகிப்பது பயனற்றது. அம் மொழி சமக்கிருதமல்லவென்று தீர்மானமாகக் கூறலாம். அது திராவிடமொழியோவென்பது சந்தேகம். முத்திரைகளிற் சித்திரங்களைப் பொறிப்பதில் மாத்திரமன்று. சிற்பத் தொழிலிலும் அம் மக்கள் திறமை அடைந்திருந்தனர். செங்கல்லினாற் செய்த தலை இல்லாத மனிதச் சிலை ஒன்று அங்குக் கண்டெடுக்கப்பட்டது. இது கிரேக்கரின் கைவேலை என்று முதலிற் கருதப்பட்டது. கிரேக்கர் வருகைக்கு இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முற்பட்டது. இச் சிலை என்று இக்காலம் நன்றாகத் துணியப்படுகின்றது.

அக்கால மக்களின் சமயமும் ஒருவாறு அறியப்படுகின்றது. சக்தி வழிபாடே பெரும்பாலும் மக்களுக்குரிய தாயிருந்தது. பழைய நாள் வழிபாடு பெரும்பாலும் இவ் வகையினதே. மூன்று முகங்களுடைய தெய்வத்தின் வடிவம் ஒன்று காணப்படுகின்றது. இது சிவன் சிலையாகும். பிற்காலத்து வந்த ஆரியர் சிவனையும் தமது தெய்வங்களோடு சேர்த்துக்கொண்டாரென்பதிற் சந்தேகம் இல்லை. மிருகங்களையும் மரங்களையும் மக்கள் வழிபட்டனர். இறந்தவர்களைச் சுடுதலும் புதைத்தலும் அக்கால வழக்கு.

சிந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம் எல்லம் மெசபெதேமியா முதலிய நாடுகளின் நாகரிகத்தோடு ஒற்றுமையுடையது. கல்லாயுதங்களுக்குப் பின்னுள்ள உலோக ஆயுதங்கள் பெரும்பாலும் பாவிக்கப்பட்டாலும் அக்காலத்துக் கல்லாயுதங்கள் முற்றாகமறைந்து போகவில்லை. பழைய

நாகரிகத்துக்கும் கலை விருத்திக்கும் அறிகுறியாகச் சிந்து நதிப் பள்ளத்தாக்கிற் காணப்பட்ட முத்திரை போன்ற பொருள்கள் * எல்லத்திலும் காணப்பட்டன. இவ்விரண்டு நாடுகளுக்கு மிடையே போக்கு வரத்திருந்ததென்றறியப் பிற ஆதாரங்களுமுள்ளன. மெசொபொத்தேமியாவின் பழைய வரலாற்றால் மொகஞ்சதரோவின் நாகரிகம் கி.மு. 3000 வருடங்களுக்கு முற்பட்டதென்று நாட்டலாம். இந்நாகரிகம் கங்காநதிதீரம் வரையிற் பரந்திருந்ததோ வென்பது சந்தேகத்துக் குரியது. மேற் கூறப்பட்ட இந்திய மக்களின் காலம் இருக்கு வேதகாலத்துக்கு முந்தியது. ஆரியர் ஆடு மாடுகளுடன் இடம் விட்டு இடம் பெயரும் கூட்டத்தவராயிருந்தனர். இந்திய பூர்வகுடிகளோடு ஓயாத போர் புரிந்து கொண்டிருந்தமையால் அவர்கள் மொகஞ்சதரோ போன்ற பலமான ஒரு நகரை அமைத்திருக்க மாட்டார்கள். மொகஞ்சதரோவிலுள்ளவர்கள் குதிரையை அறியாதவர்களாயிருந்திருக்கலாம். வேத கால இந்தியர் குதிரையை நன்றாயறிந்திருந்தனர். இருவகையினரும் அறிந்திருந்த உலோகவகைகள் வேறு வேறானவை. மொகஞ்சதரோ பக்கத்து நாகரிகம் வேத காலத்தோடு சிறிதும் சம்பந்தப்படாதது §

மோகஞ்சதரோ அரப்பா என்னும் பழைய நகரங்களின் நாகரிகத்தை நன்கு ஆராய்ந்தவரும் மோகஞ்சதரோ எழுத்துகள் பலவற்றை வாசித்தவருமாகிய ஹெரஸ் பாதிரியார் கூற்று :

---

* சுமேரியாவிலுள்ள ஓர் இடம்.

§ The Cambridge shorter history of India-Aallan M. A. PP. 2-6

பிற்கால இந்தியர் மேற்குப் புறமாகச் சென்று மெசபெத்தேமியாவின் தென் கோடியிற் குடியேறிச் சுமேரியர் என்னுஞ் சாதியராயினர்.

யோகத்தில் வீற்றிருக்கும் பாவனையுடைய மூன்று முகமுள்ள நிர்வாணமான கடவுளின் சிலை ஒன்று காணப்படுகின்றது. அதன் சிரங்களில் முடிகள் காணப்படுகின்றன. இச்சிலையைச் சூழ்ந்து பல மிருகங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இக்கடவுள் பசுபதி என்னும் பெயர் பெறுவர்.

'ஆண்' என்னும் கடவுள் மற்றைக் கடவுளருக்குத் தலைவராகக் காணப்படுகின்றனர். "ஆண்" என்னும் பெயருக்குரியவர் சூரியன் எனத் தெரிகின்றது. சூரியன் ஒவ்வோர் மாதமும் ஒவ்வோர் வீட்டிற்றங்குவான். ஒவ்வொரு வீட்டிற்றங்கும்போதும் சூரியனுடைய வடிவம் வெவ்வேறாகக் கொள்ளப்பட்டது. சூரியன் தங்கும் வீடுகள் எட்டு. ஆகவே அக்காலம் எட்டு மாதங்களும் ஒரு மாதத்தில் நாற்பத்தைந்து நாட்களுமிருந்தன. பழைய இந்தியர் கடவுளுக்கு எட்டு வடிவம் உண்டு எனக்கருதினர். எட்டு இராசிகளாவன : ஆடு, நண்டு, சிங்கம், கன்னி, துலாம், கடகம், மீன், யாழ் என்பனவாம். இவ்வடிவங்களைக் கடவுளாக வைத்து மக்கள் வழிபட்டனர். இவ்வடிவங்களுள் மீன் மிகவும் பிரசித்தி பெற்றது. சாசனங்கள் பலவற்றில் இப்பெயர் காணப்படுகின்றது. தற்காலச் சிவனுடைய வடிவம் சாசனங்களிற் றெளிவாகச் சொல்லப்படுகின்றது. சிவனுக்கு மூன்று கண்களுண்டென்றும் அக்கண்கள் தனித்தனி வழிபடப்பட்டனவென்றும் சாசனங்கள் கூறுகின்

றை* கடவுள் அரசனாகவும் அரசன் கடவுளுக்குப் பதில் அவன் ஆணையை ஏற்று நடத்துபவனாகவுங் கருதப்பட்டான். கடவுளுக்கு இறைவன் என்னும் பெயர் காணப்படுகின்றது. ஓர் சாசனத்தில் "தாண்டவன் இர்நால்மரம்." என்று காணப்படுகின்றது. இதற்குத் தாண்டவஞ் செய்யுங் கடவுளென்பது பொருள்.

---

* "A nude three faced God seated in a sort of yoga pose wearing crescent like head gear. Round this figure several figures are placed. It has been said this is a figure of Pasu-pathi. An (ஆண்) is supposed to be the highest God, the God of heaven, in fact he is as we shall see later on identified with the Sun. Now the sun in the course of the year travels through the constellations of the zodiac, which were called houses. Accordingly each month of the sun being in a different house was supposed to take a different form and since the constellations of the Proto-Indians as said above were only eight, the forms of the sun *i. e.*, the supreme being were eight. The eight forms of the supreme being were the eight constellations which were the following : The Ram, the Harp, the Crab, the Mother, the Scale the Arrow the Jar and the Fish or the two fishes. Images of the supreme being under these forms were worshipped in different parts of the country. The most popular of these forms of god seems to have been fish. Several inscriptions refer to this."

" This is the idea about Siva in modern Hinduism which we find clearly expressed with reference to God in the Inscriptions of the proto—Indians and the idea was so well known of these three eyes as we find in two inscriptions revealed to those people the idea of the supreme being. The three eyes were worshipped - Rev. Father.—Heras.

முத்திரைகளிலிருந்தது வாசிக்கப்பட்டவற்றுட் சில 'சொற்கள், யாழ், வேல், நாய், வேல், காலாள், எண் ஆள், எண்மை (சிவன்), கலக்கு, நண்டு, நண்டூர், வேலூர், உழவன், அது, ஆண்டு, குட, குடவு, தடு, ஒட்டு, குட்டை, உதவு, அடு, அன்று, மாறு, அரி, முகில், மழைமுகில் முதலியன. கோயில் எல்லாக் கடவுள் அது' என ஓர் சாசனத்திற் காணப்படுகின்றது. 'கோயிலிலுள்ள கடவுள் எல்லோரிலும் பெரிய கடவுள்' என்பது இதன் பொருள். முத்திரைகளில் குறள் வெண்பாவினாலாய பாடல்கள் பல காணப்படுகின்றன. அக்கால எழுதும் முறை இடது புறத்தினின்று வலது புறத்தே சென்று பின் வலப்புறத்தினின்றும் இடப்புறமாகச் செல்வதேயாகும்.

* வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வழங்கிய பிராமி எழுத்துக்கள் மொகஞ்சதரோ எழுத்துக்களினின்

---

* The two Brahmi scripts one of northern and the other of southern India, are developments of the Mohenjodaro script, that of the South India is the continuation and development of the Mohenjodaro script of the Dravidian people of South India. Several signs of the Mohenjodaro script are found in the prehistoric pottery of the Tinnevelly District, in rock inscriptions of the Nilgiris, and tombs in the Hyderabad state. The north Brahmi is not the natural continuation of the Mohenjodaro script. This script was adopted by the incoming Aryans who did not know any writing at the time of their invasion. Thd Brahmi script of Asoka is the Mohenjodaro script as developed by the Aryas. This is the difference between them, which nevertheless reveal obvious similarities with our signs. In this connection it may be pointed out that one at least of the signs of Mohenjodaro seems to be direct ancestor of one of the letters of the Tamil alphabet.

றும் விருத்தியானவை. தென்னிந்திய திராவிடர்களுடைய எழுத்து மொகஞ்சதரோ எழுத்தை நேரே பின்பற்றியது. திருநெல்வேலியிற் கிடைத்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட பானை சட்டிகளிலும், நீலகிரி மலையில் வெட்டப்பட்டுள்ள சாசனங்களிலும், ஹைதராபாத் சமாதிகளிலும் இவ்வெழுத்துக் காணப்படுகின்றது.

வடபிராமி எழுத்துக்கள் மொகஞ்சதரோவின் நேரான எழுத்துக்களல்ல. எழுத்துக்களைப் பற்றி அறியாத ஆரியர் இவ்வெழுத்தை உபயோகித்திருக்கின்றனர். அசோக பிராமி எழுத்து ஆரியர் கையாண்ட முறையைப் பின்பற்றி எழுதப்பட்டது. இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேற்றுமை இதுவே. இவை யாம் காட்டிய எழுத்தின் அடையாளங்களோடு தெளிவான ஒற்றுமையைக் காட்டுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் எழுத்து மொகஞ்சதரோ எழுத்தினின்றும் தோன்றிற்றெனக் கூறலாம்.

மொகஞ்சதரோவிலுள்ளோர் திராவிடராயினமையின் வட இந்தியாவிலுள்ளவர்கள் தமிழையே பேசினார்கள். ஆனால் அம்மொழி இப்பொழுது இந்தியாவில் வழங்கும் திராவிட மொழியாகத் தெரியவில்லை.''

சிந்து நதிப் பள்ளத்தாக்கிற் கிடைத்த சில சாசனங்களிற் காணப்பட்ட வசனநூற் குறிப்பைக் கொண்டு

"Being Dravidians, the inhabitants of Mohenjo Daro and northern India naturally spoke a Dravidian language, yet this language was not one of the Dravidian languages now spoken in India, but probably their parent, which may be called Proto-Dravidian. The largest proportion of the words used in the proto-Dravidian are also found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages—Sight of the Mohenjo Daro riddle-H. Heras.—The New Review No. 19 Vol. IV

மொகஞ்சதரோ முதலிய நகரங்களின் நாகரிகம் கி. மு. 5610 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் ஹெராஸ்பாதிரியார் கூறுவர். மனிதன் பூமியில் உற்பத்தியாகி ஆயுதங்களின் பயனை அறிவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் சென்றிருக்க வேண்டுமென்றும், உலோகத்தின் உபயோகத்தை அறிந்து ஆயுதங்கள் செய்யப் பழகிக் கற்காலத்தினின்றும் உலோக காலத்துக்கு அவன் வருவதற்கு * இருபதினாயிரம் அல்லது ஒரு லட்சம் ஆண்டுகள் சென்றிருக்க வேண்டுமென்றும் மக்கள் நூலார் கூறுவர். சிந்து நதி தீரத்தின் நாகரிகம் கற்காலத்தின் அந்தமும் உலோக காலத்தின் ஆரம்பமுமாகிய காலமெனத் தெரிகின்றது. ஆகவே அம்மக்கள் கற்கால நாகரிகத்தில் அங்குக் குறைந்தது இருபதினாயிரம் ஆண்டுகளாவது வாழ்ந்தார்களாதல் வேண்டும்.

சிந்து நதி தீரத்து நாகரிகம் வேறெவ் விடத்தேனுமிருந்து வந்ததென்று கூறுவதற்கு ஓர் காரணமுமில்லை. எனச் சேர்யோன் மார்ஷல் என்னும் ஆசிரியர் கூறுவர் §

---

* "Some geologists have suggested twenty thousand years while others say 'a hundred thousand or more'—Anthropology p. 25. Sir E. B. Tylor Kt.

§ "There is no reason to assume that the culture of this region was imported from other lands or that its character was profoundly modified by outside influences"—(Sir John Marshall,) "Never for a moment was it imagined that, five thousand years ago before ever the Aryans were heard of, the Punjab and Sind, if not other parts of India as well, were enjoying an advanced and singularly uniform civilization of their own, closely akin, but in, some respects even superior, of that of contemporary Mesopotamea and Egypt" Mohenjodaro and Indus civilization—Sir John Marshall.

ஆரியர் இந்தியாவை அடைவதன் முன் சிந்து நாட்டிலும் இந்தியாவின் மறு இடங்களிலும் வாழ்ந்தோர், மெசபெத்தேமியா எகிப்து முதலிய நாடுகளின் நாகரிகத்தோடு ஒற்றுமையுடையதும் சிலவகையில் மேலானதுமான நாகரிகம் பெற்றிருந்தார்கள் என ஒரு ஆசிரியர் கூறுகின்றனர்.

ரைஸ்லி என்னும் ஆசிரியர், திராவிடரே இந்திய பூர்வ குடிகளென்றும், இந்தியாவினின்றும் சென்ற மெசபெத்தேமிய நாகரிகம் செமட்டிக் நாகரிகத்துக்கு அடிப்படையாயிருந்ததென்றுங் கூறுவர். *

சிந்து நாகரிகத்தைக் கொண்டு தமிழர் வடஇந்தியாவினின்றும் தெற்கே போந்தார்களெனச் சொல்லப்படுகின்றது. சிந்து நாகரிக காலத்தில் இந்தியா முழுமையிலும் ஒரே வகையான பழக்க வழக்கமுடைய மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

சுமேரியர் தமிழரே

ஆராய்ச்சிகள் சுமேரியர் இந்தியாவை அடைந்து தமிழர் ஆயினர் அல்லது தமிழர் சுமேரியாவை அடைந்து சுமேரியராயினர் என்னும் கொள்கைகளுக்குக் கொண்டு வந்து விடுகின்றன.

சுமேரியா ஒரு சிறு நாடு. அங்கு வாழ்ந்த மக்கள் சுமேரியாவின் அயல்நாடுகளில் வாழ்ந்தவர்களினின்று உடற்கூற்றிலும் மொழியாலும் வேறுபட்டவர்கள். சுமேரியர் இந்தியாவுக்கு வந்து குடியேறினராயின் அவர் தமக்கு அயலே உள்ள நாடுகளிற் குடியேறிய பின்னரே வேறு நாடு

* The Dravidians were original inhabitants of the Indian Peninsula and developed a civilization which was taken to Mesopotomia and formed the basis of Semitic civilization." R. Risely—People of India.

களுக்குச் சென்றிருக்கவேண்டும். இவர்கள் அவ்வாறு சுமேரியாவுக்கு அடுத்த நாடுகளிற் சென்று குடியேறியவர்களாகக் காணாமையின், வேறு நாடுகளினின்றும் போந்தவரே சுமேரியர் என்று புலப்படுகின்றது.

* மெசபெத்தேமியாவுக்கும் இந்தியாவுக்கும் சிந்து நாகரிக காலத்தே நெருங்கிய தொடர்பிருந்ததாகத் தெரிகிறது. Prof. ஹென்றி பிராங்போட் என்பவர் சமீபத்தில் பாக்டாட்டுக்குச் சமீபத்திலுள்ள டெல் அக்ராப் என்னுமிடத்தில் அகழ்ந்து கண்டு பிடித்த பானை சட்டிகளையும் பிறவற்றையும் கொண்டு இந்த சுமேரிய தொடர்பை நன்கு விளக்கியிருக்கின்றனர்.

---

* "We have no evidence that animals were worshipped in Mesopotamia, yet the contemporary civilization of India supplies ample evidence that this was so in the country. Thus we may have here more link in the (as yet) incompletely discovered claim of similarities connecting the early culture of Mesopotamia with that of the Indus valley -Dr. Frankfort, field director of the Iraq expedition of the Oriental institute of the university of Chicago—The Illustrated London news nov. 6th 1937.

" Prof. Frankfort emphasises the importance evidently attached the Sumerians to cattle, and hints at the possibility of bull worship. In connection with a vase design, including a bull............... showing a humped bull of Indian type unknowu in Mesopotamia... he said that, although no scene of animal worship had yet been found on Mesopotamian sites, it was a common motive of ancient Indian seal stones. 'Our vase fragments' he added put the problem of Indo—sumerian connections on entirely new basis—Ibid.

சரித்திரகாலத்துக்குமுற்பட்ட தென்னிந்திய சமாதிகள்.

தென்னிந்தியாவிற் சித்தூருக்கு வடகிழக்கே மூன்றரை மைல் தூரத்தில் பாண்டு வரம் தேவால் என்னும் சமாதிகள் காணப்படுகின்றன. சமாதியின் உட்புறம், கீழே ஒரு கருங்கற்றகடும் நாற் புறங்களில் ஒவ்வோர் கற்றகடும் மேற்புறத்தில் ஓர் கருங்கற் றகடுமாக ஆறு கருங்கற் றகடுகள் அடங்கியதாய்க் காணப்பெறுகின்றது. மேலே மூடியிருக்கும் கல்லின் நடுவே மனிதனின் பிரேதம் நுழையக் கூடிய வட்டமான துவாரங் காணப்படுகின்றது. அத்துவாரம் வழியாகப் பிரேதங்களை உள்ளேயிட்டு மூன்று அல்லது நாலு அடி உயரத்துக்கு மண்ணால் மூடி விடுவது அக்கால வழக்கமாயிருந்தது. மண்ணினாற் செய்த நீண்ட தாழிகளிற் பிரேதங்களை வைத்து அடக்கஞ் செய்வதும் அக்கால வழக்கு. இவ்வகையான தாழிகளும் அங்குக் காணப்பட்டன. பிரேதப் பெட்டியின் வடிவுள்ள அத்தாழிகளுள் மனித எலும்பும் வைரமான மண்ணும், மண்டை ஓட்டின் துண்டுகளும் சிறிய பானைசட்டிகளும் பழங்கால சட்டியின் அலகு, வாள் முதலியனவும் கண்டெடுக்கப்பட்டன. பானை சட்டிகள் அழகிய வடிவமுடையனவாய்க் காணப்படுகின்றன. இச்சமாதிகளை உண்டு பண்ணினோர் இரும்பின் உபயோகத்தை நன்றாயறிந்திருந்தார்கள்.

திருநெல்வேலிக்குப் பதினைந்துமைல் கிழக்கில் பழைய இடுகாடொன்று காணப்படுகின்றது. தாழிகளுள் வைத்துப் புதைக்கப்பட்ட என்புகள் அங்குக் காணப்படுகின்றன. பிரேதங்களின் ஒவ்வோர் உறுப்பு மாத்திரம் தாழிகளுட் காணப்படுதலின் அக்காலத்துப் பிரேதங்களைச் சுடும் வழக்கும் இருந்ததென்று கருதப்படுகின்றது. தாழிகளின்

வாய்கள் பிரேதங்களை உள்ளே இடமுடியாத ஒடுக்கமுடையனவாய்க் காணப்படுகின்றன. பொற்றகட்டாற் செய்த முட்டை வடிவுடைய இலைகள் கோத்த நெற்றியிலணியும் பொன்மாலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது கண்டெடுக்கப்பட்டவற்றுள் இரும்பினாற் செய்யப்பட்டன: வாள் குத்துவாள் ஈட்டியின் அலகு அம்பின் அலகு முதலியன. வெங்கலப் பொருள்கள்: பாத்திரம், மோதிரம், காப்பு, மாலை முதலியன. வெங்கலத்தாற் செய்யப்பட்ட பொருள்கள் அழகிய வேலைப்பாடோடு கூடியன வாய்க்காணப்படுகின்றன. இவ்வுலோகத்தாற் செய்த வளைந்த கொம்புடைய எருமைகளும் பசுக்களும் காணப்படுகின்றன. இவையன்றி எலும்புகளும் கல்லாயுதங்களும் தாழிகளுங் காணப்பட்டன.

மேட்டுப் பாளையத்துக்கு எட்டுமைல் தூரத்திலுள்ள சிறுமுகை என்னும் கிராமத்திற் கிளறி எடுத்த தாழிகள் நாலடி உயரமும் இரண்டரையடி குறுக்களவு முடையனவாயிருக்கின்றன. இத்தாழிகளுக்குள், மண்டை ஓடு, எலும்பு, மணி, கற்றுண்டு, தண்ணீர் குடிக்கும் பாத்திரம், சோறுண்ணும் பாத்திரம் இரும்பாயுதம், சிறிய பானை சட்டிகள் முதலியன காணப்பட்டன. பானைசட்டிகள் நல்ல முறையிற் செய்யப்பட்டிருக்கின்றன. சில பானை சட்டிகள் வழுவழுப்பான கறுப்பு நிறம் பூசப்பெற்றனவாயிருக்கின்றன. இங்குக் காணப்பட்ட நாலுகாலுடைய தாழிகளைப் போன்றன பெரும்பயர், பல்லாவரம் என்னும் இடங்களிற் காணப்பட்டன.

ஆதிச்செநல்லூர்ச் சமாதிகளிற் கிடைத்த மண்டையோடு தமிழனது மண்டையோட்டின் அளவுக்குச் சரியாயிருக்கின்றது. இந்தியாவிற் காணப்படும் சரித்திர காலத்துக்கு முற்பட்ட சமாதிகள் பிரிட்டன், பிரான்ஸ், மத்திய

ஜெர்மனி, ஸ்காந்திநேவியா, சார்டினியா, சிரியா காகேசஸ் முதலிய விடங்களிற் காணப்பட்ட சமாதிகளை ஒத்திருக்கின்றன *

இந்திய மொழி

§ "தாம் புதிதாக வந்த வட இந்தியாவிற் றமது மொழியை நாட்டுவதில் ஆரியர் சித்தியடைந்தது போலத் தென்னிந்தியாவிற் சித்தி எய்தாதிருந்தது ஆச்சரியப் படத்தக்கதே. ஆரியர் வருகைக்கு முன் வட இந்தியாவில் வழங்கிய மொழி தமிழ் என்பதில் எனக்குச் சிறிதுகூடச் சந்தேகமில்லை. பலுச்சிஸ்தானத்திலுள்ள மலைச் சாதியாரின் மொழியில் தமிழ்ச் சொற்கள் மாத்திரமல்ல சொல் வடிவங்களும் எண்ணங்களும் சுவறியிருப்பதைத் தெளிவாகக் காணலாம். அநேக சமஸ்கிருத பதங்கள் தமிழ்ச் சொற்களாயிருத்தலை ஆராய்ச்சிக்காரர் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

---

* J. B. Brown.—Quoted in 'The stone age in India', —P. 42.

§ It is indeed strange how the Aryans failed to supplant the Dravidsan speech in the (southern) part of India, though it most successfully did in north India, where I have no doubt the Dravidian language prevailed before the advent of the Aryans. This will be seen from the fact that Bruhui the language of the mountaineers in the Khanship of Kelat in Baluchistan contains not only some Dravidian words, but a considerable infusion of distinctively Dravidian forms and ideas ....It is also well known fact accepted by all scholars that there are many Sanskrit words which are all Dravidian and this will confirm the conclusion that the Dravidian tongue was prevalent in north India before the Aryans came and occupied it. The same conclusion is forced upon by an examination of all vernaculars of North India..............no reasonable

ஆரியர் வந்து வட இந்தியாவிற் குடியேறுவதன் முன் அங்கு வழங்கிய மொழி தமிழென்பதை இது வலியுறுத்துகின்றது. வட இந்தியாவில் இப்போது வழங்கும் மொழிகளை ஆராயுமிடத்து இம்முடிவே ஏற்படுகின்றது. வட இந்தியாவில் ஆதியிற் றமிழ் வழங்கினது என்று சொல்வதற்கு மாறான சந்தேகம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை'' எனப் பேராசிரியர் எம். டி. பண்டார்க்கர் கூறுவர். *

தற்காலம் வடஇந்தியாவில் வழங்கும் சமக்கிருத சம்பந்தமுடையன வென்று கருதப்படும் மொழிகள் இலக்கண அமைப்பிலும் வசன ஒழுங்கிலும் திராவிடமொழியை ஒத்திருக்கின்றன. திராவிடமொழியிலுள்ள வசனங்களை வட இந்திய மொழிகள் எவற்றிலேனும் அம்மொழிச் சொற்களைச் சொல்லுக்குச் சொல் வைத்து மொழி பெயர்த்தல் இலகுவில் அமையும். கற்காலத்து இந்தியா முழுமையும் வழங்கிய மொழி தமிழே. சமக்கிருத பிராகிருத சம்பந்தமான மொழிகள் வழங்கவில்லை. இவ்வுண்மையை P. T ஸ்ரீனிவாச ஐயங்கார் "இந்தியாவின்கற்காலம்" என்னும் நூலில் விளக்கிக் கூறி யிருக்கின்றனர் §

---

doubt can therefore be entertained as to the Dravidian ......speech once being spoken in north India—Lecture in the ancient History of India on the period from 650 to 325 B. C: delivered in 1918 by M. D. Bandarkar M. A. Professor of Ancient Indian history and culture, Calcutta University.

§ "The neolithians of North India spoke languages of their own which I hold were allied to the so called Dravidian family of languages and not to Sanskrit Prakrit—Stone age in India P. 44.

"The modern dialects of north India now called Sanskritic or gaudian have a fundamental grammatical framework and a scheme of syntax, the same as

பிறநாடுகளில் வழங்கும் தமிழோடு றவுடைய மொழிகள்

கமஸ்கர்கா, நியூசிலந்து, இத்தாலியிலுள்ள ரஸ்கானி, நியு சிலன்ட் முதலிய நாடுகளில் வழங்கும் மொழிகள் தமிழுக்கு உறவுடையனவாய்க் காணப்படுகின்றன. சீன மொழிக்கும் தமிழுக்கும் தொடர் புண்டென்று சொல்லப் படுகிறது. எபிரேயம், கிரேக்கு, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிற் றமிழ்ப்பதங்கள் காணப்படுகின்றன. பழைய செர்மன், கொதிக், லாட்டின் முதலிய மொழிகளிலுள்ள அநேகம் சொற்கள் தமிழடியாகப் பிறந்துள்ளன. சுமேரிய மொழி தமிழோடு சம்பந்தமுடையது. இந்து ஐரோப்பிய மொழிகளுக்கும் தமிழுக்கும் பழைய தொடர்பு காணப்படுகின்றது. பின்லண்டில் வழங்கும் மொழியில் அநேகம் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. *

---

that of the Dravidian dialects can be translated into any one set of dialects by the substitution of word for word without causing any breach of idiom. These facts can only prove that people were speaking dialects allied to Tamil. Tamil once inhabited the whole of India and not that these people must necessarily have been come into India outside the country. No single fact has yet been adduced that compels us to believe that the ancient people of India were not autochthones-History of the Tamils P. 2.

* "The languages spoken now at Kamschatca, the north eastern corner of Asia, is considered to be a dialect of Tamil (Sir. W. Hunter). The language spoken by the Maores in the far off Newzealand which denote the utmost southern limits of 700 Kathams of Tamil Land from Cape Comorin and the languages spoken in the numerous groups of islands between

ஷோகோனர் என்னும் செர்மன் ஆசிரியர் ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியாவிலும் அநேக இடப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களா யிருப்பதைக் காட்டியிருக்கின்றனர். அவர் காட்டியவற்றுட் சில, ஸ் ஆறு = சத்தம்போடும் ஆறு ; இளப் ஆற = இளம் ஆறு; மத ஆறு—மதத்த ஆறு என்பன.

உலகிலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து செல்லுமிடத்து, அவை ஓர் பொது உற்பத்திக்குக் கொண்டு போய் விடுகின்றன வென்றும்; எல்லா மொழிகளுக்கும் அடிப்படையில் திராவிட சம்பந்தம் காணப்படுகின்றதென்றும் சிறந்த ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். *

---

these two boundaries are allied to Tamil (Indian antiquity Vol. X) 'The language spoken at Tascany in Italy is a dialect of Tamil, (J. R. A. S.) It is said that the Chinese has some afinity to it'. (T. P. P. 1913) 'The three classic languages of the world viz. Sanskrit, Hebrew and Greek contain Tamil words in vocabulary (Rys Davids). Tamil India P. 38.

There are hundreds of Indo European words which are to be traced to old Dravidian forms, forcing us to draw the conclusion that there is 'an ancient connection between the Dravidians and Indo-European Languages' Herr Schoener as well remarked" Rev. S. Gnanaprakasar O. M. I.

* " The problem of the affiliation of the Dravidian languages has been studied for many years and various theories have been propounded towards its solution. Caldwell was of opinion that the family to which they are most nearly allied is the Finno-ugric branch of Scythian group of languages. Bleek pointed out Australian afinities and was supported by Norris and

பழைய பிரித்தானியர்களுள் அறிவாளிகள் திராவிட் என்று அழைக்கப்பட்டனர். இதனால் பழைய திராவிடரில் ஒரு பிரிவினர் பிரிட்டனிற் குடியேறினார்கள் என்று கருதப் படுகின்றது. §

தமிழரின் இந்திய உற்பத்தி

தமிழர் பிறநாடுகளிலிருந்து வந்து இந்திய நாட்டிற்குடியேறினார்கள் என்று கூறுவதற்குரிய கதைகள் ஒன்றேனும் பழந்தமிழ் இலக்கியங்களிற் காணப்படவில்லை. சூரியன் எறிக்கும் கொடிய வெய்யில், தென்னிந்தியாவிற் காணப் படும் பெரிய நிழல் விருட்சங்கள், அழகிய புள்ளினங்கள்,

---

Trombetti. Relation with Sumerian Oceanian and the Austic dialects have also been discovered.

Caldwell supposed that the Dravidian tongues exhibit traces of their existence at a time prior to the final separation of the Indo—European languages from the Scythian. It may be that we shall discover that most of the tongues spoken by men go back to common source, and that the Dravidian group has preserved a large number of roots. To what else does the discovery of affinities between language—groups so widely separated as Oceanian, Indian, African Dravidian, Indo—European and Ural-Altaic point"—Quarterly Journal of Mythic Society Vol XXI no. 2.

§ It would be interesting to note to mention that the term "Dravid" frequently applied to wise persons among the early Britons in the pre-Roman days may have also some connection with the Sanskrit word "Dravid" thus showing how the early Dravidians from India colonized and civilized Great Britain—(Quarterly Journal of mythic Society Vol. XXI No. 3.)

புலி சிங்கம் யானை முதலிய கொடிய வன விலங்குகள் முதலியவற்றைக் குறித்தே அவை கூறுகின்றன. அவற்றில், பனியைக் குறிப்பதற்குரிய சொற்கள் காணப்படுவது போலப் பனிக்கட்டியைக் குறிப்பதற்குரிய சொற் காணப்படவில்லை; தட்பமுள்ளவற்றை விருப்புக்குரியனவாகவும் வெப்பமுள்ளவற்றை வெறுப்புக்குரியனவாகவும் அவை கூறுகின்றன. மத்திய ஆசியாவிலுள்ள சம பூமிகளையும், சாலடியர் நாடுகளையும் குறிக்கும் தமிழ்ப் பதங்கள் காணப்படவில்லை. யானை புலி முதலிய மிருகங்களும், தினை வரகு முதலிய தானியங்களும் வேங்கை முதலிய மரங்களும் தமிழ் நாட்டு மலைகளிற் காணப்படுவனவாகும்.

மிகப் பழைய காலந் தொட்டு மனிதன் கையினுற் செய்த பொருள்களும் அவன் பயன்படுத்திய ஆயுதங்களும் தொடர்பாகத் தென்னிந்தியாவிற் கிடைக்கின்றமையாற் பழைய கற்காலந் தொட்டு உலோக காலம் வரையில் மக்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்து படிப் படியாக நாகரிக மடைந்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு வகையான நாகரிக காலத்தும் பயன்படுத்திய சொற்கள் தமிழ் மொழிக் குரியனவா யிருக்கின்றன. அக்கால மக்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கைமுறைகளையும் பழந் தமிழிலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன. இன்னோரன்ன மறுக்கக் கூடாத பல காரணங்களாற் றமிழ் மக்கள் தென்னிந்திய பூர்வ குடிகளெனத் துணிந்து கூறலாம். *

---

* Moreover the artefacts and other relics of ancient times discovered so far in south India from an unbroken series, showing that there has been in this country a regular evolution by any catastrophe, from the lowest palaeolithic stage to the latest age of metals, the language existed in south India during the course of the evolution. The words necessary for the linguistic

ஆரியருந் தமிழரும்

சிந்து நதிப் பள்ளத்தாக்குகளிற் காணப்படும் மொகஞ்சதரோ, அரப்பா, சங்குதாரோ முதலிய தமிழருடைய பழையநகரங்களின் அழிவுக்கு ஏது வெள்ளப் பெருக்கேயன்றிப் படையெடுப்பு அல்லவென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சிந்து நாகரிகத்தில் ஆரியரின் நாகரிகம் சிறிதும் காணப்படவில்லை. ஆகவே அரப்பா, மொகஞ்சதரோ முதலிய நகர்களின் அழிவுக்குப் பின்னரேயே ஆரியர் இந்தியாவை அடைந்தனர் ஆதல் வேண்டும்.

கி. மு. 2000 வரையில் ஆரியர் இந்தியாவை அடைந்தனரென்று சரித்திரக்காரர் கூறுகின்றனர். ஆரியர் இந்தியாவை அடைந்தபோது இங்கு வாழ்ந்தோர் தமிழர்களே. இவர்கள் ஆரியரால் தாசுக்கள் என்று அழைக்கப்பட்டனர். தாசுக்களுக்கும் ஆரியருக்குமிடையில் ஓயாதபோர் நடந்ததென இருக்கு வேத பாடல்கள் கூறுகின்றன. தாசுக்கள் கரியநிற முடையவர்களென்று சொல்லப்படுகின்றனர். தாசுக்களை அழிக்கும்படி இந்திரனை வேண்டி ஆரிய முனிவர்கள் பாடிய பாடல்கள் பல இருக்கு வேதத்திற் காணப்படுகின்றன. தாசுக்கள் ஆடு மாடு முதலிய மிகுந்த செல்வமுடையராய் மதில்கள் சூழ்ந்த அழகிய நகரங்களில் வாழ்ந்தனர்.

நெடுங்காலப் போராட்டத்தின் பின் தாசுக்கள் எனப்பட்ட தமிழர் தெற்கே சென்று தங்கினர். இருக்கு வேத

---

expression of every stage of the culture, are found in the earliest strata of Tamil, and the customs of this early age continued sufficiently long to be enshrined in the earliest extant specimens of Tamil literature. It may therefore be taken as fairly certain that the Tamils were indigenous to south India.—History of the Tamils. P. T. Srinivasaiengar M. A. p. 213.

காலம்* கி. மு. 1200 வரையில் என்று சொல்லப்படுகின்றது.

பாரதம்

பாண்டு புத்திரருக்கும் துரியோதனாதியருக்கும் இடையே நடந்த போரைக் கூறும் நூல் பாரதமாகும். வடமொழியிலுள்ள பாரதம், பழைய பாடல்களோடு காலத்துக்குக் காலம் பாடிச் சேர்க்கப்பட்ட பாடல்களையுமுடையது. அப் பாடல்கள் கி. மு. நாலாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன. * கி. மு. 400 முதல் கி. பி. 400 வரையிற் செய்யப்பட்ட பாடல்கள் அதனிடத்தே காணப்படுகின்றன என வின்சன் ஸிமித் என்னும் ஆசிரியர் கூறுவர். § பாரதப் போர் கி. மு. 1500 க்கும் 750 க்கும் இடையில் நேர்ந்ததென டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறுவர். § வேலாந்தைக் கோபாலையர் பாரதப் போர் கி. மு. 1194-ல் நிகழ்ந்ததென்

---

* " The Rig Veda (Verse—Veda) of Indian Aryans (Circa 1200 B C) "—A short history of Hindu India—Krishnaswami Aiyangar M. A. Prof. of Indian history and archaology University of Madras.

* The Mahabharata, as we have it now, was probably put together at least as early as the fourth century B. C. from traditional war songs founded on events which took place at a much earlier date.—Ibid.—P. 33

§ " The Mahabharata which in its present form is rather an encyclopaedia of moral teaching than an epic properly so called, includes compositions supposed to range in date between 400 B. C. and. 400 A. D."—The Oxford student's history of India–Vincent Smith P. 28

§ "The inter-tribal wars typified in the Mahabharata took place in the period between 1500 and 1000 B. C.; while the events of Ramayana should be placed between 1000 and 750 B. C.—Ancient India P. 3.

பர். § பாரதம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததெனவைத்தியா என்னும் ஆசிரியர் கூறுவர். பாரத காலத்திருந்த வியாசராற் பாரதஞ் செய்யப்பட்டதென்பதும், அது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சி என்பதும் மக்களது பொதுவான நம்பிக்கை.

பாரதத்திற் பிற்காலப் பாடல்கள் பல உள்ளன என்று ஆராய்ச்சியாளர் ஒரு தலையாக ஒப்புக்கொள்கின்றமையின், அதன் முற்கால பிற்காலப் பாடல்களைப் பிரித்தறியினன்றி அது தென்னிந்திய பழஞ் சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறந்த பிரமாணமாக மாட்டாது.

திரௌபதியின் சுயம்வரத்துக்குச் சென்றவர்களுள் பாண்டிய அரசன் ஒருவனென்றும், சோழரும் பாண்டியரும் தருமனுக்குக் காணிக்கை அளித்தார்களென்றும், அருச்சுனன் பாண்டியன் புதல்வியாகிய சித்ராங்கதையை மணந்தானென்றும் பாரதம் கூறுகின்றது.

இராமாயணம்

இராமாயணம் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து ஆராய்ச்சியாளர் பலவகையான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இராமாயணம் கி. மு. மூன்று அல்லது நாலாம் நூற்றாண்டிற் செய்யப்பட்டதென டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் கூறுவர். * இராமாயணத்தின்பெரும்பகுதி கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குமுன் செய்யப்பட்டதென்றும், பல நூற்றாண்டுகளுக்குப்பின் பாடிய

---

§ The Chronology of ancient India. PP. 51—104.

* " It (Ramayana) was composed probably in the fourth or third century B. C."—History of Hindu India. P. 33

பாடல்களும் அதிற் சேர்க்கப்பட்டுள்ளனவென்றும் வின்சன் சிமித் என்னும் ஆசிரியர் கூறுவர். § இராமாயணத்தின் பெரும்பகுதி கி. மு. ஆறும் நூற்றாண்டிற் செய்யப்பட்டதென்பதே பெரும்பாலும் ஆசிரியர்களது அபிப்பிராயமாக விருக்கின்றது.

பாரத நிகழ்ச்சி இராமாயண நிகழ்ச்சிக்குப் பிற்பட்டதென்பது டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரின் கருத்தாகும்.

இராமாயண சம்பவம் பாரதத்துக்கு முற்பட்ட நிகழ்ச்சி என்றும், இராமாயணம் எழுதப்படுவதன்முன் மாபாரதம் எழுதப்பட்டது என்றும் பெரும்பாலும் ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இராவணன் வேதங்களிற் பயிற்சியுடையவனென்றும் அவன் சாமவேதத்துக்கு இசைவகுத்தானென்றும் சொல்லப்படுகின்றான். வேதத்தை மாபாரத காலத்தவராகிய வியாசர் நான்கு கூறுபடுத்தினாரென்பது ஐதீகம். இராவணன் வேதங்களைப் பயின்று சாம வேதத்துக்கு இசை வகுத்தானாயின் அது பாரத நிகழ்ச்சிக்குப் பிற்பட்ட சம்பவமாதல் வேண்டும். வேதகாலம் கி. மு. 1200 வரையில் என்று முன்னோரிடத்திற் கூறப்பட்டது.

இராமாயணம் ஆந்திரர் சோழர் பாண்டியர் கேரளர்களைப்பற்றிச் சொல்லுகின்றது. சுக்கிரீவன் வானர வீரரைப்பார்த்துப் பொன்னும் முத்துமுடைய பாண்டியனது பொன்மயமான கபாடத்தைக் காண்பீர்கள் எனக் கூறியதாகவும் கூறுகின்றது. இராமாயணத்தில் உள்ள பழம் பாடல்களையும் புதுப்பாடல்களையும் பிரித்து அறிந்து கொள்

§ "The bulk of the Ramayana is believed to have been composed before 500 B. C. but some of the additions seem to be several centuries later.-The Oxford Student's History of India P. 28

ளாத வரையில் இராமாயணம் தென்னிந்திய பழஞ் சரித்திரத்தை அறிந்து கொள்வதற்குச் சிறந்த பிரமாணமாகாது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பின் வட இந்தியாவிலுள்ளவர்கள் தென்னாட்டைக் குறித்து எவ்வளவு அறிந்திருந்தார்கள் என விளங்கிக் கொள்வதற்கு இராமாயணமும், பாரதமும் சிறந்த நூல்களாகும்.

பாரத இராமாயணப் பாடல்கள் தொகுக்கப்படுவதன் முன் கி. மு. 543-ல் இலங்கையை அடைந்த விசயன் பாண்டியன் குமாரத்தியை மணந்தானென்று மகாவமிசமென்னும் சிங்கள இதிகாசம் கூறுகின்றது. சோழ அரசனாகிய எல்லாளன் இலங்கையை வென்று கி. மு. 204 முதல் நாற்பத்து நான்காண்டு அரசுபுரிந்தான். எல்லாளன் சரித்திரத்தால் அக்காலத்தில் சோழ இராச்சியம் மிக உன்னத நிலை அடைந்திருந்ததெனத் தெரிகிறது. எல்லாளனுடைய சமாதி, அழிந்த நிலையில் இன்றும் அனுராதபுரத்திற் காணப்படுகின்றது. ஊர்வலங்களில் அச்சமாதிக்கு முன்னாகக் கொட்டு முழக்குகளை நிறுத்தி மௌனமாகச் செல்வது இன்றும் வழக்காக விருக்கின்றது. திடீரென ஓர் இராச்சியமேற்பட்டு உன்னத நிலையை அடைந்து விடமாட்டாது. அதற்குப் பல நூற்றாண்டுகள் பிடிக்கும்.

II மக்கள்

ஐவகை நிலம்

உலகிலுள்ள நிலப் பரப்பு இயற்கை அமைப்பில் காடு மலை வயல் கடற்கரை பாலைவனம் என்னும் ஐந்து வகையில் அடங்கும். உலகுக்கே உரிய இவ்வைந்து அமைப்பும் இந்தியாவுக்குண்டு. அவ்வந் நிலங்களில் வளரும் மரம்

கொடி பூண்டு முதலியவற்றின் சிறப்புகளால் அந்நிலங்கள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் * பாலை என்னும் பெயர்களைப் பெறும். தமிழர் விந்தமலைக்குத் தெற்கே வாழ நேர்ந்ததன்பின் பாலை நிலத்தை அறியாராதலின் அவர் முது வேனிற் காலத்து வெய்யிலின் வெப்பத்தால் மரஞ்செடிகள் தீய்ந்த முல்லையுங் குறிஞ்சியும் சார்ந்த நிலங்களைப் பாலை நிலம் எனக் கூறினர் அவ்வந் நிலங்களுக் குரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் முதலியன அவ்வத்திணைக்குரிய பாடல்களிற் கூறப்படுகின்றன.

முல்லைக்குத் தெய்வம் மாயோன்; உணவு வரகுஞ் சாமையும்; மா, முயலும் சிறுமானும்; மரம் கொன்றையும் குருந்தும்; புள், கானங்கோழியும் மயிலும் § சிவலும்; பறை § ஏறு கோட்பறையும் முரசும்; செய்தி, வரகு களைகட்டலும் அவை அறுத்தலுங் கடா விடுதலும் நிரை மேய்த்தலும் ஏறுகோடலும்; பண், முல்லை; தலைவன் பெயர், குறும்பொறை நாடன்; தலைமகள் பெயர், கிழத்தி மனைவி; இப்பெயர்மருத நிலைத்துத் தலைமகட்கும் உரியது; பூ, முல்லையும் தோன்றியும் ; நீர், கான்யாறு ; ஊர், பாடியுஞ் சேரியும்; மக்கள், பெயர் இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள் ; உணு ஐவனநெல்லும் திணையும்; மா புலியும் பன்றியும் யானையும்; மரம் அகிலும் திமிசுந் தேக்கும் வேங்கையும் ; புள் கிளியும் மயிலும், பறை வெறியாட்டுப் பறையுந், தொண்டகப்பறையுங், குரவைப்பறையும் ; செய்தி தேனழித்தலும் கிழங்ககழ்

---

* முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும் (சிலப்)

§ கவுதாரி § ஏறு தழுவல்

தலும் குன்ற மாடுதலும் தினைக்கிளி கடிதலும்; யாழ் குறிஞ்சியாழ்; தலைமகன் பெயர்சிலம்பன், வெற்பன், பொருப்பன்; தலைமகள் பெயர் கொடிச்சி, குறத்தி; நீர் அருவி நீருஞ் சுனைநீரும்: ஊர் சிறு குடியும் குறிச்சியும்; பூ குறிஞ்சியுங் காந்தளும் வேங்கையும் சுனைக் குவளையும்; மக்கள் பெயர் குறவர் இறவுளர் குன்றவர்.

மருதத்துக்குத் தெய்வம் இந்திரன்: உணா செந்நெல்லும் வெண்ணெல்லும்: மா எருமையும் நீர்நாயும்: மரம் வஞ்சியுங் காஞ்சியும் மருதும்: புள் நீர்க் கோழியுந்தாராவும்; பறை மணமுழவும் நெல்லரி கிணையும்: செய்தி நெல்லரிதலும் அவை கடாவிடுதலும் பயிர்க்குக் களைகட்டலும்: யாழ் மருதயாழ்; தலைமகன் பெயர் ஊரன் மகிழ்நன்; தலைமகள் பெயர் கிழத்தி மனைவி: பூ தாமரைப் பூவுஞ் செங்கழுநீர்ப் பூவும்; நீர் மனைக் கிணறும் பொய்கையும் யாறும்; ஊர் பேரூர் எனப்படும்; மக்கள் பெயர் கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர்.

நெய்தற்குத் தெய்வம் வருணன்: உணா மீன் விலையும் உப்பு விலையும்: மா சுறவும் முதலையும்; மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும்; புள் அன்னமும் அன்றிலும் கன்றிலும்; பறை மீன் கோட்பறையும் நாவாய்ப்பறையும்: செய்தி மீன் விற்றலும் உப்பு விற்றலும் அவை படுத்தலும்; யாழ் விளரியாழ்; தலைமகன் பெயர் துறைவன் கொண்கன்; தலைமகள் பெயர் நுளைச்சி பரத்தி; நீர் மணற்கிணறும் உவர்க் கழியும்; பூ வெள்ளிதழ்க் கைதையும் நெய்தலும்; ஊர் கல மேறு பட்டினமுஞ் சிறு குடியும் பாக்கமும்; மக்கள் பெயர் பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

பாலைக்குத் தெய்வம் காளி; உணா ஆறலைத்தனவும் ஊரெறிந் தனவும்; மா வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும்: மரம் இருப்பையும் ஓமையும்; புள் கழுதும் பருந்

தும் புறவும்; பறை பூசற் பறையும் ஊரெறி பறையும் நிரை கோட் பறையும்; செய்தி நிரைகோடலும் சாத் தெறிதலும் சூறையாடலும்; பண் பஞ்சுரம்; தலைமகன் பெயர் மீளி விடலை காளை; தலைமகள் பெயர் எயிற்றி பேதை; பூ மராம் பூவுங் குராம்பூவும் பாதிரிப் பூவும்; நீர் வறுநீர்க் கூவலும் அறு நீர்ச்சுனையும்; மக்கள் எயினர் எயிற்றியர் மறவர் மறத் தியர்; ஊர் கொல்குறும்பு.

ஐவகை நிலங்களின் கருப் பொருள் முதலிய வற்றால் அந் நிலங்களின் தன்மையும் மக்களின் வாழ்க்கை முறையும் ஓரளவில் விளங்குகின்றன.

குறிஞ்சி நில மக்கள்

மனிதன் ஆரம்பத்திற் குறிஞ்சி நிலத்திலேயே தனது வாழ்க்கையைத் தொடங்கினான். கொடிய விலங்கினங்களி னின்றும் அவனைக் காப்பதற்கேற்ற குகைகள் அங்குத்தா னுண்டு. மண்ணினால் ஏனங்களைச் செய்து அவற்றில் நீரை நிரப்பி வைத்திருக்க அவன் அறியாத காலத்து, மலையி லுள்ள நீரூற்றுகள் வறண்டனவாயின், கற்பாறை மீது பள் ளங்களில் தேக்கிநின்ற நீரை அருந்தினான். காலடியிற் கிடந்த கோடாங் கற்கள் அவனுக்கு முற்பருவத்தது ஆயுதங் களாக உதவின. பல வடிவங்களிற் காணப்பட்ட கற்கள், கோடரி ஈட்டி உளி முதலிய பலவகையான ஆயுதங்களைச் செய்வதற்குரிய அறிவை அவனுக்கு அளித்தன. இந்நிலை மையில் இருந்தே அவனது நாகரிகம் வளர்ந்து பழைய கற் காலத்தை அடைந்தது. அக்காலமக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் குடப்பா, நெல்லூர், வடஆற்காடு, செங்கற் பட்டு முதலிய விடங்களிற் கண்டெடுக்கப்பட்டன.

மலையில் வாழ்க்கையை ஆரம்பித்த மனிதன் காய்கனி கிழங்கு வித்து முதலியவற்றை உண்டு சீவித்தான். இவை

எல்லாக் காலங்களிலும் கிடையாமற் போகவே அவன் மாமிச வகைகளையும் உணவாகக் கொண்டான். துட்ட மிருகங்களினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலும் பார்க்க உணவின் பொருட்டு அவன் வேட்டையாட வேண்டியிருந்தது. ஆகவே அவன் வேட்டை ஆடுவதிற் றிறமை அடைந்தான்.

மனிதன் ஆதியில் வேட்டைத் தொழிலையே மேற் கொண்டான். உலக முழுமையும் காணப்பட்ட பழைய கற்காலக் கருவிகள் ஒரே வடிவினவாயிருத்தலின், மனிதன் வேடனாயிருந்தபோது * ஓரிடத்திற் றங்கியிராமல் இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழும் வாழ்க்கை உடையவனா யிருந்தான்.

வேடுவனாயிருந்த காலத்து மனிதன் இரண்டு சிறந்த தொழில்களைக் கற்றுக்கொண்டான். ஒன்று வில்லின் உப யோகம்; மற்றது தடிகளை உரைஞ்சி நெருப்பு உண்டாக்கு வது. மலையில் மண்டி வளரும் மூங்கில் இலகுவிற் பிளக் கக் கூடியதாயிருத்தல் அவன் கருத்திற் பட்டது. மூங் கிலைப் பிளந்து இரண்டு தலைகளையும் உலர்ந்த கொடிகளால் இழுத்துக் கட்டி வில்லைச் செய்து, நீண்ட கூரிய முட்களை வைத்து எய்யப் பழகிக் கொண்டான்.

இன்றும் மலைகளில் வாழும் மலைச்சாதியினர் புலியை ஒரே அம்பினாற் கொல்லக் கூடிய எய்யும் திறமையுடை யவர்களாயிருக்கின்றனர்.

---

* The ancestor of the human race must have lived in the Pliocene epoch, and the man was a roving animal at an early period, who wandered far from his home-Men of the Dawn- P. 40.

மலையிடத்து வளரும் மூங்கில் காற்றுக்கு அசைந்து ஒன்றோடு ஒன்று உரைஞ்சுதலால் தீ பிறந்தது. இதனைக் கவனித்த மனிதன் இரண்டு மரத்துண்டுகளை உரைஞ்சி நெருப்பை உண்டாக்க அறிந்துகொண்டான். அவன் இறைச்சியை நெருப்பில் வாட்டி மெதுவாக்கி உண்டான். அம்புவிற்களுடன் திரிந்த காலத்து அவன் வில்லைத் தோளிற் றரித்துக் கொண்டும் உடம்பைத் தோலால் மறைத்துக் கொண்டும் திரிந்தான்.

இவ் வழக்கமே பூணூலணியும் வழக்கமாகவும் அதில் (புஞ்சி) மான் தோலைக் கட்டும் வழக்கமாகவும் மாறின வாதல்வேண்டும்.

ஆடவர் வேட்டையின் பொருட்டு வெளியே சென் றிருந்த காலத்துப் பெண்கள் பழங்களைப் பொறுக்குவதி லும், கிழங்கு வகைகளை அகழ்வதிலும், மூங்கிலரிசி, சாமை, மலைநெல் முதலியவற்றைச் சேகரிப்பதிலும் நேரம் போக்கி னர். குழந்தைகளை வளர்ப்பதும் அவர்கள் கடமையா யிருந்தது. இப் பருவத்தில் மனிதன் வீடு வாயில்களமைக் கக் கற்றுக்கொள்ளவில்லை. வீடுகள் அமைத்து வாழ்வதி லும் நிழல் மரங்களின்கீழ் அல்லது பெரிய மலைத் தாழ் வாரங்களிற் றங்குவதே தென்னிந்திய வெப்பநிலைக்கு ஏற் றதாயிருந்தது. மழை வெயில்களிலிருந்து தன்னைக் காப் பாற்றும் நோக்கமாக ஆதியில் மனிதன் வீடமைக்கவில்லை. அக்கால மனிதனின் செல்வமாகிய உணவுப் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்காகவே வீடுகளமைக்கப்பட்டன. இடம் விட்டு இடம் பெயர்ந்து திரியும் வாழ்க்கையை மேற் கொண்டிருந்தமையாலும், நிலையான வீடின்மையாலும், வீட்டிற் றங்கி வாழும் உணர்ச்சி அக்கால மனிதனுக்கு உண்டாகவில்லை. ஆகவே பெண்களுக்கே சொத்துரிமை

யுடையதாகிய வாழ்க்கைமுறை வளர்ச்சியடைந்தது. இவ் வாழ்க்கைக்கு வாய்ப்பாக இன்னுஞ் சில காரணங்களிருந் தன.

முற்கால மனிதன் பெரிய மணக் கிரியைகளாற் கட்டுப் படவில்லை. காதலர் ஓர் தனியிடத்திற் சந்தித்து இயற்கை மணஞ் செய்துகொண்டனர். சில நாட்களின் பின் உற வினரை அழைத்து விருந்திடுவதே அக்கால மணக்கிரியையா யிருந்தது. விவாகக் கட்டுப்பாடு எப்பொழுதும் நிலையாக இருக்கவில்லை. ஆடவருக்குச் சொத்துக்களிற் சொந்த மில்லாதிருந்ததும், இடம் விட்டு இடம் பெயரும் வாழ்க் கையுமே இதற்குக் காரணமாயிருந்தன. பெண்களே சொத் துக்கு அதிகாரிகளாய் வாழும் வாழ்க்கை நீண்டகாலம் தொடர்ந்து வளர்வதாயிற்று.

ஆடவரும் மகளிரும், சிறப்பாகப் பெண்கள் தம்மை அலங்கரித்துக்கொள்ள விரும்பினர். குறப் பெண்கள், ஓய்வு நேரங்களில் மணிகளைப் பொறுக்கி மாலையாகக் கோத்தணிந் தனர். அவற்றோடு மலர்களைப் பறித்துக் கொடிகளால் மாலை யாகத் தொடுத்துத் தரித்தனர்; தம்முடைய காதலர் வீரத் தின் அறிகுறியாக வேட்டையாடிக்கொண்டுவந்த புலிப்பல் லைக் கயிற்றிற் கோத்தணிந்தனர். இதுவே விவாக காலத்துக் கணவன் மனைவிக்குச் சூட்டும் தாலியாக மாறிற்று. கண வனையுடைய தென்னிந்தியப் பெண்கள் தாலியை மிகப் புனிதமுடையதாகப் பேணிவருகின்றனர். பெண்கள் தம்மை அலங்கரித்தற்குப் பயன்படுத்திய மற்றொன்று தழையுடை. இது, அசோகு, மா, சந்தனம் முதலியவற் றின் இலைகளை உலர்ந்த கொடிகளிற் பிணித்து அணியப் படுவதொன்றாகும். தென்னிந்தியாவிலுள்ள மலைச் சாதி யாரிடை இவ்வகை வழக்கம் இன்றும் காணப்படுகின்றது.

குறச் சிறுமியர் தினைமீது விழும் குருவிகளைப் பரண் மீதிருந்து குளிர் தட்டை முதலிய கருவிகளைத் தட்டி ஒலித்து ஓப்புவர்.* மலையிடத்துள்ள சுனைகளில் ஆடிப், பூக்களைச் சூடிக் குரவை ஆடுவர். குறவர் இராக்காலத்தே பரண்மீதிருந்து, பன்றி யானை முதலிய விலங்குகள் தினையை அழியாதபடி காவல் புரிவர். பரணிடத்தே அவர்கள் மாட்டிய நெருப்புக் கொள்ளிகள் நட்சத்திரம்போல் விளங்கும்.§ கானவர் தாம் எய்து கொன்ற பன்றியைக் கூறுபோட்டுச் சுற்றத்தினருக்கு அளித்துத் தாமும் உண்பர்.§ குறமகளிர் பாறையிடத்துத் தினையைக் காயவிட்டுச் சுனையாடச் செல்வர். அதனைப் பார்த்திருந்த குரங்குகள் தினையைக் கவர்ந்து செல்லும்.

இரவிலே தினைப்புனத்தை மேயவரும் யானையைப் பரண்மீதிருந்த கானவன் கடும் விசையுடைய கவணால் எறிவன். எறியப்பட்ட கல் அம்பைப் போலச் சென்று வேங்கையின் பூங்கொத்தைச் சிதறி மலைச்சாரலிலுள்ள தேனைச் சிதைத்துப் பலாப்பழத்துள் தங்கும். (அகம் 292) உயர்ந்த தினைப்புனத்தே சிங்கத்தை ஒத்த வலியுடைய கானவன் பரண்மீதிருந்து கள்ளை உண்டு மகிழ, கொடிச்சி, சந்தனக்

---

* குருவியோப்பியும் குன்றத்துச் சென்று வைகி யருவி யாடியுஞ் சுனை குடைந்து வருவேம். (சிலப்.)

§ குறுந்தொகை 150, 315.

§ பிணர்ச்சுவற் பன்றி தோன்முலைப் பிணவொடு
கணைக்கா லேனல் கைமிகக் கவர்தலிற்
கல்லத ரரும்புழை யல்கிக் கானவன்
வில்லிற் றந்த வெண்கோட் டேற்றைப்
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்
குடிமுறை பகுக்கு நெடுமலை நாட. (நற். 336)

குழம்பைக் கரிய கூந்தலிடத்தே தடவி மெதுவாய் வருகின்ற காற்றிலே தழைத்த நீண்ட கூந்தலைக் கையினால் அசைத்து உலர்த்திப் பெரிய மலையின் பக்கத்தேயிருந்து குறிஞ்சிப் பண்பாடுவள். தினையை மேயவந்த இளைய வலிய களிறு தினைக்கதிரை உண்ணுதும், நின்ற இடத்தினின்றும் பெயராதும் உறங்காத பசிய கண்ணை மூடி உறங்கும். (அகம் 102) மலைச்சாரலிடத்தே மிளகு கொடி படர்ந்திருக்கும். பன்றி கொம்பினால் மண்ணெடுத்து உழுத புழுதியில் விதைத்த தினை விளைந்திருக்கும். தினையின் கதிரைப் புதிது உண்ணவேண்டிய கானவர், மரைப்பாலை, மான் இறைச்சியைப் புழுக்கிய பானையில் உலையாக வார்த்துத் தினை அரிசியைப் பெய்து சந்தன விறகால் உவித்த சோற்றை வாழையிலையிற் படைத்துப் பலரோடும் இருந்துண்பர். (புறம் 168)

குறிஞ்சி நிலத் தோற்றம்

அழகிய அசைவில்லாத மலை, அளத்தற்கரிய தவமுடைய பெரியார் போன்றுநிற்கும். அழகிய பட்டாடை உடுத்தோரும், இனிய மழலைப் பேச்சுடையோரும், நாற்சந்தியிற் கூட்டமாக உலாவுவோரும் பலர் நட்பையுடையோருமாகிய அழகிய பரத்தையர்மனம் போல எல்லை அறியப்படாதாகி, அரிய பொருளுடைய நூல்களைக் கல்லாதவரின் உள்ளம் போல நொய்த நுரையைச் சுமந்து, மெய்யை விரும்பும் மேலோர் நட்புப் போல, அருவி, மலையிடத்தெப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கும். பசியதாளுடைய தினைப் புனந்தோறும் பரண் மீது செருகிய சந்தனக் கட்டையும் அகிலுமாகிய கொள்ளிவிளக்கிற் கவரிமான் ஆறி நித்திரை செய்யும்.

தகர மரங்களால் அழகு பெற்ற குளிர்ந்த மலைச்சாரலில், நறை, நாகம், பலா, மா, சுரபுன்னை, ஈரப்பலா, செண்பகம், குருக்கத்தி, குறிஞ்சி, வேங்கை, ஆச்சா, சூரை, வள்ளி, மால், காந்தள், குரா, பனிச்சம், திலகம், மூங்கில், வெட்சி, காட்டு மல்லிகை, தில்லை, செங்கருங்காலி, சந்தனம், அகில், இலவங்கம், ஏலம், இருப்பை முதலிய மரங்களும் கொடிகளும் நெருங்கி வளரும். இவைக் கூடாகப் பாய்ந்து வருகின்ற ஆறு, தேன் கூட்டின் புறத்தை மறைத்து மலைச்சாரலிற் பரந்து பூங்காவனத்தின் தாளை அளைந்து மலை வாழ்குறச் சிறுமியர் ஆடுஞ் சுனையை நிறைக்கும். இவ்வகையான குறுங்காடுகளிற் குறவர் தேனெடுப்பர். பன்றி புனத்தை அழியாது காவல் புரியும் குறவர், பன்றிகள் கண்டு வெருண்டோடும்படி இருண்டுயர்ந்த வேலியிடத்துள்ள மரங்கள் தோறும் வைத்த வெளிச்சம் ஒளி செய்யும். கடையாமத்துச் சோலைகள் நாற்றமிகுந்த மலர்களை அலர்த்தும்.

(பெருங்கதை)

கானவர், நீர் உண்ணுதற்குத் திரியும் மான் கூட்டங்களிற் காற் சுவடு பதிந்த குளக்கரையிலுள்ள கிடங்குகளில் மறைந்திருந்து, நீருண்ணவரும், அகத்திப் பூப்போன்ற மருப்புடைய பன்றிகளை, நடு யாமத்தே வேட்டையாடுவர். பகற்காலத்தே தாமரைப் பூவின் புறவிதழ் போன்ற செவியுடைய முயல்கள் ஒன்றும் வெளியே போகாதபடி ஒன்றோடு ஒன்று தொடுத்த வலைகளை இழுத்துக்கட்டி ஆவென்ற வாயுடைய நாய்களுடன் சென்று பசிய பற்றைகளை அடித்து அவற்றை ஓட்டி வேட்டையாடுவர்.

(பெரும்பாண்)

முல்லை நில மக்கள்

குறிஞ்சி நிலத்தே மக்கள் பெருகினர். மலையிடத்தே கிடைக்கும் உணவுப் பொருள்கள் அவர்களுக்குப் போதாமலிருந்தன. ஆகவே அவர்கள் மலைகளினின்றும் கீழே சென்று காடுகளில் வாழத் தொடங்கினர். அவ்விடத்து வாழ ஆரம்பித்தபோது அவர்கள் வாழ்க்கையில் ஓரடி முன்னுக்குச் சென்றனர். ஆடு மாடு எருமை முதலியவற்றையும், முன் தமக்கு வேட்டைக்குதவியாயிருந்த நாயையும் அவர்கள் வீடுகளில் வளர்த்து வந்தனர். இதனால் ஆடு மாடு முதலியவற்றை வளர்த்து அவை அளிக்கும் பயன்களில் வாழ்கின்ற நிலைமைக்கு வந்தனர். முல்லைநிலத்தில் ஆடுமாடு விரைவாகப் பெருகுவதற்குரிய வாய்ப்புண்டு. இதனால் ஒவ்வொருவரும் சொத்துடையவராயினர். ஆகவே அவர்கள் குடும்பங்களாகப் பிரிந்து வாழ்க்கை நடத்தினர். குறிஞ்சி நிலத்தே வாழ்ந்த காலத்து இயற்கை மணத்துக்குப்பின் புலிப்பற்றாலி அணிந்து தழை உடை அளித்தல் மணக்கிரியையா யிருந்தது. இப்பொழுது இயற்கை மணத்தின் முன் மைந்தரும் மகளிரும் மணவினை ஆற்றுதலாகிய கற்பு நிகழ்ந்தது. மாலைகளாலும் தழைகளாலும் அலங்கரித்த பந்தரின் கீழ் ஆண்களும் பெண்களுமாகிய சுற்றத்தினர் கூடி விருந்துண்டபின், ஆண் மக்களை ஈன்ற தாலி தரித்த நான்கு பெண்கள் மணமகளை முழுக்காட்டிப் புது ஆடை தரித்து அலங்கரித்து மணமகனுக்கு அளித்தல் அக்காலமணக்கிரியையாயிருந்தது. புரோகிதர்புரியும் சடங்குகள் பிற் காலத்து ஏற்பட்டன. இவ்வாறு திருமணங்கள் நடைபெற்றமையானும், எல்லோருக்கும் சொத்து இருந்தமையானும், ஆண்களே சொத்துக்குரிமை யுடையவராயினர். ஏராளமான ஆடு மாடுகளை வைத்திருக்கும் ஒரு குடும்

பத்தவர்களின் தந்தை செல்வத்தால் அடையக்கூடிய எல்லா முதன்மைகளையும் பெற்றான். நிலங்களைச் சிறு சிறு கூறுகளாகப் பிரித்தலினால் ஆடு மாடுகளை மேய்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் குறையும். ஆகவே பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தன. இவ்வகைப் பல குடும்பங்களுக்கு ஒருவன் தலைவனானான். ஆதியில் அரசன் தோன்றுவதற்கு இம்முறையே காரணமாயிருந்தது.

இடையனைக் குறிக்கும் கோன் என்னுஞ் சொல் அரசனைக் குறிக்கின்றது. மந்தைகளை மேய்க்கும் இடையனது கோலே அதிகாரத்துக்குரிய செங்கோலாயிற்று. மற்ற நாடுகளில் இடையர்கள் இடம் விட்டு இடம்திரியும் மக்களாயிருந்தனர். இந்திய நாட்டில் இடையர் ஓரிடத்திலேயே தங்கித் தமது வாழ்க்கையை நடத்தினர்.

காட்டிடத்தே மந்தைகள் பரந்துசென்று மேய, ஆயர் மர நிழலிற்றங்கி இருந்து குழல்களில் இனிய இராகங்களை ஊதுவர். அவர்களின் குழல்கள் மூங்கில், கொன்றைப் பழம் ஆதியவற்றாற் செய்யப்பட்டன. மாடுகளை மேயும்படி விட்டு நெடுநேரம் வேலையின்றி யிருப்பவர்களாதலின் ஆயர் குழலில் இனிய இசையைப் பாடுவதில் திறமையடைந்தனர். ஆயரில் ஒரு பிரிவினர் குறுகிய காலுடைய குறும்பாடுகளை வளர்த்து அவை கொடுக்கும் கம்பளியினால் ஆடை நெய்தனர். இவர் குறும்பர் என்றழைக்கப்பட்டனர்.

சிழ்க்கை அடித்தலால் மடித்தவாயுடைய கோவலர்குடியிருப்பில் சிறிய குரம்பைகள் காணப்பெறும். அவற்றின் கால்களிடத்து ஆடுகள் தின்பதற்குத் தழைகள் கட்டப்பட்டிருக்கும். அவற்றின் கதவுகள் பல தடிகளைக்கொண்டு கட்டப்பட்டன. முதிய இடையன் காவலாகப் படுத்துறங்

கும் படுக்கை தடிகளை விரிந்து, வரகு வைக்கோல் பரப்பி கிடாய்த் தோலாகிய பாய் விரிக்கப்பட்டுள்ளது. முற்றம் தாமணி தொடுத்த நெடிய கயிறுகள் கட்டிய குறிய முளைகள் அறையப் பெற்றன. ஊரைச் சுற்றி இடப்பட்ட வேலியிடத்தே செம்மறியாடும் வெள்ளாடும் படுத்துறங்கும்.

தயிர் புள்ளியாகத் தெறித்த வாயுடைய மோர்ப்பானையைப் பூவாற் செய்த சும்மாட்டின்மீது தலையிலே வைத்துக் குறிஞ்சி நிலத்தே போய்க் காலையிலே மோரை விற்கும், தாளுருவி அசையும் காதும், பணைத்த தோளும், ஆற்றின் கருமணல் போன்ற கூந்தலும், நல்ல § மாமை நிறமுமுடைய ஆய்மகள், பட்சிகள் துயிலெழுகின்ற வைகறைக் காலத்தே எழுவாள். எழுந்து முடைக்காளானது வெள்ளிய முகைகளை ஒத்த குவிந்த முகிழ்களையுடைய இனிய தயிரைப், புலியினது முழக்கத்தையுடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றால் இழுத்துக் கடைவாள்: கடைந்த பின் வெண்ணெயை யெடுப்பாள். பின், மோருக்கு விலையாகக் கிடைத்த நெல்லைக்கொண்டு சமைத்த உணவாற் சுற்றத்தாரை உண்ணும்படி செய்வாள். இவ்வகையான ஆய்மகள், தான் நெய்யை விற்றவிலைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்ப் பாலெருமையையும், கரிய எருமை நாகினையும் நெய்க்கு ஒப்பாகச் சொல்லி வாங்குவாள்.

இடையர், செருப்பை விடாமற் கிடக்கும் காய்த்த காலினையுடையர்; பசுக்களுக்கு வருத்தஞ் செய்யும் தடியூன்றியமையினர்: இரண்டு தலைகளிலும் உறியினையுடைய காக்களைச் சுமந்து செல்லுதலால் தழும்பு பிருந்ததுட

* உதயணன் கதை.

§ நாகுரித்த ஆம்பற்றண்டுபோன்ற நிறம்.

மயிருடையதுமாகிய தோளினையுடையர்; காட்டுமரங்களின் உயர்ந்த கிளைகளிலுள்ளவும் கொடிகளிலுள்ளவுமாகிய பல பூக்கள் கலந்து நெருங்கத் தொடுத்த மாலையினை அணிந்தோர்; ஓர் உடையினை யுடையர்; பாற்சோறாகிய உணவினர். இவ்வகையான ஆயர் பசுத்திரளோடே காட்டிற் றங்குவர், கடைக்கோலாற் கடைந்து கொண்ட நெருப்பினையுடைய தீக்கொள்ளியாற் றுளையிட்ட கரிய துளையினையுடைய குழலிடத்தே பாலைப் பண்ணைப் பாடுவர். பாலைப் பண்பாடி வெறுத்தாராயின் குமிழின், உள்ளே துளையுடைய கொம்பில் வளைத்துக் கட்டின மரற்கயிற்றாற விரலாற் றெறித்து வாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழில் குறிஞ்சி யென்னும் பண் பாடுவர்.

படைத்தலைவர் இருப்பதுப், விடத்தர் தொடரி முதலிய முள்மரங்கள் சூழ்ந்து வளர்ந்த வேலியுடையதுமாகிய ஊரிடத்தே, வீடுகளின் முற்றங்களில் பிடித்திரள் நின்றாற்போல வரகு முதலிய தானியங்கள் நிறைந்த குதிர்கள் நிற்கும். தலைவாயிலிடத்தே யானையினது காலை ஒக்கும் வரகுதிரிகைகள் நடப்பெற்றிருக்கும். வீடுகள், குறிய வண்டிச் சில்லுகளும் கலப்பைகளும் சார்த்தி வைத்தலினாற் றேய்ந்த சுவருடையவும், மதில் சூழ்ந்தவுமாகிய கொட்டில்களுடையன. மாரிகாலத்து மேகத்தை ஒப்ப, வீடுகள் வரகு வைக்கோலினால் வேயப்பட்டுள்ளன. வரகையும் பருப்பையும் இட்டுச் சமைத்த பருப்புச் சோற்றினை ஆயர் உண்பர். * கோவலர் § கழுவோடே கறவைக் கலங்கள்

* பெரும்பாணா.

கலித் தொகை § கழு—தடியின் இரண்டு தலைகளையும் சீவிக் கறத்தற்கரிய பசுக்களின் கழுத்திலிடப்படுவது.

வைத்து உறியோடு தோற்பையிடத்தே சூட்டுக் கோலையு மிட்டுச் சுருக்கிய பைகளைத் தூக்கி நீண்ட கொன்றைக் காயைப் பிளந்து செய்த குழலில் இனிய இசையைப் பாடித் தமது பசுக்களை மழை பெய்த நிலத்தே மேய்க்கக் கொண்டு செலவர். மாடுகளை மேய்க்கச் செல்லும் இடையர் மூங்கிற் குழாய்களில் உணவை இட்டு மாட்டின் கழுத்திற் கட்டிச் செல்வர் (அகம் 303); முதுகிலே இட்ட பறிகளில் குழை களை உருவிப்போட்டுச் செல்வர்.

காந்தள் மாலையணிந்த கோவலர், ஏற்றையுடைய ஆடு மாடு எருமை முதலிய கூட்டங்களை மேயவிட்டு, பற்கொட் டும்படி நடுங்குகின்ற குளிர் வருத்தந் தீரக் கையிடத்துள்ள கொள்ளியிடத்தே கையைக் காய்ச்சி அதனாற் கொண்ட வெம்மையைக் கன்னத்தே தடவுவர். (நெடுநல்வாடை)

முல்லை நிலத்திலுள்ளவர்கள் தஞ் சிறுமியரை ஏறு தழுவி வீரச் செயல் காண்பிக்கும் காளையருக்கு அளிப் பதும் வழக்கமாயிருந்தது. கூரிய கொம்புடைய கொழுத்த எருதை அவிழ்த்துவிட அதனைப் பிடித்து ஒருவன் அடக்கு தலே ஏறு தழுவுதலாம். ஏறு தழுவுங்கால் எருதுகள், பல இளைஞரின் குடலைக் கூரிய கொம்புகளாற் பிளந்து கொல்லுவதும் உண்டு. ஏறு தழுவும் காட்சியைப் பற்றிய செய்யுட்கள் பல, கலித்தொகையிற் காணப்படுகின்றன.

“மகட் கொடை நேர்ந்த ஆயர் சேரக் கூடி இறைவ னுடைய குந்தாலிப் படைபோலே கூரிதாகக் கொம்புகளைச் சீவி ஏறுகளைத் தொழுவிடத்தே புகுத்திவிட்டார்.

அவ்விடத்து ஏறுகளைத் தழுவிப் போக்கும் படியை உட்கொண்டு வந்து வந்து திரண்டு மழை முழக்கமும் இடி யும் போல ஆரவாரமெழப் புகையொடு தூள் எழ ஏறு தழுவினர்க்குக் கொடுத்தற்கு நல்ல மகளிர் திரண்டு நிற்ப

நீர்த்துறையிலும், ஆல மரத்தின் கீழும் பழைய வலியினையுடைய மராமரத்தின் கீழும், உறையுந் தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைத் தழுவித் தொழுவிலே பாய்ந்தார்.

எருத்தினது நோக்கை அஞ்சானாய் அதின் மேலே பாய்ந்த இடையனை அவ் வெருது சாவக் குத்திக் கொம்பிடத்தே எடுத்துக் கொண்டு உடலைக் குலைக்கின்ற தோற்றம்; துரோபதையின் தூய கூந்தலிலே கையை நீட்டிய துச்சாதனனுடைய நெஞ்சைப் பிளந்து பகைவர் நடுவே தான் சொன்ன வஞ்சினத்தை வாய்க்கச் செய்த வீமசேனனைப் போன்றது.

" அங்ஙனம் பாய்ந்து கொம்பிடத்தே பிடித்துக் கொண்டும் மார்பிலே உறும்படி தழுவிக்கொண்டும் கழுத்திடத்தே அடங்கிக்கிடந்தும் இமில் முறியும்படி தழுவியுந் தோளுக்கு நடுவே கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக்கொண்டும், நிரைத்துத் தம்மேலே சென்ற ஆயரைப் பின்னர்க் கீழே வீழ்த்து, நீண்டமருப்புத் தைக்கும்படி குத்தி, அவர்கள் தழுவுகின்ற கழுத்திடத்தைத் தழுவக்கொடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின ; அங்ஙனம் நிறுத்தினபின்புஞ் சென்று தழுவுவாரைக் கோட்டிடத்தே சாம்படி குத்திப் பின்சென்று தழுவுவாரைப் பெறுமல் நின்ற நிறத்தையுடைய சிவந்த ஏறு, உயிர் குறைகின்ற நாளிடத்தே அவர் பின்னே சென்று குற்றத்தைச் செய்து துகைத்து உயிரையுண்ணும் கூற்றுவனைப் போன்றது.

" கோபத்தோடே வெவ்விதாயத் தன்மேலே சென்ற சிவந்த ஏற்றைச் செவியடியிற் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு காயாம்பூமாலைஅணிந்த பொதுவன் தழுவினான் " *

* கலி.

முல்லை நிலத் தோற்றம்

" பொருள் வயிற் பிரிந்தாரை எதிர் ஏற்கும் கறபுடை மாதரைப் போலச் சடுதியாக முழங்கிக் கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் மகிழ முகிற்கூட்டங்கள் பருவகாலத்தே மழை பெய்தன. கார்காலம், பெரிய கடலிடத்தே நீரை யுண்ட முகிலாகிய விதானத்தைக்கட்டி, இந்திர வில்லாகிய தூணை அழகு பெற நாட்டி, விளங்குகின்ற மின்னலாகிய விளக்கை மாட்டி, ஆலங்கட்டியாகிய வெண்மணலை அழகு பெறத்தூவி, அழகிய முழக்கத்தை முரசு போல் அதிர்த்து, பெரிய தண்ணியதுளிகளைச் சொரிந்து, வேனிலைத் தாங்கு தலால் மேனி வாடிய பூமியை முழுக்காட்டும். இவ்வி டத்தே பலரும் விரும்பும் படி தொலைவிற் பொருள் தேடப் பிரிந்து பொன்னு பரணங்க ளாகிய செல்வத்தோடு இருட் காலத்தே வந்த இனிய உயிர்க்காதலனை அடைந்த ஆபரண மணிந்த பெண்கள் இடை போலப் பெரிய அழகிய கொடி களை அயலே பரப்பி அப்பெண்களின் பற்கள் போல முல்லை அரும்புகளைப் பரப்பினின்றன. அவற்றினயலே குரவும் தள வும் குருந்தும் வெண்காந்தளும் அரவின் பல்லுப் போல அரும்பின. அவை அவிழ்கின்ற பதம் பார்த்து வண்டுகள் ஊதின. இவ்வாறு கார்காலத்தே அழகு பெறற கானம், அழகிய எல்லையை யுடையனவாகி உறங்குகின்ற விசாலித் தகை ஒருங்கே நிரைத்தன போல் வளைந்த கதிருடைய தினையும் சோளமு முடையனவாயிருக்கும் கவைத்தகதி ருடைய வரகும் கார் எள்ளும், புகர் நிறப்பூவுடைய அவ ரையும் தொங்குகின்ற குலையுடைய பயறும் உழுந்தும் கொள்ளும் கொழுந்துடைய துவரையும் தோரை நெல்லும் பிறவும் அளவிடப்படாமல் விளைந்திருக்கும். உயர்ந்த மலை யின் அருகாமையில் பெண்மரையா பால் சுரந்து ஒழுக்கி

'வெள்ளிய பூவுடைய முசுண்டையின் பசிய குழையை மேயும். சிறிய பெண்மானைத் தழுவிய முறுகிய மருப்புடைய ஆண்மான், செறிந்த இலைபுடைய காயாகதுப்பின் ஒரு பக்கத்தே உறைக்கப் பெரிய கொன்றை போடு பிடாவின் தலை பின்னி மலர்ந்த பூவுடைய முல்லை நிலத்திற் பகற்காலத திற்றுயிலும் வரியுடைய நாரும் விரிந்த புள்ளியுமுடைய மான் கூட்டம் ஆட்டுக் கூட்டத்தோடு விளையாடும். பூங் கொத்துகளுடைய சோலையும், நல்ல சிறந்த பண்டங்களோடு பலர்கூடி நகரத்தாருக்கு விற்கும் தோற்றமும், பல ஆக்களின் பாலைப் பெறுகின்ற வாழ்க்கையும் உடைய கோவலர் முல்லை நிலத்திற் கூடியிருப்பார்." (பெருங்கதை)

மருதநில மக்கள்

கடற்கரைக்கும் முல்லை நிலத்துக்கும் இடையே கிடக்கும் நிலம் வயல்களா யிருந்தன. பழைய கற் காலத்துக்குப் பின் அங்கு வாழை நெல் கரும்பு முதலிய பயிர்கள் உண்டாக்கப்பட்டன. இவ்விடத்தில் மனிதன் நிலத்தை உழுது தானியங்களை உண்டாக்கவும், ஆறுகளிலிருந்து வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் பழகிக்கொண்டான். வெள்ளத்தை இவ்வகையாக ஆண்டமையின் இவனுக்கு வேளாளன் என்னும் பெயர் எற்பட்டது. ஆறுகளுக்குத் தூரத்தே இருந்த மனிதன் மழை நீரைக் குளங்களிற் றேக்கி, வாய்க்கால் வழியாகப் பயிர்களுக்குப் பாய்ச்சவும் கிணறுகள், நீரூற்றுகளி லிருந்து நீரை உபயோகிக்கவும் கற்றுக் கொண்டான். இவ்வாறு காரை ஆண்டமையின் இவன் காராளன் எனப்பட்டான்.

இப்பருவத்தில் மனிதன் மரந்தடிகளால் வீடுகள் அமைத்து அவற்றுள் தானியங்களைச் சேமித்து வைத்தான்.

உபயோகத்துக்கு மீதியான விளை பொருள்களைக் கடல்மீன் உப்பு முதலிய வற்றுக்குப் பரதவரோடும், பால் நெய் முதலிய வற்றுக்கு ஆயரோடும், கல்லாயுதம், மான் கொம்பு தந்தம் இறைச்சி முதலியவற்றுக்குக் குறவரோடும் பண்டமாற்றுச் செய்தல் அவர்க்கு இலேசாயிருந்தது. பண்டங்களைப் பிறவிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தமையின் மனிதன் வண்டி செய்யப் பழகிக் கொண்டான். மனிதனுடைய நாகரிகம் படிப் படியாக வளர்ச்சியுற்று மருத நிலத்தில் முடிவடைந்தது.

"பசிய கண்ணுடைய எருமை கன்றை நினைந்து பசிய இலையிடத்து இரங்கிச் சொரிந்த பாலின் நிறமுடைய அன்னமும் நாரையும் அதன் குஞ்சுகளும் வயலிடத்துள்ள ஆரவாரத்துக்கஞ்சி எழும். கரும் பிடத்திற் றாங்கும் தேன் கூட்டினின்றும் தேன் அலர்ந்த செந்தாமரை மலர் மீது சொட்டும். இத்தோற்றம், அந்தணர் மூட்டுவதற்கு நெருப்பின் மீது நெய் சொரிந்ததை ஒக்கும். இவ்வகையான சோலைகளில் பாளைகளும் பழுத்த குலைகளுமுடைய கமுகும், மூங்கிலும், வாழையும், குலைகளுடைய தெங்கும், பலாவும், குருந்தும், மாவும், புன்னையும், செருந்தியும், பொன் போன்ற பூங்கொத்துகளுடைய புலிநகக் கொன்றையும், இவை போன்ற பிறவும் இடைவெளியின்றி உண்டாக்கப் பட்டிருந்தமையின் சூரியனது கிரணங்கள் உள்ளே நுழைய முடியாமையினால் பகற் காலத்தும் சோலைகளின் அகத்தே இருள் செறிந்திருக்கும். வயல்களில் தாளிற் படிந்த கனத்த கதிருடைய நெல் வரம்பிற் சாய்ந்துகிடக்கும். பெரிய எருதுகளைக் கொண்டு உழும் உழவரின் ஒலியும், வயலில் வேலை செய்யும் கூலி ஆட்களின் ஆரவாரமும், வயல்களின் இடை யிடையே களை பிடுங்கும், பசிய இலைகளிற் கள்ளை வார்த்துப் பருகிய கடைசியரது பாடலும், கிளிகளின்

பாடல்களும், மத்தளத்தின் ஒலியும், கிணைப்பறையின் ஆரவாரமும், மார்ச்சனையுடைய முழவின் ஆர்ப்பும், மடைகளின் வாய்களைத் திருத்தும் மள்ளரின் ஒலியும் இடையீடின்றி எழும். (உதயணன் கதை)

உழவர் நுகத்திலே எருதுகளைப் பூட்டிப் பெண் யானையின் வாயை ஒத்த வளைந்த வாயுடைய கலப்பையின் உடும்பின் முகத்தை ஒத்த பெரிய கொழு மறையும்படி அமுக்கி உழுது விதைகளை விதைப்பர். பயிர்கள் விளைந்து அறுக்கும் பருவத்தை அடைந்தபோது அவற்றுட் டங்கும் குறுகிய காலினையும் கரிய கழுத்தினையு முடைய காடை பறக்கலாற்றாதனவும் கடம்பின் பூப்போன்ற நிறமுடையனவுமாகிய குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு காட்டிடத்தே சென்று தங்கும்.

கொல்லனது முறிந்த குறட்டினை ஒத்த காலையுடைய நண்டின் புற்றுச் சிதையும்படி கோரைப் புல்லைக் குத்தி எடுத்த மண் கிடக்கின்ற கொம்புடைய கரிய எருதுகள் பெரிய வயல்களிடத்தே நின்று போர் செய்யும். அதனாற் சேறுடிய நிலத்தை ஒக்க மிதித்து உழவர் நாற்று முடிகளை நடுவர். வயல்களிற் களை பறிப்போர் நெய்தற் பூவைச்சூடி வெறுத்தாராயின் முள்ளியின் பூவைப் பறித்துக் கோரைப் புல்லின் தண்டைப் பல்லாற் கிழித்து முடிந்த நாராற் கட்டிய மாலையை, ஈருடைய கரிய தலை நிறையும்படி சூடுவர்; சண்பினது காயிடத்தே உள்ள பொன்போன்ற தாதை மார்பிடத்தே பூசுவர். இரும்புத் தகடுபோன்று திரையாத மெல்லிய தோலினையுடைய வேலைசெய்வோரின் பிள்ளைகள் பழஞ் சோற்றின் திரளையை வெறுத்து வரம்பிடத்துக் கட்டிய புதிய வைக்கோலால் வேய்ந்த கவிந்த குடில்களின் முற்றத்தே அவலிடிப்பர். அவ்வோசையைக் கேட்ட கிளி

கள் அஞ்சிப் பறக்கும். இவ்வாறு இடைபரந்த புது வரு வாயினையுடையதும் விளைந்த கதிர்களையுடையதுமாகிய கழனியிடத்துக் குளவிக் கூட்டத்தை ஒத்த முற்றின நெல்லுடைய தாள்களை அறுத்துத் தொழிலாளர், பாம்புறை கின்ற மருதின் நிழலிற் போரடுக்குவர். துணங்கையாடும் பேய்க் கூட்டம் வெண்டுகில் உடுத்து நின்றது போலச் சிலந்தியின் வலைகள் போரைச் சூழ்ந்து கிடக்கும். அப்போர் களைக்கடா விட்ட பின்னர் வைக்கோலையும் கூளங்களையும் பிரித்து ஈரம் புலரும்படி விட்டு மேல் காற்றிலே கையாற் றூவித் தூற்றின பொலி மேருவைப்போற் றோன்றும்.

மருத நிலஞ் சூழ்ந்த குடியிருப்புகளிற் பசுக்கன்று களைப் பிணிக்கும் தாம்புகள் கட்டின தறிகள் நட்ட பக்கத்தினையும், நீண்ட ஏணிக்கும் எட்டாத உயரமும், தலைபைத் திறந்து உள்ளே கொட்டப்பட்ட நெல்லினையுமுடைய பழைய குதிர்களையுமுடைய வீடுகளில், தச்சச் சிறார் செய்த விளையாட்டுத் தேர்களை உருட்டிக் கொண்டு திரிந்த பிள்ளைகள், தமது தளர் நடையாலுண்டான வருத்தம் தம்மை விட்டு நீங்கும்படி செவிலித்தாயரிடத்துப் பாலையுண்டு அவர்களைத் தழுவிக்கொண்டு உறங்குவர். அங்குள்ளார் நெற் சோற்றோடு கோழிப் பேட்டின் இறைச்சிப் பொரியலை உண்பர். யானையின் குரல் போலச் சத்தமிடும் ஆலைகளிற் கருப்பஞ் சாற்றைக் கட்டியாகக் காய்ச்சுவர். (பெரும்பாண்.)

அகன்ற கழனியிடத்தே பசிய கரும்பின் பாகைக் காய்ச்சுகின்ற கொட்டிலில் நெருப்பின் புகை சூடுதலால் வயலிடத்துள்ள நெய்தற் பூ வாடியிருக்கும். காய்ந்த நெற் கதிரைத் தின்ற எருமைக் கன்றுகள் உயர்ந்த குதிரைகளின் பக்கத்தே படுத்துறங்கும். குலையுடைய தெங்கும், குலை

புடைய வாழையும், காயுடைய கமுகும், மணம் வீசும் மஞ்சளும் மாமரங்களும், நுங்குடைய பனையும், அடிபரந்த சேம்பும், முளைத்த இஞ்சியும் அக்கழனியிடத்தே செறிந்து தோன்றும். ஒள்ளிய நெற்றியுடைய மகளிர் உலருகின்ற நெல்லைத் தின்னும் கோழியை எறிந்த, பொன்னாற் செய்த மகரக்குழை, பூண் அணிந்தசிறார் மனையின் முற்றத்தே கையாலுருட்டும் மூன்றுருளையுடைய சிறு தேரினது உருளைத் தடுக்கும். (நெடுநல்வாடை)

“ நெருப்பு எரிவது போன்ற தாமரையை இடையிடையே சேர்த்து அரிந்து குவித்த செந்நெல் அறுக்கும் வேலையாட்கள் கள்ளை அருந்தி, வண்டிச் சில்லுச் சேற்றுட் புதைந்ததாயின் சகடம் செல்லுதற்குக் கரும்புகளைத் தெரிந்தெடுக்குமூரன். (அகம் 116)

ஆரவாரமுடைய விடியற்காலத்து ஆட்களை அழைத்து அரவஞ் செய்யும் உழவரது தூற்றுத பொலியினின்று எழுந்த நொய்த கூளங்கள் வானத்தை இருண்ட மேகம் போல் மறைக்க, இருள் புலர்கின்ற விடியற்காலத்து வைக்கோலைப் பெயர்த்து அலைத்துக் கடாவிட்டுத் தொழிற் செருக்கால் நேர்ந்த சோர்வு நீங்கும்படி, காற்றடிக்கப் பூத்த வளவிய தளிருடைய மாவின் கிளிபோன்ற காய்க் கொத்துக்களைப் பிழிந்து, மாதுளங்காய் முதலியன சேர்த்துப் புளிக்கும் செவ்வி உண்டாகச்செய்து புதுக்குடங்களில் நிறைத்து வைத்த சாரத்தை வெய்யிலிலே வாடப் போட்ட பனையோலையாற்கோலிய தட்டுப் பிழாவில்வார்த்து மடுவில் மாடு நீர் குடிப்பதுபோற் களமர் குடிப்பர்; குடித்துக், கொள்ளும் பயறும் கலந்து பால் விட்டுச் சமைத்து வெள்ளிக் கோல் வரைந்தது போற் றோன்றும் வெள்ளிய கூழை வேண்டிய மட்டும் உண்டபின் நெற்குவியலைச் சூடா

கச் சுற்றிப் பொழுது சரிய மருதின் நிழலில் எருதுகளோடு தங்குவர். (அகநானூறு)

கடைசியர் காலையில் முடியிடத்தேவைத்து முடிந்த பூக்களைக்களைவர். களைந்து தலையிடத்தே நாற்று முடிகளைச் சுமந்து வயல்களுக்குச் செல்வர்; சென்று கள்ளை உண்டு களித்துப் பண்ணோடு பாடுவர். செந்நெற் கதிரோடு அறுகும் குவளையும் கலந்து தொடுத்த மாலையை மேழியிற் சூட்டி ஏர்பூட்டி உழுவோர், ஏர் மங்கலம் பாடுவர். நெல்லை அரிந்தோர் சூட்டைக் கடாவிட்டு முகவைப் பாட்டைப் பாடுவர். கிணைப் பொருநர் தெளிந்த ஓசையுடைய கிணைப்பறையைக் கொட்டுவர். உழவர், இரப்பவர் சுற்றத்தையும், புரப்பவர் சுற்றத்தையும் உழவிடத்தே விளைப்பர். (சிலப்.)

வயலிடத்து பயில் உதிர்த்த இறகை உழவர் சூட்டோடு திரட்டும் வயல்களையும் கொழுவிய மீனையும் மிக்க கள்ளையு முடையோன். (புறம் 13)

விளைந்த வயல்களில் விழும் புள்ளை ஓட்டுவார் பனங்கருக்காகிய விறகால் மீனைச் சுட்டு மது வருந்துவர். (புறம் 29)

மருதநிலத்திலுள்ள பாணர் குடியிருப்பு

வலை வீசுவோர், வஞ்சிமரமும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்கு நடுவே கலந்து வைத்து மூங்கிற்கோலை வரிச்சாக நிரைத்துத் தாழை நாராற் கட்டித் தருப்பைப் புல்லால் வேய்ந்த குறுகிய இறப்பையுடைய குடில்களில் வசிப்பர். முற்றங்களில் மீனை வாரி எடுக்கும் பறிகள் கிடக்கும். புன்னைக் கொம்பர்களை வெட்டி இடப்பட்டதும், மேலே படர்ந்த சுரையின் காய்கள் தூங்கப் பெறுவதும் மணல் பரப்பியுள்ளதுமாகிய பந்தரின் கீழே

இளையோரும் முதியோரும் கூடியிருப்பார் ; பின் கயலும் இறாலும் பிறழும் ஆழ்ந்த குளங்களைக் கலக்கி மீன் பிடிப்பர். வளைந்த குடுமியுடைய வலைவீசும் இவர்கள் கோடை காலத்தும் வற்றுதலறியாத குளங்களில் கரையைக் காத்திருப்பர்.

அவர்கள், குற்றாத கொழிய வரிசியைக் களியாகத் துழாவிக் காய்ச்சிய கூழை அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே உலரவாற்றிப் புற்றும் பழஞ்சோற்றை ஒத்த புறமுடைய நென் முளையை இடித்துச்சேர அதிலே கலந்து இனிமை பிறக்கும்படி இரண்டு பகலும் இரண்டு இரவும் அரியாமல் வைத்துச் சாடியின் கண்ணே முற்றின வெவ்விய நறிய கள்ளை மீன் சூட்டோடு அருந்துவர்.

தூண்டிலிற் கோக்கும் இரையிட்டு வைக்கும் தோற்றையையுடையமீனைத் தப்பாமற் பிடிக்கும் பாண்சாதியினன் மூங்கிற் கோலின் தலையிற கட்டின கயிற்றிடத்தே தூண்டிலைக் கொளுவி அது மறையப்பொதிந்த இரையைக் கவர்ந்து அகப்படாதுபோன வாளைமீன், நீர்க்கணித்தாய் நின்ற பிரம்பினது காற்றுலசையும் நிழலை நீரிற் கண்டஞ்சும். குளத்திலே தாமரையையும் இந்திர வில்லை ஒத்த நிறமுடைய மலர்களும் மலரும். (அகம்.)

நெய்தல் நில மக்கள்

முல்லை நிலத்துக்கு அடுத்தபடியாக நெய்தல் நிலம் குடியேறப்பெற்றது. விசாலித்த நெஞ்சும் வலிமையுமுள்ள நெய்தல்நிலமக்கள் கடலிடத்தே படகுகளிற்சென்று மீன் பிடித்தனர். இரண்டொரு மரங்கள் ஒருமிக்கப் பிணைக்கப்பட்ட கட்டு மரங்களே அவர்களது முற் பருவத்துப் படகுகளாயிருந்தன. இந்நிலத்து மீனும் உப்பும் மிகு

தியாகக் கிடைத்தன. இவற்றைப் பரதவர் மற்ற நிலங்களுக்குக் கொண்டு சென்று பிற பொருள்களுக்குப் பண்டமாற்றுச் செய்தனர். இதனால் அங்குள்ளார் பெரும்பாலும் வியாபாரத்தை மேற்கொள்ளவேண்டியவராயினர். இவர்கள் பொதி மாடுகளிற் பண்டங்களை ஏற்றிச் சென்றனர். இப்பரதவரிலிருந்தே மேற்கே ஆபிரிக்கா அரேபியேமுதலிய விடங்களுக்கும், கிழக்கே மலேயா சீனு முதலிய இடங்களுக்கும் பண்டங்களை நாவாய்களில் ஏற்றிக்கொண்டு சென்று வியாபாரஞ் செய்த மாலுமிகள் தோன்றினார்.

பரதவர் கடலிற் பிடித்த இறாலைச் சுட்டுத் தின்பர்; வயல் ஆமைகளைப் புழுக்கி உண்பர்: மணலிடத்தே படர்ந்த அடம்பின் பூவைத் தொடுத்துத் தலையிற் கட்டுவர்; நீரில் நிற்கும் ஆம்பற் பூவைப் பறித்துச் சூடுவர்; ஆட்டுக் கிடாய்களையும் கவுதாரிகளையும் பொருது விளையாடுதற்குக் கொண்டு சென்று அகன்ற மன்றிடத்தே கூடுவர்.

நிறைபுவா நாளிலே சிவந்த தலையுடைய பரதவர் மீன் பிடித்தற்குப் போகாது தழையுடுத்த கரிய தம்மகளிரோடு திரளுவர்; திரண்டு நெடிய தூண்டிற் கோல்கள் சார்த்தியிருக்கும் குறுகிய இறப்புடைய கடற்கரைக் குடியிருப்பின் நடுவில் நிலவு சேர்ந்த இருளைப் போலவலை கிடந்து உலரும் மணலுடைய மனையின் முற்றத்தில் சினையுடைய சுறவின் கொம்பை நடுவர். நட்டு அதனிடத்து ஏறிய வலிய தெய்வங் காரணமாக, விழுதுடைய தாழையின் அடியிடத்தே நின்ற வெண்டாளியின் பூவை அணிவர்; தாழையின் மலரைச் சூடுவர்; பனையின் கள்ளை உண்டு ஆடுவர். பின் கடலாடியும் உப்புப் போக ஆற்று நீரிலே குளித்தும், நண்டுகளை ஆட்டியும், திரையிலே விளையாடியும், பாவைகளைப் பண்ணியும் பகற் பொழுதைக் கழிப்பர்.

கடலருகே இருக்கும் பரதவருடைய அகன்ற தெருவிடத்தே அரிய காவலையுடைய பண்டசாலையுண்டு. பண்டசாலையிற்றிரண்டு கடலில் ஏற்றிதற்குக் கொண்டுவந்த பண்டங்களும், கடலிலிருந்து இறக்கிய பண்டங்களும், சுங்கங் கொள்வதற்கு முத்திரை பொறித்துப் பண்டசாலைக் குப் புறம்பே அடுக்கப்பட்ட பண்டங்களும் மலை போற் குவிந்து கிடக்கும். சுங்கங் கொள்வோர் எப்பொழுதும் ஓய்வின்றிச் சுங்கங் கொள்வர். பண்டசாலையின் முற்றத்தே ஆண்நாய் மேழகக்கிடாயோடு ஏறடைகளிலேறிக் குதித்து விளையாடும். (பட்டினப்பாலை)

வானை முட்டும் மாடத்திலுள்ள பரதவர்மகளிர் அரை யிடத்தே உடுத்த மெல்லிய துகிலையைத் தோகைமயில் களைப் போலக் காலிடத்தனவாகிய சிலம்புகள் ஒலிக்க நூலால் வரிந்த பந்துகளை அடித்து விளையாடுவர். பின், முத்தை ஒத்த வார்ந்த மணலிலே கையிற் புனைந்த வளையல் கள் அசையப் பொன்னாற் செய்த கழங்கைக் கொண்டு மெத்தென விளையாடுவர்.

ஆகாயத்தே திரிகின்ற தேவருலகுக்கு முட்டுக் காலாக ஊன்றிவைத்த ஒரு பற்றுக் கோடுபோல விண்ணைத்தீண்டும் வெளிச்ச வீடு, ஏணி சாத்தி ஏறுதற்கு அரியதும் தென்னங் கிடுகு முதலிய வற்றால் வேயாது சாந்திட்டு மூடப்பட்ட தாயும், இராக்காலத்தே கொளுத்திய விளக்கு விளக்கின்ற தாயும் இருக்கும். கடலிடத்தே செல்வோர் இக்கலங் கரை விளக்கத்தைக் கண்டு, துறைமுகத்தை அறிந்து தங்கு வர். தென்னங் கீற்றுகளால் வேய்ந்த மலைபோன்ற தனி வீடுகள் காணப்படும். முற்றங்களில் மஞ்சட்செடிகளும்பூஞ் செடிகளும் வளரும். அங்குள்ளோர் பலாப்பழத்தையும் இள நீரையும் வாழைப் பழத்தையும் நுங்கையும் வள்ளிக் கிழங்கையும் நுகர்வர். (பெரும்பாண்)

உமணர் பாத்திகளிலே கடல் நீரை விட்டுப் பளிங்கு போன்ற உப்பை விளைவிப்பர். விளைந்த உப்பைக் குவியல் குவியலாக வாரிக் குவிப்பர். இங்ஙனம் குவிக்கப்பட்ட உப்பைச் சகடங்களில் ஏற்றிச் சென்று முல்லை குறிஞ்சி மருதம் முதலிய நில மக்களுக்குவிற்பர். இவ்வாறு செல்லும் உமணச் சாத்தர் செலவு சங்க நூல்களுள் அழகாகச் சொல்லப்படுகின்றது.

உமணர், தொத்துளிப்பாயால் வேய்ந்த வட்டமான கூடார முடைய வண்டிகளில் உப்பை ஏற்றிச் செல்வர். வண்டியின் முன் புறத்தே கோழிக்கூடுகள் கிடக்கும். மேலே கூடாரத்தில் உரல்போன்ற உறியில் புளியங்காய் நெல்லிக் காய் முதலியன ஊற விட்ட காடிப்பானை தூங்கும். வேப்பிலையைக் குழந்தைக்குக் காவலாகக் கையிடத்தே வைத்திருப்பவளும், குழந்தையைக் கைக் கொண்டவளு மாகிய உமணப் பெண் எருத்தை முதுகிலே அடித்து ஓட்டு வாள். தழையாற் கட்டின மாலையும் பெரிய வலிய இறுகின தோளும் முறுக்குண்ட உடம்பு முடைய உமணர், சிறிய துளையையுடைய நுகத்தில் பெரிய கயிற்றாலே எருதுகளை ஒருமுகப்பட நிரைத்துக்கட்டி இளைத்தாற் பூட்டுதற்குப் பல எருதுகளைக்கொண்டு பக்கத்தே செல்வர். செல்லு மிடத்து உப்பின் விலையைக் கூறுவர். (பெரும்பாண்)

உவர் நிலத்தே விளைந்த உப்பின் விலையைக் கூறிப் புழுதியுடைய வழியால் தொலைவிடத்தே செல்லும், கையி டத்திற் கோலுடைய உமணர், கூட்டமாகச் செல்வர். சென்று வளைந்து சுருண்ட கொண்டை அசையவும் அரை யிற் கட்டிய பல குழைகளாலான உடை தளரவும், நெல் லுக்குப் பதில் உப்புக் கொள்ளீரோ எனச் சேரிகள்தோறும் நுவலுவர். (அகம் 390)

"உயர்ந்த திரையுடைய கடற்பரப்பிற் திமிலோன் தூண்டிலிற்பிடித்த மீனை, தழையுடையுடைய பெண்கள் விழாக்கொண்டாடும் வீதியின் விலைபகரும் கடற்கரைச் சிறுகுடியி லுள்ளவன்" (அகம் 320.)

பொழுது படத்திரையிடத்தே விளையாடி அசைகின்ற திரைத்த வளையணிந்த கூட்டத்தாரோடு உப்பின் குவியல் மீதேறி வருகின்ற திமிலை எண்ணும் துறைவன்." (அகம் 190)

பெரிய கடலிடையில் மீன்பிடிக்கும் சிறுகுடியிலுள்ள பரதவர் கரிய கடற்கரைவயலிடத்து, உழாது செய்த வெள்ளிய கறபோன்ற உப்பின் விலையைக்கூறி மலைநாட்டுக் குச் செல்லும் கோலைக் கையிலுடைய உமணரின் காதன் மடமகள், வளையல் ஒலிக்கும்படி கைவீசி நெல்லுக்குப் பதில் உப்பெனச் சேரியிடத்தே விலைகூறுதலின், வீட்டிற் கிடந்த நாய், சத்தத்தைக்கேட்டுக் குரைப்ப அதற்கு அஞ்சினள். (அகம் 140)

"பெரிய கடலினின்றும் எம் தந்தை கொணர்ந்த கொழுத்தமீன் கருவாட்டைக் கவரும் புட்களை மணலு டைய புன்னை நிழலிலிருந்து ஓப்பியும் சிவந்த நண்டின் ஒடுங்கிய வளையைக் கிண்டியும், ஞாழல் மரத்தின் உயர்ந்த கொம்பிலும், கழியிடத்துள்ள வளைந்த தாழையிலும் பிணித்த ஊசல் ஆடியும், கீழ்காற்று மணலைக் கொணர்ந்து குவிக்கின்ற கடல்முகத்தே ஆயத்தோடே வெள்ளிய திரை யுடைய கடலாடியும், அழகிய பூவொடுகூடிய தழையுடுத் தும் அணித்தேயுள்ள பலவகைப் பூக்களுடைய சோலையில் வருதலாகிய கௌவையை, பேயுடைய இவ்வூரிடத்துக் கொடியவற்றை அறிந்து கூறும் பெண்டிர் சொல்லக்கேட்டு அன்னை நின்னைக் காவல்கொண்டாள். (அகநானூறு)

"புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்
கவலநோய் செய்யு மணங்கிதுவோ காணீர்."
"கடல்புக்குயிர் கொன்று வாழ்வர் நின்னையர்"
ஓடுந்திமில் கொண் டுயிர் கொல்வர் நின்னையர்"
கள்வாய் நீலங் கையிலேந்தி
புள்வாயுணங்கற் கடிவாள்" (சிலப்பதிகாரம்)

பாலை நில மக்கள்

பாலை நிலம் மனிதன் குடியேறி வாழ்தற் கேற்ற வாய்ப்படியுடையதன்று. மிருகங்களை வேட்டையாடத் துரத்திச் செல்லும் எயினர் அவ்விடத்திற் சில காலந் தங்குவதுண்டு அவர் கொடிய நெஞ்சுடையவர்; பாலை நில வழியே செல்வோரை வழிபறித்துண்ணும் வாழ்க்கையுடையவர். அவர்கள் முல்லை நில ஒதுக்குகளிலும் குறிஞ்சி நில ஒதுக்குகளிலும் மனைவி மக்களோடு வாழ்வர்.

எயினர்களது குடில்கள் அணிலும் எலியும் நுழையாத படி ஈந்தின் ஓலையால் வேயப் பெற்று முட் பன்றியின் முதுகுபோலத்தோன்றும். பிள்ளையைப் பெற்ற எயிற்றி குடிலின் ஒரு புறத்தே பிள்ளையோடு மான் தோலாகிய படுக்கையில் முடங்கிக் கிடப்பாள். மற்றைய எயிற்றியர் கரம்பை நிலத்தைப் பாரையாற் கிண்டி எறும்பு சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியை வாரி எடுப்பர். எடுத்துப் பார்வை மான் கட்டி நிற்கும் விளவின் நிழலுடைய முற்றத்தே தோண்டிய நில வுரலிற் சொரிந்து குறிய உலக்கையினாற் குத்துவர்; ஆழ்ந்த கிணற்றில் மொண்ட சவர் நீரை ஓறுவாய் போன பானையில் உலையாக வார்த்து முறிந்த அடுப்பில் வைத்து ஆக்கிய சோற்றை இறைச்சிக் கருவாட்டோடு தேக்கிலையில் இட்டு உண்பர்.

எயினரின் அரணிடத்தே உள்ள அகன்ற வீடுகளில் பகைவரைக் குத்தியதாற் கூரிய வேல்களும் பரிசைகளும் அம்புக் கட்டுகளும் விற்களும் நிரையாகச் சார்த்திக் கிடக்கும். உயர்ந்த மதில்கள் ஊகம்புல்லால் வேயப்பட்டிருக்கும். தலை வாயில்களில் தேன் கூட்டைப்போன்ற அம்புக்கட்டுகளுடன் துடியும் தூங்கும். வீட்டு வாயிலிற் சங்கிலியாற் கட்டப்பெற்ற நாய்கள் நிற்கும். இவ்வகையான குடியிருப்பு, முள் வேலியினையும் அதனைச் சூழ்ந்த காவற் காட்டையும் உடையதாயிருக்கும். வாயிலிடத்தே நீண்ட முனையுடைய கழு மரங்கள் நிரையாக நாட்டப் பெற்றிருக்கும். அங்குறைவோர் நெற் சோற்றையும் நாய் வேட்டையாடிக் கொணர்ந்த சங்கு மணி போலும் முட்டையுடைய உடும்பின் பொரியலையும் உணவாக உடையர்.

இம்மறக்குடியிலுள்ள சூற்கொண்ட மகளிர் யானை எதிர்ப்படினும் வலிய இடி இடிப்பினும் அஞ்சார். வலிமையாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினை யுடையவனும், வாட்போர் செய்யும் குடியிற் பிறந்தவனும், புலியின் மீசை போன்ற தாடியுடையவனுமாகிய மறவன் அந் நிலத்துத் தான் குறிவைத்த மிருகத்தைத் தப்பாமற் பிடிக்கின்ற வேட்டை நாய் போலக் காவலுடைய முல்லைநிலத்தே செல்வன்; சென்று அவர்களது பசுக்களை அடித்துக் கொண்டு வந்து விடியற் காலையிற் கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான். அதற்குப் பின், வீட்டிலே நெல்லாற் சமைத்த கள்ளையுண்டு மன்றிடத்தே வலிய கிடாயை அறுத்துத் தின்று மத்தளம் முழங்க இடக்தோளை வலப்பக்கத்தே வளைத்து நின்றாடுவான். (பெரும்பாண்)

செம்மறிக்கிடாயின் கொம்புபோல் முறுகிப்பிடரியிடத்தே தூங்கும் மயிரும் சிவந்த கண்ணுமுடைய மறவர், இருமல் தீர்க்கும் மருந்தோடு நெருப்பிற் கருகிய வரிய

கோலோடு வில்லைப் பிடித்து நரை தெரிந்த மக்துகள் செரு
க்கிக் கிடக்கும் இடத்தே நிற்கும் நிரைகளின் புறத்தே,
காலில் கட்டிய செருப்பு ஒலிக்கும்படி சென்று காவலுடைய
இடத்தே கன்றுகளோடு நிரையைக் கவர்ந்து கொண்டு
செல்வர். (அகநானூறு)

பாலைநிலத்தில் அரத்தின் வாய் போன்ற பரற்கற்கள் நிறைந்துகிடக்கும். அம் மேட்டு நிலத்தே வட்டமாகிய மதில் சூழ்ந்திருக்கும். அங்கு வாழ்வோர், அங்குறையுங் காளிக்குப் பலியாகக் கொடுத்த சிவந்த இறைச்சியினின்றும் ஒழுகுகின்ற இரத்தமும் பசிய நிணமும் கொழுவிய குடரும் எட்டுத் திசைகளிலும் சிந்திக்கிடக்கும். வேம்பின் கிளைகளில் வேர்களாற் கட்டிய ஊசல்கள் தொங்கும். வழிபடுவோர் பலியாகப் பிடுங்கி வைத்த கண்களாகிய விளக்குப் பிரகாசிக்கும். மான் கொம்பும் மயிலிறகும் தோரணங்களாகத் தூங்கும். திரண்ட மூங்கிலிற் கட்டிய கொடி அசையும். பச்சைக் கிளி போன்றவளாகிய காளி, கேடகமும், வாளும், அம்புக் கட்டும், எண்வகைப் படைகளும் ஆகிய இவற்றைத் தரித்திருப்பாள். முத்துப் போன்ற பல்லும் கயல் போன்ற மதர்த்த விசாலித்த கண்ணும், சிலை ஒத்த புருவமுமுடைய காடு கெழு செல்வி கலையை வாகனமாகக் கொண்டு கல்லாற் செய்த மதில் சூழ்ந்த ஆலயத்தில் வீற்றிருப்பாள். வில்லையுடைய மறவர் அக்கோயிலின் ஒரு புறத்து ஒதுங்கியிருந்து அவ்வழியே செல்லும் வணிகர் கூட்டத்தை அடித்துப் பறிப்பர். நடுகற்களிற் றடியைக் கோத்துப் பசுக்களை அகப்படுத்தி வைக்கும் இடங்களும், ஆட்களைக் கொன்று பிணங்களை மூடிக்குவித்திருக்கும் கற்றும்பங்களும், ஒன்றோடு ஒன்று பின்னிய பற்றைகளுடைய மலைகளும் வெட்டிய கால்களை இட்டு வைத்திருக்கும் குழிகளும், தலைகளை மறைத்து வைக்கும் புல்லும், பொந்துகளும், வெளியாகிய சுவர் நிலங்

களும், நீரில்லாத ஆறும், முடிவடையாத வழியும், ஊரில்லாத காடும், வழியுடையனவாய்ப் பின் வழியின்றியிருக்கும் நிலங்களும், சுனைவற்றிய பாறை நிலமும், பாறைகளாலாகிய குன்றுகளும், இவ்வாறு இயற்கையாகவும் செயற்கையாகவுமமைந்து ஒன்று போல் அளவு காணற்கரியன பலவாய்க் குளிர் காலத்திலும் வெப்பமுடையனவாகிய இடங்களுண்டு.

ஓமை, உழிஞ்சில், உலவை, உகாய், கடு, தான்றி, கொடிய முள்ளுடைய தொடரி, நாகம், அரசு, ஆர், ஆத்தி, இருள், இண்டம், குரவு, கோங்கு, கள்ளி, கடம்பு, முள்ளி, முருக்கு, பலாசு, திரண்ட காலுடைய எருமை, இலவு, இனிய காயுடைய நெல்லி, வாகை முதலியவும் பிறவுமாகிய வயிர மரங்கள் காய்ந்திருத்தலின் மயிலும் குயிலும் அவற்றினிடையே செல்லா. நுண்ணிய பொறியுடைய புறவின் சிவந்த காலுடைய சேவல் வெள்ளிய சிறகுடைய பேட்டோடு விளையாட்டு விரும்பி வலிய கோடாங்கற்களை விழுங்கிப் பொரிகின்ற கள்ளியின் கவர்பட்ட கொப்பில் இருந்து தூரத்தே ஓசை கேட்கும்படி கத்தும். தோலாகிய முலையுடைய காட்டுப் பன்றியின் பிணை மெலிந்த நடையுடைய யானையோடு உலர்ந்த மரலையுண்டு விடாயினால் கானல் நீரிடத்து ஓடும். நெருப்புப் போன்ற பசி நீங்காத செங்குரங்கு கையிடத்தே மகவைத் தழுவிக் காஞ்சூரையின் இலையிற் சிந்தியிருக்கும் தேனைக் கையினாற் தொட்டு நக்கும். அயலே இருந்த கடுவன் அதைப் பார்த்துப் பொறாது காஞ்சூரையின் கிளையிலிருந்த தேனை ஊட்டி அதன் தாகத்தைத் தணிக்கும். வெப்பமுடைய மலைச் சாரலிலுள்ள மூங்கிலின், உதிர்ந்து விளங்குகின்ற முத்தை மழைத் துளியெனக் காட்டுக் கோழியின் சூடுடைய சேவல் அலகாற் குத்தி எடுக்க மாட்டாது தத்தி நின்று தளரும். கன்றினைத

தழுவிய பெரிய அடியுடைய கரிய பிடி ஈரம் உலர்ந்த நாருடைய முருங்கையின் வெள்ளிய பூவாகிய உணவை வெறுத்து நெல்லியின் பசுங்காயைப் பல்லுடைய கொடும் பிடத்தே அடக்கிக் கொண்டு, வழி செல்லும் புதியோர் சேற்றைத் தோண்டித் தழையால் மூடியபள்ளத்தில் உலா வும். சிவந்த தளிருடைய இருப்பையின் பசிய பூங்கொத் துகளை விரும்பித் தூங்கும் வௌவால், பல பக்கங்களிலும் நெருங்கிப் பறக்கும். (உதயணன் கதை)

அம்பை எய்யும் வில்லைக் கையிலேயுடைய மறவர் குடி யிற்பிறந்த தெய்வமேறி ஆடுபவள் தனது ஊர் நடுவேயுள்ள மன்றிடத்துத் தெய்வத் தன்மையுற்று மெய்ம்மயிர் சிலிர்த்து, நிமிர்த்திய கைகளை ஒற்றையும் இரட்டையுமாக அவிநயத்தோடே கூட்டித் தாளத்துக்கு ஒப்ப அடிபெயர்த் துக் கானவர் வியப்ப ஆடினாள். ஆடிக்கூறுகின்றாள்:—

முன்சொல்லிய நுங்கடன் கொடாமையின் வலிய வில்லையுடைய எயினர் மன்றுகள் பாழ்பட்டன; * ஊர்களிற் றிரண்ட நிரைகள் மிக்கன. கொற்றவைக்குக் கடன் கொடாமையின் இம்மறக்குடியிற்றாயம் பற்றி வரு கின்ற எயினர், தமக்கு முறைமையாகி வருகின்ற ஆறெறி சூறை ஆகோள் முதலியவற்றால் விளையும் செல்வங்குன்றி அறக்குடிகளைப் போலச் சினங்குறைந்து செருக்கு அடங் கினர். கலையாகிய ஊர்தியையுடைய செல்வி தான் கொடுத்த வெற்றிக்கு விலையாகிய உயிர்ப் பலியை உண்ணக் கொடுப்பி னன்றி நுஞ்சிலைக்குரிய வெற்றியைக் கொடுப்பாளல்லள். களவு கொண்டுண்ணும் ஊணையுடைய மக்காள்! நுஞ் சுற் றத்தார் மதுவுண்டு செருக்கும் இல்வாழ்க்கையை விரும்புவீ ராயின் செல்விக்கு நேர்ந்த கடனைக் கடிதிற் கொடுமின்.

* கொள்ளையிடாமையால் அயற் கிராமங்களில் நிரைகள் மிக் கனவாயின என்றவாறு.

அதனைக் கேட்ட, தந்தலையைத் தாமே பலியாக அரிந்து வைக்கும் எயினர், தொல் குடியிற் பிறந்த தேவ ராட்டியின் நெளிந்த கூந்தலைச் சடையாகக் கட்டி, அம்முடி யிலே சிறிய வெள்ளிய அரவின் குட்டியாகப் பொன் நாணினை வளையச் சுற்றிக் காவற் காடு சூழ்ந்த தோட்டப் பயிரை அழித்த பன்றியின் கோட்டைப் பறித்து அதனை இளைய வெள்ளிய பிறை யெனும்படி சாத்தினர்; தறு கண்மையுடைய வலிய புலியின் வாயைப் பிளந்து உதிர்த்த பல்லை வெள்ளிய மாலையாகத் தரித்தனர். அதனது வரியும் புள்ளியுமுடைய தோலை மேலே மேகலையாக உடுத்தனர். வில்லைக் கையிற் கொடுத்தனர். கொடுத்து அவளை முறுக் குண்ட கோடுடைய கலைமீதிருத்தினர். பின் பறையைக் கொட்டி அவளை வழிபட்டனர்.

மாறுரின் சீறூரிடத்து நிரை கவர்தற்கு வீரர்வெட்சி மாலையைச் சூடினர்; கொற்றவையின் கொடியை முன்னே உயர்த்திச் சென்றனர். பகைவரின் காட்டிடத்தே அவர்க்குச் சேரும் தீமைக்கு அறிகுறியாகக் கரிக் குருவி குரல் எழுப் பிற்று. இவ்வாறு சென்று கவர்ந்து கொணர்ந்த பசுக்களை வேல் வடிக்கும் கொல்லனும், துடி கொல்லும் புலையனும், பாணரும், புள்ளின் நிமித்தத்தை ஆராய்ந்து சொன்னோ ரும் ஆகிய இவர்களுக்குப் பகுந்தளித்தனர். (கள்ளுடை) பழங் கடன் கொடாமையின் கட் கொடாத கள் விற்கும் அவளுக்கும் கொடுத்தனர். (சிலப்பதிகாரம்)

வரிந்து கட்டின வில்லும் கடைகுழன்றமயிரும், புலி போன்ற பார்வையும், தறுகண்மையுமுடைய மறவர், வழிச் செல்வோரிடத்திற்பெறும் பொருளில்லையாயினும் தங்கள் அம்பு பட்டு அவர் பதைப்பதைக் கண்டு மகிழ்வர். (கலி) அவர்களின் தாடி முறுக்கிய மான்கொம்புபோன்றது.

தொழில் பற்றிய சாதிகள்

மக்கள், தாம் வாழ்ந்த நிலம் பற்றி வேடர் இடையர், எயினர் குறவர் உழவர் முதலிய பெயர்களைப் பெற்றது போலவே, தொழிலும் ஒழுக்கமும் பற்றி அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியவும் பிறவுமாகிய பெயர்களைப் பெற்றனர். நிகண்டு நூல்களிற் காணப்படும் ஒவ்வொரு குலத்தினர்க்குரிய பெயர்களும் அவரவர் மேற்கொண்ட தொழில் பற்றி எழுந்தனவென்று இனிது விளங்கும். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியோர் பெரும்பாலும் நகர்களில் வசித்தவர்களாவர். அரசனது கருமத் தலைவர் ஆதியோர் இந் நாற்குடியில் அடங்குவர். ஆரியரது பிராமண சத்திரிய வைசிய சூத்திரர் என்னும் பகுப்புக்கும் தமிழர்களுடைய நாற்குலங்களுக்கும் யாதொரு தொடர்புமின்று. ஆரியருடைய சாதிகள் செய்தொழிலானன்றிப் பிறப்பினால் ஏற்பட்டன. ஆரியர் இந்திய நாட்டையடைந்த போது அவர்களிடையே சாதிப்பிரிவு ஏற்படவில்லை. மக்களின் நிறத்தைக்கொண்டே அவர்கள் சாதிகளை ஏற்படுத்தினர். அவர்களின் சாதிக்குப் பிறப்பே காரணம். இதனை மனு ஸ்மிருதி முதலிய நூல்களிற் பரக்கக் காணலாம். ஸ்மிருதிகளிற் காணப்படும் அனுலோம பிரதிலோமர் போன்ற கலப்புச் சாதிகள் தென்னாட்டிற் கிடையா. ஸ்மிருதிகளிற் காணப்படும் சூத்திரருக்குரிய தருமங்களும் பிலிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டில் அடிமைகளுக்குரிய தருமங்களாகச் சொல்லப்படுவனவும் ஒரேவகையாகக் காணப்படுகின்றன.

அவ்வந் நிலங்களிலுள்ள மக்கட்குரிய திணைப் பெயர்கள் அவ்வந் நிலங்களிற் பிறத்தலினாலும், பிறர் அந்நிலங்களிற்றங்கி அந்நில மக்கட்குரிய தொழிலைப் புரிவதினாலும்

ஏற்படு மென்பது "பெயரும் வினையும் என்றாயிருவகைய திணைதோறு மருவிய திணை நிலைப் பெயரே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் விளங்கும்.

அந்தணர்

தமிழ் நாட்டுத் துறவோர் அந்தணரெனப்பட்டனர். அவர் காவி தோய்த்துடுத்த உடையினராய் முக்கோல் மணை கரகம் ஆதியவற்றை உறியில் வைத்துத் தோளிடத்தே சுமந்து குடை நிழலிற் செல்லும் செலவினர், எனப் பழந் தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றது.*

அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

* "எறித்தரு கதிர் தாங்கி யேந்திய குடை நீழ
லுறித் தாழ்ந்த கரகமு முரை சான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன் மாலைக் கொளை நடையந்தணிர்"
(கலி 9)

(இதன் பொருள்) குடையினால் வெயிலைத் தாங்கி உறியிலே வைத்த தண்ணீர்க் கரகத்தையும் முக்கோலையும் தோளிடத்தே சுமந்து செல்லும் இயல்புடைய அந்தணிர்.

"சீர்மிகு சிறப்பினோன் மாமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம் போற் பழந் தூங்கு தாழை"

(இ-ள்) தக்கணாமூர்த்தி ஆலமரத்தே தாமிருப்பதற்கு முன்னே தூக்கி வைத்த நீர் நிறைந்த குண்டிகையைப் போலப் பழந்தூங்கும் "முக்கோலந்தணர் முது மொழி நினைவார் போல (கலி 126)

" அந்தணர்—காஷாயம் போர்த்த குழாங்கள்" (நச்-உரை)
தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்துப்
படிவவுண்டிப் பார்ப்பனமகனே (குறுந்-156)
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோலசை நிலை கடுப்ப (முல்லைப் பாட்டு)
நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய" (தொல்-மரபு)

எனத் திருவள்ளுவர் அந்தணரின் இயல்பை நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திற் கூறுகின்றமையினாலும் அந்தணர் என்போர் தமிழ் நாட்டுத் துறவிகளே என இனிது விளங்கும். துறவிகளா யிருந்த இவ்வந்தணர் அரசருக்குத் தூது செல்லற்குரியர் என்று கூற இடமில்லை.

கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து கடவுட் பூசை முதலியன ஆற்றிப் புனித வாழ்க்கையுடையராய் இல்லறத்தின் நின்றோரும் அந்தணர் எனப்பட்டனர். இக்கூட்டம் வளர்ச்சியுற்று அந்தணர் என்னும் சாதி யாகப்பெருகிற்று.

“ஐயர் வேதியர் இரு பிறப்பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்
அந்தணர் நூலோர் அறு தொழிலாளர்
செந்தீ வளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்
ஆதி வருணர் வேத பாரகர்
விப்பிரர் தொழுகுலத்தோர் வேள்வியாளர்
முப்புரி நூலோர் முனிவரென்றிவை
தப்பில் பார்ப்பனர் தம் பெயராகும்.

என்னும் திவாகரச் சூத்திரத்தால் அந்தணரின் தொழில் ஒழுக்கம் ஆதியன இனிது விளங்கும். அந்தணர் தூய ஒழுக்கத்தினராவராகையினாலேயே,

“மறப்பினு மோத்துக் கொளலாகும் * பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்”

என வள்ளுவனார் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்திற் கூறினர்.

அந்தணர் அரசரிடமிருந்து தூது செல்லுதற் குரியர். இவர் அரசனது உறுதிச் சுற்றங்களில் ஒருவராகவு மிருந்தனர்.

---

* பார்ப்பான்-ஆலயத்தைக் கண்காணிப்பவன்.

"ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன" என்னும் தொல் காப்பியச் சூத்திரத்திற் சொல்லப்பட்ட உயர்ந்தோர் அந்த ணரே. அந்தணர்க்கு ஓதல் இன்றியமையாதது.

" மறப்பினும் § ஒத்துக்கொளலாகும் " என்பதில் மறப்பினும் என்ற உம்மையால் பார்ப்பார் ஒத்தை மறத்தல் கூடாதென்பது தேற்றமாகின்றது.

தூதொய் பார்ப்பான் மடிவ வெள்ளோலை

... ...

யுண்ணு மருங் கிலின்னோன் கையது
பொன்னு குதலு முண்டென..." (அகம் 337)

அந்தணரது இயல்பு திருமுருகாற்றுப் படையிற் கூறப்படுகின்றது. அது வருமாறு:—

அந்தணர், * ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித் தல் ஈதல் ஏற்றல் என்னும் இயல்பிற் குன்றாத, பழைய உயர்ந்த நல்ல குலத் தாய் தந்தையரிடத்துப் பிறந்தோர்; நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங்காக்கு மியல்பினர். உபநயனத்துக்குப் பின் ஒரு பிறப்பும் முன் ஒரு பிறப்பு மாகிய இரு பிறப்புடையர்; தம் வழிபடு கடவுளை அறிந்து துதிபாடு மியல்பினர் ; முந்நூல் கொண்டு முப்புரியாக்கிய மூன்று நூலாகிய பூணூலை அணிவோர் ; நீராடுமிடத்துத் தோய்த்துப் புலராத ஆடையை அரையிற் கிடந்து புலரும்

---

§ ஓதப்படும் துதிப் பாடல்கள். இன்று ஆலயங்களில் தேவாரம் பாடுவோர் ஓதுவார் எனப்படுதல் அறிக.

* ஓதல் வேட்ட லவை பிறர்ச் செய்த
லீத லேற்றலென் றாறு புரிந் தொழுகி
யறம் புரியந்தணர் வழி மொழிந் தொழுகி (பதிற்றுப்பத்து)

இவை அறு தொழில்கள். அறுவகை எனக் குறிக்கப்படுவது. தொழிலைக் குறியாது படிப்படியே உயர்ந்த ஆறு வகைகளைக் குறிக்கும்.

படி உடுத்து உச்சியிற் கூப்பிய கையினராய்க் கடவுளின் திருநாமத்தை நாப்புடை பெயர் உச்சரித்துத் துதித்து, வாசமிக்க மலரைச் சாத்திக் கடவுளை வழிபாடு மியல்பினர்.

"......மந்திரத்து வரு
மத்துணை சான்ற வந்தணாளரும்"

"தண்புன லாட்டின் றக்கணை யேற்கு
மந்தணா ளடைக விரைந்தென"

"செந்தீ யந்தழ லந்தணன் காட்டச்
சேதா நறு நெய் யாசின்று குத்தி"

"அந்தணாளர் * ஆசிடை கூற
அந்தணாளரின் வெந்திறல் வீரன்
சொற்றுணைத் தோழன்"

என வரும் உதயணன்கதை அடிகளால் அந்தணர் இயல்புகள் சில அறியக்கிடக்கின்றன. அந்தணர் விவாகச் சடங்கு புரிவாராதல் கலித்தொகையிலுங் கூறப்படுகின்றது.

"காதல் கொள்வதுவை நாட் கலிங்கத்து ளொடுங்கிய
மாதர் கொண் மாமேனிக்கின் மடந்தை தன்றுணையாக
வோத்துடையந்தண னெரிவலஞ் செய்வான் போல்
(கலி 69)"

அகப்பொருட்டுறையில் வாயில்களில் ஒருவனாகவும் பார்ப்பான் அறியப்படுகின்றான். பார்ப்பான் என்பதற்கு நன்றுந் தீதும் ஆராய்ந்துரைப்போனெனப் பேராசிரியர் உரை கூறுவர்.

பார்ப்பனர் முருக்கின் தண்டை ஊன்றிச் செல்வரென குறுந் தொகையில் ஒரிடத்திற் சொல்லப்படுகின்றது.

---

* ஆடை—ஆசி

* "பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கி னன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்க மண்டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே (குறுந் 157)

பார்ப்பனர் இல்லங்களைப் பற்றிப் பெரும் பாணாற்றுப் படையிற் சொல்லப்படுகின்றது. அது வருமாறு.

தலை வாயிலிடத்துள்ள கால்களிற கன்றுகள் கட்டி நிற்கும். வீடு சாணகத்தால் மெழுகப் பெற்றது. அதனகத்தே வழிபடு கடவுளின் உருவம் காணப்படும். வீட்டினுள் கோழியும் நாயும் புகா. வளைந்த வாயுடைய கிளி வேதத்தின் இசையைப் பயிலும். வேதத்தை ஓம்புகின்ற அந்தணரின் வீட்டில் அருந்ததியை ஒத்த கற்பும் அழகிய நெற்றியும் வளை யணிந்த கையுமுடைய பார்ப்பனி உறைவள். அவள் இராசான்னம் என்னும் நெல்லைக் குத்திய அரிசியினால் பாற் சோறு சமைப்பாள்; கொம்மட்டி மாதுளை முதலிய காய்களை வெட்டி மிளகு பொடி தூவிக் கருவேம்பின் இலையை இட்டு நெய்யிலே பொரிப்பாள். இவ்வகையாகச் சமைத்த பொரியலோடு மாவடுவின் ஊறுகாயையும் இட்டுப் பசித்து வந்தவர்களுக்குச் சோற்றை அளிப்பாள்.

* "பூதிய மண்ணும் பொத்தகக் கட்டும்
மானுரி மடியு மந்திரக் கலப்பையும்
காலெடு மணையுங் கட்டுறத் தியாத்த
கூறை வெள்ளுறிக் குண்டிகைக் காவினர்"

(உதயணன் கதை.)

"இழிந்த சிதாஅ ருடுத்து மிழந்தார்போல், எற்றிரங் துண்டும் பெருக்கத்து நூற்றிதழ்த், தாமரை யன்ன சிறப்பினர் தாமிண்ணின், தீயூட்டி யுண்ணும் படிவத்தர் தியவை, ஆற்றுழி யாற்றிக் கழுவுபு தோற்றம், அவிர்முருக்கங் தோலுரித்த கோலர் துவர்மன்னும், ஆடையர் பாடி னருமறையர் நீடின், உருவங் தமக்குத் தாமாய, இருபிறப் பாளர்க் கொரூஉ மாதீதே" (தகடூர் - யாத்)

கபிலர் பாடிய § புற நானூற்றுச் செய்யுட்களால் (புறம் 14 ; 113) அந்தணர் ஊன் புசிக்கும் இயல்பினர் எனச் சிலர் சாதிப்பர். கபிலர் தம்மைப் பாணர் வரிசையில் வைத்துப் பாடினமையில் அங்ஙனம் கூறினரன்றி அவர் ஊன் புசிப்பவர் என்று கூற இடமில்லை. சங்க காலத்துச் செய்யுளாகிய பெரும்பாணாற்றுப்படை அந்தணரின் சைவ உணவைப் பற்றிக் கூறுதலே அவர் ஊன் புசிப்பவ ரல்லர் என்பதை நன்கு விளக்கும்.

போதாயனர் அபஸ்தம்பர் முதலியோரின், தர்ம நூல்களில் புசிக்கத் தக்கவும், புசிக்கத் தகாதவுமாகிய பறவை விலங்குகளைப்பற்றிக் கூறப்படுதலின் வட நாட்டில் பிராமணர் மாமிச உண வருந்தினர் என்று தெளிவாயறியப் படுகின்றது.

அரசர்

தமிழ் நாட்டை ஆண்டோர் பரம்பரை வழியில் வருகின்ற அரசராவர். சேர சோழ பாண்டியர் என்னும் பெருநிலமன்னரும், இவரது ஆணைக்குட் பட்டும், சில சமயங்களில் ஆணைக்கு உட்படாது மிருந்த சிற்றரசர் பலரும் தமிழ் நாட்டைப் புரந்தார்கள். தமிழ் நாட்டு மூவேந்தர் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டனர். மக்கள் அப்போர் ஆரவாரங்களினிடையே வாழ்ந்தனர். இவ்வாறு போர் நிகழ்ந்தால் தமிழ் நாட்டில் பலவகையான கலைகளும்

§ நின் முழந்தாளைப் பொருந்திய என் கைகள் புலால் நாற்ற முடைய செவ்விய பசிய ஊனையும் துவையலையும் கறியையும் சோற்றையும் உண்டு வருந்துஞ் செயலல்லது வேறு செயலின்மையால் மெலிந்தன. (புறம் 14)

சாடியைத் திறந்து மதுவையும், ஆட்டுக் கிடாயை வெட்டிச் சமைத்ததுவையையும், ஊன் கலந்த சோற்றையும் விரும்பித் தருவை. (புறம் 113)

எப்படி வளர்ந்தன என்னும் கேள்வி எழலாம். இதற்கு விடை அளித்தல் இலகு. போருக்குப் பயிற்றப்பட்டவர்களும் பரம்பரையாகப் போர்த் தொழிலுக்குரியோருமே யுத்தத்திற் கலந்துகொண்டனர். ஏனையோர் மதிலார் சூழப்பட்ட நகரங்களுள் வாழ்ந்தனர். நகருக்குத் தூரத்தே வாழ்ந்த கிராமவாசிகள் அயலேயுள்ள குறு நில மன்னரால் அடிக்கடி தாக்கப்பட்டுத் துன்பத்துக்காளானார்கள். அவர்களது ஆடு மாடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. சிறிது எதிர்ப்புக் காண்பித்தாலும் அவர்கள் தயவின்றிக் கொல்லப்பட்டனர். மதுரை கரூர் காவிரிப்பூம் பட்டினம் போன்ற நகர்களில் வாழ்ந்தோர் போரினால் நேரும் ஆபத்துக்கு உள்ளாகாது வாழ்ந்தனர். மதிலால் அரண் செய்யப்பட்ட நகர்கள் பகையரசரால் இலகுவிற் றாக்க முடியாமலிருந்தன. அரண் படுத்தப்பட்ட நகரிலேயே கைத்தொழிலும் வியாபாரமும் விருத்தியடைந்தன. போர்வீரரின் காவலைப்பெற்று வணிகர் ஓரிடத்திலிருந்தும் இன்னோரிடத்திற்குக் கூட்டமாகச் சென்றனர். உள்நாட்டுப் பாதைகளை அரசனது போர்வீரர் காவல்புரிந்தனர். சிறிய பாதைகள் வந்து கூடும் பெரிய பாதைகளில் சுங்கம் அறவிடப்பட்டது. அரசாங்கம் மக்களின் நலத்துக்காக இருந்தது.

அரசனது அதிகாரம் ஐம்பெருஞ் சபைகளால் மட்டுப்படுத்தப்பட்டது. மக்களின் சார்பாளராகிய நகரமாந்தர், புரோகிதர் * மருத்துவர் நிமித்தர், அமைச்சர், என்னும் ஐந்து கூட்டத்தினரும் ஐம் பெருஞ்சபையில் அடங்குவர். மாசனம் சனங்களின் நன்மையின்பொருட்டு வாதாடினர். பார்ப்பார் சமயச் சடங்குகளை மேற்பார்த்தனர். மருத்துவர் அரசனதும் குடிகளுடையவும் நோய் சம்பந்தமான கருமங்

* மாசனம் பார்ப்பார் மருத்துவர் நிமித்தரோடமைச்ச ராசிலாவவைக்களத்தாரைந்து (சிலப் 5-157 அரு-உரை மேற்)

களைக் கவனித்தனர். நிமித்தர், பெருநாட்களுக்கு ஏற்ற முகூர்த்தத்தை விதித்ததோடு, பிரதான கருமங்களை ஆராய்ந்து முன்னதாக அறிவித்தனர். அமைச்சர் நாட்டின் வருவாய் செலவு முதலிய வற்றைக் கவனித்தனர். இச் சபைகள் சந்தித்துத் தங்கடமைகளை ஆலோசிப்பதற்கு நகரங்களில் தனி மண்டபங்களிருந்தன * அரசன் கொலு விருக்கும் விசேடகாலங்களில் இவர்கள் அரசன் பக்கலில் நின்றனர். அரசாங்கப் பொறுப்பு அரசனிடத்தும் ஐம் பெருங் குழுவிடததும் மாத்திரம் தங்கியிருந்தது. சேர சோழ பாண்டியர்களது ஆட்சியில் இவ்வகையான ஒழுங்கு இருந்தது. இது மூவேந்தரும் ஒரே உற்பத்திக் குரியவர்க ளென்று அறிந்துகொள்வதற்கு உதவிபுரிகின்றது.

அரசன் பெரும் ஆடம்பரத்தோடும் அதிகாரத்தோடும் கூடியிருந்தான். அவன் நவரத்தினம் பதித்துச் செய்யப் பட்டதும் கீழ் அகன்றதும் மேல் ஒடுங்கியதுமாகிய முடியை அணிந்திருந்தான். கையில் பொன்வளையும் வலக்காலிற் பொன் வீரக்கழலும் அணிந்திருந்தான். முத்துமாலைகள் அவன் மார்பில் விளங்கின. அவன் சிங்காசனத்தில் இருந்த போது, அல்லது வெளியே சென்றபோது ஓரங்களில் முத் துத் தூக்கிய குடை பிடிக்கப்பட்டது. அவன் யானை குதிரை அல்லது தேர் மீது சவாரி செய்தான். காலையிலும் மாலை யிலும் அரண்மனை வாயிலில் மேளம் § ஒலித்தது. நாழிகை வட்டிலில் 0 நேரமறிந்து சொல்வோர் அரண்மனையிலிருந தனர்.

அரண்மனையின் ஒரு பகுதி அரசிக்காகவும் அவளது பரிவாரங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. தான் அர

* மதுரைக்காஞ்சி. § காலை முரசம், மாலை முரசம்.

0 வட்டிலில் நிரப்பிய நீர் ஒழுதலைக்கொண்டு நேரம் அளக்கும் கருவி.

உரிமை எய்திய காலத்தன்றி அவள் முடி தரிக்கவில்லை. பெருநாட்களில் அவள் அரசனோடு சிங்காசனத்தில் உடனிருந்தாள். ஆனால் அவள் முடி அணியவில்லை. அவ ளிருக்கும் அந்தப்புரத்தில் ஆடவர் அனுமதிக்கப்படவில்லை. கூனும் குறளும் உயர் குடும்பப் பெண்களும் அவளைச் சூழ்ந்திருந்தனர். வேண்மாள் நிலாமுற்றத்தில் செங்குட்டு வனைக் காணவந்த விபரம் சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

சேடியர் சிலர் இனிய மேளத்தை ஒலித்துக் குழலூ திப் பாடினர். கூனும் குறளும், கத்தூரியும் சந்தனமும் ஏந் திச் சென்றனர். சேடிகள் கையிடத்தே வாசனைப் புகை யும் பூமாலையும் பூவும் மிருதுவான அணையும் வைத்திருந் தனர். சிலர் கண்ணாடியும் உடையும் அணிகலன்களும் ஏந்தி நின்றனர். விளங்குகின்ற மாலையணிந்த சேடியர் 'அரசிவாழ்க' என்று வாழ்த்தினர்.

நீதி செலுத்துவதற் கெனத் தனி கருமகாரர் இருந் தனர். அரசனுடைய தீர்ப்பே எல்லாத் தீர்ப்புகளுக்கும் முடிவாயிருந்தது. நீதிசெலுத்தும் கருமகாரர் மற்றவர்களி னின்றும் பிரித்தறியக் கூடியதாக விசேடமான தலைப்பாகை அணிந்திருந்தனர். பொருளின்றி நியாயம் வழங்கப்பட்டது. தண்டனை கடுமையா யிருந்தமையால் குற்றங்கள் சிலவா யிருந்தன. திருடிய பொருளுடன் கண்டு பிடிக்கப்பட்ட வனுக்குச் சிரச்சேதமே தண்டனையா யிருந்தது. வியபிசாரம் செய்பவனுக்கும் கொலைத்தண்டம் விதிக்கப்பட்டது. வியபி சாரம் செய்யும் நோக்கத்தோடு அயலவன் வீட்டிற் பிரவே சித்தவனின் கால் குறைக்கப்பட்டது. அரசனது கட்டளை கள் உத்தியோகத்தால் யானைமீதிருந்து மேள மடித்து விளம்பரஞ் செய்யப்பட்டன.

சுங்கமும் நில வரியும் அரசனது வருவாயிற் பெரும் பகுதியாயிருந்தன. எல்லாத் துறை முகங்களிலும் ஏற்று மதியாகும் பண்டங்கள் மீதும், இறக்குமதியாகும் பண்டங் கள் மீதும் தீர்வை விதிக்கப்பட்டது. கடலிலிருந்து இறக் கிய பண்டங்களும் மரக்கலங்களில் ஏற்றுதற்குக் கொண்டு வரப்பட்ட பண்டங்களும் அரசனது முத்திரை பொறித் துச் சுங்கச் சாலைகளில் அடுக்கப்பெற்றிருந்தன. நிலவரி பணமாக அல்லது தானியமாகக் கொடுக்கப்பட்டது. சிற்றர சரும் அதிகாரிகளும் திறை கொடுத்தனர். யுத்தத்திற் கிடைத்த கொள்ளைப் பொருள் முத்துக்குளிப்பு, காடு படு திரவியம், காட்டிற் பிடிக்கும் யானை ஆதியவற்றால் அரச னுக்கு வருவாய் கிடைத்தது. விளைவில் ஆறிலொன்று அரசனுக்குரியதாயிருந்தது.

அரசன மெய்காப்பாளராலும் பரிசனங்களாலும் சூழப்பட்டிருந்தான். இருந்தபோதும் அவன் குடிகளோடு தாராளமாக அளவளாவினான். நாட்டில் நடைபெறும் விழாக்களுக்கு அவன் தலைமை வகித்தான். பஞ்சம் அல்லது கொள்ளை நோய் ஏற்பட்டகாலத்து அவன் ஆலயங்களில் விசேட வழிபாடு செய்தான். குடிகளின் சுக துக்கங்களில் அவன் பங்கு கொண்டான். கிராமங்களைப் பகைவர்கைப் பற்றிய காலத்திற் சனங்கள் அரசனிருக்கும் நகரில் தங் கினர்.

ஆலயங்களிலும் வீடுகளிலும் மங்கள் அரசனின் நீண்ட ஆயுளை வேண்டிக் கடவுளைத் துதித்தனர். ஐங்குறு நூற்றின் ஓரிடத்தில் "எங்கள் ஆதன் நீடு வாழ்க! என்று என் அன்னை வணங்கினாள். என் காதலன் விரைந்து வீடு வருக என்று யான் வணங்கினேன்" என ஒரு தலைவி கூறியதாகச் சொல்லப்படுகிறது.

அரசன், தூங்குமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட படுக்கையிலே துயின்று வைகறையில் எழுவான். எழுந்து காலைக் கடன் கழித்துத் தெய்வத்தை வழிபடுவான். முத்துமாலை விளங்கும் மார்பிடத்தே சந்தனத்தைப் பூசுவான். பூசி வாசனை பொருந்திய பூமாலையை அணிவான். மணிகளழுத்திச் செய்த மோதிரம் விரலிற்கிடந்து கையிடத்துள்ள வீர வளையோடு விளங்கும். கஞ்சி இட்ட துகிலை உடுத்து அதற்கு மேல் அணியும் அணிகலன்களை அணிவான். அணிந்து நாளவையிடத்திருந்து வீரருக்கும் பாணருக்கும், பட்டங்களும் பரிசிலும் வழங்குவான். (மதுரைக்காஞ்சி)

அரசனது கோயில்

சிற்ப நூலை அறிந்த தச்சர் நூலை நேராகப் பிடித்துத் திசைகளைக் குறித்துத் திசைகளிலுறையுந் தெய்வங்களைத் துதிப்பர். துதித்து அரசர்க்குரிய மனைகளையும் மண்டபங்களையும் கூறுபடுத்துவர். மனைகளும் மண்டபங்களும் மதிலினாற் சூழப்பட்டிருக்கும். மதிலின் வாயில் நிலைகள் ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்புகள் சேர்த்து அமைக்கப்பட்டுச் சாதிலிங்கம் உருக்கி வழிக்கப் பெற்றிருக்கும். கதவுகள் ஒன்றோடு ஒன்று சேர்த்துத் தாளிடக் கூடியதாக இரண்டாகச் செய்யப்பட்டவை. நிலைக்கு மேலுள்ள சுவரிடத்து, நடுவே இலக்குமியும் இரண்டு பக்கத்தும் இரண்டு பிடிகள் செங்கழுநீர் மலரைப் பிடித்த பாவனையுமாக நிற்கும் சிற்பவேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும். பல மரங்களைச் சேர்த்து இடைவெளியின்றிக் கடாவிச் செருகிய நிலை வெண் சிறு கடுகு அப்பப் பெற்றிருக்கும். கோபுர வாயில் யானைகள் வெற்றிக் கொடிகளுடன் போகத் தக்கதாக மலையின் நடுவை வெளியாகத் திறந்தது போல் தோன்றும். மணல் பரப்பிய அரண்மனை முற்றத்தில்

கவரிமானும் அன்னமும் உலாவி விளையாடும். யவனர் செய்த பாவைகளின் கையில் நெய்யூற்றிக் கொளுத்திய விளக்குகள் வீட்டின் அகத்தே எரியும். விளக்கில் நெய் வற்றி ஒளி மழுங்குந் தோறும் பெண்கள் நெய் வார்த்துத் திரியைத் தூண்டுவர். கோயிலிடத்து அரசன் தங்கும் உட்புறம், அரசன் அல்லது குற்றேவல் செய்யும் ஆண் மக்களும் அணுகாத அருங்காவ லுடையது. கோயிலின் உச்சியில் இந்திரவிற் போன்ற பல கொடிகள் அசையும். வெண் சாந்தினாற் கட்டிய திரண்ட தூண்கள் நீலமணி போற் கருமையுடையனவா யிருக்கும். செம்பினாற் செய்தது போன்ற நெடிய சுவரிற் பல அழகிய பூக்களையுடைய கொடிகள் சித்திரிக்கப் பட்டிருக்கும்.

அரசன் துயிலும் கட்டில் வட்டவடிவினதாகப் போர் யானையின் தந்தங்களாற் செய்யப்பட்டது. அது, இலைவடிவாகச்சீவிய யானைத்தந்தங்களையும், (புலி முதலியவற்றின் வரி தோன்றப்) பல நிறமுடைய மயிர்களையும் உள்ளே வைத்துச் சிங்கம் முதலிய மிருகங்களை வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகள் வைத்து ஆணிகளாற் றைத்து மூட்டுவாய் தெரியாமற் செய்யப்பட்டிருக்கும். கட்டிலின் கீழ் நாற் புறத்தும் முத்து மாலைகள் தூங்கும். நடுவெளி புலியின் நிறமுடைய நாடாவினால் வெளி மறையும்படி பின்னப்பட்டிருக்கும். கால்கள் திரண்டனவா யிருக்கும். கட்டிலின் மேல் மிருதுவான மெத்தை விரிக்கப் பட்டிருக்கும். அதன்மேல் அன்னத் தூவி பரப்பி அணைகளிட்டுக் கஞ்சி தோய்த்த துகில் விரித்துச் செங்கழுநீர் மலர் பரப்பப் பெற்றிருக்கும். கட்டிலின் மேல் விதானத்தில் திங்களும் ரோகிணியுமாகியவர்களின் வடிவங்கள் எழுதப்பட்டிருக்கும். (நெடு நல் வாடை)

பாசறை

அரசன் படைகளுடன் சென்று காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே பிடவு முதலிய பற்றைகளை வெட்டுவான்; அவ்விடத்தே காவலாக இருக்கும் பகைவரின் அரண்களை அழிப்பான்; காட்டிலுள்ள முட்களை வெட்டி வேலியாக இடுவான். இவ்வாறு இடப்பட்டதும் படைகள் கடல் போல ஆரவாரிக்கும் இடத்ததுமாகிய பாசறையிடத்தே தங்கிய அரசன் துயில் கொள்ளாதிருப்பான். வீதி தழையால் வேய்ந்த கூரையையுடையது. நாற்சந்தியமைந்த முற்றத்தே மதம் பாயும் கதுப்பினையுடைய யானை காவலாக நிற்கும். நெற் கதிர்களினிடையே கரும்பையும் அதிமதுரத் தழையையும் வைத்துக் கட்டிய உணவைத் தின்னாத யானை, அவற்றைக் கொம்பின் மேற் போட்ட தும்பிக்கையிடத்தே கொண்டு நெற்றியைத் துடைக்கும்.

யானைத் தொழிலையன்றிப் பிறதொழிலைக் கல்லாத யானைப்பாகர் யானைப் பேச்சாகிய வடமொழிச் சொற்களைப் பலகாற் கூறிக் கவருடைய குத்துக் கோலாற் குத்தி யானைக்குக் கவளத்தை ஊட்டுவர். பல பாடைகளைப் பேசுகின்ற பெரிய படைக்கு நடுவே ஓரிடத்தை எல்லோரும் ஆராய்ந்து அரசனுக்குக் கோயிலாகக் கொள்வர்; கொண்ட இடத்தே வட்டமாகக் குத்துக்கால்களை நடுவர். நட்டுக் கூடாரமாகக் கயிற்றை வலித்துக் கட்டுவர். முக்கோலுடைய அந்தணர் அக்கோலின் மீது காவிதோய்ந்த ஆடையை இட்டு வைத்தாற் போல, விற்களை ஒன்றின் பக்கத் தொன்றாக ஊன்றி அவை மீது துணிகளைத் தூக்குவர். பின் விற்களின் பக்கத்தே எறிகோல்களையும் ஊன்றிப், பரிசைகளையும் அடுக்காகக் குத்திவைப்பர். இவ்வாறு செய்யப்பட்ட

அரசனது கோயிலிடத்து, வளையணிந்த முன் கையும் கூந்தல் அசைகின்ற அழகிய முதுகும் ஒள்ளியவாளை வரியுடைய கச்சிலிட்டு வைத்திருப்போருமாகிய மங்கையர், ஏவலாளர் கொளுத்தி ஒழுங்காகவைத்த விளக்குகள் அணையுந்தோறும் கையிடத்துள்ள பந்தங்களைக் கொளுத்திப்பிடிப்பர்.

யானைகளுடையவும் குதிரைகளுடையவும் மணியோசை அடங்கிய நடு யாமத்துச், சிறுதூறுகள் மெல்லிய காற்றுக்கு அசைந்தாற் போன்று தலைப்பாகை தரித்துச் சட்டையிட்ட மெய்காப்பாளர் சூழ்ந்து திரியப், பொழுதை நாழிகை வட்டத்தில் அறிந்து தப்பாமற் கூறுவோர், அரசே! நாழிகை வட்டிலிற் காண்கிற நாழிகை இத்துணை என்று சொல்லுவர். அவன், அரையில் குதிரைச் சவுக்கைச் செருகியிருப்போரும் சட்டை யிட்டோரும், அச்சந்தரும் தோற்றமும் தறுகண்மையும் உடையோருமாகிய யவனர் புலியைச் சங்கிலியிற் பிணித்தாற் போல எழுதி வாயிலின் முகப்பில் வைத்து அழகு செய்த நல்ல இல்லிலே, அழகிய விளக்கை எரிய வைத்துக் கயிற்றின்மீது திரையிட்டுப் பிரிக்கப்பட்ட அறைக்கு உள்ளே உள்ள படுக்கைக்குச் செல்வான். கையாலும் முகத்தாலும் வார்த்தை சொல்வோரும் சட்டை இட்டோருமாகிய ஊமைகள் பள்ளி கொள்ளுமிடத்தைச் சூழ்ந்து திரிவர். மிகுந்த போர் செய்ய வேண்டுமென்னும் விருப்பினால் நித்திரை பெறாது, வெட்டுண்டபுண்ணுடைய யானைகளை நினைந்தும், பகைவரது யானையின் துதிக்கை யறும்படி வெட்டி, மடிந்து, செஞ்சோற்றுக் கடன் கழித்த வீரரை நினைந்தும், கூரிய பகழிகள் அழுந்துகையால் தோல் கிழிந்து வருந்திப் புல்லுண்ணாமல் நிற்கும் குதிரைகளின் வருத்தத்தை நினைந்தும், ஒரு கையைப்படுக்கையின் மேல் வைத்து, ஒரு கையின் வீர வளையை முடியோடே சேர வைத்து, இப்படை நொந்த அளவுக்கு நாளை எவ்

வாறு பொருது மென நினைந்தும் கிடப்பான். அரசனது பாசறை இவ்வியல்பினது. (முல்லைப்பாட்டு)

அரசன், யானையை எறிந்து கொன்ற பெரிய வீரரின் புண்ணைக் கண்டு பரிகரித்தற்கு, விளக்குகள் வாடைக் காற்றுக்குத் தெற்கே சாய்ந்து எரிய, வேப்பிலையைத் தலையிலே கட்டிய வேலைத் தாங்கிய படைத்தலைவன் புண்பட்ட வீரரை முறையே காட்ட மணி கட்டின கடிவாளத்தோடும் தவிசோடும் பாய்ந்து செல்லும் இயல்புடைய குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மீது விழும் துளிகளை யுதற, இடத்தோளினின்றும் நழுவிவீழ்ந்த அழகிய உத்தரியத்தை இடப் பக்கத்தே அணைத்துக் கொண்டு தோளிலே தூங்கும் வாளை எடுத்தற்குத் தோளிலே வைத்த வலக்கையுடையவனாய்ப் புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற நோக்கி, முத்துமாலை தூங்கும் வெண்கொற்றக் குடை மழைத் துளியைத் தடுப்ப நள்ளென்னும் யாமத்தும் நித்திரை கொள்ளானாய், சில வீரரோடும் புண்பட்ட வீரரைப் பரிகரித்துத் திரிவான். (நெடுநல்வாடை)

"களவு செய்தோர் கையிற் பொருள் கோடலும், ஆறிலொன்று கோடலுஞ், சுங்கங்கோடலும், அந்தணர்க்கு இறையிலி கொடுக்குங்கால் இத்துணைப் பொருள் நும்மிடத்து யான் கொள்வலெனக் கூறிக்கொண்டு அது கோடலும், மறப் பொருளாகப் பகைவர்நாடு கோடலும், தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன்றாயங் கோடலும், பொருளில் வழி வாணிகஞ் செய்து கோடலும், அறத்திற்றிரிந்தாரைத் தண்டத்திற்றகுமாறு பொருள் கோடலும் போல்வனவுங் கொள்க" (நச்சினார்க்கினியர்)

வணிகர்

வாணிக வாழ்க்கையை மேற் கொண்டோர் வணிகர் எனப் பட்டனர். இவர் நுகத்தில் பகலாணிபோல நடுநிலை

யுடைய நெஞ்சினர். தம்முடைய பலசரக்குகளையும் பிறர் சரக்குகளையும் நடுவு நிலைமையோடு விலை மதிப்பர்: கொள்ளும் சரக்கைத்தாம் கொடுக்கும் பொருட்கு மிகை யாகக் கொள்வர்: கொடுக்கும் பொருளையும் தாந்தாம் வாங்கும் பொருளுக்குக் குறையக் கொடார். இலாபத்தை வெளி யாகச் சொல்லி விற்பர். (பட்டினப்பாலை)

"வணிகர், மலையிடத்தவும் கடலிடத்தவுமாகிய பொருள்களை உலகத்தவர் நுகரும்படி கொடுக்குமியல் புடையோர். அவர் மாணிக்கம் முத்து சந்தனம் ஆதியவற்றைப் பிறநாடுகளிற் கொண்டு சென்று விற்பர். போர் செய்தலின் அம்புகள் தைத்த புண்கள் ஆறிய தழும்புகள் அவர்கள் மார்பிடத்தே காணப்படும். அவர் ஆடையை இறுக்கி யுடுத்து அரையிடத்து உடை வாளைச் செருகியிருப்பர். வில்லிடத்து அம்பைவைத்துக் குறிதப்பாமல் எய்யும் வலி யுடையர்; முருகவேளைப் போலக் கையிடத்தே வேலைப் பிடித்திருப்பர்; யானைத் தந்தத்தாற் செய்த உறையுடைய வாளை வரியுடைய நாடாவினாற் கட்டித்தோளிற் தூங்க விட்டுச் செல்லுமியல்பினர்; செருப்புத் தொட்ட காலினர்; சட்டை யிட்ட மேனியர்; பலாப்பழங்கள் போல ஒத்த கனமாகச் சேர்த்த மிளகு மூட்டைகளைக் கழுதைகளிலேற்றி* அவற்றின் பக்கத்தே காவலாகச் செல்லுஞ் செலவினர்.

(பெரும்பாண்).

வணிகர், சங்க நிதியைப் பெற்றவர் போன்ற செல்வர். குதிரை மருப்பும், பெறுதற்கரிய நெருப்புமிழும் நாகத்தின் மணியும், சிங்கப் பாலும், தெள்ளிய திரையுடைய கடலிடத்து மூப்பில்லாத தேவுக்கள் கடைந்தெடுத்த அமுத

* பொறைமலி கழுதை நெடு நிரை தழீஇய திருந்து வாள் வயவர். (அகம் 89)

மும், வேண்டு மாயினும் போய்ப் பெறும் அரிய பண்டங் களையுடைய வணிகர் வீதி. (உதயணன் கதை)

வணிகர் அணித்தணித்தாயுள்ள பல மலைகளைக் கண்டாற் போன்றனவும், பருந்து இளைப்பாறியிருந்து பின் உயரப் பறக்கும் தன்மையுடையனவும், பல தொழில் மாட்சிமைப்பட்டனவுமாகிய நல்ல இல்லங்களில், மலையிடத் தவும், நிலத்திடத்தவும், நீரிடத்தவுமாகிய பல பண்டங் களைக் குவித்து, அவற்றையும் பிற தேசத்தினின்றுங் கொணர்ந்த முத்து பொன் மணி ஆதியவற்றையும் விற்பர். (மதுரைக் காஞ்சி)

இவர்கள் திரைகடலோடியுந் திரவிய மீட்டுமியல் பினர். "நாவாய் கவிழ்ந்த நாய்கன்போல்" (உதயணன் கதை) "முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் தமிழ் மக்கள் மரக்கலமேறிச் சென்றும் பொருளீட்டினார்கள் என விளங்குகின்றது.

வேளாளர்

உழவுத் தொழிலைக் கைக்கொண்டோர் வேளாளர் எனப்பட்டனர். உழுதுண்போர், உழுவித்துண்போர் என இவருள் இரண்டு வகை. உழுதுண்போர் வீழ்ங்குடி உழவர் எனப்பட்டனர். வேளாண் மக்களின் உயர்வைத் திருவள்ளுவரும் கம்பரும் வேண்டியளவு எடுத்துக் கூறி யிருக்கின்றனர்.

சேர சோழ பாண்டியரும் சிற்றரசர்களும் வேளாண் வமிசத்திற் றோன்றியவர்கள். சிறிய நிலங்களையுடைய ராயினோர் வீழ்ங்குடி உழவரெனப் பட்டனர். இதனால் மற்றைய வேளாண்மக்கள் செல்வர்களாயும் பெரிய நிலங் களுடையவர்களாயு மிருந்தார்களென்றும் விளங்குகின் றது. கரிகாலன் அறுவாளரை வென்று அவர் நாட்டைத்

தனது தேசத்தோடு இணைத்தபோது, வெற்றி கொண்ட நிலத்தை வேளாண் பிரபுக்களுக்குப் பகுத்தளித்தான். அப்பிரபுக்கள் வழியில் வந்தோர் பெரு நிலமுடையராய் ஆங்கில அரசரின் கீழ் சிறுசமீன்தார்களா யிருக்கின்றனர். அவர்கள் இப்பொழுது முதலிமாரென் றழைக்கப்படுவர். முதலிமா ரென்பதற்கு முதற் சாதி என்பது பொருள். தெலுங்கு நாட்டை வென்ற வேளாண் குடும்பங்கள் வேள்மா என்றழைக்கப் படுகின்றனர். அங்குள்ள பெரிய சமீந்தார்கள் இன்றும் வேள்மா மரபினரே. வேளாளர் கன்னட தேசத்தில் பெல்லால பரம்பரையைத் தாபித்துப் பல நூற்றாண்டுகளாக ஆட்சி புரிந்தனர். வேளாளர் கங்கை குலத்தவர், கங்கை வமிசத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர். வேளாளர் அதிகமாக வாழ்கின்ற மைசூரின் ஒரு பகுதி பத்தாவது, பதினோராவது நூற்றாண்டில் கங்காவதி என்றழைக்கப்பட்டது. ஒரிசாவை ஆண்ட இன்னொரு பரம்பரை கங்கை வமிசமெனப்பட்டது. (1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்.)

"மன்னர் பின்னோரென்றமையான் முடியுடையோரும் முடியில்லா தோரும், உழுவித்துண் போரும், உழுதுண் போருமென மன்னரும் வேளாளரும், பலரென்றார். வேளாண் மாந்தர்க்கு வேந்து விடு தொழில் என்னும் மரபியற் சூத்திரங்களான் வேளாளர் இருவகை யென்ப. அரசரேவுந் திறமாவன பகைவர் மேலும் நாடுகாத்தன் மேலும் சந்து செய்வித்தன் மேலும், பொருள் வருவாய் மேலுமாம். அவருள் உழுவித்துண்போர் மண்டில மாக்களும் தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும் வல்லமுங் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமை யெய்தினோரும்,

பாண்டிய நாட்டுக் காவிதிப் பட்டமெய்திய ஒருங் குறுங் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்கு உரிய வேளாளராகும். இருங்கோவேண் மானருங் கடிப்பிடவூர் எனவும், ஆலஞ்சேரி மயிந்தனூருண் கேணி நீரோரொப்போன்" எனவுஞ் சான்றோர் செய்யுட் செய்தார். உருவப் பஃறேர் இளஞ் சேட்சென்னி அழுந் தூர் வேளிடை மகட் கோடலும் அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலுங் கூறுவர். (நச்சினார்க்கினியர்)

வலைஞர் முற்றத்தில் மீன் பிறழும். இறைச்சி விற்பார் முற்றங்களில் விலங்குகள் திரியும். வேளாண் மக்கள் இவ் வாறு மீனும் விலங்கும் தம்மைக் கொல்வார் முற்றங்களில் அஞ்சாது நெருக்கித் திரியும்படி அவர்களிடத்தினின்றும் கொலைத் தொழிலைப் போக்குவர்: தேவுக்களை வழிபடுவர்; யாகங்களைப் பண்ணி அவற்றால் ஆவுதிகளை அவர் நுகரும் படி செய்வர்; நல்ல எருதுகளோடு பசுக்களை ஓம்புவர்; பெரிய புண்ணியங்களைச் செய்வர்; அவற்றைச் செய்ய மாட்டாதார்க்குத் தானஞ் செயவர்; தாம் விளைவித்த நெல்லை உணவாகக் கொடுப்பர். வளைந்த மேழியுடைய வேளாண்மக்கள் இவ்வாறு தருமங்கள் புரியும் நன்னெஞ் சுடையோர். (பட்டினப்பாலை) வேளாளர் என்பதற்கு உபகாரிகள் என்பது பொருள். "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி - வேளாண்மை செய்தற்பொருட்டு" என்னும் குறளால் இதனை அறிக. இவர்கள் பெரும்பாலும் ஊன் புசியாதவர்கள் எனத் தெரிகின்றது.

மேலோர்

அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால் வரும் மேலோரென்றும் ஏனோர் கீழோரென்றும் பழந் தமிழ் நூல்கள் கூறும். இது,

"மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்து" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் நனி விளங்கும். அச் சூத்திரத்துக்கு மேலோர் என்று அழைக்கப்படும் முறைமை நால்வர்க்கும் உரித்து என்பது பொருள். வேறு பொருள் கூறுதல் பொருத்தமாகத் தெரியவில்லை. "மேலோர் மூவர்க்குப் புணர்த்த கரணம்—கீழோர்க்காகிய காலமு முண்டே" என்னும் கற்பியற் சூத்திரத்தை எடுத்துக் கொண்டு, மேலோர் எனப்பட்டோர் அந்தணர் அரசர்வணிகர்என்னும் மூவரென்றும், கீழோர் எனப்பட்டோர் வேளாளரென்றும் கூறுவாருமுளர். இது மேற்படி சூத்திரத்துக்குப் பிழையாகப் பொருள் கொண்டமையால் நேர்ந்த இடர்ப்பாடே யாம். மேலோராகிய அந்தணர், அரசர் வணிகர் வேளாளர் என்னும் மூவர்க்கு வகுத்த கரணம் கீழோர்க்காகிய காலமு முண்டு என்பதே அச்சூத்திரத்தின் செம்பொருளாகும். நால்வரும் மேலோரெனப்படினும் அந்தணரைச் சிறப்பாக உயர்ந்தோர் எனக் கூறுதல் மரபு. "ஓதலுந் தூதும் உயர்ந் தோர்மேன" என்பதில் உயர்ந்தோர் என்பது சிறப்பாக அந்தணரையே குறிக்கின்றது.

கீழோர்

பலவகைக் கைத்தொழில் புரிவோரும் ஏவல் புரிவோரும் பரம்பரையாகத் தொண்டுபுரிவோரும் கீழோர் என அக்காலத்து வழங்கப்பெற்றனர். "அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் இது விளங்கும். அடியோர் எனப்பட்டோர் பரம்பரையாகத் தொண்டு புரிவோரையேயாம். இவர்கள் ஆரிய வகுப்பினரின் சூத்திரவகுப்பினரை ஒத்தவர்கள் ஆகலா மெனக் கருத இடமுண்டு.

அந்தணர் பார்ப்பார் என்போர் தமிழ் மக்களே

அந்தணர் பார்ப்பார் என்போர் தமிழ் மக்களல்லர்; ஆரியமக்களே என்னும் தப்பான கொள்கை தமிழ் நாட்டில் ஏற்பட்டதனால் பலநிலை தடுமாற்றங்கள் உண்டாயின. தென்னாட்டில் ஆரியக் கலப்பென்பது கொள்கை அளவில் ஏற்பட்டதேயன்றி இரத்தக் கலப்பினால் ஏற்படவில்லை.

ஒரு காலத்துச் சைன புத்த மதங்கள் தென்னாட்டகத்தே படையெடுத்து வந்தன. புத்த சைன நூல்கள் வடமொழியில் எழுதப்பட்டிருந்தமையால் அந்நூல்களைக் கற்றுப் புத்த சைனர்களோடு எதிர்த்து வாதப்போர் புரிதற்குத் தென்னாட்டினர் சமக்கிருதம் பயில்வாராயினர். சமக்கிருதக் கல்விக்கு ஒரு காலத்து மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆங்கிலங் கற்ற இக்காலத் தமிழர் பல நூல்களை ஆங்கில மொழியில் எழுதி வருதல் போலவே அக்காலச் சமக்கிருத வித்துவான்கள் கோயிற் கிரியை சமயச் சடங்கு முதலியன வியற்றுதற்குரியவும் பிறவுமாகிய நூல்களைச் சமக்கிருதத்தில் எழுதிவைக்கலாயினர். காலகதியில் சமக்கிருதம் கடவுள் மொழி என்னும் கொள்கையும் ஏற்படுவதாயிற்று. கோயிற் கிரியை சமயச் சடங்கு ஆதியன சமக்கிருதமயமாயின. பார்ப்பனர் சமக்கிருதத்தைப் பயின்றதும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றைக் கைக்கொண்டதும் ஆகிய காரணங்கள் பற்றி அவர் தமிழரல்லர் என்று கருதப்படுகின்றனரே யன்றி உண்மையில் அவர்கள் தமிழர்களே. வடநாட்டுப் பிராமணருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனருக்கும் உரிய ஆசாரங்கள் வெவ்வேறு. பிராமணரென்பது 'பிராமணங்'களைப் பயின்றதால் வந்த பெயர்.

பிராமண சத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணமும் தமிழருக்கிடையில் இருக்க வில்லை. பூணூலணிந்த அரசர் வைசியரைப் பற்றியும் தமிழ் உலகம் அறியாது. (1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்) பார்ப்பார் என்பதற்குக் கோயிலை மேற் பார்ப்போர் என்பது பொருள்.

மெகஸ்தினும் இந்தியாவும்

கி. மு. 321 முதல் 297 வரையில் மயூர சந்திரகுப்தன் வடஇந்தியாவில் ஆட்சிபுரிந்தான். இவன் * செலூகஸ் நிக்கேற்றர் என்னும் கிரேக்க அரசனின் புதல்வியை மணம் செய்திருந்தான் அவன் காலத்தில் § மெகஸ்தின், செலூகஸின்சார்பில்அதிபதிபாகபாடலிபுரத்தில்(பற்ன)தங்கியிருந்தான். இக்கிரேக்கர் இந்தியாவையும் இந்திய மக்களையும் பற்றி எழுதியுள்ளார். அவர் எழுதிய நூல் மறைந்து விட்டதேனும், அவரது நூலிலிருந்து பழைய சரித்திராசிரியர்கள் எடுத்தாண்ட பகுதிகளில் இந்தியாவைப் பற்றிய சில வரலாறுகள் காணப்படுகின்றன. அவற்றிற் கூறப்படும் மக்கள் ஒழுக்கங்களிற் பெரும்பாலான இந்திய மக்கள் எல்லோருக்கும் பொதுவா யிருந்தன வென்று சரித்திராசிரியர்கள் கூறியிருக்கின்றனர். மெகஸ்தின் கூறியிருப்பது வருமாறு:

இந்தியர் ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். தத்துவசாத்திரத்திற் தேர்ந்த ஒரு கூட்டத்தினர் முதற் சாதியாராகக் கொள்ளப்பட்டனர். மற்றைக் கூட்டத்தினரை விட இவர்களின் தொகை குறைவாயிருந்தது. இவர்கள் எசமானராகவோ வேலைக்காரராகவோ இருக்கவில்லை. மறு உலகத்துக்குரிய கருமங்களை எல்லாம் இவர்

---

* Selecus Nikator § Megasthenes

கள் நன்கு அறிந்திருந்தார்களென மக்கள் நம்பினார்கள். ஆகவே மக்கள் இவர்களைப் பிணச் சடங்குகள் புரிவதற்கும் உரிய காலங்களிற் கடவுட் பலியைச் செலுத்துதற்கும் அழைத்தார்கள். இவ்வகையான கிரியைகளைச் செய்வதற்குப் பிரதியுபகாரமாக இவர்கள் மிகுந்த பொருளைப் பெற்றனர். பொது மக்கள் இவர்களால் பெரிய நன்மைகளை அடைந்தனர். ஆண்டின் ஆரம்ப காலத்தே மக்கள் கூடி இருப்பார்கள். அப்போது இவர்கள் அவ்வாண்டில் நிகழ விருக்கும் பிணி, பஞ்சம், காற்று, மழை ஆகியவற்றை அறிவிப்பார்கள். இவற்றை அறிந்துகொண்ட மக்களும் அரசனும் நிகழவிருக்கும் துன்பங்களுக்கு ஆயத்தமா யிருந்தனர். தாம் கூறிய வருங்கால பலன்களிற் பொய்த்த தத்துவ சாத்திரிகள் தமது ஆயுளின் மீதிக்காலத்தை நிகழ்கால பலன்களைக் கூறாது மௌனமாகக் கழித்தனர்.

[தமிழ் நூல்களில் மூன்று காலமும் உணர்ந்தோர் எனக் கூறப்படும் அறிவர் என்னும் குழுவினரே இவராதல் கூடும்.]

இவர்களுக்கு அடுத்தபடியி லுள்ளோரா ஏர்த் தொழிலுக்குரியோராவர். இவர்கள் மற்றவர்களிலும் கூடிய தொகையினரா யிருக்கின்றனர். இவர் யுத்தம் முதலிய பொதுக் கருமங்களுக்குரிய காலத்தைத் தவிர மீதி நேரம் முழுவதையும் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடுவதிற் செலவிடுகின்றனர். நாட்டின் மீது படையெடுத்துவருவோர் இவர்களைத் துன்புறுத்துவதில்லை. பொது நன்மைக்குரியவர்கள் என்னும் எண்ணத்தினால் இவர்கள் எல்லா அபாயங்களில் நின்றும் காப்பாற்றப்படுகின்றனர். பகைவரால் அழிக்கப் படாதனவும், மிகுந்த விளைவைக் கொடுப்பனவுமாகிய நிலங்களின் பயன் நாட்டுமக்களின் உணவுக்குப் போது

மானதாயிருந்தது. இவர்கள் குடும்பங்களோடு நாட்டையே தமக்கு உறைவிடமாகக் கொள்வர். நகரவாழ்க்கையை இவர்கள் விரும்புவதில்லை. இந்தியாநாடு முழுமையிலுமுள்ள நிலம் அரசனுக்குச் சொந்தமானது. மக்கள் எவரேனும் சொந்தமாக நிலம் வைத்திருக்க அனுமதிக்கப்படுவதில்லை. நில வரியைத் தவிர விளைவின் நாலிலொன்றும் அரசனுக் குரியதாயிருந்தது.

மூன்றாவது படியிலுள்ளோர் இடையர். இவர்கள் பெரும்பாலும் ஆடு மாடுகளை மேய்ப்பர். இவர்கள் நாட்டிலாவது நகரங்களிலாவது நிலையாக வாழாது கூடாரங்களின் கீழ்த்தங்கினர்; வேட்டையாடியும் பொறிவைத்தும் துட்ட மிருகங்களைப் பிடித்தனர்.

நாலாவது படியிலுள்ளோர் சிற்பிகள். இவர்களிற் சிலர் ஆயுதங்களைச் செய்தனர். சிலர் பயிரிடுவோருக்கும் பிறருக்கும் வேண்டிய கருவிகளைச் செய்து கொடுத்து அவர்க்குத் துணையாக விருந்தனர்.

ஐந்தாவது படியிலுள்ளோர் படையாச்சிகள். இவர்கள் போர் செய்யும் முறைகளிற் பயின்றிருந்தனர். தொகையளவில் இவர்கள் இரண்டாவதாக விருந்தனர். யுத்தமில்லாத காலங்களில் இவர்கள் பொழுது போக்குகளிலும் சோம்புத்தனத்திலும் காலத்தைப் போக்கினர்.

ஆறாவது படியிலுள்ளோர் கண்காணிமார். நாட்டில் நடப்பவற்றை எல்லாம் அறிந்து அரசனுக்குச் சொல்லுவது இவர்களுக்கு வேலையாயிருந்தது. அரசன் இல்லாத விடங்களில் நியாயம் வழங்கும் அதிகாரிகளிடத்து அறிவிப்பர்.

ஏழாவது படியிலுள்ளோர் பொதுக் கருமங்களில் ஆலோசனை கூறும் கூட்டத்தினராவர். மற்றவர்கள் எல்லோரையும் விட இவர்கள் சிறு கூட்டத்தினர். உயர்ந்த ஒழுக்

கத்துக்கும் அறிவுக்குமாக இவர்கள் மதிக்கப்படுகிறார்கள். அரசனது பொக்கிஷசாலை வேலைக்கும், அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்கும் இக்கூட்டத்தினின்றுதான் சிலர் தெரிந்தெடுக்கப் படுகின்றனர். படைத்தலைவனும், தலைமை நீதிபதியும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களே.

இந்திய அரசாங்கம் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றது. தத்தம் கூட்டத்தைக் கடந்து மணங்கள் செய்து கொள்ள எவரும் அனுமதிக்கப் படுவதில்லை. தமது வகுப்புக் குரியதல்லாத தொழில் புரிவதற்கும் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. உதாரணமாகப் போர்வீரன் ஒரு போதும் பயிரிடுவோனாய் வரமுடியாது, சிற்பன் அறிவனாய் (தத்துவசாத்திரி) வரமுடியாது.

* இந்தியமக்களின் பழக்க வழக்கம்

இந்திய மக்கள் எல்லோரும் செட்டான வாழ்க்கையுடையர். சிறப்பாகக், கூடாரங்களில் தங்கும்போது இவ்வாறிருந்தனர். ஒழுங்கற்ற கூட்டங்களை அவர்கள் வெறுத்தனர். ஆகவே அவர்கள் ஒழுங்காக நடந்து கொள்வர். களவு சிறிதாக விருந்தது. சந்திரகுப்தனின் கூடாரத்தில் 400,000 மக்கள் தங்கினார்கள். எப்போதாவது 200§ டிறாமச்சுக்கு அதிகமாகக் களவு நடந்ததாகக் கூறப்படவில்லை. அவர்களுக்குள் எழுத்து மூலம் சட்டங்கள் கிடையா.

அவர்கள் எழுத்தைப்பற்றி அறியார். கொடுக்கல் வாங்கல்கள் ஞாபகத்தைப் பொறுத்திருந்தன. ஆடம்பரமில்லாத வாழ்க்கை நடத்தினபோதும் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர். யாகங்களிலன்றி அவர்கள் மது அருந்த

---

* மகஸ்தனிஸ் கூறியபடி § 66.5 தானிய இடை

வில்லை. மது, நெல்லிலிருந்து வடிக்கப் பட்டது. அரிசியி னல் ஆக்கிய கஞ்சி அவர்களின் பிரதான உணவாயிருந்தது. அவர்களது சட்டங்களைக் கவனிக்கும்போது அவர்கள் அருமையாக வழக்குக்குச் சென்றார்களெனத் தெரிகிறது. கொடுக்கல் வாங்கல்கள் ஒருவர் ஒருவரிடத்திற் கொண்ட நம்பிக்கையைக் கொண்டு நடைபெற்றமையால் பத்திரங் கள் எழுதப்படவில்லை. அவர்கள் வெளியே செல்றபோது வீட்டையும் வீட்டிலுள்ள பொருள்களையும் காப்பதற்கு எவரையும் நிறுத்தவில்லை. அவர்கள் எப்பொழுதும் தனிமையாகவே உணவருந்தினார்கள். எல்லோரும் இன்ன நேரத்தில் உணவருந்த வேண்டும் என்னும் நியதி யிருக்கவில்லை. பசிகொண்ட நேரங்களில் ஒவ்வொருவரும் உண்டனர்.

உடம்பை உரைஞ்சுவதையே அவர்கள் சிறந்த உடற் பயிற்சியாகக் கருதினர். அதற்காகப் பலமுறைகள் கையாளப் பட்டன. அழுத்தமான கருங்காலி உருளைகளை உடம்பில் அழுத்தி உருட்டுவதே அவற்றுள் சிறந்தது அவர்களின் சமாதிகள் ஆடம்பரமின்றிச் சாதாரணமாக விருந்தன. சமாதிக்குமேல் மண்ணைக் கொட்டி மேடு உண் டாக்கப் பட்டது. அவர்கள் அழகையும் ஆபரணங்களையும் விரும்பினர். உடைகள் பொன்னினல் அலங்கரிக்கப்பட் டிருந்தன. ஆபரணங்களில் வயிரங்களும் விலையுயர்ந்த கற் களும் அழுத்தப்பட்டிருந்தன. பூவேலை செய்த மசிலின் துணிகளை அவர்கள் உடுத்தனர் பரிவாரங்கள் அவர்களின் பின்னற் குடைபிடித்துச் சென்றனர். உண்மையும் புகழும் போற்றப் பட்டன. விவேகமில்லாத முதியவர்களுக்கு விசேட உரிமைகள் கொடுக்கப்படவில்லை.

அவர்கள் பல பெண்களை மணந்தனர். அவர்கள் ஒரு சோடி எருத்தைப் பெண்களுக்கு விலையாகக் கொடுத்துப்

பெற்றோரிடமிருந்து வாங்குகின்றனர். சிலர் தமக்கு வாழ்க்கைத் துணை வேண்டுமென்று மணஞ்செய்கின்றனர். பலர் இன்பத்திற்காகவும் வீடுகளைப் பல குழந்தைகளால் நிரப்புவதற்காகவும் மணஞ் செய்கின்றனர். யாகசாலைகளிலும் கடவுட் பூசைகளிலும் ஒருவரும் முடி அணியவில்லை. பலியிடும் மிருகங்கள் வெட்டிக் கொல்லப்படவில்லை; மூச்சைப் பிடித்துத் திருகிக் கொல்லப்பட்டன.

பொய்ச் சாட்சி சொல்வோனுக்குக் கடுந்தண்டம் விதிக்கப் பட்டது. ஒருவனது உறுப்புக்குப் பங்கம் விளைத்தவனது அதே உறுப்பு வெட்டப் பட்டது; கையும் வெட்டப் பட்டது. சிற்பியின் கண்ணை அல்லது கையை இல்லாமற் செய்தவன் கொலை செய்யப்பட்டான்.

அரசனுடைய உயிர் பெண்களின் கையில் இருந்தது. அப்பெண்கள் தாய் தந்தையரிடமிருந்து விலைக்கு வாங்கப் பட்டவர்களாவர். வாயிலுக்கு வெளியே காவலாளரும் போர் வீரரும் காவல் புரிந்தனர். அரசன் மதுவுண்ட மயக்கத்தில் இருக்கும்போது அவனைக் கொல்லும் பெண், இனி வரும் அரசனுக்கு மனைவியாகின்றாள். அரசன் பகற்காலத்துத் துயில் கொள்ளான். தனக்குமாறாக நடக்கக்கூடிய சதிகளுக்குப் பயந்து அவன் அடிக்கடி தனது படுக்கையை மாற்றுவதுண்டு. யுத்த காலங்களில் மாத்திரமல்லாது வழக்குகளுக்குத் தீர்ப்பளித்தற்கும் அவன் வெளியே செல்கின்றான். நீதி செலுத்தும் இடத்தில் அவன் முழு நேரத்தையும் செலவிடுகின்றான். அந்நேரத்தில் நாலு வேலையாட்கள் அவனது உடம்பை மர உருளைகளால் உரைஞ்சுகின்றனர். உருளைகளால் உரைஞ்சும்போதே அவன் வழக்குகளை விசாரணைசெய்கிறான். வேட்டையாடுதற்கும், வேள்விச் சாலைகளிற் பலி செலுத்துதற்கும் அவன் வெளியே

செல்கிறான். வேட்டைக்குச் செல்லும்போது பெண்கள் பலர் அவனைச் சூழ்ந்து நிற்கின்றனர். இவர்களுக்குப் புறத்தே ஈட்டி தரித்த வீரர் சூழ்ந்து நிற்கின்றனர். வீதிகளிற் கயிறுகள் கட்டப்படுகின்றன. கயிறு கட்டப்பட்ட இடத்தே செல்லும் ஆண் அல்லது பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. மேளம் சல்லரி முதலியவாத்தியங்களோடு பரிவாரங்கள் செல்கின்றன. அரசன் வளைத் தடைக்கப்பட்ட இடத்தே உயரமான இடத்தில் நின்று அம்புகளை எய்கிறான். அவனுக்குப் பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று ஆயுதம் தரித்த பெண்கள் நிற்கின்றனர். வெளியான இடங்களில் வேட்டையாடும்போது யானையின் அம்பாரிமீதிருந்து அம்புகளை எய்கின்றான். பெண்கள் சிலர் தேர்மீதும் சிலர் குதிரைமீதும், சிலர் யானைமீதும் செல்கின்றனர். யுத்தத்துக்குச் செல்வதை ஒப்ப அவர்கள் பல ஆயுதங்களைத் தாங்கிச் செல்கின்றனர்.

அரசாங்க அமைப்பு

அரசாங்க உத்தியோகத்தரிற் சிலர், சந்தைகளையும், சிலர் இராணுவத்தையும், சிலர் நகரத்தையும் மேற்பார்க்கின்றனர். சிலர் ஆறுவழியாக நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதையும், சிலர் நில அளவைகளையும், சிலர் ஆற்றின் சிறிய கால்வாய்களால் நீர் செல்லும் மடைகளையும் கண்காணிக்கின்றனர். சிலர் விறகுவெட்டுவோர், தச்சு வேலை, கொல் வேலை, சுரங்கவேலை முதலியன புரிவோரை மேற்பார்த்து வரி அறவிடுகின்றனர். இவர்கள் வீதிகளையும் அமைக்கின்றனர். தூரத்தையும் கிளைப்பாதைகளையும் அறிவிக்கும் தூண்கள் மைலுக்கொன்றாக நடப்படுகின்றன.

நகர ஆட்சி ஆறு சபையினரால் நடத்தப்படுகின்றது. முதற் பிரிவினர் கைத்தொழில் சம்பந்தமான எல்லா

வற்றையுங் கண்காணிப்பர். இரண்டாவது பிரிவினர் பிறநாடுகளினின்றும் வருவோரைக் கவனித்து அவர்கள் தங்குதற்கேற்ற வசதிகளைப் புரிகின்றனர். அப்புதியவர்களுக்குத் துணையாக விருப்போர் அவர்களின் போக்கைக் கவனித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கின்றனர். பிறநாட்டவர்கள் இறக்க நேர்ந்தால் அவர்களின் உடைமைகள் உறவினரிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன. இறந்தவர்களின் பிரேதங்கள் புதைப்பிக்கப்படுகின்றன. மூன்றாவது பிரிவினர் நாட்டில் ஏற்படும் இறப்புப் பிறப்புகளைக் கவனிக்கின்றனர். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமின்றி எல்லோருக்கிடையிலும் ஏற்படும் இறப்புப் பிறப்புகள் தவறாமல் பதியப்படுகின்றன. நாலாவது பிரிவினர் சந்தைகளைக் கவனிக்கின்றனர். இவர்களே நிறைகளுக்கும் அளவுகளுக்கும் பொறுப்பாயிருக்கின்றனர். சனங்களுக்கு அறிவித்தபின் காலத்திற் கிடைக்கும் விளைபொருள்கள் பகிரங்கத்தில் விற்பப்படுகின்றன. ஒன்றுக்கு அதிகமான பண்டங்களில் வியாபாரஞ் செய்ய எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஐந்தாவது பிரிவினர் கைத்தொழிற் பண்டங்களைக் கவனிக்கின்றனர். புதிய பண்டங்களும் பழைய பண்டங்களும் வெவ்வேறாக வைத்து விற்கப்படுகின்றன. புதியவற்றையும் பழையவற்றையும் கலந்து விற்போர்க்குக் குற்றம் விதிக்கப்படுகின்றது. ஆறாவது பிரிவினர் வியாபாரப் பொருள்களின் விலையிற் பத்திலொன்றை அறவிடுகின்றனர். இவ்வாறு ஆறு பிரிவினர்களும் கடமை ஆற்றுகின்றனர். இவர்கள் ஒன்று சேர்ந்து, பொதுக் கட்டடங்களின் பாவிப்பு, அவற்றின் பழுதுபார்ப்பு, பண்டங்களின் விலை, சந்தை, துறைமுகம், ஆலயங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாயிருக்கின்றனர்.

நகரின் நியாய அதிகாரிகள் இராணுவத்தை நடப்பிக்கின்றனர். இவர்கள் ஐந்து உறுப்பினர் அடங்கிய ஆறு சபைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். ஒன்று கடற்படை அதிகாரிகளோடு ஒத்துழைக்கின்றது. இரண்டாவது யுத்தத்துக்குரிய இயந்திரங்களையும், போர்வீரரின் உணவையும் பிற பொருள்களையும் கொண்டு செல்லும் எருதுகளையும் வண்டிகளையும் கவனிக்கின்றது. இது, வேலையாட்களையும், பறையடிப்போரையும், சல்லரிபோடுவோரையும், குதிரைப் பாகரையும், இயந்திரம் பழுதுபார்ப்போரையும், அவர்களின் உதவியாளரையும் அளிக்கின்றது. சல்லரிகளால் செய்யப்படும் ஓசையை அறிந்து வேலையாட்கள் குதிரைகளுக்குப் புல் கொண்டுவருகின்றனர். மூன்றாவது பிரிவு காலாட்படைக்குப் பொறுப்பாயிருக்கின்றது. நாலாவது, குதிரைப் படைக்கும், ஐந்தாவது தேர்களுக்கும், ஆறாவது யானைப்படைக்கும் பொறுப்பாயிருக்கின்றன. அரசினரின் ஆயுதசாலையுண்டு. ஒவ்வொரு போர்வீரனும் ஆயுதங்களை ஆயுத சாலையிலும், குதிரை அல்லது யானையை இலாயத்திலும் விட்டுச் செல்கின்றான். அவர்கள் யானைக்குக் கடிவாளமிடுவதில்லை. தேர்களை எருதுகள் இழுத்துச் செல்கின்றன. தேரை இழுத்துக் களையாதபடி குதிரைகள் பக்கத்தே நடத்திச் செல்லப்படுகின்றன. தேர்ப்பாகனின் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு வீரர் இருக்கின்றனர். போர் யானை நாலு வீரரைக்கொண்டு செல்கின்றது. ஒருவன் பாகனும் மூவர் போர்செய்வோருமாவர்.

தத்துவ சாத்திரிகள்

மகஸ்தீன் தத்துவ சாத்திரிகளை இருவகையாகப் பிரிக்கின்றனர். ஒரு பிரிவினர் 1 'பிராச்மேன்' என்றும் மற்றுப்

1. Brachmanes, - பிராமணர்

பிரிவினர் * 'சார்மேன்' என்றும் அழைக்கப்படுகின்றனர். பிராச்மேன்களின் கொள்கைகள் உண்மையாக விருக்கின்றமையின் அவர்கள் மிகவும் மதிக்கப் படுகின்றனர். கருப்பத்திலிருந்தே அவர்கள் அறிவாளிகளின் பாதுகாப்பில் இருக்கின்றனர். தாயினதும் குழந்தையினதும் நலத்துக்காகச் சில கிரியைகளைச் செய்வதாகப் பாசாங்கு செய்து அறிவாளிகள் அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறுகின்றனர். அவர்களின் புத்திமதிகளை ஆவலோடு கேட்கின்றவள் மிகவும் அதிட்டசாலி என்று கருதப்படுகிறாள். பிறந்தபின் குழந்தை ஒருவரின் பின் ஒருவராக அறிவில் உயர்ந்த பலரின் பாதுகாப்பில் இருந்து வருகின்றது.

தத்துவ சாத்திரிகள், நடுத்தரமான வளைத்தடைத்த சோலைகளின் மத்தியில் வசிக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை சாதாரணமானது; புல், மான்தோல் முதலியவற்றின் மீது படுக்கின்றனர். அவர்கள் விலங்கின் மாமிசம் புசிப்பதில்லை; பெண் போகத்தை வெறுக்கின்றனர். கேட்பதற்கு அறிவைக் கொடுக்கும் பலவற்றைப் பேசுவதில் அவர்கள் காலத்தைப் போக்குகின்றனர். அவர்கள் பேசுவதைக் கேட்போர் மௌனமாகவும் அமைதியாகவும் இருத்தல் வேண்டும். இப்பிரமாணத்தைத் தாண்டும் எவரேனும் இரக்கமின்றி அக்கூட்டத்தினின்றும் விலக்கப் படுகின்றனர். இவ்வாறு வாழும் ஒவ்வொருவரும் முப்பத்தேழு ஆண்டுகளுக்குப்பின் தத்தம் இல்லங்களுக்குச் செல்கின்றனர். அப்பொழுது அவர்கள் அழகிய மசிலின் ஆடைகளை உடுக்கின்றனர்; விரல்களில் மோதிரங்களும் காதிற் குண்டலமும் அணிகின்றனர்; தொழில் செய்கின்ற விலங்குகளல்லாத பிறவற்றின் ஊனைப் புசிக்கின்றனர்.

---

* Sarmanes - புத்தகுருமார்

காரமானதும் அதிகம் தாளித்ததுமாகிய உணவை அவர்கள் விரும்புவதில்லை. எத்தனை மனைவியரையும் அவர்கள் மணந்துகொள்ளலாம். அடிமைகளில்லாமையால், கூடிய தொகை மனைவியர்களையும் பிள்ளைகளையும் உடையரா யிருத்தல் தமக்கு வசதியாகுமென்று எண்ணுகின்றனர்.

பிராச்மேனியர் சாத்திர உண்மைகளைத் தம் மனைவியருக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. பிறருக்கு மறைக்கப்பட்ட அவ்வுண்மைகளை வெளிப்படுத்தி அவற்றின் பரிசுத்தத்தைக் கெடுத்து விடுவார்கள், அல்லது உண்மை அறிவு மிகுந்து தம்மைவிட்டுப் பிரிந்து விடுவார்கள் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். நல்ல மனைவியும் கணவனும் சுக துக்கங்களை சமமாகப் பாவித்து வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்கள் அடிக்கடி பேசும் விஷயங்களில் மரணம் ஒன்றாகும். பிறப்பைப்போல இறப்பும் வரும் என்று அவர்கள் சாத்திரம் கூறுகின்றது. மனிதனுக்கு நேரும் சுக துக்கங்களெல்லாம் கனவுபோன்ற மாயை என்றும், இல்லாவிடின் ஒரு பொருள் சிலருக்குத் துன்பத்தையும், வேறு சிலருக்கு இன்பத்தையும் கொடுக்க முடியாதென்றும், ஒரே பொருள் வெவ்வேறு காலங்களில் நேர் விரோதமான அனுபவங்களைக் கொடுக்கக் காரணமென்ன என்றும் கூறுகின்றனர்.

இயற்கை நிகழ்ச்சியைக் குறித்தளவில் அவர்கள் குறைவான விளக்க முடையவர்களா யிருக்கின்றனர். அவர்கள் கட்டுக்கதைகளை நம்புகின்றனர்; நியாய ஆராய்ச்சியிலும், பார்க்கச் சாதனையிற் றிறமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களின் கொள்கைகள், பலவகையில் கிரேக்கர் கொள்கைகளோடு ஒற்றுமையுடையனவாய்க்

காணப்படுகின்றன. கிரேக்கரைப்போலவே அவர்களும் உலகம் ஓர்காலத்தில் உற்பத்தியானதென்றும், அது உருண்டை வடிவினதென்றும், அதனை உண்டாக்கிய கடவுள் அதன் எல்லாப் பாகங்களிலும் செறிந்திருக்கின்றா ரென்றும் கூறுகின்றனர். இவ்வுலகின் உற்பத்திக்கு முதற்காரண முண்டென்றும் அது நீரினின்று உண்டாயிற்றென்றும், நிலம் தீ நீர் காற்று என்னும் நாலுபூதங்களை விட ஐந்தாவது பூதம் ஒன்றுண்டென்றும், அதினின்றும் வானமும் நட்சத்திரங்களும் உண்டாயின வென்றும் அவர்கள் நம்புகின்றனர். பூமி உலகின் மத்தியில் இருப்பதாகக் கருதப்படுகின்றது. சிருட்டி, உயிரின் இலக்கணம் இவைபோன்ற பல விஷயங்கள் கிரேக்கர் கொள்கைகளோடு ஒத்திருக்கின்றன.

இனி சார்மேன்களில் 'ஹைலே பியோய்' என்னும் பிரிவினர் மிகவும் மரியாதை செய்யப்படுகின்றனர். அவர்கள் காட்டில் வசித்து அங்கு கிடைக்கும் இலைகளையும் பழங்களையும் புசிக்கின்றனர்: மரப்பட்டையாற் றைத்த உடையை உடுக்கின்றனர் பெண்போகமும் மதுமாமிசமும் அவர்களுக்கு விலக்கு. அரசன், தூதுவர் மூலம் இவர்களிடம் தனக்குவேண்டிய ஆலோசனைகளைச் செய்கிறான். இவர்கள் மூலம் கடவுளுக்கு வழிபாடு செய்விக்கின்றான்.

இவர்களுக்கு அடுத்தபடியில் உள்ளோர வைத்தியர். இவர்கள் மனிதனின் இயற்கையைப்பற்றிய ஆராய்ச்சி செய்கின்றனர். அவர்களின் பழக்க வழக்கங்கள் சாதாரணமானவை. அவர்கள் வயல்களில் வசிப்பதில்லை. அவர்களின் உணவு அரிசியும் வாளியும். இவற்றை அவர்கள் எவரிடமேனும் கேட்டுப் பெற்றுக்கொள்ளுகின்றனர்

அல்லது, விருந்தாகத் தங்குமிடங்களிற் பெறுகின்றனர். இவர் தமது கலையின் விசேடத்தால் சந்தோஷமான விவாகங்களை ஒழுங்கு செய்வர். பிறக்கும் குழந்தைகள் ஆண் அல்லது பெண் என்று முன் அறிந்து சொல்லுவர். அவர்கள் சாப்பாட்டு முறைகளால் நோயை மாற்றுகின்றனர். மருந்தை அருமையாகப் பயன்படுத்துகின்றனர். பிரதானமாகத் தயிலங்களையும் பூச்சுகளையுமே அவர்கள் பயன்படுத்துகின்றனர். மற்றைய முறைகள் இயற்கைக்கு மாறுபாடானவை என்று கூறுகின்றனர். இவர்களும் வேறு சில வகுப்பினரும் நாள் முழுதும் அசையாது ஓரிடத்தில் நிற்றல் போன்ற அப்பியாசங்களைச் செய்கின்றனர்.

இவர்களையன்றி மந்திரவித்தைக்காரரும் வேடம் பூண்டோருமிருக்கின்றனர். இவர்கள் தாமும் உயர்ந்த திருத்தமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். மறு உலகத்தைப் பற்றிய எண்ணம், பத்தியையும் பரிசுத்தத்தையும் உண்டாக்குமென்று அவர்கள் கூறுகின்றனர். இவர்கள் சிலரிடமிருந்து பெண்கள் சமய சாத்திரத்தைக் கற்கின்றனர்.

பாடலிபுத்திரா (பற்ன)

கங்கையாற்றின் அகலம் 100 * ஸ்ராடியா. அதன் குறைந்த ஆழம் 120 அடி. கங்காநதியும் இன்னொரு ஆறும் சந்திக்குமிடத்தில் 'பலிபோத்திரா' என்னும் ஓர் நகர் இருக்கிறது. இதன் நீளம் எண்பது ஸ்ராடியா, அகலம் பதினைந்து ஸ்ராடியா. அது நீண்ட சதுரவடிவானது. அதைச்சுற்றி மரத்தினால் இடப்பட்ட அரண் உண்டு. அம்புகள் எய்யக்கூடியதாகச் சுவரின் இடையிடையே

* 606 அடி 9 அங்குலமுள்ள ஓர் கிரேக்க அளவை.

துவாரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சுவருக்கு முன்னால் அகழி ஒன்று இருக்கிறது. நகரின் கழிவு நீர் இதனுள் விழுகின்றது. இவ்விடத்தி லுள்ளவர்கள் இந்தியா முழுமையிலும் வாழ்பவர்களிலும் விசேஷமானவர்கள். அரசன் தனது குடும்பப் பெயரோடு 'பலிபோத்திரா' அல்லது 'சந்திர கோத்திரா' என்னும் பெயரைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அகழிகள் 600 அடி அகலமும் 30 முழ ஆழமுமுடையன. மதில் 570 கோபுரங்களும் அறுபத்திநாலு வாயில்களும் உடையதாயிருந்தது. இந்தியர் ஒவ்வொருவரும் சுதந்திர வாழ்க்கை யுடையவரா யிருந்தனர். அடிமைகள் ஒருவரும் காணப்படவில்லை. *

---

* Indian Antiquary Vol. 6. PP. 123—124; 131—133; 238—239; 239, 245.

III கடவுட்கொள்கை

திருமால்

முல்லை நில மக்கள் திருமாலைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். திருமாலைப் பற்றிக் கூறப்படும் வரலாறுகளை நோக்குமிடத்து, அவை கண்ணன் வழிபாடே என்று நன்கு விளங்குகின்றது. இவ்வழிபாடு பாரதப் போருக்குப்பின் ஏற்பட்டதெனச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். முல்லை நிலமக்கள் திருமாலுக்குப் பாற் சோறு பொங்கிப் படைப்பர்; ஆயர் வேய்ங்குழலூத ஆய்ச்சியர் மாயன் புகழ் பாடிக் குரவையாடுவர். குரவை யென்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைத்தாடுவது.

பரிபாடலில் கண்ணனும், கண்ணனின் மூத்தோன் பலதேவனும் ஒருவராக வைத்து வழுத்தப்படுகின்றனர். பரிபாடலில் மாயோனைத் துதிக்கும் பாடலொன்றை வசன நடையிற் றருகின்றோம்.

மாயோனே! மாயோனே! மறுபிறப்பறுக்கும் மாசில்லாத சிவந்த பாதங்களுடைய நீலமணி போன்று விளங்குந் தோற்றமுடைய மாயோனே! நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்னும் ஐந்து பூதங்களும், இவற்றோடு ஞாயிறு, திங்கள் வேள்வி முதல்வன் என்னும் மூவர் சேர்ந்த அட்ட மூர்த்தங்களும், திதியின் சிறுவராகிய அசுரரும், காசிபன மக்களாகிய ஆதித்தர் பன்னிருவரும், குற்றமற்ற எட்டு

வசுக்களும், பதினொரு உருத்திரரும், தாவிச் செல்லும் குதிரை வயிற்றிற் பிறந்த அசுவினிதேவர் இருவரும், இயமனும் அவன் ஏவல்கேட்கின்ற கூற்றுவரும், ஒவ்வொன்று ஏழுவகைப்பட்ட மூவகை உலகமும், உலகின் உயிர்களும் நின்கட் தோன்றிப் பரந்தனர் என்று அழியாத மெய்யுடைய வேதமுரைத்தது. அவற்றையெல்லாம் கூறுதற்கு உரியமல்லேமாயினும் ஈண்டு சிலவற்றைப் பிறபூ உரைக்கின்றோம். வேதமாகிய தடாகத்துள் மலர்ந்த பிரமனும், அவன் தாதையும் நீ என்று நாவலந்தீவின் அந்தணர் அருமறைபுகலும். காவல் காத்து நின்ற அழகிய ஆபரணமணிந்த அமரரை ஓட்டிக் கவர்ந்து வந்த அமிர்தத்தால் ஈன்றளது துன்பத்தைக் களைந்த புள்ளினை ஊர்தியாக வுடையோய்! அன்னையின் துயர்களைந்த கருடனை எழுதப்பெற்ற கொடியோய்! உனது பாதங்களைத் தொழாதவர்களுமுளரோ? குறள் வடிவமாக உலகை அளக்கின்ற காலத்துக் கீழேழுலகையும் எஞ்சாமல் அளந்த அடியிணையுடையோய்! எல்லாவற்றையும் எரிக்கின்ற நெருப்பு, கூற்றுவர், ஞமன், குற்றமில்லாத ஆயிரங் கதிருடைய ஆதித்தர் பன்னிருவர், என இவரெல்லாம் ஒன்றுகூடும் உக இறுதிக்கண் பூமி நீரிடை அமிழ்ந்திற்று. அக்காலத்தும், பன்றியாகி யதனை மருப்பாற் பெயர்த்தெடுத்தாயென்றும், விசும்பினின்றும் ஒழுகும் புனலை வெள்ளை அன்னச் சேவலாய்ச் சிறகினாற் புலர்த்தினையென்றும், பூமியிலுறையும் தேவராகிய முனிவரும் வானத்து உறையும் முப்பத்து மூவரும் விசும்பினினின்று நின்னைத் துதித்துப் பாடுவர். அன்னோர் பாடுவது தமக்கு முன்னோராகிய பாடுவோரின் முறைமையே. எம் பாடல்கள் தாமும் எம் முன்னோர் பாடும் முறையினவே. நின் தொன்மை அறியமுடியாத தன்மையில் எமக்கும் அவர்க்கும் வேற்றுமையின்று.

வாசுதேவனே ! பலதேவனே ! பொன்னிறமேனியுடைய காமனே ! பச்சுடம்புடைய மாலே ! ஆய்ச்சியரோடு கைகோத்தாடுதலின் அவர் குலமும் இடமும் ஆயினோய் ! அறியப்படாத மரபினோய் ! அன்பரது விடாத நினைவின் கண்ணோய் ! மாயாத நிலைபேற்றையுடையவனே ! பழைய முறையில் வந்த புதல்வா ! நல்ல யாழுடைய பாண! வனமாலையணிந்த செல்வ ! வெற்றிச் சங்குடையவனே ! பொன்னிறத்தால் மிக்க ஆடையை யுடையாய் ! வலம்புரிச் சங்கைத் தாங்கிய அண்ணலே ! மற்போரில் வல்லவ ! இலக்குமியின் நாயக ! பெருவலியுடைய மள்ள ! பெரிய உலகந் தோன்றாத காலத்து, நிறைந்தவெள்ளத்தின் நடுவே பிரமனைக்கொண்ட உந்திக்கமலமாகிய பொருட்டுத் தாமரையை யுடையை ! நின் சக்கரமே உலகுக்கு நிழலாவது. (பரிபாடல் 3.)

திருமாலுக்கு உயிர்ப்பலி கொடுத்து வணக்கஞ் செய்யப்பட்டதாக எவ்விடத்தும் கூறப்படவில்லை. திருமால் வணக்கமும் வேதங்களிற் சொல்லப்படும் விஷ்ணுவணக்கமும் வேறானவை. வேதங்களிற் சொல்லப்படும் விஷ்ணு சூரியனைக் குறிக்கும். சூரியன்தோன்றி உச்சிக்குவந்து மறைதலாகிய மூன்றிடங்களும் விஷ்ணுவின் மூன்று அடிகளென்று சொல்லப்படும் *. சிவன் முருகன் திருமால் உமை முதலிய வணக்கங்கள் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானவை.

---

* Vishnu, the wide-stepper, explained by Yaska as the sun who steps from the eastern horizon to the zenith and from the zenith to the western horizon and whose name was probably derived from Tamil vin the sky—Stone age in India P..52.

முருகன்

குறிஞ்சி நிலமக்கட்குக் கடவுள் முருகன். முருகவழி பாட்டைப் பற்றித் திருமுருகாற்றுப்படை பரிபாடல் முதலிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. பாமரர் முதல் ஞானிகள் வரையில் ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கு எட்டிய வரையில் முருகக்கடவுளைப் பலவாறு வழிபட்டனர். திருமுருகாற்றுப்படையில் பழமுதிர் சோலையிற் குறத்தியர் செய்து போந்தவழிபாடே மிகப்பழமையுடையது. அதனை இவ்விடத்துத் தருகின்றோம்.

"கோழிக்கொடியை நட்டுச் சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்து பலியாகத் தூவி மறியறுத்து ஊர்கள் தோறும் எடுக்கும் தலைமையுடைய விழாவிடத்து முருகக் கடவுள் எழுந்தருளுவார்.

அன்பர் ஏத்துமிடத்தும், படிமத்தான் இழைத்த வெறியாடுகளத்தும், காட்டிலும், பொழிலிலும், அழகிய ஆற்றிடைக்குறையிலும் ஆறுகளிலும் குளங்களிலும் நாற்சந்தியிலும், கடம்படியிலும், ஊர்க்கு நடுவே எல்லோரும் இருக்கும் மரத்தடியிலும், அம்பலத்திலும் ஆதீண்டுகுற்றியிலும் முருகக்கடவுள் எழுந்தருளுவார். குறமகள் ஊருக்கு நடுவே கோழிக் கொடி நட்டு, அவ்விடத்தை முருகனுக்குக் கோயிலாக அலங்கரித்து, நெய்யையும் வெண் சிறு கடுகையும் நெற்றியிடத்தே அப்பி சிறு மந்திரங்களை ஓதிவணங்குவாள்; வணங்கி அழகிய மலர்களைச் சிந்தி இரண்டு வேறு நிற முடைய ஆடைகளை ஒன்றின் மேல் ஒன்றாக உடுத்து, சிவந்த நூலைக் கையிற் காப்பாகக்கட்டி வெண்பொரிதூவுவாள்; தூவிக் கொழுத்த கிடாயின் இரத்தத்தோடு கலந்த வெள்ளரிசியைப் பலியாக இட்டுத்தானியங்களையும் பலி

யாகத் தூவிப் பசியமஞ்சளோடு சந்தனத்தைத் தெளித்து குளிர்ந்த செவ்வலரிமாலையையும் நந்தியாவர்த்தமாலைகளையும் ஓரளவாய் அசையும்படி தூக்குவாள்; மலைப்பக்கத்திலுள்ள ஊர்களைப் பசியும் பிணியும் வருத்தாமல் இருக்கும்படி வாழ்த்துவாள்; நறிய தூபங் கொடுத்து அருவியின் ஓசையுடைய பல வாத்தியங்கள் ஒலிக்க சிவந்த பூக்களையும் சிவந்த தினையையும் பரப்பி முருகன் வரும்படி வழிபடுவாள். * (முருகாற்றுப்படை)

"பெரிய போரிடத்துச் சூரன்மாவைக் கிளையோடு அழித்த சுடர் விடுகின்ற வேற்படையுடையோய்! குறையில்லாத கார்காலத்து வெண்மேகம் எழுந்தாலன்ன நறிய அகில் முதலியவற்றின் புகையை விரும்பினோய்! ஆறுமுகமும் பன்னிரண்டு தோளுமுடையாய்! அழகிற் பிறரை வென்ற வள்ளியது நலத்தை நயந்தோய்! பிரிந்த கணவர் மீண்டு வந்து புணர்ந்து, பின் நீங்காதுறைதற் பொருட்டு வரம் வேண்டி மகளிர்யாழை மீட்டு நின்னைப் பாடுகின்ற பாட்டை விரும்பினோய்! பிறந்த ஞான்றே நின்னை எதிர்த்து இந்திரன் முதலாகிய தேவர் அஞ்சிய சிறப்புடையோய்! இருபிறப்பினையும், அப்பிறப்பான் வந்த இரண்டு நாமத்தினையும், இளகிய நெஞ்சத்தினையும், ஒப்பில்லாத புகழினையுமுடைய அந்தணருடைய வைதிக ஒழுக்கத்தினைப் பொருந்தினோய்! நின்னையாங்கள் மேவி அடுத்தடுத்து வழிபடுவதன் பயன், அவ்வழிபாடுகள் மென் மேலும் நின் புகழினும் பலவாகுதலேயாகும். (பரிபாடல்)

---

* முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத் தாவுபு தெறிக்கும் (புறம் 259)

களவுக் காலத்தே காதலனை நினைந்து மெலியுங்குறச் சிறுமியை முருகன் வருத்திய தாகக்கருதி வெறியாட் டெடுப்பதும் குன்றவாணர் வழக்கு.

வெறியாடும் முருகபூசை செய்வோன், சோற்றைப் படைத்துச் செம்மறிக் குட்டியறுத்துச், செந்நெற் பொரி சிதறி வணங்கிச் சிறுமியின் நெற்றியைத் தடவி விடுதலே வெறியாட்டெடுப்பதின் விபரமாகும். *

வருணன்

கடலோரங்களிலிருந்த பரதவர் வலைவளம் படவேண் டிப் பூரணைக்காலங்களில் மணலிடத்தே சுறக்கோடு நட்டு, வெண்டாளி மலரைச் சூடி ஆடி வருணனை வழிபடுவர்.

ஆரியருடைய சமயக் கொள்கைகள் ஆரம்பத்தில் நகர் களிலன்றிப் பிறவிடங்களிற் பரவியிருக்குமென்று கொள்ள இடமில்லை. ஆரியருடைய வருண வழிபாடும், தமிழருடைய வருண வழிபாடும் தம்முள் வேறுபாடுடையன. பூர்வ குடிகளாகிய தமிழர்களுடைய வருணன் என்னும் கடவுட் பெயரை ஆரியர் தம் கடவுளுக்கு இட்டு வழங்கினார்க ளென்பது மிகவும் பொருத்தமாகின்றது. §

---

* களநன் இழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிக்கண்ணிசூட்டித்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள் (அகம் 22)

§ "The Aryan God, Varuna was probably the God of the Dravidian tribes, being on the borders of the sea to whom the Aryan Rishis accorded a place in their patheon (Dravidian India P. 96.)

இந்திரன்

மருத நிலமக்கள் பயிர் வளம்படவேண்டி இந்திரனை வழிபட்டனர். இந்திரன், இரும்புத் தண்டைக் கையில் ஏந்திய கடவுள் என்று சொல்லப்படுவன்.

வச்சிரத்தண்டக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க" (புறம் 241).

இந்திரனுக்கு கொடியேற்றித் திருவிழாக்கள் நடைபெற்றன வென்று சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களால் அறிகின்றேம். உழவர் வயல்களில் பருப்போடு அரிசி இட்டுப் பொங்கிய சோற்றைப் படைத்து இந்திரனுக்கு வழிபாடு செய்தல் பெரும்பாலும் முற்கால மரபாயிருந்தது. இந்திரன் என்னும் சொல் இறைவன் என்பதன் உச்சரிப்பு வேறுபாடென்று பண்டிதர் சவரிராய பிள்ளை அவர்கள் கூறுவர். தொல்காப்பியத்தில் "வேந்தன்" என்னும் பெயரே காணப்படுகின்றது. பண்டைநாள் மக்கள், நீதிஅரசனின் ஆட்சியில் மழை பெய்கின்றதெனநம்பினர் கள். அரசனையே மக்கள் தெய்வமாகக் கொண்டு வழிபட்ட காலமுமுண்டு. இது பண்டை எகிப்தியர் வரலாற்றால் உணரலாம். ஆகவே இறைவன் வழிபாடே இந்திரன் வழிபாடாக மாறிற்று என்று கருத இடமுண்டு.

கொற்றவை

பாலை நிலமக்கள், கொற்றவைக்கு எருமை, ஆடு முதலிய விலங்குகளை வெட்டிப் பலியிட்டு வணங்கினர். தொல்காப்பியர், கொற்றவை, பாலை நிலத்துக்குத் தெய்வமெனக் கூறவில்லை. புராணிகர் கொற்றவையை உமாதேவியாரோடு ஒன்று படுத்திக் கூறினர். சிவசத்தி வணக்கம் உயர்ந்த

தத்துக் கொள்கையுடைய மக்களுக்கிடையிலேயே காணப் பட்டது. அவர்களுக்கு இவ்வகையான கோரவணக்க முரியதாக எவ்விடத்துஞ் சொல்லப்படவில்லை. சண்டையில் வெற்றியைக் கொடுப்பதெனக் கருதப்பட்ட சண்டைத் தெய்வம் காலகதியில் சிவபெருமானின் சத்தியாகிய உமை எனப் பிழையாகக் கொள்ளப்பட்டது. திருமுருகாற்றுப் படையில் முருகக் கடவுள் கொற்றவை சிறுவன் எனக் கூறப்படுகின்றனர். புராணமதம் சங்ககாலத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்குமுன்னரே பரவத் தொடங்கிவிட்டது.

நாற்பெருங் கடவுளர்

நகர்களில், சிவன், திருமால், பலதேவன் முருகன் முதலிய தெய்வங்களுக்கு ஆலயங்களிருந்தன. பிறதெய்வங்களுக்கும் ஆலயங்கள் இருந்தபோதும் இந்நாற் தெய்வங்களுமே பெருங் கடவுளாக வழிபடப்பட்டனர்.* இதனை,

"ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்
கடல்வளர் புரிவளை புரையுமேனி
யடல் வெந் நாஞ்சிற் பனைக்கொடியோனு
மண்ணுறு திருமணி புரையுமேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்
மணிமயி லுயரிய மாறாவென்றிப்
பிணிமுக வூர்தி யொண் செய்யோனுமென
ஞாலங்காக்குங் காலமுன்பிற்
றோலா நல்லிசை நால்வர் (புறம்-56)

என்னும் புறநானூற்றால் இனிது அறியலாகும்.

---

*பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
மறுமுகச் செவ்வே ளணி திகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலு
நீல மேனி நெடியோன் கோயிலும் (சிலப்)

சிவ வழிபாடே தமிழர்களின் ஆதி வழிபாடாயிருந்தது. ஆகவே தமிழ் மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டனர். ஏனைய கடவுளரையும் சிவனோடு ஒன்று படுத்தியோ, அல்லது சம்பந்தப்படுத்தியோ புராணங்கள் கூறுகின்றன.

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக."

என, மணிமேகலை என்னும் புத்த நூலிற் கூறப்படுதலால் சிவனை எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாக வைத்து வழிபடப்பட்டாரென்பது நன்கு விளங்கும்.

மொகஞ்சதரோவில் சிவ வழிபாடு இருந்ததென்று முன்னோரிடத்தில் விளக்கப்பட்டது. சிவ மதம் இந்திய நாடன்றி அமெரிக்கா கிரேக்கம் முதலிய நாடுகளிலும் பரவியிருந்தது. மோசஸ், கடவுளருளிய பத்துக் கட்டளைகளை * சிவன் மாதத்தின் ஆறும் நாள் வெளியிட்டார் என்று சொல்லப்படுகின்றது. மொசேயின் காலம் கி. மு. 1500. எகிப்தை அடுத்த நாடுகளில் சைவ சமயம் வழங்கிய தென்பதற்கு இது சிறந்த ஆதாரமாகும். மிகப் பழைய சிவாலயமொன்று சமீபத்தில் அமெரிக்காவில் கொலறடோ ஆற்றோரத்திலுள்ள பீடபூமியிற் கண்டு பிடிக்கப்பட்டது. அச்சம பூமி மற்றத் தரைப் பாகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு இலட்சக் கணக்கான ஆண்டுகளாயிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சிகாரர் அபிப்பிராயப்படுகின்றனர். சமபூமி மட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த கொலறடோ ஆறு

---

* These events occurred on the 6th day of the third month Sivan (Analysis of scripture History P. 77.) "Sivan (May) "Historian's History of the world vol. 1. P. 383.)

ஏழாயிரம் அடி ஆழத்துக்கு நிலத்தை அரித்துச் சென்றிருக்கிறது. இவ்வாறு செல்வதற்கு 10,0000 வருடங்கள் பிடித்திருக்க வேண்டுமென சில நூலார் கூறுகின்றனர். சிவன் ஆலயத்துக்குப் பக்கத்திலுள்ள இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சிவனாலயம் அரைச் சதுர மைலுள்ள சதுரமானதும் செங்குத்தானதுமான ஒரு மலையிலுள்ளது. இதனைக் கண்டு உலகம் பிரமித்தது. அங்கு தீத்தட்டிக் கற்களாற் செய்த அம்புத் தலைகள் காணப்பட்டன.*

உயிர்ப் பலி

பாலை நிலமக்கள் காளிக்கு எருமை முதலிய விலங்குகளைப் பலி கொடுத்து வழிபட்டார்களென அறிகின்றோம்.

---

*" In September, the world was thrilled by the story of the American scientists who scaled the 'lost world' of Shiva's temple in the Canyon of Arizona. Shiva's temple explorers found flint arrow head and white footed mice"

Cavalcade Dec. 18-1937—London.

In the wild mountainous State of Colorado, seventh largest in America scientist of the W. S. Museum of Natural History three months ago announced discovery of a ' Lost world.' The focal point was ' Shiva's Grand Temple a half square mile of solid rock plateau isolated from the mainland by 9000 ft. Canyons eroded by rivers some 200,000 years ago, (News Review—London Sept. 23-1937) " Shiva's Temple is one of the surface points which have been left high and dry by water on four sides. Conservative estimates put the date when animal life was cut off from the rest of the world as at least 100,000 years ago" Times of Ceylon Sunday illustrated June 17-1937.

முருக வழிபாட்டில் வெறியாட்டாளன் ஓர் ஆட்டுக்குட்டியை அறுப்பது வழக்கமாயிருந்தது. முருகன் உறைவதும் அரையிடத்தே மறிகட்டப்பட்டதுமாகிய கடம்பை அன்பர்கள் பல வகைப் பூசைத்திரவியங்களுடன் சென்று வழிபட்டார்களெனப் * பரிபாடலிற் கூறப்படுகின்றது. மறி அறுக்கும் வழக்கம், திருப்பரங்குன்றம்போன்ற ஆலயங்களில் மறியைக் கடப்பமரத்தின் அரையிற் கட்டும் வழக்கமாக மாறிற்று என்று கருத இட முண்டு. மறிகட்டப்படும் கடம்பே தமிழர் வேள்விகளின் யூபமாக மாறியிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. தென்னாட்டு அரசர் செய்து போந்த வேள்விகள் வட நாட்டாரின் யாகங்களோ எனச் சந்தேகிக்க இட முண்டு. தமிழரது வேள்விச்சாலைகளில் மான்துஞ்சும் என்று சொல்லப்படுகின்றது§. தமிழர் செய்து போந்த வேள்வி என்பது ஓமகுண்டத்தில் நெய் சொரிந்து பொரிதூவிச் செய்யப்படும் ஓமக்கிரியையாகும். ஓமகுண்டங்களில் வளர்க்கப்படும் மூவகை அங்கிகளும் சிவபெருமானின் மூன்று கண்களாகிய சூரியன், சந்திரன், அக்கினி என்னும் ஒளியுடைப் பொருள்களைக் குறிப்பனவாகும். சிவபெருமானுடைய மூன்று கண்களும் தனித்தனிவழிபடப்பட்டன என்று சிந்து நதிப்பள்ளத்தாக்கிற் காணப்பட்ட முத்திரைகளிற் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்று ஹெரஸ்பாதிரியார் கூறுகின்றார். பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிற் சொல்லப்படும் வேள்விகள் என்பன இவ்வகையினவே. ஆரியர் வருகைக்கு முற்பட்ட தமி

---

*பரி 17

§ சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும் (புறம் 2)

பூரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஆகமங்களில் இவ்வகையான வேள்விகளே சொல்லப்படுகின்றன. தமிழர் ஐம்பெரும் யாகங்களாகக் கொண்டவற்றுள், பிரமயாகம் வேத மோதுதலும், தேவயாகம் ஓமம் வளர்த்தலும், மானுட யாகம் விருந்தோம்பலும், பிதிர் யாகம் நீர்க்கடனாற்றலும், பூதயாகம் பலியீதலும் ஆகும்.

ஆகமங்களும் வேதங்களும் நேர் விரோதமான நூல்கள் என்பதைச் சரித்திராசிரியர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆகமங்களும் வேதங்களும் இணைக்கப்பட்ட புராணகாலத்துத் தமிழர், ஆரியர் தெய்வங்களாகிய இந்திரன், வருணன், அக்கினி முதலிய தெய்வங்களைத் திக்குப்பாலகராகக் கொண்டமை கவனிக்கத்தக்கது. யூபம், யாகம் முதலிய சொல்லொற்றுமைகளைக்கொண்டு தமிழர் செய்து போந்தன ஆரியரது யாகங்களையே யாமெனத் துணிதல் கூடாது. பசுவுக்கு வாயுறை கொடுத்தலைத் தமிழ் நாட்டவர் விசேட புண்ணியமாகக் கருதினர். இதனை,

"யாவர்க்கு மாமிறை வற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமா முண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரைதானே"

என ஆகமசாரமாகிய திருமந்திரத்துள் திருமூலர் கூறியிருக்கின்றார். தமிழர் தமது வேள்விகளில் யூபமாகிய தறியில் பசுவைக் கட்டிப் புல்லுக் கொடுத்தார்கள் எனக் கூறுதல் ஏற்புடைத்து. "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரியோம்பும் சிறப்பர்" எனச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் கூறிய தேவாரத்தில் 'பசுவேட்டு' என்பதற்கு

இதுவே பொருள். வேட்டல் என்பதற்கு ஓம்பல் என்பது பொருள். இன்றும் மணக்கிரியைகளின் முடிவில் மணப் பந்தருள் பசுவைக் கொணர்ந்து வாயுறை கொடுத்தலும், புதுமனைப் பிரவேசகாலத்துப் பசுவை அதனுட் கட்டி வாயுறை கொடுத்தலும் வழக்கமாயிருக்கின்றது.

இக்காலம் மகேசுரபூசை என்னும் பெயருடன் நடைபெறுவதே அக்காலத் தமிழர் வேள்வியாயிருத்தல்கூடும். மகேசுரபூசையின் சிறப்பைத் திருமந்திரம் சிறப்பாகக் கூறுகின்றது. வள்ளுவனாரும் விருந்தோம்பலைப் பாராட்டிக் கூறுகின்றனர். வேள்வி முடிவில் பலருக்கும் சோறளித்தல் வழக்காயிருந்தது.* தமிழ் அரசர் புரிந்த யாகங்களில் விலங்குகளை வதைத்தார்கள் என்று எங்குஞ் சொல்லப்படவில்லை; இராவணன் முதலிய தமிழ் வேந்தர் ஆரியரால் இயற்றப்படும் கொலை சம்பந்தப்பட்ட யாகங்களை அழித்தார்கள் என்றே சொல்லப்படுகின்றது. இராவணன், தாரகன் ஆதியோர் ஆகமங்களிற் கூறப்படுவது போலவே தீவளர்த்துக் கடவுளை வழிபட்டார்கள்.

"என்பே விறகாக இறைச்சி யறுத்திட்டுப்
பொன் போற்கனலிற் பொரிய வறுப்பினும்"

என்னும் திருமூலர் திருவாக்கும் ஈண்டு நினைவுகூரற்பாலது. தமிழரது வேள்வியும் ஆரியரது யாகமும் வேறு. தமிழரது வேள்வி என்பதற்கு விருந்தென்பது பொருள்.

"பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படாதார்"

என்னும் குறளால் இது நன்கு அறியப்படும்.

---

*"அருங்கடிப் பெருங்காலை—விருந்துற்ற நின்றிருந் தேந்து நிலை" —(புறம்—166).

வேதம்.

சிவன், முருகன், திருமால், பலதேவன் முதலிய தெய்வங்களுக்குத் துதி ஆரிய வேதங்களில் இல்லை. இருக்கு வேதத்திற் சொல்லப்படும் உருத்திரனும் சிவனும் ஒருவரல்லரென்றும், பிற்காலத்து இருவரும் ஒருவராகக் கருதப்பட்டனரென்றும், உருத்திர வழிபாட்டைக் கூறும் இருக்குவேதத்தின் பத்தாம் மண்டிலம் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டதென்றும் வேத ஆராய்ச்சிகாரர் கூறுகின்றனர்.

முருகன், சிவன், திருமால், பலதேவன் முதலிய தெய்வங்களைத் தமிழ் நூல்கள் வழுத்துமிடத்து "மறைகள் நின்னைத் துதிக்கும்" என்று கூறுகின்றன. இவர்களின் பெயர்களே காணப்படாத ஆரிய மறைகளையே தமிழ்ச் சான்றோர் குறிப்பிட்டிருக்கின்றனர் எனக் கூறுதல் எட்டுணையும் பொருந்தாது.

தொல்காப்பியத்தில் எழுத்துகளுக்கு மாத்திரை கூறுமிடத்து 'அந்தணர் மறைத்தே என்றும்' பிறிதோரிடத்து 'நரம்பின் மறைத்தே' என்றும் கூறப்படுதலின் பழைய அந்தணர் மறைகள் என்பன பண்ணோடு பல இயங்களை இயக்கிப்பாடும் இசைப்பாடல்களென நன்கு அறியலாம். பரிபாடலுக்குப் பண் கூறப்பட்டிருத்தலும், தொல்காப்பிய செய்யுளியலுரையில் உதாரணமாகக் காட்டப்பட்ட தேவ பாணிச் செய்யுட்கள் பண்ணோடு கடவுளை வழுத்தும் பாடல்களாகக் காணப்படுதலும், மறைகளெனக் கிளக்கப்பட்ட தமிழ்ப் பாடல்கள் தேவ பாணிச் செய்யுட்கள் போன்றன வாகலாம். சிவபெருமான், முருகக்கடவுள், திருமால், பலதேவன் முதலிய நாற்பெருந் தெய்வங்கள்

மேல் இப் பாடல்கள் பாடப்பட்டமையின் அவை நான் மறை எனப் பட்டிருத்தலுங்கூடும். ஆறங்கங்கள் எனப் படுவன அப் பாடங்களைத் தாளம் இராகங்களுக்கேற்பப் பாடும் முறையாயிருக்கலாம்.

ஆகமங்களில் திராவிட வேதம் பாடும்படி சொல்லப் படுகின்றது. ஆகமங்களில் இராகங்களைக் குறிக்க வழங் கிய பெயர்கள் தமிழில்தான் இருக்கின்றன.* தேவாரதிரு வாசகங்களே திராவிட வேதங்களென வழங்கினும், அவைக்குமுன்னும் திராவிட வேதங்களுண்டென்பதற்குப் பண்களே சான்று.

தமிழ் மதம்.

ஆரியரின் வருகைக்கு முன் தொடக்கம் தமிழர், சிவ மதமும், சைவசித்தாந்தக் கொள்கையு முடையவர்களா யிருந்தனர். "இந்தியாவில் உள்ள மதங்கள் எல்லாவற் றுள்ளும் சைவ சித்தாந்த ஞானமே மிகமேலானது. இது சிறப்பாகத் தென்னிந்தியாவுக்கு அல்லது தமிழருக்குச் சொந்தமானது. தென்னிந்திய மக்களின் பெருமையை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் அவர் ஞானத்தைப் பயில வேண்டும். சைவசமயம், ஆரியருக்கு முற்பட்ட தமிழர் களது சமயம். இது ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் பதிந்திருக்கிறது. கடவுள், உலகம், உயிர், வினை முதலிய வற்றின் தத்துவத்தை விளக்கும் நூல்கள் இதுவரையும் ஆங்கில மொழியில் வெளிவரவில்லை. அந்நூல்கள் தமிழ்

* Several words of them employed in them in describing the Ragas used in singing of the Dravida Vedas belong to the Tamil language Elements of Hindu Icnography P. 56—T. A. Gopinatha Rao.

மொழியில் மாத்திரம் இருக்கின்றன§" என்று டாக்டர் போப்பையர் கூறியிருக்கின்றார்.

நடராச வடிவமாகக் கடவுளை வழிபடும் முறை தென்னிந்தியாவிற்கே உரியது. § ஐந்து தொழில்களையும் ஒரு கடவுளே செய்கின்றார் என்னும் கொள்கையை இவ் வடிவம் உணர்த்துகின்றது.

"தோற்றந் துடியதனிற் றோயுந்திதியமைப்பிற்
சாற்றிடுமங்கியிலே சங்காரம்— ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத் தே நாடு"

---

§ The Saiva Siddhanta system is the most elaborate, influential and most intrinsically valuable and undoubtedly valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil religion; and must be studied by every one who hopes to understand the influence of the great south—Indian pepole...Saivaism is the old prehistorical religion of South India, essentially existing from Pre-aryan times, and holds sway over the hearts of Tamil People. But this great attempt to solve the problems of God, and soul, humanity nature, evil suffering, and the unseen world, has never been expounded in English. Its text books exist in Tamil only. Thiruvasagam Dr. Pope.

§" The worship of Siva as Nataraja for example, is a special cult peculiar to South India. The innumerable shrines and images connected with its worship which as still existing there prove the pre-eminence and popularity of this form of Siva in the south." South Indian Bronzes P. 47-6. G. O. Gangoly.

IV. மொழி

மனிதன் ஆதியில் சைகைகளினால் தனது எண்ணங்களைப் பிறர்க்கு உணர்த்தினான்; அடுத்தபடியில் சைகைகளோடு சில ஒலிக்குறிகளையுங் கலந்து பேசலானான். இது ஊமரும் செவிடரும் வழங்கும் மொழிபோன்றது. ஒருவன் வீரம், கோபம் சோகம் களிப்பு ஆதியவும் பிறவுமாகிய உணர்ச்சிகளை எய்தும்போது அவற்றுக்கேற்ற அவிநயங்களோடு ஒலிக்குறிகள் சிலவற்றை எழுப்புதலையும் காண்கின்றோம். ஆதியில் மனிதன் பேசிய அவிநய மொழியிலிருந்தே கூத்து அல்லது நாடகம் தோன்றிற்று. உணர்ச்சிகளுக்கேற்பப் பிறக்கும் ஓசைகளை விருத்தி செய்தலினாலே பாட்டும் இசையுந் தோன்றின. பின் ஓர் பாட்டைப் பாடி அதற்கேற்ப நடித்துக் காட்டலாகிய கூத்து தோன்றுவதாயிற்று. மனிதன் முற்பருவத்து வழங்கிய மொழியே ஆடலும் பாடலுமாகும். இவை முறையே நாடகத் தமிழ் இசைத் தமிழ் என்னும் பெயர்களைப் பெற்றன. இன்றும் ஆலயங்களில நிகழும் கிரியைகள் பல நாடகத் தமிழைப் பின்பற்றின.

மனிதன் பிறந்தது முதல் வளர வளர எவ்வாறு மொழியைப் பேசக் கற்றுக் கொள்ளுகிறானோ அம்முறையினையே பாஷையின் வளர்ச்சிக்கும் ஒப்பிடலாம். முற்கால மனிதன் ஆதியில் வழங்கிய சொற்கள் ஓரசையின. பழந் தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் இவ்வகையினவே. மனிதன் வழங்கிய ஆதிச் சொற்களைக் கொண்டு அக்கால நாகரீகத்தை அறிந்துகொள்ளலாம். மனிதன் பேசுவதில் முதிர்ச்சி அடைந்த பின்னரே எழுத்தெழுதப் பயின்றான்.

எழுத்து

முற்கால மனிதன் தனது எண்ணங்களைச் சித்திரவாயிலாக விளங்கினன். மனிதனைக் குறிக்க மனிதனையும், காலைக் குறிக்கக் காலையும் கையைக் குறிக்க கையையும் பிறபொருள்களைக் குறிக்க அவ்வப் பொருள்களையும் எழுதிக் காட்டுவதே சித்திர எழுத்துக்களை வரையும் முறையாயிருந்தது. இவ்வெழுத்துக்கள் எண்ணங்களை உணர்த்தப் பயன்பட்டனவேயன்றி, ஒலிமுறையாகப்பேசும் மொழிக்கு நேர் வரிவடிவான எழுத்துக்களாகப்பயன்படவில்லை. ஆகவே அவன் பேச்சில் வழங்கும் சொற்களின் உச்சரிப்புத் தோன்றும் முறையில் எழுத்துக்களை ஆக்கலாயினன். பல சித்திரங்களை வரைந்து அச்சித்திரங்கள் உணர்த்தும் பொருட்பெயர்களின் முதல் ஒலிகளைச் சேர்த்து உச்சரிக்கப் பேச்சுவழக்கிலுள்ள சொற்கள் பிறப்பதே அம்முறையாகும். அடுத்த படியில் ஒவ்வொரு சொல்லைக்குறிக்கவும் ஒவ்வோர் குறியீடு அமைக்கப்பட்டது. இம்முறையைத் தழுவியது சீனர்களுடைய மொழி. ஹரப்பா மொகஞ்சதரோ முதலிய விடங்களில் வழங்கிய எழுத்துகளும் இவ்வகையினவே. இது எழுத்து மூன்ருவதாக அடைந்த நிலைமையாகும். மொழியிடத்து வழங்கும் எல்லாச் சொற்களையும் உச்சரித்துப் பார்த்து அவையிடத்துக் காணப்படும் ஒலிகள் எல்லாவற்றையும் தொகுத்து இத்தனை என்று கணக்குச்செய்து, ஒவ்வொரு தனி ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தாகிய குறியீடு அமைத்து, எழுத்துக்கூட்டிச் சொற்களை உச்சரிக்கும் முறையே நாலாவது எழுத்து அடைந்த திருத்தமாகும். அவ்வாறு அமைக்கப்பட்ட எழுத்துகள் இருபத்தொன்பது.

அவற்றுள் உயிர்பத்து* மெய் பதினெட்டு ஆய்தம் ஒன்று. ஐயும் ஔவும் கூட்டெழுத்துகள்.

"பெயரெழுத்து முடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயரியம்பினரே"

என்பது திவாகரச் சூத்திரம். திவாகரம் நால்வகை எழுத்துக்களைப் பற்றிக் கூறுகின்றதாயினும் அவற்றின் தன்மைகளைப்பற்றி விளக்க வில்லை. அவ்வெழுத்துக்களைப் பற்றிய விபரம் அக்காலத்தில் மறக்கப் பட்டது போலும்.

வடிவு பெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே"
" உருவே யுணர்வே யொலியே தன்மை
என வீரெழுத்து மீரிருபகுதிய."

என யாப்பருங்கலவிருத்தி யுடையார் இவ்விரண்டு சூத்திரங்களை உதாரணங்களாகக் காட்டியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு குறியாக எழுதும் எழுத்து முறை ஏற்பட்டுப் பல இலக்கியங்களும் இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் எழுத்துக்கள் வட்ட வடிவாய் எழுதப்பட்டமையின் 'வட்டெழுத்து' என்னும் பெயரைப்பெற்றன. தொல்காப்பியம் வட்டெழுத்தில் எழுதப்பட்ட நூலே.

ஆரியர் இந்தியாவை அடைந்தபோது எழுத்தெழுதும் முறையை அறியாதிருந்தார்கள் என்பது சரித்திராசிரியர்கள் எல்லாராலும் ஒரு தலையாக ஒப்புக் கொள்ளப் படுகின்றது. எழுத்தெழுதும் முறையை அறியாமையினால் ஆரியர் தம் முன்னோர் செய்த பாடல்களாகிய வேதங்களை நெட்டுருச்

"* குன்றுக்குறிலைந்துந் தொடர் நெடிலைந்தும்" (சிலப்பதிகார உரை மேற் கோள்.)

செய்து பாதுகாத்து வந்தனர். தமிழருக்கும் ஆரியருக்கும் உறவு ஏற்பட்ட காலத்து ஆரிய மக்கள் தமிழரின் உதவியைப் பெற்று வட மொழிக்குரிய ஒலிகளுக்குத் தமிழ் நெடுங் கணக்குப் போல வரி வடிவாகிய எழுத்துக்களை ஆக்கிக் கொண்டார்கள். இதில் எட்டுணை சந்தேகமும் ஏற்பட இடமில்லை. இதற்கு மாறாக, ஆரியரைப் பின்பற்றியே தமிழர் தமிழ் நெடுங் கணக்கை ஆக்கிக் கொண்டார்கள் என ஒரு சிலர் கூறுவது முற்றும் சரித்திரத்துக்கு முரணானது.

தமிழ் மக்கள் ஆரிய மொழியின் பொருட்டுப் பெரிதும் உழைத்திருக்கின்றார்களென்பதற்கு, சாயணர், காத்தியாயனர், சங்கரர், மத்வர், ராமானுசர் முதலிய தென்னாட்டாரே திருட்டாந்தம். ஆரியர் நூல்கள் எதுவும் தென்னாட்டாரின் உதவியின்றி முற்றுப் பெறவில்லை என்றே கூறலாம். சமக்கிருதம் என்பதற்கு நன்றாகச் செய்யப்பட்டதென்பது பொருள். அதற்கு ஆசிரியர் சிவனாகிய தமிழர் கடவுள் என்பது புராணிகர் மதம்.

ஆரிய இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் காணப்படுகின்றனர். சின்ன ஆசியாவிலுள்ள மிந்தனி என்னுமிடத்தில் ஆரியருடைய தெய்வங்களாகிய மித்திரன், வருணன், இந்திரன், அசுவினிகள் முதலிய தெய்வ வழிபாடிருந்ததென்பது கல் வெட்டுகளால் அறியவருகின்றது.* பல கூட்டங்களாகப் பிரிந்து வெவ்வேறு நாடுகளிற் றங்கிய ஆரிய சாதியாரிடையே காணப்படாதது இந்திய ஆரியரிடையே மட்டும்

---

* மிந்னி நாட்டில் மித்திர வருண வணக்கம் காணப்படுவதற்குக் காரணம் ஒரு காலத்து இந்திய ஆரியப்போர் வீரர் அங்கு சென்றிருந்தார்கள் எனக் கூறுவர் விண்ட நிட்ஸ் என்னும் ஆசிரியர்.

காணப்படும் புதிய முறைகள், அவர்கள் பழக நேர்ந்த பூர்வ குடிகளால் ஏற்பட்டன என்று கூறுவதில் யாதும் புதுமை இல்லை. இதனைக் கொண்டு தமிழர் ஆரியருக்கு மொழி சம்பந்தமாகக் கடமைப் படவில்லை எனத் துணியலாம்.

தமிழ் நூல்கள்

இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் எழுத்தெழுதும் முறையை அறிந்திருந்தமையின் தமிழில் பல நூல்கள் இருந்தன என்று அனுமானிக்க இடமுண்டு. மொகஞ்சதரோவிற் காணப்பட்ட முத்திரைகளிற் பொறித்துள்ள குறள் வெண்பாக்கள், அரசரிடையே நிகழ்ந்த போர்களையும், கடவுள் வழிபாட்டையும், பிறவற்றையும் கூறுகின்றன. அம்முத்திரைகள் காணப்பட்ட இடம் அக்காலத்திய புத்தகசாலை ஒன்றாய் இருத்தல் கூடும்.

சில காலத்தில் ஒடிந்து போகக்கூடிய பனை ஓலையில் எழுதப்பட்டனவும், ஒன்றோ சிலவோ பிரதிகளை உடையனவுமாகிய பழைய தமிழ் நூல்கள் திரும்பப் பிரதிசெய்து போற்றுவார் இலராயின் மடிந்து போதல் இயல்பே.

சங்கநூல்களென இப்போ அச்சிடப்பெற்றவற்றுள் ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்ட புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இறையனார் களவியலுரையின்படி தமிழ்ச் சங்கம் நடைபெற்ற காலத்துப் பாடிய புலவர்கள் 8598 பேர். இப்போது நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் தொல்காப்பியம் மிகப் பழைமையுடையதெனக் கருதப்படுகின்றது. இது கி. மு. 350 க்குப் பிற்பட்டதல்ல என்று சரித்திரக்காரர் கூறுகின்றனர். அதற்கு அவர்கள் கொள்ளும் நியாயம் வருமாறு.—

தொல்காப்பியம் எழுத்து 24, 27, 28,-ஆம்சூத்திரங்களால் நடுவே ல்ய, ள்ய, ஞ்ய, ங்ய, ம்ய, வ்ய, ம்வ, எனவ

ருஞ் சொற்கள் வழங்கின வென்று அறியலாம். திருக்குறள் கி. மு. முதல் நூற்றாண்டு வரையிற் செய்யப்பட்டது. திருக் குறளிலாவது சங்கச் செய்யுட்களிலாவது இவ் வகையான சொல் ஒன்றேனும் காணப்பட வில்லை. ஆகவே தொல்காப்பியம் கி. மு. மூன்றாம் அல்லது நாலாம் நூற் றாண்டிற் செய்யப்பட்ட தென்பது பிழையாகாது.

பாணினிக்குப் பின் அவர் நூலே சிறந்த இலக்கணமா கக் கொள்ளப்பட்டது. பாணினி, தனக்குமுன் விளங்கிய ஆசிரியர்களாகக் கூறும் அறுபத்து நால்வருள் இந்திரன் ஒருவனாகக் காணப் படுகின்றான். இவனாற் செய்யப்பட்ட நூல் ஐந்திரம். தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் ஐந் திரம் நிறைந்த தொல்காப்பியன் எனச்சொல்லப்படுகின்றது. தொல்காப்பியர் பாணினிக்குப் பின்னிருந்தவராயின் பாணி னீயத்தையே பயின்றிருப்பார். அவ்வாறில் லாமையின் தொல்காப்பியர் பாணினிக்கு முந்தியவராவர். பாணினி யின் காலம் கி. மு. நாலாம் நூற்றாண்டு.

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே
"ஆவோடல்லது யகர முதலாகாது"

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு மாறாகச், சமம் சதுக்கம், சந்தி, சலம், சங்கு, சந்தம், சகடம், யூபம் என் னுஞ் சொற்கள் சங்கநூல்களில் அடிக்கடி காணப்படுகின் றன. ஆகவே தொல்காப்பியம் கடைச் சங்கம் ஒடுங்குவதற் குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட நூலெனக் கூறலாம்.

பண்டைக்காலப் புலவர்கள் நூல்களைச் செய்யுள் நடை யில் இயற்றினர். அவர்கள் வழங்கிய செய்யுட்கள் வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால் வகையின. "பா என்பது சேட்புலத்திலிருந்த காலத்தும்

ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்த்துதற் கேதுவாகிப் பரந்து பட்டுச் சொல்வதோர் ஓசை*''

ஒருவற்கொருவன் இயல்புவகையான் ஒரு பொருண்மையைக் கட்டுரைக்குங்கால் எழும் செப்பலோசையை யுடையது வெண்பா. ஒருவன் கேட்க அதற்குத் தாங் கருதியவாறெல்லாம் வரையாது சொல்வதாக அகவிக் கூறும் ஓசை ஆசிரியத் துக்குரியது. கலிப்பா துள்ளலோசை பெற்று வரும். துள்ளலாவது ஒரு நடையின்றி இடை யிடையுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற் போலக் கொள்க. கலிப்பா என்பதில் பரிபாடல் தேவபாணி முதலிய செய்யுட்கள் அடங்கும். இவை பண்ணோடு பாடப் படும் இசைப் பாடல்கள். தேவபாணி கடவுளையே துதி யாகக் கொண்டு பாடும் பாட்டு. மறைகள் என்பன தேவ பாணிப் பாடல்களாலாக்கப்பட்டன வாகலாம். வஞ்சிப்பா தூங்கிய ஓசை யுடையது. ஓசை பற்றியே பாடல்கள் வெவ்வேறு வகை ஆயின என்பது இதனால் விளங்குகின் றது. ஓசை சத்துவத்துக் கேற்பத் தோன்றும் என முன் னேரிடத்தில் விளக்கப்பட்டது.

பாடல்களின் ஆரம்பம்

குறிஞ்சி நிலத்தே மகளிரும் மைந்தரும் தனியிடத்தில் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காதலித்து மறைவில் மணந்துகொண்டனர். பழந்தமிழ்ப் புலவோர் இக்கள வொழுக்கத்தினைப் பொருளாகக் கொண்டு பாடினர். பாடு மிடத்து மலை நாட்டவர் நடை உடை பாவனைகளையும் பிற வற்றையும் எடுத்துக் கூறினர். முல்லை நிலத்தலைவன் பிரிந்து திரும்பி வருந்துணையும் தலைவி ஆற்றியிருப்பதைப்

* பேராசிரியர்உரை

பொருளாகக்கொண்டு முல்லை நிலமக்களின் பழக்க வழக்கங்கள் கருப்பொருள்களையும், பிரிந்த தலைவன் திரும்பி வரும் போது வழியிடத்துக் காணும் காட்சிகளையும் அவர்கள் பாடினர். தலைவன் தலைவியை மணந்து கிழத்தியோடு இல்லில் உறையுமிடத்து, அவன் பரத்தை வயிற் பிரிதலும், அது காரணமாகத் தலைவி பிணங்கியிருத்தலும், பின் அவ்வூடல் தணிந்து இருவரும் இன்புற்றிருத்தலுமாகிய ஊடலை உரிப் பொருளாகக் கொண்டு மருத நிலத்தின் இயற்கை வளங்களையும் மக்கள் வாழ்க்கை முறையையும் புலவர்கள் பாடினர். தலைவியோடு இல்லறம் நடத்தும் தலைவன், தூது, பகை, பொருள் தொகுத்தல், என்னும் ஏதும் ஒரு காரணம் பற்றிப் பிரிந்து பாலை நிலத்துக் கூடாகச் செல்வதாகிய பிரிவை உரிப்பொருளாகக் கொண்டு பாலை நிலத்தின் தன்மையையும், கடற்கரை நிலத்துக் களவொழுக்கத்தின் பாற்பட்ட தலைவி தலைவனை நினைந்து கடலையும் கடற்கரையையும் நோக்கி இரங்கிக் கூறுவதாகிய இரங்குதல் என்னும் உரிப்பொருளைப் பொருளாகக் கொண்டு நெய்தல் நிலத்து இயற்கையையும் அவர்கள் பாடலாயினர்.

குறிஞ்சி நில ஒதுக்குகளிலிருந்த எயினர் முல்லை நிலத்தே சென்று ஆயருடைய மந்தைகளை அடித்துச் சென்றனர். நிரைகவரச் செல்வோர் கொண்டையில் வெட்சிப் பூச்சூடினர். ஆகவே நிரை கவர்தலாகிய போரை வெட்சி என்னும் திணையாகக் கொண்டு புலவர்கள் பாடல்கள் புனைந்தனர். காவற்காடு சூழ்ந்த பகை அரசன் கோட்டையைப் பிடிக்கப் படை எடுத்துச் செல்வது வஞ்சி எனப்பட்டது. வேந்தனது கோட்டையை முற்றுகை இடுதல் உழிஞை எனப்பட்டது. இரு படைகளும் வெளிகளிற் கைகலந்து போர் செய்வது தும்பை எனப்பட்டது. போர் வென்று

பகைவனுடைய நாட்டைப் பாழாக்கி வாகைப் பூச்சூடுதல் வாகை எனப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு ஒழுக்கமும் வீரர் அணிந்து கொள்ளும் பூ விசேடங்களால் அவ்வப் பெயர்களைப் பெற்றன.

இப் பேரொழுக்கங்களைப் பொருளாகக் கொண்டு புலவர்கள், அரசர்களின் புகழை விரித்துப் பல பாடல்களைப் புனைந்தனர்.

இவ்வாறு தோன்றிய அகத்திணை புறத்திணைப் பாடல்களே ஆதியிற்றோன்றிய தமிழ்ப் பாடல்களாகும். தொல்காப்பியப் பொருள் அதிகாரம் அகத்திணை புறத்திணைப் பாடல்களைப் பாடுதற்கு இலக்கணமாக அமைந்துள்ளது. தொல்காப்பியத்தில் அகத்திணை புறத்திணைக் குரிய துறைகள் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. அவற்றை எல்லாம் தொகுத்து முறைப்படுத்தப்பட்டனவே அகப்பொருட் கோவையும் புறப் பொருள் வெண்பா மாலையுமாகும். வெண்பாமாலையில் தொல்காப்பியத்திற் சொல்லப்படாத சில வேறுபாடுகளுண்டு.

இவ்வகப்பொருட் பாடல்களை அன்றி, நூல், உரை பாட்டு, பிசி, அங்கதம், முது மொழி, மறை என்னும் ஏழு வகையான நூல்களும் இருந்தனவென்று தொல்காப்பியத்தால் அறிகின்றோம். அகப்பொருள் புறப்பொருள்களையன்றிப் பல வேறு பொருள்களைப்பற்றிக் கூறும் நூல்களை அவை ஆகலாம்.

தமிழ்ச்சங்கம்

தமிழ் நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆட்சி புரிந்தனர். அவருட் பாண்டியர் தமது தலைநகராகிய மதுரையில் ஓர் தமிழ்க்கழகத்தை நிறுவி

னர். தமிழ் நாட்டின் பல பாகங்களில் வாழ்ந்த புலவர்கள் அதன் உறுப்பினர்களாக விளங்கினர். சங்கப் புலவர்களுக்குக் கன்மாப் பலகையாற் செய்த ஆசனங்கள் அரசனால் அளிக்கப்பட்டன. சங்கப் புலவர்கள் சங்க மண்டபத்தே கன்மாப் பலகையில் இருந்து நூல் ஆராய்தல் மரபு. இவ் வரலாறே பிற்காலத்தில் “சங்கப் பலகைக்” கதையாக மாறியது.

சங்கத்தை ஆரம்பித்த காலத்துப் பாண்டிய அரசன் புலவருடையவும் தனதும் வழிபடு கடவுள்களாகிய முருகக்கடவுள், சிவபெருமான் ஆகியோரின் சிலைகளைச் சங்க மண்டபத்தில் நிறுவி அக்கடவுளரே கழகத்துக்குத் தலைவரெனக் கூறினன். இன்றும் பிள்ளையார் பிடித்து வைத்து ஒவ்வொரு நற்கருமங்களையும் தொடங்குவது தமிழர்களின் வழக்காயிருக்கின்றது. இவ்வுபசார வழக்கே திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் குன்ற மெறிந்த குமரவேள் முதலிய தெய்வங்கள் தலைச் சங்கமிருந்து நூலாராய்ந்தனர் என்று பிற் காலத்தாரால் கூறப்படலாயிற்று.

உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—வுலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவ
னுன் மாடக் கூடன்”

என்னும் பரிபாடல் மதுரையில் தமிழ்க் கழகம் இருந்ததென்பதை வலியுறுத்தும். “தமிழ் வையை” “தமிழ் மதுரை” “தமிழ்க் கூடல்” எனப் பண்டை நூல்களிற் கிளக்கப் படுதலே மதுரையிற்றமிழ் வளர்க்கப்பட்ட தென்பதற்குப் போதிய சான்றாகும். கி. பி. நாலாம் நூற்றாண்டு வரையில் விளங்கிய மாணிக்கவாசக சுவாமிகள்

> "வானுயர் மதிற் கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழின்
> றுறைவாய்ப்புக் கனையோ."

எனக் கூறி யிருத்தல் கவனிக்கத்தக்கது.

இச்சங்க வரலாற்றினை ஒருவாறு திரட்டி இறையனார் அகப்பொருள் உரைகாரர் கூறியிருக்கின்றனர். இறையனாரகப் பொருள் உரை கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இவ்வுரையிற் காணப்படும் சில விபரங்கள் சந்தேகத்துக்கு இடமாயிருப்பினும் சங்க வரலாறு பொய்யாகாது. பழைய காலத்தவர்கள் காலக்கணக்குகளைக் கவனியாது சரித்திரங்களை எழுதியிருத்தல் உலக சரித்திரத்தைக் கற்றோர்க்கு நன்கு விளங்கும். அக்காலத்து நூல்களையும் பிற ஆதாரங்களையும் ஆராய்ந்து விவிலிய வேதத்தின் பழையஏற்பாட்டை வரைந்த மோசே என்பார், சிலர் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு உயிர் வாழ்ந்தனர் என எழுதியிருத்தல் கவனிக்கத்தக்கது. எகிப்திய சரித்திரத்தில் ஓர்அரசன் 30,000 ஆண்டு உயிர் வாழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது. தசரதன், இராவணன், சூரன் ஆதியோர் வரலாறுகளாலும் பண்டை ஆசிரியர்களின் மனப்பான்மை விளங்கும். சங்கம் என்பது கற்பனைக் கதை எனக் கூறுவாரும் ஒரு சிலர் உளர். இங்ஙனம் கூறுவோர் வடமொழிப் பற்றுடைய ஒரு சிலராவர். அவர்கள் தமிழுக்குரிய சிறப்பெல்லாம் வடமொழியால் ஏற்பட்டதெனக் கருதுவோராவர். அவ்வகையான ஆசிரியர் வடமொழிக்குரிய சிறப்பைச் சரித்திரத்துக்கு மாறுபட எவ்வாறு கூறினும் ஆட்சேபமின்றி ஏற்றுக்கொள்வர். தமிழுக்குரிய பழமையைத் தக்க நியாயங்களோடு காட்டினும் ஆட்சேபிப்பர். இவ்வகைப்பண்புகளைப் பி. தி. ஸ்ரீனிவாச ஐயங்காரின் தமிழர் வரலாறு என்னும் நூலில் நிரம்பக் காணலாம். இவரது பிழையான கொள்கைகள் சிலவற்றைத் தழுவி எழுதிப்

பிறைப்பட்ட நூலாசிரியர்களு முண்டு. சின்னமண்ணூர்ச் சாசனத்தில் தமிழ்ச் சங்கம் இருந்ததற்குப் போதிய ஆதாரங்காணப் படுகின்றதெனத் தமிழ் ஆராய்ச்சி என்னும் நூலாசிரியர் கூறுவர்§

சங்க நூல்கள்

சங்க காலத்துத் தமிழ் நாட்டின் பல பாகங்களில் விளங்கிய புலவர்கள் புறப்பொருள் அகப்பொருட் பாடல்கள் பலவற்றை இயற்றினர்.* இப்பாடல்களெல்லாம் மதுரையில் பாதுகாத்து வைக்கப்பட்டன. சங்கத்தின் இறுதிக்காலத்தில் இவை, பொருள், அளவு முதலிய தன்மைகளை நோக்கிப் பல திரட்டுகளாகத் திரட்டப்பட்டன. அங்ஙனம் திரட்டப்பட்ட நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் பெயர்களால் வழங்கும்.

பத்துப் பாட்டு

	பாட்டு	பாடினோர்.	பாடப்பட்டோர்
1.	திருமுருகாற்றுப் படை,	நக்கீரர்	முருகன்.
2:	பொருநராற்றுப் படை.	முடத்தாமக்கண்ணியார்	சோழன் கரிகாலன்.

§ One of the most trustworthy references of the founding of a Tamil academy prior to the eighth century will be found in the copper plates discovered at Chinnamannur in the Madura District (Tamil studies —P. 232).

* தொகைநூல்களிற் காணப்படும் பாடல்கள், தமிழ் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்கள் பலரால் பாடப்பட்டவை-இவை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படி எடுத்து வைக்கப்பட்டிலவாயின் நூல்களாகத் தொகுப்பதற்குக் கிடைத்திருககமாட்டா. தொகைநூல்களே சங்க மிருந்தமைக்குப் போதிய சான்றுகளாகும்.

	பாட்டு	பாடினோர்	பாடப்பட்டோர்
3.	சிறுபாணாற்றுப்படை.	நத்தத்தனார்.	எறுமானாட்டு நல்லியக்கோடன்.
4.	பெரும்பாணாற்றுப்படை.	உருத்திரங்கண்ணனார்.	தொண்டைமானிளந்திரையன்.
5.	முல்லைப்பாட்டு.	நப்பூதனார்.	நெடுஞ்செழியன்.
6.	மதுரைக்காஞ்சி.	மாங்குடி மருதன்.	,,
7.	நெடுநல்வாடை.	நக்கீரர்.	,,
8.	குறிஞ்சிப்பாட்டு.	கபிலர்.	ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிக்க.
9.	பட்டினப்பாலை.	உருத்திரங்கண்ணனார்.	சோழன் கரிகாலன்.
10.	மலைபடுகடாம்.	பெருங்கௌசிகனார்.	நன்னன் சேய் நன்னன்.

எட்டுத்தொகை.

	தொகை.	புலவர்கள்.	தொகுத்தார்.	தொகுப்பித்தார்.
1.	நற்றிணை.	175	தெரியாது.	பன்னாடுதந்த பாண்டியன் மாறன்வழுதி.
2.	குறுந்தொகை.	205	,,	பூரிக்கோ.
3.	ஐங்குறுநூறு.	5	கூடலூர் கிழார்.	யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
4.	பதிற்றுப்பத்து.	10	தெரியாது.	தெரியாது.
5.	பரிபாடல்.	13	,,	,,
6.	கலித்தொகை.	5	நல்லந்துவனார்.	தெரியாது.
7.	அகநானூறு.	145	உருத்திரசன்மனார்.	உக்கிரப்பெருவழுதி.
8.	புறநானூறு.	160	தெரியாது.	தெரியாது.

பதினெண் கீழ்க்கணக்கு என வழங்கும் நூல்களும் சங்க நூல்கள் எனப்படினும் அவற்றுட் பெரும்பாலன பிற் காலத்தில் எழுதப்பட்டன. பதினெண் கீழ்க்கணக்கு நூலாவன.

1. நாலடியார்—சைன முனிவர்.
2. நான்மணிக்கடிகை—விளம்பி நாகனார்.
3. இனியவை நாற்பது—பூதஞ் சேந்தனார்.
4. இன்னா நாற்பது—கபிலர்.
5. கார்நாற்பது—மதுரைக்கண்ணங்கூத்தனார்.
6. களவழி நாற்பது—பொய்கையார்.
7. ஐந்திணை ஐம்பது—மாறன் பொறையனார்.
8. ஐந்திணை எழுபது—மூவாதியார்.
9. திணைமொழி ஐம்பது—கண்ணஞ் சேந்தனார்
10. திணைமாலை நூற்றைம்பது—கணி மேதையார்,
11. முப்பால் (திருக்குறள்)—திருவள்ளுவர்.
12. திரிகடுகம்—நல்லாதனார்.
13. ஆசாரக்கோவை—பெருவாயின் முள்ளியார்
14. பழமொழி—பாண்டிய நாட்டைச் சேர்ந்த முன்றுறை என்னும் பதியின் அரசர்.
15. சிறு பஞ்ச மூலம்—காரியாசான்.
16. இன்னிலை—பொய்கையார்.
17. முதுமொழிக்காஞ்சி—மதுரைக் கூடலூர் கிழார்.
18. ஏலாதி—கணிமேதாவியார்.

அகத்தியர்

அகத்தியர் தமிழ் மொழியோடு மிகச் சம்பந்தப் பட்டவராகச் சொல்லப்படுகின்றனர். இவரைப் பற்றிய வரலாறுகள் புராணங்களில் ஆங்காங்கு இயற்கைக்கு மாறாகக் கூறப்படுகின்றன. ஆகவே அக்கதைகளைக் கொண்டு அகத்தியரின் வரலாற்றை வரையறுத்துக் கூறுதல் இயலாதாகின்றது. மனுவினுடைய பேழை பொதிய மலையின் ஓரிடத்திற் றங்கிற்றென்று கருதப் படுகின்றது. மனு கிருதமாலை என்னும் வையைக் கரையிற் றவஞ் செய்து கொண்டிருந்தார் எனச் சொல்லப்படுதலின் அது பொருத்தமாகத் தோன்றுகின்றது. இவ்வரலாற்றினை வடமொழியிற் புராண மெழுதியவர்கள் வடநாட்டில் நிகழ்ந்ததாகக் கொண்டு மனுவின் பேழை§ மேருவின் சிகரமொன்றாகிய இளாவிருதத்திற் றங்கியதெனக் கூறினர். புராணங்களில் உண்மை வரலாறுகளோடு பொய்க் கதைகளும் கலந்துள்ளன. மேற்கூறியவாறு தென்னாட்டு வரலாறுகள் பல வடநாட்டில் நிகழ்ந்தனவாகப் புராணங்களில் எழுதப்பட்டுள்ளனவென்று ஆராய்ச்சி வல்லுநராகிய பண்டிதர் சவரிராய பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். பொதியிலைத் தேவர்க்கிருப்பிட மெனத் தென்னாட்டார் நம்பினர். ஆகவே அண்டரும் முனிவரும் ஈண்டிய மலை என்பது பொதியில் ஆதல் தேற்றம். வடக்கே இந்திரன் வருணன் முதலிய தெய்வங்களின் வழிபாடும், தெற்கே சிவவழிபாடும் இருந்தனவென்பதைச் சரித்திரகாரர் ஒத்துக் கொள்கின்றனர். சிவமத மென்பது தமிழர்களுக்கே உரிய பழைய

---

§ இலங்கை மேருவின் சிகரம் எனப் படுகின்றது. மேரு உலகுக்கு நடுவில உள்ளதெனப் படுதலால் அது இமயமலை இருக்கும் இடத்தில் இருந்திருக்க முடியாது. சைன புத்த நூல்கள் மேருவை மந்தரம் எனக் கூறுகின்றன.

மதம். ஆகவே சிவன் சம்பந்தமாக உள்ள புராண வரலாறுகள் தென்னாட்டுக் கதைகளே என்பதில் எட்டுணை ஐயப்பாடும் இல்லை.

அகத்தியர் வடக்கே இருந்து வந்தாரென்றும் அவர் ஆரிய வகுப்பைச் சேர்ந்தவரென்றும் கொள்ளும் கோட்பாடொன்றுள்ளது. வேங்கடத்துக்கு வடக்கே வாழ்ந்தவர்கள் எல்லோரும் ஆரியர் என்பதற்கு ஆதாரம் இல்லை. அகத்தியர் வடக்கே சென்று காசியில் (வாரண வாசியில்) சிவமதத்தைப் பரப்பிய பின் தெற்கே திரும்பினார். இவ்வுண்மையே புராணக் கதைகளுக் கூடாக மங்கலாகத் தெரிகின்றது.

அகத்தியர் கி. மு. 750 ஆண்டுகளுக்கு முன் விளங்கியவரெனப் பூர்வீக இந்தியா என்னும் நூலுடையார் கூறுவர். சங்க காலத்திலே அகத்தியருடைய கதை பழங் கதையாக நிலவியது. அவர் ஓர் விண்மீனாக மாறிவிட்டார் என்னும் பொருளில் அகத்தியர் என்னும் பெயர் ஓர் விண்மீனுக்கிடப்பட்டது. *

உலோபா முத்திரையின் கணவனாகிய அகத்தியர் வேத பாடங்களிற் சிலவற்றைச் செய்தவராகக் காணப்படுகின்றார். தமிழ் முனிவரும் வேதபாடங்களைச் செய்த அகத்தியரும் ஒருவரோ என்பது ஆராய்தற்குரியது. அகத்தியரே தமிழுக்கு ஆதி இலக்கணஞ் செய்தாரென்னும் பழங்கதை உள்ளது. இவர் செய்தாரெனப்படும் அகத்தியம் காணப்படவில்லை ஆங்காங்கு அகத்தியச் சூத்திரங்களென உரையாசிரியர்களாற் சில காட்டப்பட்டுள்ளன.

Ancient India * பரி பாடல்

அகத்தியருக்கு மாணவர் பன்னிருவரென்றும் அவருள் தொல்காப்பியர் முதன்மை யுடையவரென்றும் முதன் முதலாகப் புறப் பொருள் வெண்பாமாலை கூறுகின்றது. தொல்காப்பியர் அதங் கோட்டாசான் பனம் பாரனார் ஆதியோர் ஒரு சாலை மாணவராயின், தொல்காப்பியரைப்போல மற்றவர்களும் சங்கப் புலவர்களாய் விளங்கினார்களென இறையனார் களவியலுரை கூறாமைக்குக் காரணம் விளங்கவில்லை. அக்காலத்துத் தொல்காப்பியர் முதலாயினோர் அகத்தியர் மாணவர் என்னும் வரலாறு அறியப்படவில்லை போலும். தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தால் அதங் கோட்டாசான் பனம்பாரனார் ஆதியோர் சிறந்த புலவர் வரிசையில் உள்ளார்கள் எனத் தெரிகின்றது.

தொல்காப்பியம்

தொல்காப்பியர் செய்தகாதலின் அவர் நூல் தொல்காப்பியமென வழங்குகின்றதெனப் பலர் கருதுகின்றனர். தொல்காப்பிய நூல் செய்கின்ற காலத்துத் தமிழ் நாட்டெல்லை வடக்கே வேங்கடமலையாயிருந்தது. இது பாயிரத்தானும் பிற* அகச்சான்றானும் அறியப்படும். "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்" எனப்பட்ட பன்னிரண்டு நிலங்களும் வேங்கடத்துக்குத் தெற்கேயே உள்ளன.

கடவுள் வணக்கமும் பாயிரமும் கூறுதல் தொல்காப்பியர் காலத்து வழக்கு இல்லை எனத் தெரிகின்றது. தொல்காப்பியத்தில், பாயிரங்கூற வேண்டியதன் அவசியத்தைப்

*வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியதென்மனார் புலவர் (தொல் செய் 79)
வேங்கடத்தும்பர் மொழி பெயர் தேயத்தர் (அகம் 211)

பற்றி எங்காவது கூறப்படவில்லை. இறையனார் களவிய லுரையில்,

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவலன்றே"

என்னும் சூத்திரம் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது என்னும் கொள்கை ஏற்பட்ட காலத்தில் எவரோ ஒருவர் கேள்வி வழக்கிற் கிடைத்த வரலாறுகளைத் திரட்டிப் பாயிரஞ் செய்தார் ஆதல் வேண்டும். பாயிரஞ் செய்யும் வழக்குச் சங்க காலத்தில் இருந்ததாயின் சங்கத்தொகை நூல்கள் ஒவ்வொன்றுக்கும் அவற்றைத் தொகுத்த ஆசிரியர்கள் கடவுள் வாழ்த்தும் பாயிரமுஞ் செய்திருப்பார்கள். பிற்காலத் தெழுந்த உரைகளுக்கும் சிறப்புப் பாயிரங்கள் எழுதப்பட்டிருத்தல் கவனிக்கத் தக்கது.* கடவுள் வாழ்த்தும், பாயிரமும் இல்லாமல் இருப்பதே பத்துப் பாட்டு எட்டுத்தொகை முதலிய நூல்கள் சங்க காலத்திற் றொகுக்கப் பட்டன வாதலை விளக்கும். குறுந்தொகையின் 52-ம் பாடலைச் செய்த புலவர் பனம்பாரனாராகக் காணப்படுகின்றனர். தொல்காப்பியச் சிறப்புப்பாயிரஞ் செய்தவர் பிறரொருவராகலாம். பாயிரத்தில் கூறப்படும் ஐந்திரம் என்பது§ ஐந்திர இலக்கணத்தைக் குறியாது இலக்கணத்தைக் குறிக்குமோ எனக்கருத இட

* இப்போ காணப்படும் கடவுள் வாழ்த்துகள் பிற்காலத்தவர் ஒருவராற் செய்யப்பட்டன வென்று கருதப்படுகின்றது.

§ இந்திரனின் தலைநகராகிய அமராவதி இருட்டிணாநதி முகத்துவாரத்திலுள்ளது. இந்திரன் மதுரையில் சோமசுந்தரக் கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தானெனத் திருவிளையாடற்புராணங் கூறுகின்றது. இந்திரன் என்பான் ஆந்திரநாட்டில் இருந்த ஒரு இந்திரனெனக் கருத இடமுண்டு. தெலுங்குமொழியில் வழங்கும் செப்பு என்னுஞ் சொல்லுந் தொல்காப்பியத்திற் காணப்படுதல் நோக்கத் தக்கது.

முண்டு. இருக்கு, சாமம், யாகம் இவை போன்ற சொற்கள் பிற்காலத்தில் இருக்கு வேதத்தையும், சாமவேதத்தையும், பலிகொடுத்துச்செய்யப்படும் யாகத்தையும் குறியாது வேறு பிறபொருளில் வழங்கியிருத்தல் கவனிக்கத் தக்கது.

தொல்காப்பியம், பழைய தமிழ் மரபை நிலைநாட்டுவதற்கு எழுந்த நூலாதல் அதன் பெயரால் தெற்றென விளங்கும். தொல்காப்பியஞ் செய்தவரின் இயற் பெயர் மறந்து விடப்பட்டது. ஆகவே பிற்காலத்தவர் தொல்காப்பியஞ் செய்தவர் என்னும் பொருளில் தொல்காப்பியர் என அவரை வழங்கினர். அவரது பெயர் திரண தூமாக்கினி என்பாரும் உளர். இதற்குப் பழைய சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. இவர் பெயர் புலத்தியரென்றும் இதனை புல் + அக + தீபம் என்று பிரித்து எவரோ திரண தூமாக்கினி (திரணம் + தூமம் + அக்கினி) என வடமொழிப்படுத்தினர் என்றும் கூறுவாருமுளர். திருவிளையாடற் புராணத்தை நோக்குமிடத்து அநேகம் தமிழ்ப் பெயர்கள் வடமொழிப்படுத்தப் பட்டன என்று நம்ப இடமுண்டு. சங்ககாலப் புலவர்கள் பெயர்களை நோக்குமிடத்து அக்காலத்துத் திரணதூமாக்கினி என்பது போன்ற பெயர் ஒரு போதும் தோன்றியிருந்திருக்க மாட்டாது என நன்கு அறியலாம்.

தொல்காப்பியத்தில் பல சூத்திரங்களைப் பிற்காலத்தார் இடைச் செருகலாகச் சேர்த்திருக்கின்றனர் என்பதும் உண்மையே. மரபியல் செய்யுளியல்களில் பல சூத்திரங்கள் பிற்காலங்களில் ஏடெழுதுவோராலும் பிறராலும் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மரபியலில் விலங்கினங்களில் குட்டி ஆண் பெண் இவை போன்றவற்றை வழங்கும் மரபுச்சொற்களைக் கூறிக

கொண்டு வந்த தொல்காப்பியர் சடுதியில் "நூலேகரகம்" எனத் தொடங்கி அந்தணர் அரசர் வணிகரைப் பற்றிக் கூறினரெனல் சிறிதும் பொருந்தாது. இவர்களுக்குரிய தொழில்களைக் கூறியபின் உடனே "புறக்காழனவே புல் லென மொழிப" என மரஞ் செடிகளைப் பற்றிக் கூறினர் எனலும் பொருத்தமாகக் காணவில்லை. மரபியல் 624-க்கும் 640-க்கும் இடையே உள்ள சூத்திரங்கள் பெரும்பாலும் இடைச் செருகல் என்று அனுமானிக்கத்தக்கன. "வேளாண் மாந்தர்க் குழுதூணல்லதில்லை" என அறுதி யிட்டுக் கூறியபின் அவருக் குரியனவாகச் சிலவற்றைப் பின்னும் கூறுதல் முறையாகாது. ஆகவே அச்சூத்திரங்கள் காலத்துக்குக் காலம் எழுதிச் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும். வைசியன் என்னும் சொல் சங்கநூல்களிற் காணப்படவில்லை. அச்சொல் வழக்கு பிற்காலத்தது. "வைசியன் பெறுமே வாணிகவாழ்க்கை" என்னும் சூத்திரம் மிகப் பிற்காலத்தது என்று நன்றாகக் கூறலாம். செய்யுளியலில் 167, 168, 169, 170, 171, 172 முதலிய சூத்திரங்கள் இடைச் செருகலோவென ஆராய்தற்குரியன. மரபியலில் சூ. 92 - க்குப் பின்னுள்ள பகுதிகளும் அப்படியே.

சிலப்பதிகார காலம்

இலங்கைக் கயவாகுவின் காலமே சிலப்பதிகார காலமாகும். கயவாகு கி. பி. 113 முதல் 135 வரையும் ஆட்சி புரிந்தான். சேரன் செங்குட்டுவன் ஆலயம் வகுத்துக் கண்ணகியைப் பிரதிட்டை செய்த காலத்தில் இலங்கை வேந்தனாகிய கயவாகு அங்கு சென்றிருந்தானென்று சிலப்பதிகாரங் கூறுகின்றது. கயவாகுவின் பெயர் சிலப்பதிகாரத்தில் ஈரிடங்களில் வந்துள்ளது. சிலப்பதிகார காலம் நிச்சய

மாகவே அக் காலத்திருந்த சோழ சேர பாண்டியருடைய வும் அவர்களைப் பாடிய புலவர்களுடையவும் காலங்கள் அறியப்படுகின்றன. தென்னிந்திய பழைய அரசர்களுடையவும் புலவர்களுடையவும் காலங்களை நிர்ணயிப்பதற்குச் சரித்திராசிரியர்கள் இம் முறையையே கையாண்டிருக்கின்றனர்.

தமிழர் சரித்திரம் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய * பி. டி. ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள் கயவாகுவின் கதை நம்பத்தக்கதன்றெனக் கூறிப் பழந்தமிழ் நூல்களின் காலத்தை கி. பி. ஆறும் நூற்றாண்டுக்கு இறக்கிக் கூறியிருக்கின்றனர். அவர் கூற்றுக்கு அவர் மனோபாவத்தை யன்றி வேறு உறுதியான ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. தமிழ் நூல்கள் அவ்வளவு பழமையுடையனவாய் இருக்கமாட்டா என அவ்வாசிரியர் உள்ளத்தில் முதற் கண் தோன்றிய பிழையான எண்ணமே இவ்விடர்ப் பாட்டுக்கு ஏதுவா யிருந்தது. கயவாகு, சேரன் செங்குட்டுவன் காலத்தவன் என்பதைத் துலக்கிக் காட்டவே ஐயங்காரவர்களின் கொள்கைகள் உண்மையல்ல என்று உறுதிப்படும்.

மகாவமிசம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட நூல். இந்தியப் புலவர்கள் கயவாகுவைப் பற்றி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் நூல் வாயிலாக அறிந்திருக்க வகை இல்லை. இரண்டாம் நூற்றாண்டில் கயவாகுவைப் பற்றி நேரில் அறிந்த இளங்கோவடிகள் அவனைப் பற்றிச் சிலப்பதிகாரத்திற் குறிப்பிட்டார் என்பது நம்பத் தக்கது.

* கயவாகுவின் கதை நம்பத்தக்கதல்லவாயின் எழுத்திலன்றி வாய்மொழியில் வந்த வடமொழி நூல்களைத்தான் நம்பலாமோ என்னும் கேள்வி எழுமன்றோ?

கயவாகு, தனது தந்தை காலத்திற் சிறை பிடித்துச் செல்லப்பட்ட 12,000 சிங்களவரை மீட்டுக் கொண்டு வந்தான் என்று சிங்கள நூல்கள் கூறுகின்றன. மகா வம்சம் புத்த நூலாதலின் புத்த சமயத்துக்கு மாறானதும் சிங்களவர் தோல்வியைக் குறிப்பதுமாகிய பலவற்றைக் கூறவில்லை. அவ்வாறு மகா வமிசம் கூறாது விடுத்த பலவற்றைப் பிற சிங்கள நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் கயவாகு 12,000 சிங்களவரை இந்தியாவினின்றும் கொண்டு வந்தது ஒன்றாகும். சிங்கள நூலார் இதனைச் சொப்பனக் கதை போல எழுதவில்லை என்பது நினைவு கூரற்பாலது. † கரிகாலன் காவேரிக் கரையை அணை கட்டுவித்தான் என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது.

டாக்டர் ஆனந்தக்குமாரசாமி அவர்கள் இலங்கைச் சிற்பிகள் கண்ணகியின் சிலை பலவற்றை பழைய நாளிற் செய்திருக்கிறார்கள் எனக் காட்டியிருக்கின்றனர். ‡ இலங்கையினின்றும் எடுத்துப் போகப்பட்ட கண்ணகியின் சிலை

† Gaja Bahu is said to have rescued and brought home 12,000 Singhalese who were prisoners in South India. Some accounts say that they have gone there to work. This story of course, cannot be taken as true, but it seems certain that GajaBahu did go over to South India, as Tamil literature mentions that he was present at the consecration of a temple and it is very probable that he brought home with him some Singhalese people who had been taken prisoners by Tamils. (Ceylon and World history by David Hussey M. A. Lecturer in the University College of Ceylon).

‡ "According to Dr. A. K. Kumarasami some of the images depicted in illustration of ancient art of Ceylon are of this deified woman (Ancient India P. 71).

ஒன்று! இன்றும் லண்டன் நூதன பொருட் காட்சிச் சாலை யிற் காணப்படுகின்றது. கண்ணகி வழிபாட்டை இலங்கைக் குக் கொண்டுவந்தவன் கயவாகு வேந்தனே. * கயவாகுவே கண்ணகி மதத்தை இலங்கைக்குக் கொண்டுவந்தான் என அருணாசலந்துரை அவர்கள் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர்.

கயவாகு, இந்தியாவினின்றும் மீட்டுக் கொண்டுவந்த சிங்களவரை இலங்கையின் பல பாகங்களிற் குடியேற்றினு னென்றும், சிங்களவரை மீட்கப்பட்ட நாள், பெருநாளாகக் கொண்டாடப்பட்டதென்றும், கண்ணகி வழிபாடு முதல்

---

* Sometimes the tide of invasions was rolled back into South India as by king Gaja Bahu. who brought back a multude of captives, whom he settled in Alutkura Korale of the Colombo District. Harispattu and Tampane of the Kandy. District and in parts of Kurunegala District.

Gaja Bahu's triumph is commemorated by a yearly perahera festival which is now continued by the Dalada Malingawa at Kandy. But the tooth relic of Buddah which now heads the procession formed no part of it till 150 years ago. At this festival a high place was always been held by the goddess Pattini whose worship was introduced by Gaja Bahu. He brought from India her golden Halamba or Anklet, copies of which are the symbols of her worship, and oaths are infreqnently taken on them in courts of justice. No oath is more dreaded by the Singhalese peasant.

Gaja Bahu also established in honour of the Goddess the great national game ankeliya or horn pulling held specially on the occasion of epidemic and conducted on a magniffcent scale in the presence of thousands of spectators.

(Sketches of Ceylon History—Sir P. Arunachalam)

முதல் கடவாகுவால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட தென்றும், பத்தினி தேவியின் * காற்சிலம்பைத் தொட்டுச் சத்தியஞ் செய்தல் சிங்களவராற் பெரிதும் அஞ்சப்பட்ட தென்றும் இலங்கைச் சரித்திரக் குறிப்புகள் என்னும் நூல் கூறும். இவைகளெல்லாம் கட்டுக் கதையாக எழுந்தன வென்று கூறுவது அமையாது. கரிகாலன் காவிரிக் கரையைக் கட்டுவித்தானென்று கலிங்கத்துப்பரணி கூறுவது, கயவாகு கண்ணகியின் பிரதிட்டையிற் பிரசன்னமாயிருந்தானென்று சிலப்பதிகாரம் கூறுவது, சிங்கள நூல்கள் வங்கநாசிக திசன் காலத்திற் சிறையாகப் பிடித்து இந்தியாவுக்குக் கொண்டுபோகப்பட்ட சிங்களவரைக் கயவாகு மீட்டான் எனக் கூறுவது, சிங்கள நாட்டில் பழமை தொட்டுக் கண்ணகி வழிபாடு இருந்தது ஆகிய இவைகளை எல்லாம் ஒருங்கு வைத்து ஆராயுமிடத்துச் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட வரலாறு பொய்யன்று என்பது நன்கு விளங்கும். ஆகவே பி. தி. ஸ்ரீனிவாச ஐயங்காரவர்களால், தமிழ் நூல்கள், அரசர், புலவர்களின் காலங்களைப்பற்றிக் குறிப்பிட்டன முற்றும் பிழையாதல் தெளியப்படும்.

V தமிழர் நாகரிகச் சிறப்பு

வாணிகம்

பண்டைத் தமிழர் வாணிகத் துறையில் மிக முன்னேற்ற மடைந்திருந்தனர். அசிரியர், பாபிலோனியர் எகிப்தியர் கிரேக்கர், ரோமர், சீனர், அராபியர், பினீசியர், முதலிய பழைய நாகரிக சாதியார் தமிழ் நாட்டோடு வியாபாரத் தொடர்புடையவர்களா யிருந்தனர். பிற நாடுகளுக்குப்

* சிங்கள மக்கள் வைத்து வழிபட்டனவும் விழாக்களில் எடுத்துச் சென்றனவுமாகிய பத்தினிச்சிலம்பு (பாதசரம்) கொழும்பு நூதன பொருட் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பண்டங்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களும், பிற நாட்டுச் சரக்குகளுடன் வந்த நாவாய்களும் தென்னிந்திய துறைமுகங்களிற் குழுமி நின்றன. தமிழர் கடற் பிரயாணத்தில் நன்றாய்ப் பழகி யிருந்தனர். இந்து சமுத்திரத்தில் தென்னிந்திய மரக்கலங்களே பெரும்பாலும் ஓடிக்கொண்டிருந்தன. மரக்கலங்களின் முன்புறம், 1 யானை, சிங்கம், குதிரை முதலியவற்றின் முகம்போற் செய்யப்பட்டிருந்தது. கி. மு. எட்டாம் நூற்றாண்டின் முன் தென்னிந்தியாவுக்கும் மேற்கு ஆசியாவுக்குமிடையில் கப்பல் வழியாக வியாபாரம் நடைபெற்ற தென்பதற்குப் பல ஆதாரங்களுண்டு. இந்தியாவில் வேதங்கள்தோன்றுவதன் முன் தமிழர் சாலடியரோடு வியாபாரம் நடத்தினர். சாலடியாவின் தலைநகராகிய ஊர் (Ur) என்னும் நகரத்தின் அழிபாடுகளில் மலையாளக் கரைகளில் மாத்திரம் காணப்படும் தேக்கமரத் துண்டு கண்டெடுக்கப்பட்டது. ஊர் என்னும் நகரம் கி. மு. 4000 வரையில் அமைக்கப்பட்டது. 2

தமிழர் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வியாபாரத் துறையில் நன்கு பயின்றிருந்தார் களென்பதை இது அறிவிக்கின்றது. கி. மு. 1700-ல் எகிப்துக்குச் சென்ற யோசேப்பின் வரலாறு, அக்காலத்தில் இந்திய வியாபாரப் பொருள்கள் வணிகர் கூட்டத்தாரால் தரை மார்க்கமாக (அரேபியாவுக்கூடாக) எகிப்து, சிரியா, பாபிலோன் முதலிய நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்டன என்பதை அறிவிக்கும். கி. மு. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கும் மேற்கே உள்ள நாடுகளுக்கும் வியாபாரத் தொடர் பிருந்த

---

1. பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியு
மரிமுக வம்பியும் (சிலப். 13, 176-177)

2. Regozin's Vedic India—P. 305

தென்பதற்கு எகிப்திய சித்திர எழுத்து நூலில் ஆதாரம் காணப்படுகின்றது.* குரங்கை உணர்த்தும் கவி என்னும் சொல்லின் திரிபாகிய கொவ் (கிரேக்கு) சித்திர எழுத்தில் 'கவு' என்று காணப்படுகின்றது. கி. மு. 1462-ல் முடி வெய்திய எகிப்திய பதினெட்டாவது பரம்பரையிலுள்ள அரசரின் பிரேதங்கள் இந்திய மசிலின் துணிகளாற் சுற்றப்பட்டன. எகிப்தியர் கப்பற் பிரயாணத்துக்குப் பினீசியரைச் சம்பளத்துக்கமர்த்தினர். தையர் தேசத்து ஹிரம் என்னும் அரசனும் சலமனின் பிதாவாகிய தாவீது (David) என்னும் எபிரேய அரசனும் சேர்ந்து 'ஓபிர்' தேசத்துக்கு வியாபாரக்கப்பல்களை அனுப்பினர். ஓபிர் பிரயாணம் மூன்று ஆண்டுக்கொருமுறை நடைபெற்றது. சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதிசெய்வதிலும் கப்பல் இடையேயுள்ள வியாபாரத் தலங்களிற் றங்குவதிலும் மூன்று வருடங்கள் பிடித்தன எனச் சில சரித்திரகாரர் கூறுகின்றனர். 'ஓபிர்' என்

* பொன் மலிந்த விழுப் பண்ட
நாடார நன்கிழிதரு(ம்)
ஆடியர் பெரு நாவாய் (மதுரைக்காஞ்சி. 81-)
"வேறுபன்னாட்டிற் காறர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை" (நற்-295)
" நெடுங்கொடி நுடங்கு நாவாய்"
(இழிதரும்-இறக்கும்; ஆடுஇயல்-கொடி அசைகின்ற; கால்—காற்று.)

"Direct evidence of ancient commercial relation between India and the west has recently been found in heiroglyphic texts of seventeenth century......For the word kapi 'ape. which occurs in kings X.22 in the form of qof (greek) is found in these Egyptian texts in the form of kafu......(History of Indian Literature-Weber P. 3. F. notes)

பது தென்னிந்தியாவில் உள்ள உவரி என்னும் துறைமுகம் எனக் கருதப்படுகின்றது. மேல்நாட்டுச் சரித்திரகாரர் ஒபிர் என்பது இன்ன இடமெனத் தீர்மானமாகக் கூறவில்லை. உலக சரித்திர ஆசிரியர்கள் ஒபிர் என்பது ஆபிரிக்க அராபிய இந்தியக் கரைகளிலுள்ள செழிப்பான நகரங்களை எனக் கூறுகின்றனர்.* மூன்றுவருடத்துக்கொருமுறைபிரயாணஞ் செய்யப்பட்டதாலும் கப்பல்கள் கொண்டு சென்ற பொருள்கள் பெரும்பாலன இந்தியாவிற் காணப்படுவனவாயிருத்தலாலும் ஒபிர் என்பது இந்தியத் துறைமுகமே எனல் பொருத்தமாகக் காணப்படுகின்றது § சலமன் (கி.மு.1000) சந்தனக்கட்டை, குரங்கு, மயில் முதலியவற்றை ஒபிரினின்றும் பெற்றான். மயில் இந்தியாவினின்றும் கொண்டு

---

*" Ophir was the general name for the rich countries of the south, lying on the African, Arabian and Indian coasts as far as that time known. The name of Ophir was common even in the time of Moses.

" At the time of the Ophir voyage, when Solomon sent to India for ivory, apes and peacocks, there were as yet no Aryans in southern India, for the name for apes, in Hebrew 'qof' and in Sanskrit, kapi' connot be an Aryan word. It first comes to hand in the latest book of the Rig Veda but also appears in the form of 'qof' as early as the IV Dynasty in Egypt and the name for peacocks 'tuki' has been borrowed from the Malabar togai.

(Historians' History of the world Vol. 2.P. 233&489).

கவி. என்பது தமிழ்ச்சொல், கவிந்து நடத்தல் பற்றிக் கவி எனப்பட்டது.

§(Science of language) என்னும் நூலில் ஒபிர் என்பது இந்தியத் துறைமுகமே யென்றும் அதற்குக் காரணம் ஒபிரிலிருந்து மேற்குத் தேசங்களுக்குச் சென்ற பொருள்கள் இந்தியப் பெயர்களால் அறியப்பட்டமையே யாகும் என்றும் மாக்ஸ் மூலர் கூறியுள்ளார்.

போகப்பட்டது. துகிம் என்னும் பெயர் எபிரேய பைபிளில் காணப்படுகின்றது. இது தோகை என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு. மேல் நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்ட பொருள்கள் தங்களுடன் தமக்குரிய தமிழ்ப் பெயர்களையும் கொண்டு சென்றன. கிரேக்க மொழியில் அரிசி 'ஒறிசா' என்றும் இஞ்சி 'இஞ்சிவேர்' என்றும் கறுவா 'கர்பிஒன்' திப்பிலி 'பிப்லி' என்றும் வழங்கும். இவை முறையே அரிசி, இஞ்சிவேர், திப்பிலி என்பவற்றின் திரிபாகும். § தந்தத்துக்கு ஹிபிம் என்னும் பெயர் எபிரேயத்திற் காணப்படுகின்றது. இது இபம் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு.

இந்தியாவினின்றும் பொன், பட்டு, முத்து வாசனைத்திரவியங்கள் ஆதிய பண்டங்கள் கிரேக்க நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டன. ஹோமர் என்னும் பழைய கிரேக்க புலவர் இந்தியாவினின்றும் கிடைக்கும் பொருள்களைப் பற்றிக் கூறியிருக்கின்றனர். முற்காலத்தில் இந்தியாவினின்றும் தங்கம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தென்பதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்தியாவோடு வாணிபஞ் செய்ததால் அசீரியா ஏராளமான தங்கத்தை ஈட்டிற்று. பபிலோனிய பழைய சாசனங்களில் ஆடைக்குச் சிந்து என்னும் பெயர் காணப்படுகின்றது. இது இந்திய ஆடை என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் எல்லோரும் ஒத்துக் கொள்கின்றனர். இந்த ஆடை பாரசீகத்துக் கூடாகப்

The names of the last two subjects Kapim and Tukim as found in Hebrew Bible are the same as those still used in Tamil, i.e. Kavi and Tokai. Subsequently the Arabs and Greeks appear to have kept up the trade with Tamilakam. The Greek names for rice (Oryza) Ginger (Zingiber) and Chinnamon Karpion) are almost identical with their Tamil names *arisi*, *inchiver* and

பபிலோனுக்குச் செல்லவில்லை. அப்படிச் சென்றிருந்தால் 'சி' என்பது 'ஹி' என்று மாறியிருக்கும். வேத மந்திரங்களுக்குரிய சாதியார் கடலையும் கடற் பிரயாணத்தைப் பற்றியும் கேள்விப்பட்டார்களேயன்றி அதனை அறிந்திருக்கவில்லை. ஆகவே திராவிட மொழியைப்பேசிய சாதியார்தான் ஆடையை பபிலோனுக்குக் கொண்டு சென்றனர்.* ஆகவே தென்னிந்தியாவுக்கும் மேற்கு ஆசியாவுக்கு மிடையில் கடல மார்க்கமாக வியாபாரம் நடைபெற்றது என்பதை மறுக்க முடியாது.

கி. மு. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின் நடந்த வியாபாரத்தைப் பற்றி மிகத் தெளிவான ஆதாரங்கள் கிடைக்கின்றன. சலமன்சர் IV என்னும் அசிரிய அரசன் (கி.மு. 727-722) இந்திய யானைகளை உபகாரமாகப் பெற்றதும், இந்திய தேக்க மர உத்திரம் ஒன்று பிர்ஸ் நிம்றட் (Birs Nimrud) என்னும் நகரத்திலுள்ள நிபுச்சட் நெசர் III (கி. மு. 604-562) அரசனின் அரண்மனையிற் காணப்பட்டதும், பவேரு சாதகம் (கி. மு. 500) இந்திய வியாபாரிகள் முதன் முதல் மயில்களைக் கடல்மார்க்கமாகப் பபிலோனுக்குக் கொண்டுபோனதைக் கூறுதலும், பபிலோன் இந்திய அரிசி, சந்தனக்கட்டை முதலியவற்றை இறக்குமதி செய்ததும், பழைய கெபுரு பைபிளில் அரசர் I அரசர் II முதலியவர்களின் வரலாறுகளைத் தொகுத்தவர்கள் தமிழ் நாட்டினின்றும் கிடைத்த பொருள்களுக்குத் தமிழ்ப் பெயர்

---

karuva and clearly indicate that Greek merchants conveyed these articles and other names to Europe from Tamil land. (Tamils 1800 years ago).

The word for ivory (shen hibbin—the tooth of the hubb) is the Sanskrit ibham and Tamil ibam (Sketches of Ceylon History—Sir P. Arunachalam.) * Regozin's Vedic India P. 307.

களையே குறிப்பிட்டிருத்தலும் ஆகிய இவை மேற்கு ஆசியாவுக்கும் இந்தியாவுக்கு மிடையில் கி. மு. 8-ம், 7-ம், 6-ம் நூற்றாண்டுகளில் ஒழுங்கான கடல்மார்க்கமான வியாபாரப் போக்குவரத்து இருந்த தென்பதை உணர்த்தும். பபிலோனில் டைகிரஸ். யூபிரட்டிஸ் என்னும் நதிகள் சந்திக்கும் இடத்துக்குச் சமீபத்தில் தமிழர் குடியேறி இருந்தார்கள். அங்கு கிருட்டிண பலதேவ வழிபாடுகள் இருந்தனவென்று அறியப்படுகின்றது. போதாயனர் மேற்கு ஆசியாவோடு வர்த்தகஞ் செய்தவர்களைக் கண்டித் திருக்கின்றனர். இதனால் வட இந்தியர் அவ்வியாபாரத்திற் பிரதானமானவர்கள் அல்லர் எனத் தெரிகின்றது. அர்த்த சாத்திரஞ் செய்த கௌடலியர், வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவே வாணிகத்திற் சிறந்து விளங்கிற்றென்றும், தென்னிந்தியாவில் பொன், நவமணி, முத்து, சங்கு முதலிய பொருள்கள் கிடைத்தனவென்றும், வடஇந்தியா கம்பளம், தோல் முதலியவற்றையே அளித்ததென்றும் கூறுகின்றார்.

மதுரை அழகான ஆடைகளுக்குப் பேர் போனது. தமிழர் கடல் கடந்து திரவியந் தேடினார்களென்று தொல்காப்பியங் கூறுகின்றது. மேற்கு ஆசியாவிலுள்ள நாடுகளோடு தென் இந்தியா வியாபாரம் நடத்தியதாதலின் கி. மு. 20-ல் பாண்டிய அரசன், ஆகஸ்தஸ் என்னும் ரோம சக்கரவர்த்திக்குத் தூதனுப்பினான். இன்னொரு அரசன் கிரேக்க போர் வீரரைத் தனக்கு மெய்காப்பாளராக அமர்த்தினான். யவன போர் வீரர் பாண்டியரின் கோட்டைவாயில்களைக் காவல்புரிந்தனர் *

---

* கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர் (சிலப்)

Kennedy's article on the early commerce of Bobylon with India—J. R. A. S.

கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளின் முன் இந்திய வியாபாரிகள் பர்மா வழியாகவும் அதன் தென்கரை வழியாகவும்சென்று கம்போதியாவில் (இந்துசீனம்) வியாபாரத் தொடர்பை ஏற்படுத்தினர். கம்போதியாவிற் குடியேறிய தமிழர் அங்கு ஓர் இராச்சியத்தை ஏற்படுத்தினர். அங்கு சிலமாகக் காணப்படும் கட்டிடங்களில், கடற்போர், கடற் பிரயாணம் ஆகியவற்றை விளக்கும் சித்திரங்கள் காணப்படு கின்றன. தமிழர் சீனரோடு வியாபாரத் தொடர்புடையவர் களாயிருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. கிபசோக் குட்டாவை அடுத்து கி. மு. 7-ம் நூற்றாண்டில் இந்தியர் குடி யேறி யிருந்தார்களென்று ரெறியன் டிலாகோபிறிக்என்னும் ஆசிரியர் கூறுகின்றனர் § கடல் தரை என்னும் இரு வழிக ளாலும் இந்தியாவுக்கும் சீனவுக்கும் போக்கு வரத்து இருந்தது. கிறித்தாப்தத்துக்கு முன்னும் தமிழர் சுமத்திரா யாவா முதலிய நாடுகளோடு வியாபாரம் நடத்தினர்கள். இதனை மணிமேகலை என்னும் நூல் தெளிவாகக் கூறுகின் றது. சுமத்திராவை அடுத்த பாலி என்னும் தீவில் இன்னும் தமிழருடைய பழக்க வழக்கங்களும், நாகரிக சின்னங்களும் வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன.

கடல், பரவை, புணரி, ஆர்கலி, முன்னீர் முதலியவும் ஓடம், கலம், மரக்கலம், தோணி, மிதவை, கப்பல், நாவாய், மரம்,திமில்,அம்பி முதலியவுமாகிய கடலையும் மரக்கலத்தை யுமுணர்த்தும் தூய தனித்தமிழ்ச் சொற்கள் தமிழர் கடலை யும் கடற்பிரயாணத்தையும் நன்கு அறிந்திருந்தார்கள் என் பதற்குச் சான்றுகளாகும்.

---

§ Prof. Jerrian De la Couperic proves in his western Origin of the early Chinese civilization that about the year 680 B. C. the sea traders of the Indian Ocean

கிறித்த ஆண்டின் முற்பகுதியில் தென்னிந்தியாவுக்கும் ரோமுக்கு மிடையில் நெருங்கிய வியாபாரத் தொடர்பிருந் தது. உரோமர் முசிறியிலும் பிறவிடங்களிலும் குடியேறி யிருந்தனர். யவன வியாபாரிகள் அடிக்கடி போக்கு வரத் துச் செய்யும் இடங்களுள் முசிறி பிரதான இடமாயிருந் தது.* பியுங்கேரியன் அட்டவணையில் § (கி. பி. 225) கிரேக்கர் தமது வியாபார பாதுகாப்பின் பொருட்டு முசிறியில் 2000 போர் வீரரை வைத்திருந்தார்களென்றும், ஆகஸ்தஸ் அரசனைக் கனம் பண்ணுதற்பொருட்டு அவ னுக்கு ஓர் கோயில் அமைத்திருந்தார்களென்றும் சொல் லப்படுகின்றன. மலையாளக்கரையிலுள்ள பிசன்றியம் (Byzantium) என்னும் இடத்தில் கிரேக்கர் குடியேறி யிருந்தனர். ரோம தேசத்தினின்றும் அழகிய பெண்கள் (யவனச்செப்பு) பாவை விளக்கு மதுவகை (wine) முதலிய பொருள்கள் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன. மிளகு, தந்தம், நவரத்தினம், பட்டாடை, கறுவா, சந்தனக் கட்டை முதலியன தமிழ் நாட்டினின்றும் யவன தேசத் துக்குக் கொண்டு போகப்பட்டன.

உரோம வியாபாரப் பெருக்கம் அதிகம் இருந்தமை யால் ரோமர் தமது நாணயங்களைத் தென்னிந்தியாவில் வழங்கினர். ரோமரின் நாணய வுற்பத்திச்சாலை ஒன்று தென்னிந்தியாவில் இருந்ததாக நம்பப்படுகின்றது. தென்

---

founded around the present Gulf of Krao-tchu a colony which they called Langa-ga or Langa-ya," (Tholkappiam and Tamil script —S. R. Muttukumaru.

* "பேரியாற்று வெண்ணுரை கலங்க யவனர் தந்தவினை
மாணன் கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி" (அகம் 149)

§Peutingerian Tables

னிந்தியாவில் தெல்லிச்சேரிக்குச் சமீபத்திலுள்ள கோட்டயத்திலும், மதுரைமாகாணத்திலுள்ள கலியன்புத்தூரிலும், கோயம்புத்தூர் மாகாணத்திலுள்ள பொள்ளாச்சி, கருவூர் வெள்ளலூரிலும், புதுக்கோட்டை முதலிய இடங்களிலும் ஏராளமான உரோமன் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை உரோம தென்னிந்திய வியாபாரப் பெருக்கத்தைக் காட்டுகின்றன. இந்திய சரக்குகள் அலக்சாண்டிரியா வழியாக உரோமை அடைந்தன.

தென்னிந்தியாவில் முத்துக் குளிப்புப் பிரதான தொழிலா யிருந்தது. * வடமொழியில் முத்தைக் குறிக்கும் முத்த என்னுஞ் சொல் முத்து என்பதன் திரிபே. தென்னிந்தியாவில் முத்துக் கிடைப்பதாக உரோமர் அறிந்திருந்தனர். அவர்கள் தமிழ் நாட்டினின்றும் ஏராளமான முத்தை வாங்கிச் சென்றனர். உரோமானிய பெணகள்முத்தில் அதிகம் மோக முடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் தமது மேனியை முத்துக்களால் அலங்கரித்தனர். முத்துக்கோவைகள் ஒன்றோடு ஒன்று முட்டி ஒலி செய்வதைக் கேட்டு அவர்கள் பூரித்தனர். காலிற் றரிக்கும் செருப்புகளின வார்கள் தாமும் முத்துக்களா லலங்கரிக்கப்பட்டன. கயஸ் குளோடியர் என்னும் உரோம அரசனின் இராணி உலோலா, 300,000 தங்கநாணயம் விலையுள்ள முத்துக்களால் தன்னை அலங்கரித்திருந்தாள். கிளியோபாத்திரா என்னும் எகிப்திய இராணி, கீழ்நாட்டு அரசருக்கு முன் சொந்தமா யிருந்தனவும் காதில் அணியப்படுவனவுமாகிய இரண்டு பெரிய முத்துக்களை வைத்திருந்தாள். 80,000 தங்கநாணயம் விலையுள்ள ஒரு முத்தை அவள் காடியில்

* "யவனர் நன்கலந்தந்த தண்கமழ் தேறல்" (புறம் 56)
"கொற்கை முன்றுறை யவிர்கதிர் முத்தமொடு" (அகம் 21)

(வின்ஞரியில்) கரைத்துக் குடித்தாள். மற்ற முத்தைக் கரைக்குஞ் சமயத்திற் பாங்கியாற் றடுக்கப்பட்டாள். தென்னிந்தியாவினின்றும் உரோம இராச்சியத்துக்கு அனுப்பப் பட்டவற்றுள், முத்து, வைடூரியம், கோமேதகம், நீலம் முதலிய இரத்தின வகைகளே பிரதானமானவை. அந்தோனியஸ் என்னும் அரசனின் மந்திரியாகிய நோநியஸ் என்பவன் அவனிடத்திலிருந்த ஓர் நீலக்கல்லின் பொருட்டு வேலையினின்றும் நீக்கப்பட்டான். அவன் தனது செல்வம் எல்லாவற்றையும் விட்டு ௨000 தங்கநாணயம் விலையுள்ள நீலக்கல்லுடன் தப்பி ஓடினன். ஆண்டில் இரண்டு இலட்சம் தங்க நாணயம் வரையில் விலையுள்ள உரோமநாட்டின் செல்வத்தை இந்தியா விழுங்கிவிடுகின்றதெனப் பிளினி (கி. பி. 62-113) என்பவர் வெறுப்பாகக் கூறியிருக்கின்றார்.

பிற நாட்டு வர்த்தகர் மிளகு, கசகசா, சந்தனம் ஆகியவற்றை மலையாளக் கரையினின்றும் வாங்கினர். நெல்லூர் தொடக்கம் தெற்குக் கூடலூர், புதுச்சேரி வரையிலும் ஒருவகையான தகட்டுச் செப்பு நாணயங்கள் நிலத்திற் கண்டெடுக்கப்படுகின்றன. இவைகளோடு உரோமன் நாணயங்களும் துளையிட்ட சீனநாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. பெரிய மழைக்கும் புயலுக்கும்பின் மீன்பிடிகாரரின் பெண்டு பிள்ளைகள் இவ்வகையான நாணயங்களைக் கடற்கரை ஓரங்களிற் பொறுக்கி எடுக்கிறார்கள். கிறிஸ்தாப்தத்தின் நாலைந்து நூற்றாண்டுகளாகப் பிறதேசவர்த்தகம் தமிழ்நாட்டில் பெரிதும் நடைபெற்றதென்பதற்கு இது போதிய அத்தாட்சியாகின்றது. செம்புத் தகட்டுக் காசுகளின் ஒருபுறத்தில் இரண்டு பாய்மரமுள்ளதும் சவள்தடிகளாற் செலுத்தப்படுவதுமாகிய தோணியின் வடிவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

வணிகர் கடல் கடந்து மரக்கலங்களில நெடுந்தூரம் செல்வதைப் பற்றி மணிமேகலை என்னும் நூல் அழகாகக் கூறுகின்றது. "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்னும் பழமொழி இன்றும் தமிழ் நாட்டில வழங்குகின்றது.

முசிறி, கொற்கை, தொண்டி, மாந்தை, புகார் முதலியன தமிழ் நாட்டின் பிரதான துறைமுகங்களாகும். புகார் நகரின் சிறப்பைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பட்டினப் பாலையில் விரித்துக் கூறியிருக்கின்றார். பண்டசாலை முற்றங்களில் குவிந்து கிடக்கும் பண்டங்களைப் பற்றியும் சுங்கங் கொள்வோரைப் பற்றியும் முன்னோரிடத்திற் கூறப்பட்டுள்ளன. கடைவீதிகளில் கங்கை, காவேரி நாடுகளின் விளை பொருள்களும் ஈழம், கடாரம் (பர்மா) முதலிய தேசங்களின் உணவுப் பொருள்களும், கீழ் கடலிற் பிறந்த பவளமும், தென்கடலிற் குளித்த முத்தும், மேற்குக் காற்றுடி மலையிற் பிறந்த சந்தனக் கட்டையும், இமயமலையிற் பிறந்த பொன்னும், மணியும், அரேபியாவினின்றும் கடல் மார்க்கமாக வந்த குதிரைகளும், வண்டிகளிலும், கழுதைகளிலும் கொணர்ந்த மிளகு மூடைகளும் தேக்கிக் கிடந்தன.

மரக்கலங்கள் திசை அறிந்து செல்லும் கலங்கரை விளக்கங்கள் கடற்கரைப் பட்டினங்களில் அமைக்கப்பட்டிருந்தன இக்கட்டிடங்கள் ஓலை முதலியவற்றால் வேயப்படாது மூடுசாந்திடப் பெற்றிருந்தன.

மரக்கலங்களின் உறுப்புகளைக் குறிக்க வழங்கும் சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே காணப்படுகின்றன. கப்பற் பாட்டு எனத் தற்காலம் வழங்கும் பாடல்களிலும் இச் சொற்களைக் காணலாம்.

உழவு

"சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை" (குறள்)

தமிழர் உழவுத் தொழிலை மற்றெல்லாத் தொழில்களினும் உயர்ந்ததும் சிறந்ததுமென்று கருதினர். "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை." எனத் தமிழ் மூதாட்டியும், "உழு துண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர்" என்று வள்ளுவனாரும் உழவுத் தொழிலின் சிறப்பைக் கூறுதல் காண்க. உழுது எருவிட்டுக் களை கட்டிப் பயிர் செய்யவேண்டிய நுட்பங்களைத் திருக்குறள் கூறுகின்றது. அக்காலத்தில் எருவே பயளையாகப் பயன் படுத்தப்பட்டது. வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சும் வசதிகள் அரசினரால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நெல் விளையும் வயல்களையுடையதாகிய மருத நிலங்களில் ஏரிகளும் வாவி களும் காணப்பட்டன. ஆற்றிலிருந்து செல்லுங் கால் வாய்கள் வழியாக வயல்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது. ஆறில்லாத விடங்களில் ஏரிகளிலிருந்து நீர் பாய்ச்சப் பட்டது. கரிகாற் சோழன் விளை நிலங்களுக்கு நீர் பாய்ச் சும் வசதிகளைச் செய்வதற்காகக் காவிரிக்கரையில் பெரிய அணை கட்டுவித்தான். இதற்கு இலங்கையிலிருந்து 12,000 சிங்களவர் சென்றிருந்தார்களென இலங்கைச் சரித்திரங் கூறுகின்றது.

தமிழில் நூல் செய்வோர் நாட்டுவளத்தைக் கூறு மிடத்து, உழவர், நாற்றங்கால்களில் நாற்றுப் பிடுங்குதல் நாற்று முடிகளைச் சுமந்து சென்று வயல்களிற் போடுதல், ஆம்பலிலையிற் கள்ளை வார்த்து உண்ட கடைசியர் பாடல் களைப் பாடிக்கொண்டு நாற்று நடுதல், களைகட்டல், நெல் லரிதல், சூடடுக்கல், கடா விடுதல், பொலி தூற்றல், கிணைப்

பொருநர் களம் பாடல், தானியங்களைக் கூடுகளின் வாய் களைத் திறந்து கொட்டல் முதலிய சிறப்புகளை வருணித்துக் கூறுதல் மரபு. கம்பர் வேளாண் மரபுகளை விளக்கி ஏரெழுபது என்னும் அரிய நூலொன்றைச் செய்திருக் கின்றனர்.

மருதநிலங்களில் நெல்லே யன்றிக் கரும்பும் விளைந் தது. வயல்களின் இடையே உள்ள கொட்டில்களிலுள்ள ஆலைகளில் கருப்பந்தடிகளைப் பிழிந்து எடுக்கப்பட்ட சாறு, கட்டியாகக் காய்ச்சப்பெற்றது. குறிஞ்சி நிலத்தில் வரகு, தினை, கொள்ளு, அவரை முதலியன விளைந்தன. * வயல் நிலங்கள் மிகவும் செழிப்பாயிருந்தன. யானை நின் றால் மறைக்கக் கூடிய கதிரையுடைய கழனி நிலம் என்றும், மூங்கிலைப் போன்றும், கரும்பைப் போன்றும் வளரும் நெல் என்றும், இலக்கியங்களில் நெற்பயிரின் செழுமை விதந்தோதப்படுகின்றது. உழுதொழிலாற் சிறந்து செல்வ வாழ்க்கை யுடையரா யிருந்தோர் அரசனாற் கௌரவிக்கப் பட்டு காவிதிப்பட்டம் வழங்கப் பெற்றனர். தமிழ் நாட் டின் உயிர் நாடி உழுதொழிலாகவே இருந்தது. இன்றும் இருக்கின்றது.

இலமென் றசை இ இருப்பாரைக் காணி
னில'மென்னு நல்லா ளகும் (குறள்)

(இதன் பொருள்) யாம் வறியேம் என்று ஏங்கி இருப்பா ரைக் கண்டால் பூமாதேவி தனக்குள் சிரிப்பாள்.

கைத் தொழில்

தமிழ் நாட்டிற் பெரும்பாலும் எல்லாவகையான கைத் தொழில்களும் வளர்ச்சி அடைந்தன. உரோம தேசத்துச்

---

*"கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறி கிளரவரையொடு
இந்நான்கு" (புறம் 335)

சீமாட்டிகள் அணிந்த பாலாவி போன்ற பட்டாடைகள் தமிழ் நாட்டு நெசவுகாரரால் செய்யப்பட்டனவே. கண்ணைக் கவரும் பலநிற மூட்டப்பட்ட அழகிய பட்டாடைகளை உரோம வியாபாரிகள், நிறைக்குச்சரியான தங்கத்தைக் கொடுத்து வாங்கினர். ஏழாயிரமாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் ஆடை நெய்யும் தொழிலிற் றேர்ச்சி பெற்றிருந்தார்களென்பது மொகஞ்சோதரோ நாகரிகத்தால் அறியப் படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள், பூத்தொழிலுடையனவும், இழைபோன விடந்தெரியாது நுண்ணிய நூல்களால் நெய்யப்பட்டனவுமாகிய பலவகைப் பட்டாடைகளைப் பற்றிக் கூறுகின்றன * அக்காலத்து வழங்கியவிதம் விதமான ஆடைகளின் பெயர்கள் சிலப்பதிகார உரையிற் காணப்படுகின்றன. அவை :

கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், ததரியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி.

அக்காலத்திற் பெண்களே வீட்டிலிருந்து ஆடை நெய்தற்குரிய நூலை நூற்றார்களெனத் தெரிகிறது. † அசந்தாக் குகை, இலங்கையிலுள்ள சிகிரியா முதலிய விடங்களிற்

---

* ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம் (பெரும்பாண்)
புகை விரித்தன்ன பொங்கு துகிலுடீஇ (புறம் 398)

† நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந் தரவுரி யன்ன
அறுவை (பொருநர்)

காணப்படும் புராதீன சித்திரங்களால அக்கால மாதர் நிற மூட்டப்பெற்ற அழகிய பட்டாடைகளை உடுத்தார்களென விளங்குகின்றது.

பொற்கொல்லர் ஆபரணங்கள் செய்வதில் மிகவும் திறமை அடைந்திருந்தனர். அக்காலப் பெண்களும் ஆண்களும் பலவகையான ஆபரணங்களை அணிந்திருந்தனர். இரண்டு பக்கமும் யானைகள் தாமரை மலரை நீட்டி நிற்க நடுவே இலக்குமி வீற்றிருப்பதாகச் செய்யப்பட்ட தெய்வவுத்தி, வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்யப்பட்ட வலம்புரி, அங்காந்தவாளை மீனின் வடிவாகச் செய்யப்பட்ட வாளைப் பகுவாய், பொன்னரி மாலை, பாதசரம் மகரக்குழை சிறுவரணியும் ஐம்படைத்தாலி, அரசரணியும் வீரதண்டை, முடிப்பதக்கம் முதலியவும் இவை போன்றவுமாகிய பலவகை ஆபரணங்களை யெல்லாம் தமிழ்நாட்டுப் பொற்கொல்லரே செய்தனர்.

அக்காலம் யுத்தத்திற் பயன்படுத்துதற்குரிய வேல், வாள் உடைவாள், சூலம், மழு, சக்கரம், அம்புத்தலை இவை போன்றவற்றையும், நாய் கட்டுஞ் சங்கிலி யானை கட்டுஞ் சங்கிலி, கொழு, பாரை, கூனிரும்பு, யானைகளின் கொம்பிலிருக்கும் கிம்புரி, மதிலின் மேல் வைக்கப்படும் பலவகையான இயந்திரங்கள் ஆகியவற்றையும் பிறவற்றையும் தமிழ் நாட்டுக் கொல்லரே செய்தனர்.

அரசர் அரண்மனைகளையும், வீடுகளையும், புலி சிங்கம் முதலியவற்றின் கால் போன்ற திரண்ட காலினையுடைய வட்ட வடிவினவாகிய அழகிய அரசர் பள்ளியறைக் கட்டில்களையும், தேர், சிவிகை, ஓடம், அரசர் வீற்றிருக்கும் சிங்காசனம், உரல், உலக்கை, புலியின் தலை, சிங்கத்தின் தலை போன்ற வாள்களின் பிடிகள், கலப்பை ஆகிய வற்றையும்

அக்கால மக்களுக்கு வேண்டிய மரத்தாற செய்யும் பொருள்களையும் எல்லாம் தமிழ் நாட்டுத் தச்சரே செய்தனர்.

வெண்கலம், செம்பு முதலிய உலோகங்களால் பல வகைப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. வெண்கலத்தினுற் செய்யப்பட்ட எருமை, பசு முதலியன, சரித்திர காலத்துக்கு முற்பட்ட ஈமத்தாழிகளுட் காணப்பட்டன. அவை சிறந்த வேலைப்பாடுகளோடு கூடியவையாய்க் காணப்படுகின்றன. சங்குகள், அறுத்து அழகிய வளையல்களாகச் செய்யப்பட்டன. பானை சட்டி செய்வதில் இப்போது உள்ளவர்களை விட முன்னுள்ளவர்கள் மிகத் திறமையுடையவர்களாயிருந்தார்கள். பளபளப்பான பானை சட்டிகளும் பிரேதங்களை இட்டுப் புதைக்கும் தாழிகளும் பல வடிவிற் செய்யப்பட்டன. தையற்காரரும், செருப்பு முதலியவற்றைச் செய்யும் தோலில் வேலை செய்வோரும் இருந்தனர். மாலை கட்டுதலில தமிழர் சிறப்பாகத் திறமை அடைந்திருந்தனர்.

சிற்பம்

அரசருடைய கோயில்களையும், மானின் கண்போன்ற சாளரங்களையும் நிலா முற்றங்களையுமுடைய அடுக்கு மாளிகைகளையும், பிரமாண்டமான தேவாலயங்களையும் நிருமித்தவர்கள் தமிழ் நாட்டுச் சிற்பிகளே. மதுரைக் கோயில், மேல்நாட்டவருக்கும் திகைப்பை விளைக்கின்றது. தமிழ் நாட்டுச் சிற்பிகள் கோயிற் கட்டடங்களிலேயே தமது முழுத் திறமையையுங் காட்டியிருக்கின்றனர். அமராவதிச் சித்திரங்களும் மாபலிபுர மலைக் கோயிலும் தமிழ் நாட்டுச் சிற்பிகளின் திறமைக்கு எடுத்துக்காட்டுகளாம். தமிழருடைய சிற்பக்கலை தமிழ் நாட்டிலே தோன்றி வளர்ச்சி அடைந்தது. தமிழர் தமது சிற்பக் கலைக்கு ஆரியருக்காவது வேறெவருக்காவது கடமைப்பட்டவர்களல்லர். தமிழர்

மதில்களாற் சூழப்பட்ட அழகிய நகரங்களில் வாழ்ந்தார்களென்று இருக்கு வேதத்திற் பல இடங்களிற் சொல்லப்படுகின்றது. பாண்டவருக்கு இந்திரப் பிரத்தத்தில் பளிங்கு மா மண்டபத்தைக் கட்டி முடித்தவன் மயன் என்னும் திராவிட சிற்பியே என வியாசர் கூறுகின்றார். ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் பல வகையான கடவுட் சிலைகள் எல்லாம் தமிழ்ச் சிற்பிகளின் கைவேலைகளே.

ஓவியம்

ஓவியமும் சிற்பமும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையன. நாடக அரங்கில் பயன்படுத்தும் திரைகளும், விதானச் சீலைகளும் பலவகைச் சித்திரங்களோடு கூடியனவாய் இருந்தன. அரசனது அரண்மனைச் சுவர்களில் பல நிறங்களோடுகூடிய ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தனவென்று சங்கநூல்களிற் சொல்லப்படுகின்றது. அரண்மனையில் சித்திர மண்டபம் என ஓர் மண்டபம் உண்டு. ஆலயங்களிலும், செல்வர்களுடைய மாளிகைகளிலும் அழகிய சித்திரங்கள் எழுதப்பெறுதல் அக்கால வழக்கு. ஆலயங்களின் கோபுரங்களிற் காணப்படும் பலவகையான அழகிய வடிவங்கள் தமிழருடைய ஓவியப் புலமையை விளக்குகின்றன. மொகஞ்சதரோ முத்திரைகளிற் காணப்படும் மனிதர் விலங்குகளின் வடிவங்கள் தமிழரின் 7000 வருடத்துக்கு முற்பட்ட ஓவியப் பயிற்சிக்கு உதாரணமாகும்.

"வேறுபட்ட வினை ஓவத்துவெண் கோயில்" (பட்டினப்பாலை)

"புனை சுவர்ப் பாவையன்ன (நற்றிணை)

"ஓவத்தன்ன வினைபுனை நல்லிற் பாவையன்ன
புலரா மாண்கவின்" (அகம் 98)

வான ஆராய்ச்சி

தமிழர் வான ஆராய்ச்சியிற் றேர்ந்திருந்தனர். மொகஞ்சதரோவின் முத்திரைகளிற் கிடைத்த குறிப்புகளாற் றமிழர் தொன்மையே வான சாத்திரத்தை நன்கு அறிந்திருந்தனர் எனப் புலனாகின்றது. தமிழர் மிகுதியாகக் கடற் பிரயாணஞ் செய்தனர்* பிரயாண காலங்களில் மாலுமிகள் நட்சத்திரங்களையும் சந்திரனையும் நோக்கித் திசை அறிந்து மரக்கலங்களைச் செலுத்தினர். வானத்தை நோக்கி நேரம் அறிந்து கொள்ளவும் அவர்கள் பயின்றிருந்தனர். சந்திரனது இயக்கத்தைக் கொண்டே அவர்கள் மாதங்களைக் கணக்கிட்டனர். மாதத்துக்கு மதி திங்கள் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. தமிழ் நாட்டினின்றும் பிரிந்து சென்ற சாலடிய அக்கேடியர்களும் தமிழர் கொண்ட முறையையே கையாண்டனர். சாலடியர் அக்கேடியரின் உற்பத்தியை அறியாத சரித்திராசிரியர்கள் தமிழர் வான சாத்திரத்தைப் பபிலோனியரிடமிருந்து கற்றனர் எனக் கூறியிருக்கின்றனர். தமிழ் நிகண்டு நூல்களில் நாள் கோள் முதலியவற்றுக்குப் பல பெயர்கள் காணப்படுதலின் தமிழர் வானசாத்திர அறிவை நீண்ட நாள்களுக்கு முன்னரே உடையராய் இருந்தனர் என விளங்குகின்றது.

கிரகங்களின் சத்தியால் மனிதனுக்கு நன்மை தீமைகள் உண்டாகின்றனவென்னும் கொள்கை மிகப் பழமையானது. சோதிட ஞானம் தமிழ் நாட்டிற் சரித்திர காலத்துக்குமுன் உண்டானது. விண்மீன் எரிந்து விழுவது சில துக்க சம்பவத்துக்கறிகுறி என்று கருதப்பட்டது. சூரிய, சந்திர கிரகணங்களும் சில தீமைகளுக்கறிகுறி என்று

* உலகு கிளர்ந்தன்ன வுருகெழு வங்கம்

கருதப்பட்டன. கருப்ப மெய்திய பெண்கள் அவற்றை ஒரு போதும் பார்ப்பதில்லை.

தமிழருடைய விழாக்காலங்கள் சூரியனாலேற்படும் பருவ காலங்களையும் சந்திரனாலுண்டாகும் நிலாக்காலங்களையும் பொறுத்தனவாயிருந்தன. சூரியன் சிங்க இராசியிற் பிரவேசிக்கும்போது அல்லது ஆவணிமாதத்திற் றமிழர்களுடைய புதுவருடம் ஆரம்பமாகி ஆடியில் முடிவடைந்தது. பங்குனி மாதத்தில் விண்மீனொன்று எரிந்து வீழ்ந்த தென்றும் ஏழாவது நாள் அரசன் இறந்தானென்றும் கூடலூர் கிழார் புறம் 229-ல் கூறுகின்றார்*. தமிழருடைய கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது என டாக்டர் சிலாட்டர் (Dr. Slater) கூறியிருக்கின்றார்.

புலவுத்திரைப் பெருங்கட னீரிடை போழ
விரவு மெல்லையு மசைவின் றாகி
விரைசெல லியற்கை வங்கூழாட்டக்
கோடுயர் திணிமண லகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
வாள்வினைப் பிரிந்தகாதலர் நாள் பல
கழியாமையே யழிபடரகலவருவர் (அகம் 225)

(இதன் உரை) உலகம் இடம்விட்டுப் பெயர்ந்தாற் போன்ற பெரிய தோணி, புலால் நாறுகின்ற திரையுடைய பெரிய கடலுக் கூடாக நீரைக் கிழித்து இரவும் பகலும் சோர்வின்றி, விரைந்து வீசும் இயற்கை யுடைய காற்று உதைக்கப்போய் மணற்கும்பம் நிறைந்த பெரிய துறையை மீகாமன் பிடிக்க, வெளிச்ச வீட்டின் ஒளியைக் கண்டு பக்கத்தே தங்கும். இவ்வாறு பொருள் தேடுதற்குச் சென்ற நின் தலைவர் பலநாட்கழியமுன் வருவர்.

* இன்றும் "வெள்ளிவிழுவான்" என்று திட்டுதல் வழக்காயிருக்கின்றது.

"தென்னிந்திய பரதவர் சந்திரனுடைய இயக்கத்தைக் கவனித்துப் பழைய காலத்திற் சந்திர மானமாகக் காலத்தை அளந்தனர். சமவெளிகளிற் பயிரிடும் மக்கள் பருவகாலங் களையும், சூரியனுடைய இயக்கத்தையும் கவனித்தனர். பிராமணர்களின் தொடர்பு ஏற்படுவதன்முன் தமிழர் மிக வும் திருத்தமான வான ஆராய்ச்சி அறிவைப் பெற்றிருந்த னர். வியாழன், இராசி வட்டத்தை ஐந்துமுறை சுற்றி வருதலாகிய அறுபது வருடங்கொண்ட கால அளவை ஆரியருக்குரியதன்று§...என்று மக்லீன் என்னும் ஆசிரியர் கூறுவர்.

" செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும் அவ்வியக்கத்தாற் சூழப்படும் உலகமும், காற்று இயங்கும் திக்கும், ஓராதாரமுமின்றித தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டு போய் அளந்தறிந்தவரைப போல நாளும் இத்துணையவை உடையனவென்று சொல்லும் கல்வியை யுடையோரு முளர்" என்னும் பொருள்பட வரும் புறம் 30-ம் பாடலா லும் பரிபாடலின் பதினொராஞ் செய்யுளாலும் தமிழ் மக்க ளின் வானநூற் புலமையை அறிக.

மருந்து

அரசருடைய உறுதிச் சுற்றத்தாருள் ஒருவர் மருத்து வர். சங்ககாலத்துப் புலவர்கள் சிலர் மருத்துவத் தொழிலை மேற்கொண்டனரென்பது மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லச்சுதனார் முதலிய பெயர்களால் விளங் கும். * நாடி பார்த்து நோய் அறிதல் தமிழ் வைத்தியத் தின் சிறந்த இயல்பாகும். தற்காலம் வழங்குகின்ற வைத்

§ Manual of administration of the Madras Presidency.
* நாடி இருதயத்துடிப்பைக் காட்டுகின்றது.

திய நூல்களைக் கொண்டு அக்காலம் மருந்துக்கலை மிக விருத்தி அடைந்திருந்ததெனஅறியலாம். பதார்த்தகுண சிந்தாமணி என்னும் நூல் தமிழர், மூலிகளின் பயன்களை எவ்வளவு தூரம் ஆராய்ந்து கண்டுபிடித்தார்கள் என்பதற்கு உதாரணமாகும். சல்லியகரணி, சந்தானகரணி, சமனிய கரணி, மிருது சஞ்சீவினி முதலிய மருந்துகள் மிகவுஞ் சிறந்தன என்று சிலப்பதிகார உரையிற் சொல்லப்படுகிறது. வள்ளுவனாரும் மருந்து என்னும் ஓர் அதிகாரத்தைத் திருக்குறளுள் வைத்துள்ளார்.

> "நோய் நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்" [குறள்]

(இதன் பொருள்) மருத்துவனாயினான் நோயாளி மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னதென்று துணிந்து பின், அது வருவதற்குக் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின் அது தீர்க்கும் உபாயத்தினை அறிந்து அதனைச் செய்யும் வழி பிழையாமற் செய்க.

அலெக்சாந்தர் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியர் மருந்துக் கலையில் மிகவும் முன்னேறியிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். கிரேக்கர் பாம்புக் கடிக்கு மருந்து அறியாதவர்களாயிருந்தார்கள். இந்தியர் அதனை எளிதாக மாற்றினார்கள் என்று 'அரியன்' (Arrian) என்னும் ஆசிரியர் கூறுகின்றனர். அலக்சாந்தர் திறமையுள்ள இந்திய வைத்தியர்களைத் தனக்கருகில் வைத்துக்கொண்டு பாம்பினாற் கடியுண்டவர்கள் அரச மாளிகையில் சிகிச்சை பெறலாமென விளம்பரஞ் செய்திருந்தானென்று அவனது தளபதியாகிய நீர்ச்சஸ் (Nearchus) என்பவர் கூறி இருக்கின்றார். இது கிறிஸ்துவுக்கு 300 வருடங்களுக்கு முற்பட்ட நிகழ்ச்சி.

நகர்

நகர் மதிலினாற் சூழப்பட்டிருக்கும். மதிலின் புறத்தே சோலைகளும் ஆலயங்களும் துறவோர் பள்ளிகளும் காணப் படும். நகரின் வாயிலைக் கடந்து செல்லின் அதனைக்காவல் புரிவோர் நெருங்கியுறையும் வீதிகளும், மீன் விலைஞரும், உப்பு வாணிகரும், கள், பிட்டு, அப்பம், வாசனைப்பண்டம், இறைச்சி விற்போர் வசிக்கின்ற வீதிகளும் தோன்றும். இவ்வீதிகளை யடுத்து மட்கலஞ் செயயும் குயவரும், செம்பு வேலை செய்வோர், வெண்கலக்கன்னார், பொற்கொல்லர், தச்சர், மட்பாவை செய்வோர், தையற்காரர், மாலை கட்டு வோர், சோதிடர், பாணர் முதலியோர் தெருக்களும், சங் கறுப்போர் இரத்தினப் பணியாளர் வீதிகளும், நாடகக் கணிகையர் வீதியும், நெல்லுப் புல்லு முதலிய கூலவகை விற்போர் தெருவும், சூதர், மாகதர், வேதாளிகர், பொது மகளிர் தெருக்களும், ஆடை நெய்து விற்போர், பொன் வாணிகர், இரத்தின வியாபாரிகள் வீதிகளும், அந்தணர் அக்கிராகாரமும், இராச வீதியும், மந்திரிகள் வீதியும், பல் வகை அரசாங்க அதிகாரிகள் வாழும் தெருக்களும் அமைந் திருக்கும். இவையேயன்றி யாவரும் வந்து தங்குவதற் குரிய மரத்தடியும், அம்பலமும், முச்சந்திகளும் அருவியோ டும் அழகிய செய்குன்றுகளும் விளங்கும். இவற்றின் மத் தியில் அரசனுடைய அரண்மனை பொன் மயமான மேரு போல் விளங்கும். 'அரண்மனை வட்டமான மதிலினாற் சூழ்ந்திருக்கும். மதில், கோபுரத்தோடு கூடியது. மதிலின் உட்புறத்தே பொய்யாகிய பூமியும், ஏந்திர வாவியும் இள மரச் சோலையும் அந்தப்புர மகளிர் இருக்குமிடமும், ஆயு தச் சாலையும் தானியக் களஞ்சியங்களும், நடந்து செல்லும் பெரிய வாயில்களும், நுழைந்து செல்லும் குறுகிய வாயில்

களும், சபை கூடும் மண்டபமும், நடன சாலைகளும், தேவாலயங்களும், குதிரைப் பந்தியும், யானைப் பந்தியும், படைதங்கு மிடமும் மயில் விளையாடும் 'வெண்ணிறமுடைய செய்குன்றும் இருட்டறையும் காணப்படும்'*

கோட்டை

நகரைச் சூழ்ந்து மதிலும், மதிலைச் சூழ்ந்து வெள்ளிடை (மணல் பரந்த) நிலமும், வெள்ளிடை நிலத்தைச் சூழ்ந்து அகழும், அகழைச் சூழ்ந்து மலையும், மலையைச் சூழ்ந்து காவற் காடும் அரண் செய்யும். மதில் செங்கட்டி சுண்ணும்பு முதலியவற்றால் எடுக்கப்பெற்று ஏணிக்கு எட்டாத உயரமும், பகைவர் தகர்க்கமுடியாத திண்மையும், அகத்துள்ளார் மேலே நின்று போர் செய்யக்கூடிய அகலமுமுடையதாயிருந்தது. பெரும்பாலும் அது நாலு குதிரை பூட்டிய தேர்கள் போகவும் வரவுங்கூடிய அகலமுமுடையதா யிருக்கும். பழைய அசீரியார் பாபிலோனியருடைய கோட்டைகள் இவ்வாறிருந்தன. மதிலைச் சுற்றிப் பல வாயில்களும் கோபுரங்களும் இருந்தன. வாயில்களின் நிலைகள் பல வயிர மரங்களை ஒன்று சேர்த்துச் செய்யப்பட்டன. கதவுகள் இரும்பு அள்ளுகளினுற் பெலப்பித்து இரண்டாகச் செய்யப்பட்டன. அவை திரண்ட மரங்களால் உள்ளே தாளிடப்பட்டன. வீரர் மறைந்திருந்து அம்பெய்தற்குரிய பதுக்கிடங்கள் பல, மதிலைச் சூழ விருந்தன. பகைவர்மீது கல்லை வீசுவனவும், உலோகங்களை உருக்கிச் சொரிவனவும், கொதி எண்ணெயை ஊற்றுவனவும், நெருப்பைக் கொட்டுவனவும், அம்புகளை எய்வனவுமாகிய பல வகைப் பொறிகள் மதிலின்மேல் வைக்கப்பட்டிருந்தன. மதிலைச் சூழ்ந்த வெள்ளிடை நிலம் பகைவர் நின்று பொருதற்

* உதயணன் கதை.

கரிதாய் வெப்பமுடையதாய் இருக்கும். இரும்பினாற் செய்யப்பட்ட யானை நெருஞ்சி அதனிடத்தே பரப்பப்பட்டிருக்கும். இதனை அடுத்துள்ள அகழ்,மிகுந்த ஆழமும் அகலமுமுடையதாயிருக்கும். மிகுந்த ஆழம் உடைமையின் நீர் நீல மணிபோன்ற தோற்றமுடையதாயிருக்கும். சில அகழ்கள் 40 அடி ஆழம் இருந்தனவென்று சில பழைய சாசனங்களிற் காணப்படுகின்றது. அதனகத்தே பெரிய முதலைகளும் ஆட்களை விழுங்கும் பெரிய மீன்களும் வாழும். நகரிற் பெருகும் கழிநீரெல்லாம் கற்படை (மதகு) வாயிலாக வந்து இவ்வகழிலே விழும். கோட்டை வாயிலினின்றும் வெளியே செல்வதற்கு இவ்வகழ்மீது பலகை போடப்பட்டிருக்கும். போர்க்காலங்களில் இப்பலகை எடுக்கப்படும். அகழின் புறத்தே உள்ள காவற்காடு முள் மரங்கள் பல உடையதாயிருக்கும். அதன் இடையிடையே வாள் இரும்பு முள் முதலியன பதிக்கப் பெற்றிருக்கும். அதனைக் காவல் செய்யும் வேட்டுவர் அரண்கள் அவ்விடத்துண்டு. அகழின் புறத்தே இயற்கையான மலை இல்லையாயின் செயற்கையான மலைகளை அமைத்தல் இயல்பு. மலை வெள்ளிடை நிலம் முதலியன இல்லாத அரண்களுமுண்டு. மதிலின் அகத்தினின்றும் வெளியே செல்லும் கள்ளவழிகளாகிய சுருங்கைகள் பல உண்டு. மதிலின் வாயிலில் பந்தும் பாவையும் தூக்குவதும் அக்காலவழக்கு. இது பகைவர்களைப் பெண்களென்று அவமதித்தற்கு அறிகுறியாகும்.

திருவள்ளுவர் அரணின் தன்மையைத் திருக்குறளில் நன்கு விளக்கியுள்ளார். அது வருமாறு:—

“ மணிபோன்ற நீரும், வெள்ளிடை நிலமும் மலையும் குளிர்ந்த நிழலையுடைய காடும், ஏணி எய்தாத உயரமும்

புறத்தார்க்கு அகழலாகா அடி அகலமும், புறத்தோர்க்கு நின்று போர் செய்ய இயலும் தலை அகலமும், செங்கட்டி, கல் முதலியவற்றாற் செய்தமையின் தகர்க்கலாகாத திண்மையும் உடைய மதிலும் உடைய அரண் சிறந்த அரண் எனப்படும். அது, காக்கவேண்டிய இடம் சிறிதாயும், உள்ளே அகன்ற இடமுடையதாயும், அகத்தார் புறத்தார் மேல் அம்பு முதலியவற்றைச் செலுத்திப் போர் செய்தற்குரிய தன்மை யுடையதாயும், அகத்தோர்க்கு வேண்டும் பொருள் எல்லாவற்றையும் உள்ளே உடையதாயும், புறத்தோரால் (மதில்) அழிவெய்தும் எல்லைக் கண் பகைவர் அகத்து எய்தா வகை காக்க வல்ல நல்ல வீரரை யுடையதாயு மிருக்கும். அது, வீரர் உள்ளிருந்து வெளியே செல்லாவாறும், வெளியேயிருந்து உள்ளே புகாவாறும் நெருங்கிச் சூழ்ந்து முற்றுகை இட்டும், அங்ஙனம் சூழாது நெகிழ்ந்த விடம் நோக்கி ஒருமுகமாகப் போர் செய்தும், துணிவுடையோரை ஏவிக் கதவினைத் திறந்தும் பகைவர் அகத்தோரைக் கொள்ளுதற் கரிதாயிருக்கும். படைப் பெருமை வல்லவராய் வந்து சூழ்ந்த புறத்தோரை, அகத்தோர், தாம் பற்றிய இடம் விடாது நின்று பொருது வெல்லத்தக்கதும், அகத்தோர் செய்யும் தொழில் வேறுபாட்டால் வீறுபெற்று புறத்தோர் அறியாமற் புகுதல் போதல் செய்தற்குச் சுருங்கை வழி முதலியவுடையதும் சிறந்த அரணாகக் கருதப்படும்.

முடிவுரை

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளின் முன்னரே தமிழ் மக்கள் எகிப்தியர், பாபிலோனியர்களைவிட உயர்ந்த நாகரிகம் எய்தியிருந்தார்கள் என்பதை மொகஞ்சதரோப் புதைபொருள் ஆராய்ச்சி வெளியிடுகின்றது. அக்கால நாக

ரிகம் கற்கால இறுதியிலும் உலோககாலத் தொடக்கத்தி லும் உள்ளதாயினும் அது சங்ககால நாகரிகத்துக்கும் இன் றைய மக்களின் நாகரிகத்துக்கும் எவ்வாற்றானும் தாழ்ந் தன்று. மொகஞ்சதரோப் புதைபொருள் ஆராய்ச்சியும் சங்கநூல் ஆராய்ச்சியும் வெளியிடுவது என்னவென்றால் தமிழ்மக்கள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வீழ் நிலை அடையாது உயர்ந்த நாகரிகமுடையவர்களாய் வந் திருக்கிறார்க ளென்பதேயாகும். ஆனமையினாலேயே ஆரியர் கலப்பினாலும் தமிழர் நாகரிகம் மொழி ஆதியன சிதைவுபடவில்லை. இவர்களுடன் கலக்கநேர்ந்த ஆரியர் தாமும் இவர்களின் கலைகளையும் ஒழுக்கங்களையும் வழி பாட்டு முறைகளையும் பின்பற்றுவா ராயினர்.

VI. தமிழர் ஆரியர் கலப்பு

இப்பொருளுரையின் வரலாறு

இப்பொருள் பற்றிய கட்டுரை இற்றைக்கு முப்பத் தொரு வருடங்களின் முன் பண்டிதர் சவரிராய பிள்ளை அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று சித்தாந்த தீபிகை என்னும் பத்திரிகையின் நாலாம் ஐந்தாம் புத்த கங்களில் வெளிவந்துள்ளது. இத்துணை ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டபோதும் அக்கட்டுரை புதுமையும் ஆராய்ச்சி நுட்பமும் பெற்று மிளிர்கின்றது. அது தமிழர் வரலாற்றில் மயக்கத்தைக் கொடுக்கும் பலவற்றுக்கு விடை யளிப்பதாயும் விந்தத்துக்கு வடக்கே உள்ள தமிழரின் சரித்திரத்தைக் கூறுவதாயு மிருக்கின்றது. அக்கட்டுரை இதுவரை புத்தக வடிவில் வராமையாலும், சித்தாந்த தீபி கையின் பழைய இதழ்களைத் தேடிப் பெறுதல் மிக அருமையா யிருப்பதினாலும் அவ்வரிய கட்டுரையை

ஆராய்ச்சிகாரர் படித்து மகிழ்தல் அரிதாயிருக்கின்றது. தமிழர் சரித்திரத்தைப் பூரணமாக விளங்கிக்கொள்வதற்கு அக் கட்டுரை இன்றி அமையாததா யிருக்கின்றமையின் அதனைச் சுருக்கித் தமிழிற் றருகின்றேம்.

ஆசிரியர் கட்டுரை எழுதுகின்ற காலத்தில் மொகஞ் சதரோ, ஹரப்பா, நால் முதலிய விடங்களின் புதை பொருள்கள் அகப்படவில்லை. தமிழருக்கும் அசிரியர் பாபிலோனியர் சுமேரியருக்கு மிடையிலுள்ள தொடர்பைக் கவனித்த ஆசிரியர், சுமேரியரே தமிழ்நாட்டில் வந்து குடியேறினர் எனத் தமது கட்டுரையிற் கூறி இருக்கின்றனர். சமீபகாலத்திற் கிடைத்த பல ஆதாரங்களைக் கொண்டு தமிழரே சுமேரியாவுக்குச் சென்று குடியேறினர் என்னும் கொள்கை தாபிக்கப்பட்டுள்ளது *. தமிழர் சுமேரியாவி னின்றும் வந்தவர்கள் என்று பொருள்படவரும் பகுதி களை மாற்றியுள்ளேம்.

சுமேரியர், சுமேரியாவின் பூர்வகுடிகளல்லர் என்றும் அவர்கள் புதிதாகக் கிழக்குத் திசையினின்றும் வந்து குடியேறியவர்களென்றும் " சரித்திராசிரியர்களின் சரித்திரம் " என்னும் நூல் கூறுகின்றது†. டாக்டர் ஹால் (Dr. Hall)

* Fr Heras: G. R. Hunter முதலியோர் இக் கருத்தை நன்கு ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.

† " Whence, then, did the Sumerians originally come, before they took possession of the swarmpy Euphrates valley and settled there?

There is a word in Sumerian, " Kar " (Turkish yer) which means country (as does the Turkish, word). But in Sumerian it has also come to signify ' mountain and likewise ' east ' (since the mountains lie only in the east of Babylonia) meanings which the Turkish

என்னும் ஆசிரியர், சுமேரியர் சிந்து நாட்டினின்றும் பாபிலோனுக்குச் சென்றவர்களாகக் காணப்படுகின்றனர் எனக் 'கிட்டிய கிழக்குத் தேசங்களின் பழைய வரலாறு,' என்னும் நூலிற் கூறியிருக்கின்றனர். † பாபிலோனியர் அசிரியர் என்னும் சாதியார்களும் கிழக்குத் தேசங்களினின்றும் வந்து கி. மு. 500. ஆண்டுகளுக்குமுன் குடியேறினவர்களே என்று சரித்திரக்காரர் கூறுகின்றனர்.*

சுமேரியர் சிந்து நதியை அடுத்த நாடுகளினின்று சென்றவர்கள் ஆவர் எனக் கருதப்படுகின்றனர். சிந்துநதிர மக்கள் அக்காலத்திற் குதிரையைப்பற்றி அறியார்கள் எனச் சரித்திரக்காரர் கூறுவது சரியாயிருக்கலாம். ரங்க இலக்கியங்களிற் கழுதைகளில் ஆட்கள் ஏறிச் செல்வதைப் பற்றிக் கூறப்படுகின்றது. கோவேறு கழுதை என்னும் சொல்

---

word does not bear. This is, therefore, a clear indication that, even after the Sumerians had settled in Babylonia, the range of the Median frontier and what lay behind it always passed with them for their true country, the original home whence they had come. There is also extreme significance in the fact that they were originally unacquainted with both the lion and the horse, as also wine with vine, and the palm tree, for they had no names for them, and called the lion 'great dog' (nug magh) the horse 'ass of the mountains, or of the east' wine the 'drink of life' (Gish-tin, from gash-tin) and the palm 'tree of magan', (mis-magan) or 'the upright' (Historians, History of the world Vol. I pp. 343, 4.

† The ancient history of the near east pp. 173—4.

* "The Babylonians and Assyrians must have separated from the common stock in some part of Central Asia where the lion was indigenous, and emigrated

லால் மிகப்பழைய காலத்தில அரசரும் கழுதையில் ஏறிச் சென்றார்கள் எனக் கருத இடமுண்டு.

இச் சந்தர்ப்பத்தில் எகிப்திய பினீசியர்களின் உற்பத்தியைக் குறித்துச் சரித்திர நிபுணர்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும் குறிப்பிடுகின்றோம். பிளின்டேர்ஸ் பெற்றி என்னும் பேராசிரியர் எகிப்தியரும் பினீசியரும் ஒரே உற்பத்தியைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் பண்டு நாட்டினின்றும் வந்து குடியேறினவர்கள் என்றும் சாதித்திருக்கின்றனர்.† ஹீரென் என்னும் ஆசிரியர், எகிப்தியர் தமிழர்களுடைய மண்டை ஓட்டின் அளவு சரியாயிருத்தலைக் காட்டி, எகிப்தியரின் இந்திய உற்பத்தியை நாட்டியிருக்

---

into northern Babylonia through one of the passes of the Medio-Elamite range no later than the fifth millennium B. C. The rest however came by way of the southern shore of the Caspian sea—probably towards the end of the fourth millenium and at the events later than the Hamites of Northern Babylonia—and entered what was Aramaean Mesopotamia from the north, then occupied it, and spread gradually from thence to Syria, Palestine, and Arabia. So, by subsequent offshoots and migrations, they became the Aramaeans, Canaanites and Arabs (Historians' History of the world. Vol. 1 P. 347.)

I Havell. என்னும் ஆசிரியர் இந்தியாவில் ஆரியரின் ஆட்சி என்னும் நூலில் (ப 50) சுமேரியர் இந்தியாவினின்றும் வந்த திராவிடர் எனக் கூறியுள்ளார்.

† One of the most recent authorities, Prof. Flinders Petrie, inclines to the opinion that the Egyptians were of common origin with the Phoenicians, and that they have come into the Nile region from the land of Punt, across the Red Sea (H. H. of the world P. 77.)

கின்றனர்.‡ 'பண்டு' என்பது பாண்டிய நாடன்றி வேறு இடமன்று என டாக்டர் அபினஸ் சந்திரதாஸ் என்னும் ஆசிரியர் 'இருக்குவேத இந்தியா' என்னும் நூலிற் றாபித்திருக்கின்றனர்.* 'பண்டு என்னும் நாடு, மலைகளும் பள்ளத்தாக்குகளும், கருங்காலி, வாசனையுள்ள மரங்கள், தெங்கு, வாசனைப்பொருள்கள், சிறுத்தை, புலி, நாய்த்தலையுள்ள குரங்கு, நீண்டவாலுள்ள மந்தி, விசித்திரமான பட்சிகள், ஆலயங்கள் நிறைந்த நாடு எனக் கருதப்பட்டது.¶ 'பன்ற்' என்பது அராபியாவுக்குச் சமீபத்திலுள்ள சொமாலிலந்து என்று கருதப்பட்டது. எகிப்தியருக்கும் தமிழருக்கும் பழைய வியாபாரத் தொடர்பு இருந்ததோடு இருவரின் பழக்கவழக்கம் தோற்றம் வடிவம் ஆதியனவும் ஒத்திருத்தலின் 'பன்ற்' என்பது தென்னிந்தியாவிலுள்ள பாண்டி நாட்டையே ஆமென்பது தெளிவாகின்றது.

தமிழர் ஆரியர் கலப்பு

ஆரிய தேசத்தினின்றும் வந்த அலைந்து திரியும் ஒரு கூட்டத்தினர் இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு

‡ Among the earlier students of the subject, Heeren was prominent in pointing out an alleged analogy between the form of skull of the Egyptian and that of the Indian races. He beliveed in the indian origin of the Egyptians. (Ibid. P. 77).

* This part of india could have been no other than the Malabar coast peopled by the Pandyas which was probably called the land of the Pandias afterwards corrupted in Egypt into the land of Punt. (Rig Vedic India—Dr. Abinas Chandra Das.)

¶ Under the name of Punt, the ancient inhabitants of Kamat understood a distant country, washed by the great sea full of valleys and hills

முன் சிந்துநதிக்கரையிற் குடியேறினர். ஆரியர் என்னும் சொல்லுக்குப் பிரபுத்தனம் என்னும் பொருள் பிற்காலத்திற் கொடுக்கப்பட்டதாயினும் அதற்கு அவர் மொழியில் மிலேச்சர் என்பதே பொருளாகும். இப்புதிய மக்கள் எங்கிருந்து வந்தார்கள்? இப்பாரத பூமியிலுள்ள ஒவ்வொரு உயிருள்ள பிராணியும் இப்பூமிக்கே சொந்தமானது என்று எமது முன்னோர் நம்பினர். மொழி ஆராய்ச்சியால் ஒவ்வொரு மனிதக்கூட்டத்தின் உற்பத்தித் தானத்தையும் அறிந்துகொள்ளுதல் இலகுவாயிருக்கின்றது. ஒரு சாதியாரின் சரித்திரத் தொடர்பும், சரித்திரத்திற்குரிய ஆதாரமும் எங்கு நின்று விடுகின்றனவோ அவ்விடத்து, மொழி, சரித்திரகாலத்துக்கு முற்பட்ட அவர் வரலாற்றையும், அவர் பிரிவதற்குமுன் வாழ்ந்த பொது இடத்தையும் அறிவிக்கின்றது.

சிந்துநதி தீரத்திற் புதிதாய வந்து குடியேறிய புதிய மக்களின் மொழி, ஆராய்ச்சி, அவர்களின் உற்பத்தியைப் பாரத பூமிக்கு அப்பால் கஸ்பியன், ஆரற் கடல்களை அடுத்த நாடுகளுக்குக் கொண்டுபோய் நம்மை விடுகின்றது. ஆரற் கடலோடு ஒருகாலத்து இணைக்கப்பட்டுக் கிடந்த கஸ்பியன் கடலும் தெற்கே கிடந்த வனுந்தரமும் இம்மக்களை நாகரிகத்தில் முதிர்ந்த பாபிலோனியரோடு கலந்துகொள்

---

rich in ebony and other valueable woods in incense balsum, precious metals and stones, rich also in animals, for there are cameleopards, cheetas, panthers, dogheaded apes and long tailed monkeys. Winged creatures with strange feathers flew up to the boughs of wonderful trees, specially of the incense tree and the cocoanut palm". "According to the old dim legend, the land of Punt was the premeval dwelling of the gods (H. H. of the world Vol I P. 108.)

ளாதபடி தடுத்தன. தமது நாட்டினின்றும் கிளம்பிய ஒரு கூட்டத்தினர் நீண்டகாலம் தென்கிழக்காக அலைந்து திரிந்தனர். பின் தெற்கு நோக்கிச் சென்று சிந்து நதியின் மேற்குக் கரையிற் குடியேறினர். ஆரியர் சிந்துநதி தீரத்தில் வந்து கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் குடியேறினார்களென்பது மேல் நாட்டு ஆசிரியர்களுடைய கொள்கை.

ஆரியர் சிந்துநதி தீரத்தில் வந்து முதன் முதற் குடியேறும்போது குமரி முதல் இமயம் வரையில் நாகரிகத்தில் முதிர்ந்த ஒரே இன மக்கள் குடியேறியிருந்தனர். பரதர் என்னும் இப் பூர்வசாதியார் குடியேறி யிருந்தமையின் இந்நாடு 'பாரத வருடம்' என்னும் பெயர் பெற்றது என்று விட்டுணு புராணங் கூறுகின்றது. இந்தியா முழுமையும் பரதர்வசம் இருந்தது. பரதர் என்னும் சொல், உச்சரிப்பு வேறுபாட்டால்; பிற்காலத்துப் பல மாறுதல்களடைந்தது இந்துஸ்தானத்தில் இருந்தோர் 'கோடர்' என்றும் தக்கணத்தில் வாழ்ந்தோர் திராவிடர் என்றும் அழைக்கப் பட்டனர்.

பரதவர் என்னும் பெயர் மலையைக்குறிக்கும் 'பார்' என்னுமடியாகப் பிறந்ததென்பர் டாக்டர் ஓப்போட் அவர்கள். பார் என்பதின் ஆதிப் பொருள் மலை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டி யிருக்கின்றது. தமிழருடைய ஆதி இடம் மலையாகவே இருந்தது. பழைய தமிழ்நாட்டு அரசனுக்குச் சிறப்பாக ஒரு மலை உரியதாயிருந்தது. இது அவனுடைய முன்னோர் மலையிலுள்ளவர்கள் என்பதை ஞாபகப்படுத்துகின்றது. தமிழ்க் கடவுளாகிய முருகனது இருப்பிடங்கள் மலைகளாகக் காணப்படுகின்றன. அக் கடவுள் மலை உச்சிகளில் வணங்கப்படுகின்றனர். தமிழ்

மக்களின் காதல், அரசியல்களைக் கூறும் அகப்பொருள் புறப்பொருள் நூல்கள் அவர்களுடைய பழைய பழக்க வழக்கங்களை விரித்துக் கூறுகின்றன. தலைவனும் தலைவியும் சந்தித்துக் காதலிக்கும் காட்சி மலையிடமாயிருந்தது. போரின் ஆரம்பமாகிய நிரைகவர்தலும் மலையை அடுத்த நிலங்களில் நிகழ்ந்தது. இவற்றால் தமிழரின் உற்பத்தி ஏதோ மலையிடமென்று தெளிவாகின்றது. தமிழர் தமது உற்பத்தித்தானத்திலல்லாமல் குடியேறிய நாட்டிலும் சலப்பிரளயம் சம்பந்தமாகவும் மலையையே கொண்டனர். மனுவென்னும் திராவிட அரசனின் பேழை மலயக்குன்றிற் றங்கியதென்றும், அவர் பேழையை விட்டிறங்கி மலயத்தின் ஓர் இடத்தில் மக்களின் நன்மைக்காகக் கடுந்தவஞ் செய்தாரென்றும மச்ச புராணங் கூறுகின்றது. முற்காலத்தவர்கள் பல காரணங்களை முன்னிட்டு மலைகளையும் உயர்ந்த இடங்களையும் வாழும் இடங்களாகக் கொண்டனர்.

சமவெளிகள் முற்றாகக் குடியேறப் பெறுவிட்டாலும் பயமில்லாமல் வாழக்கூடிய இடங்கள் மலையே. ஆரியர் அல்லாத எல்லாச் சாதியாரும் துரானிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் அவர்களின் உற்பத்தி அத்லாந்திக் மலைகளென்றும் ஒரு காலத்திற் கருதப்பட்டது. டாக்டர் கடல்வேல், திராவிடர் துரானிய வகுப்பினரென்றும் அவர்கள் மத்திய ஆசியாவினின்றும், தெற்கே வந்து இந்துஸ்தானத்திற் குடியேறினார்களென்றும், அவர்கள் ஆரியரால் வென்று தெற்கே துரத்தப்பட்டார்களென்றும் அவர்களே தென்னிந்தியாவிற் காணப்படும் தமிழர் என்றும் கூறியுள்ளார். இக்கொள்கையைச் சாதிப்பதற்கு அடிப்படையான ஆதாரம் எதுவுமில்லை.

தென்னிந்திய மாறவமிசமும் வட இந்திய பரதவமிசமும் ஒரே காலத்தில் இருந்தன. மாறவமிசம் பரதவமிசத்

துக்கு முற்பட்டதெனக் கூறலாம். தமிழரின் உற்பத்தி இடம் மத்திய ஆசியாவல்ல அன்று இந்திய நாடே.§

எல்லத்திலுள்ள பழைய அக்கேடியரோடும் சாலடிய ரோடும் ஒற்றுமையுடைய தமிழர், உலகில் முதற்கண் சீர் திருத்தமுற்ற சாதியாராவர். அக்கேடியர், சாலடியரின் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் சிறிது சிறிதாக வெளிவருகின்றன. அவற்றுட் பல இன்னும் நிலத்துட் புதைந்து கிடக்கின்றன. இத்தாலியிற் பழைய எற்றாஸ்கனியரும், கங்கேரி மக்களும் பின்லந்தில் பின்னியரும் கிழக்குத் தேசத் தமிழரின் பிரிவினராவர்.

எகிப்தியர் தெற்கே, வாழ்ந்த தமிழர்களாகிய பரதரைப் பாண்டு என்று அழைத்தனர். பரதர் வாழ்ந்த பாண்டுநாடு மிகப் பரிசுத்த முடையதாக எகிப்தியராற் கருதப்பட்டது.

சிந்து நதியின் மேற்குக் கரையில் ஆதியில் வந்து குடியேறிய ஆரியர் பாரத நாடு சீர்திருத்தமடைந்திருப்பதையும், அது வலிய அரசரால் நன்கு ஆளப்படுவதையும் கண்டனர்.† இருக்குவேத பாடல்கள் அவர்களுடைய தொண்ணூறு கோட்டைகளையும் ஏழு வலிய அரண்களைப்பற்றியும் கூறுகின்றன. இவைகள் பஞ்சாப்பில் இருந்தனவாகலாம்.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட இந்திய அரசர் பரதர் எனப்பட்டனர். இருந்து அரசனையுடைய இப்பரம்பரை

§ தமிழரே சிந்து நாட்டினின்று பாரசீகம் வழியாகவும் கடல் வழியாகவும் சென்று பாபிலோனிற் குடியேறினார்கள். பல வேறு காலங்களில் தமிழர் சுமேரியாவிலும், சுமேரியர் தமிழ் நாட்டிலும் சென்று குடியேறுவாராயினர்.

† மொகஞ்சதரோப்புதை பொருள் ஆராய்ச்சி தமிழரின் ஆரியர் வருகைக்கு முற்பட்ட உயர்ந்த நாகரிகத்தை நன்கு வெளியிடுகின்றது.

ஐந்து நூற்றாண்டுகளாவது ஆட்சிபுரிந்து ஆரியர் வருகைக்கு முன் வீழ்ச்சி அடைந்திருக்கவேண்டும். இவர்களுக்குப் பின் இன்னொரு சந்ததியார் ஆண்டனர். இவர்களை ஆரியர் அசுரர் என்றழைத்தனர். அசுரர் என்பதற்கு இறைவன் என்பது பொருள். இது அரசு என்னும் தமிழ்ப் பதத்தின் உச்சரிப்பு வேறுபாடு எனக்கருத இடமுண்டு. இருக்கு வேதத்தில் அசுரர் என்னுஞ் சொல் பெருமை அல்லது வலிமை என்னும் பண்பைக் குறிக்கின்றது; இருக்குவேதத்தின் பத்தாம் மண்டிலத்தைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இவ்வுண்மையைத் தத்தர் பழைய இந்தியா என்னும் நூலின் 201-ம் பக்கத்தில் விளக்கியிருக்கின்றார். பிரமாணங்களில் இச்சொல் வேறு பொருளில் வழங்கப்பட்டிருக்கின்றது. அங்கு கடவுளின் பகைவரைக் குறிப்பதற்கு உபயோகிக்கப் படுகின்றது.

சமக்கிருதத்தில் அரசனைக் குறிக்கும் 'ராயன்' என்னும் சொல் அரசு என்னும் சொல்லின் உச்சரிப்பு வேறுபாடு. அரசன் என்பதற்குச் சரியான சமக்கிருத பதம் பதி. இது விஸ்பதி (இராயனல்லாதவன்) என இவ்வாறு வரும் சொற்களால் அறியப்படும். தமிழ் இறை, உச்சரிப்பு முறையாக, எகிப்திய 'றெ' என்னும் சூரியனைக் குறிக்கும். 'றெ' என்னுஞ் சொல்லோடு உரோமானியருடைய 'றெக்ஸ்' 'ரேய்' என்னும் சொற்கள் ஒற்றுமையுடையன. ரோமனியருடைய 'றெ' என்பதை மூலமாகக் கொண்டு இச்சொற்கள் பொது உற்பத்திக்குரியன வென்று துணிந்து கூறலாம்.

சிந்துநதி தீரத்திற் குடியேறினோர் படை யெடுத்து வந்தோரல்லர். அவர்கள் ஆடு மாடுகளுடன் புற்றரைகளை நாடி அலைந்து திரிந்த சாந்தமானவர்களே. விருந்தினரை வர

வேற்று ஓம்புவது தமிழரின் இயற்கைப் பண்பு. அரசர் அன்னியருக்கு அன்பும் தயவுங் காட்டினர். பயிரிடாது விடு நிலமாய்க் கிடந்த நிலங்களைத் திருத்திப் பயிரிடுமாறு புதிய மக்கள் அனுமதிக்கப் பட்டனர். புதிதாக வந்தவர் களுக்கும் அரசாட்சியாருக்கு மிடையில் போர்கள் நிகழ்ந் தன. ஆரியருடன் போர் புரிந்தவர்கள் இருக்கு வேதத்தில் தாசுக்கள் என்றழைக்கப்படுகின்றனர். தாசுக்கள் என்பதற் குச் சத்துராதிகள் என்பது பொருள். வேத பாடல்கள் இவர்கள் மூக்கில்லாதவர்கள், கடவுள் இல்லாதவர்கள் என்று கூறுகின்றன.

தத்தர் புதிதாக ஒன்றையும் ஆராய்ந்து கூறாது ஐரோப் பிய வரலாற்றாசிரியர்கள் எழுதியவற்றையே திரட்டி அழ கான நடையில் எழுதியிருக்கின்றனர்; ஆரியப் பிராமண ருக்கு ஞானம் போதித்த இராமானுசர், பகவத் கீதையின் ஆசிரியராகிய கண்ணன், கீழ்த்திசையில் ஞானத்தை உதிப் பித்த புத்தர் ஆதியோர் யாவர் என ஆராயவில்லை. ஆரியர் பாரத பூமியில் ஒவ்வொரு அடியையும் வெற்றியினாலேயே முன்னுக்கு வைத்தார்கள் என்று கூறும் அவர் கூற்றில் ஏதும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஆரியர் தென் னிந்தியரை கி. மு. பத்தாம் நூற்றாண்டில் வெற்றி பெற்றார் எனக் கூறும் அவர் கூற்று உண்மையிலிருந்து வெகுதூரம். அக்காலத்துக்கு முற்பட்ட ஆரியர், உபநிடதங்கள் எழுதப் படுகின்ற காலத்துச் சமயஞானங்களை விசாரித்தறிவதற்குத் தெற்கே வந்தார்கள் என்பது உண்மையே. அதன் விளை வாக உபநிடதங்களுக்குப் பின் எழுதப்பட்ட சூத்திரங்கள் தென்னிந்தியாவில் எழுதப்பட்டன. சூத்திரங்களுக்கு உரை எழுதிய போதாயனரும் அபஸ்தம்பரும் முறையே கி. மு. 5, 6-ம் நூற்றாண்டில் விளங்கியவர்கள். இவர்கள்

கோதாவரி கிருஷ்ணாநதிகளுக்கிடையே உள்ள ஆந்திர தேசக் கலைஞானக் கொள்கைகளைப் பின்பற்றிய தமிழர். சமக்கிருதத்தையும் சமக்கிருத வரலாற்றையும் படித்து இந்து நாகரிகத்தை அறிந்து கொள்ளமுடியாது. முறையான ஆராய்ச்சி செய்யும் சரித்திரக்காரர், கிருஷ்ணா, காவேரி, வையை முதலிய ஆறுகள் பாய்கின்ற நாடுகளைப் பற்றி அறிந்துகொண்டபின் தான் கங்காநதியை அடுத்தநாடுகளைப் பற்றி ஆராயவேண்டும்" என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் ஓரிடத்துக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இனிப் பொருளில் செல்வோம். ஆரியர் சிந்து நதிக்கரையிற் குடியேறினது முதல் (கி. மு. 2000 முதல் 1400) வரையுமுள்ள அவர்களின் வேதபாடல்கள் தொகுக்கப்பட்டதை அறிந்து கொண்டோம். வேதபாடல்கள் பாடி முடிவதற்கு 600 ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. அப் பாடல்களால், ஆரியர் நாட்டின் கரை வழியாகச் சென்றும், சில சமயங்களிற் படை எடுத்தும் பஞ்சாப் முழுவதையும் கைப் பற்றி யிருந்தார்களென அறிகின்றோம். இரு சாதியாருக் கிடையிலும் நட்பு முறையான தொடர்பு ஏற்பட்டிருத்தல் கூடும். புதிதாக வேறிடங்களுக்குச் சென்று வாழும் மக்களிடையே இவ்வகையான நிகழ்ச்சி ஏற்படுவது இயல்பு. திருமணம் கலப்பினால் இரு சாதியார்களும் ஒன்றுபோற் சேர்ந்து பலமடைந்தனர். ஐந்து ஆறுகள் பாயும் நாட்டிலுள்ளவர்கள் கலப்பில்லாத சாதியாரென வெளி உலகிற் சொல்லப்பட்டாலும் அவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்த ஆரியக்குழுவினர் என்று நம்பமுடியாது. புராண வரலாறுகளாலும், பிராமணருடைய கன்னபரம்பரை வரலாற்றாலும் பஞ்சாப்பின் பூர்வ மக்கள் எட்டு வெவ்வேறு கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று விளங்குகின்றது. அவருள் மூன்றில்

ஒரு பகுதியினர் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆராய்ந்து கூறலாம். ஓரினத்தைச் சேர்ந்த அத்திரி, கண்ணுவர், விசுவாமித்திரர் என்னும் மூன்று வமிசத்தினரும் தமிழர் அல்லது பரதவராவர். பிராமணர் என்று கருதப் பட்டவருட் பலர் தமிழ் வகுப்பைச் சார்ந்தவர். பழைய காலத்திற் சாதித் தடை இருக்கவில்லை. கலப்பு மணங்கள் நடைபெற்றன. முன் இருந்தவர்களும் புதியவர்களும் கலந்தமையினால் வலிமை ஏற்பட்டது. அரசாங்கம் பலப் பட்டது. உலகசரித்திரத்தில் இம் முறை புதுமையான தன்று.

இரானியர் என்னும் ஆரியரின் கிழக்குப் பிரிவினர் பாரசீகத்தை அடைந்து அங்கு வாழ்ந்த பாரசீகரோடு கலந்து ஒன்றுபட்டனர்.

டெல்கிக்கு அண்மையில் கங்காநதி தீரத்திலிருந்த அத்தினபுரியாகிய தமிழர் இராச்சியத்தால் ஆரியரின் வளர்ச்சி பஞ்சாபிற்கு வெளியிற் செல்லாமல் தடைபட் டது. பாஞ்சாலம், கோசலம், விதேகம் விஸ்வல, மதுரை, மகதம், மாளவம் முதலியன தமிழருடைய மற்றைய இராச் சியங்களுட் பிரதானமானவை. இத்தேசங்கள் இமயமலை விந்தமலை கிழக்கு மேற்குக் கடல் ஆகிய எல்லைகளின் இடையே கிடந்தன. பரசீகக் கரையிலுள்ள நாடுகள் அத்தினபுரத்தரசனுக்குத் திறை அளித்தன. இது பாரத யுத்த காலம் வரையும் நடைபெற்றது. அம்பல்லா என்னு மிடத்துக்கு 26 மையில் தொலைவிலுள்ள தனேஷ்வா என் னும் இடத்தில் கி. மு. 14-ம் நூற்றாண்டில் பாரத யுத்தம் நேர்ந்தது. குரு, பாண்டவா என்னும் ஒரே குடும்பத்தினருக் கிடையில் இப்போர் நிகழ்ந்தாலும் பாரத பூமியிலுள்ள அரசர் எல்லோரும் ஒவ்வோர் பக்கத்தைச் சேர்ந்து போர்

செய்திருக்கின்றனர். இப்போர் வடக்கே இருந்த இராச்சியங்களுக்குத் தலை அடியாயிருந்தது. சிறு இராச்சியங்கள் சுயேச்சை பெற்றன. பஞ்சாப்பில் அடைபட்டிருந்த ஆரியருக்கு வழி திறந்தது. சொகுசான வாழ்க்கையால் தமிழர் போர் செய்யும் வீரத்தை இழந்தனர்.

இவ்விபரங்களை இருக்கு வேதத்திற் காணலாம். இருக்கு வேதம் பஞ்சாப் கபூல் என்னும் இரு இடங்களைப் பற்றிச் சொல்லுகின்றது. சொல்லப்பட்டவற்றுள் கங்கா நதியும் யமுனையும் அருமையாகக் கூறப்படுகின்றன. ஆகவே பஞ்சாப்பிலிருந்த ஆரியர் அவற்றை நன்கறிந்திருக்கவில்லை என்று விளங்குகின்றது. அப்பொழுது ஆரியர், வானம், விண், புயல், இடி முதலிய இயற்கைப் பொருள்களை வணங்கினர். மிருகபலி கொடுத்தனர். அவர்கள் சமயச்சடங்குகளும் யாகங்களும் புரியுமிடங்கள் சிந்துநதிக்கரையும் அதின்கிளைகளும் சரசுவதி நதியுமா யிருந்தன. அவர்கள் தமிழர்க்குரிய சிவவணக்கத்தையும் சமயக்கொள்கையையும் அறியாதவர்களா யிருந்தனர்.

பழைய வேதபாடல்களில் சிவனைப்பற்றிச் சொல்லப் படவில்லை என முதன் முதற் கூறியவர் டாக்டர் ஸ்டீபின் ஆவர். உருத்திரன், அக்கினி என்று சொல்லப்பட்டாலும் அக்கினியையும் உருத்திரனையும் சிவன் என்று கூறமுடியாது. தக்கன் சிவனை யாகத் துக்கு அழைக்கவில்லையென்றும் ஆனால் பதினொரு உருத்திரரும் யாகத்துக்குச் சென்றிருந்தனர் என்றும் சொல்லப்படுகின்றன. சிவன் தமிழர் கடவுள். அவர் இரண்டு வகையான வழிபாட்டுக்குரியர். ஒன்று கண்ணுக்குப் புலப்படாத தியான வடிவம். ஒன்று கண்ணுக்குப் புலப்படும் இலிங்கவடிவம். பூவும் புகையுங் கொண்டு கடவுளை வழிபடுதல் தமிழரின் பழையமுறை.

பூ இதயத்தையும், புகை அது இளகுவதையும் குறிக்கும். இலங்கை அரசனும் இராவணீயம் என்னும் இசை நூல் செய்தவனுமாகிய இராவணன் பொன் இலிங்க மொன்றைத் தன்னுடன் கொண்டு திரிந்து பூவும் புகையும் கொண்டு வழிபட்டான். இராவணன் மாத்திரமல்லன், வாணன் வாலி முதலாயினோரும் தமிழ் முனிவர்களும் சிவ வணக்கத்துக்குரியோராவர். அவர்கள் சிவனைத் தியான வடிவாகவும் மூர்த்தி வடிவாகவும் வழிபட்டனர். தமிழர் மதத்தை இன்னும் பின்பற்றாத பஞ்சாப்பிலுள்ள ஆரியர் சிவ வழிபாட்டை அறியாதிருந்தனர். ஆரியருக்கும் தமிழருக்கும் பகை ஏற்பட்டால் அது சமயத்தைப் பொறுத்ததாயிருந்தது. ஆரியருடைய தெய்வங்கள் கீழாக மதிக்கப்பட்டதோடு அவர்கள் புரியும் யாகங்களும் அழிக்கப்பட்டன. இக் காரணத்தினாலேயே, உயர்ந்தோரைக் குறிக்கும் அசுரர் என்னுஞ் சொல் தேவர்களின் எதிரிகள் எனனும் பொருளைக் குறிக்க இருக்கு வேதத்தின் பத்தாம் மண்டிலத்திலும் பிரமாணங்களிலும் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆரியருடைய இயற்கை வணக்கத்தோடு தமிழருடைய உயர்ந்த வழிபாட்டு முறைகளை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துப் பின்னவை மிகச் சிறந்தன வென்று எவர் மனதிலும் படுதல் இயல்பு. ஆரியர் தங்கள் கடவுளைப் பிரகாசமுள்ளவன் என்னும் பொருளில் தேவன் என்றழைத்தனர்; தமிழர் எல்லாவற்றையும் கடந்த பொருள் என்னும் பொருளில் கடவுள் என வழங்கினர். **சிவம்** என்னும் சொல் **சிவ** என்னும் அடியாகப்பிறந்து நல்லது இனியது அழகியது முதலிய பொருள்களைக் கொடுக்கும்.

ஆரியர் இந்தியாவை அடைந்த பின் முதலிற் பாடிய நூல் இருக்குவேத சங்கிதை என்பதை இந்திய சரித்திரா

சிரியர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். பஞ்சாப்பில் வாழ்ந்த கலப்புச் சாதியினர் 'சுற்லெஸ்' என்னும் நதியை இன்னும் தாண்டவில்லையென்றும், அவ்வாற்றுக்கு அப்பால் அவர்கள் வாழ்ந்ததைப் பற்றி அவர்கள் வேத பாடல்கள் கூறவில்லை யென்றும் முன் ஓரிடத்திற் குறிப்பிட்டுள்ளோம்.

ஆகவே, கி.மு. 2000 முதல் 1400 வரையுமுள்ள 600 வருடங்களிலும் அவர்கள் பஞ்சாப் கபூல் காந்தாரம் முதலிய நாடுகளில் வாழ்ந்தார்களென்று தெளிவாகப் புலப்படுகின்றது. ஆரியர் குடியேறி வாழ்ந்த நாட்டுக்கு எதிர்ப்புறத்தில் வாழ்ந்த மக்கள் ஆரியரோடு கலக்கவில்லை என்பதும், அவர்கள் முற்றாக வேறு கூட்டத்தினராயிருந்தனர் என்பதுமே இதனாற் பெறப்படுகின்ற பிரதான தீர்மானமாகும். அக்கூட்டத்தினர் முன் நாம் கூறிய தமிழர் அல்லது பரதர் ஆவர்.

பிராமணங்கள், ஆரணியகங்கள் உபநிடதங்கள் ஆதியன கி. மு. 1400 முதல் கி. மு. 10-ம் நூற்றாண்டு வரையிலும் செய்யப்பட்டன. இவ்விரண்டாங்காலப் பகுதியிற் செய்த நூல்கள் மாத்திரம் கங்கைக்கரைப்பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த, குரு, பாஞ்சால, காசி, கோசல, விதேகர்களைப் பற்றிச் சொல்லுகின்றன. பாரதயுத்தத்தில் சிறு இராச்சியங்கள் சுயேச்சை பெற்றன. அப்பொழுது ஆரியர் பஞ்சாப்பை விட்டுக் கீழே சென்றனர். அவர்கள், கோசலத்தைக் கைப்பற்றிய இக்காலத்திலேயே கங்காநதிப் பள்ளத்தாக்கில் பெரிய சாதியாராக அறியப்பட்டனர்.

தசரதனின் பாட்டனாகிய புகழ்படைத்த இரகுவே கோசலத்திலுள்ள சகேதாவில் ஆரியபரம் பரையை முதலில் நாட்டினன். சகாதாவை ஆண்ட அரசருள் தசரதன் மிகப் புகழ்படைத்தவன். இவன் நீண்ட காலம் அரசுபுரிந்தான்.

அக்காலத்தில் கோசல இராச்சியம் உச்சநிலை அடைந்திருந்தது. அதன் இராசதானியாகிய சகேதா அயோத்தி (வெல்லப்படாதது) என்னும் புதிய பெயர் பெற்றது. இராமாயணத்தையும் இதுபோன்ற நூல்களையும் எழுதிய ஆசிரியர்கள் இராமனின் தந்தையாகிய தசரதனை ஆரிய வமிசத்தின் 56-வது அரசனாகக் கூறுகின்றனர். ஆரிய பரம்பரைக்கு முன்சகேதாவை ஆண்ட பழைய தமிழ் அரசரோடு சேர்த்து இவர்கள் பிழையான கணக்குச் செய்திருக்கின்றனர். பாரதயுத்தத்துக்கு முன் குரு குலத்தவருக்கு இராசதானியாயிருந்த அத்தினபுரம் மற்ற இராச்சியங்களுக்குத் தலைமையாயிருந்த தன்மையை இழந்துவிட்டாலும் கங்காநதி தீரத்திலுள்ள செழிப்பான இடமாகக் கருதப்பட்டது. குரு, பாஞ்சாலம் விதேகம், காசி முதலிய இராச்சியங்கள் ஒன்றோடு ஒன்று நட்புக்கொண்டிருந்தன. போர் முடிந்தபின் பாண்டவர் பழையநாட்டமிழர் வழக்கப்படி தவஞ் செய்யக் காட்டுக்குச் சென்றனர்*. அருச்சுனனின் பேரனாகிய பரிச்சித்து அத்தினபுரத்துக்கு அரசனானான். அவனுக்குப்பின் சனமேசயன் பட்டமெய்தினான். பரிச்சித்துவும் சனமேசயனும் கல்விப்பிரியர்களாயிருந்தனர். ஆரியர்களுடைய இலக்கியங்களைப் பிரகாசமடையச் செய்தவர்கள் இவரே. பரத வமிசத்தவன் அல்லது தமிழனாகிய சனமேசயன் ஆரியர் இலக்கியங்களை ஆதரித்தான் என்பது வியப்புக்கிடமாயிருக்கலாம். இவ்வகையான நிகழ்ச்சிகள் எப்படி நிகழ்கின்றன என்பதற்கு சில உதாரணங்களைக் கூறுகின்றேன். திருதராட்டிரன் காந்தார அரசன் புதல்வியாகிய ஆரிய கன்னிகையை

*இருக்கு வேத பாடல்களில் காட்டிற் சென்று தவஞ் செய்யும் வழக்கத்தைப்பற்றிக் காணப்படவில்லை எனத் தத்தர் கூறியிருக்கிறார்.

மணந்தபின், அத்தினபுர அரண்மனை மொழி ஆரியமாக விருந்தது. இது, புதுக்கோட்டை இளவரசரொருவர் திருச்சிராப்பள்ளியிலுள்ள நாய்க்க கன்னியை மணந்ததனால், முன் அரண்மனையில் வழங்கிய தெலுங்குமொழியினிடத்தைத் தமிழ் ஏற்றுக்கொண்டது போலாகும். திருதராட்டிரனது புதல்வனாகிய துரியோதனனது அரசாட்சி நன்கு அமைக்கப்பட்டிருந்தது. அவனுடைய சபையில் தமிழரும் ஆரியருமாகிய மூதறிஞர் பலரிருந்தனர். அவருள் அங்கதேய அரசனாகிய கன்னன், தமிழருடைய, தன்னயமற்ற நடு நிலைமைக்கு உதாரணமாவன். காந்தார இளவரசனாகிய சகுனி தன்னயமுடைய ஆரியருடைய குணத்துக்கு எடுத்துக்காட்டாவன். இவ்வகையான கலப்பு மணங்களாலும், அவற்றாலேற்பட்ட உறவாலும் முற்கால ஆரியர் தமிழ் நாட்டில் உபசரிக்கப் பெற்றனர். குருச்சேத்திரத்தில் வசிக்க ஆரியர்களுக்கு வீடுகள் அளிக்கப்பட்டன. காலகதியில் குடியேறிய ஆரியருக்கும் தமிழருக்கும் ஒரே வகையான உரிமைகள் வழங்கப்பட்டன. இதனால் இரு சாதியினரும் ஒரே சாதியினராய்க் கலந்து வாழும் வாய்ப்பு ஏற்பட்டது. தாம் வென்று கைப்பற்றிய கோசலநாட்டிற் போலவே ஆரியர் அத்தினபுரத்திலும் வாழத்தலைப்பட்டனர். இவ்வாறு சேர்ந்து நடத்தும் வாழ்க்கையினால் மொழி சமயம் பழக்க வழக்கம் ஆதியனவும் கலந்தன. ஆரியர் தமிழரிடம் கற்றுக்கொண்ட அநேகம் தமிழ்ச் சொற்கள் ஆரிய மொழியிற் காணப்படுகின்றன. இருபிரிவினரும் கலந்து வாழ்ந்தார்களென்பதற்கு இது அறிகுறியாகும்.

குரு, பாஞ்சாலர், பாண்டவர் ஆதியோர் சிவனை வழிபட்டனர். இவர்களுக்குப் பின் வந்த அரசர் ஆரியரின் ஆதிக்கத்தால் கடவுள் பத்தியில் தளர்ந்தவர்களாயினர்.

அவர்கள் ஆரியரின் தெய்வங்களைத் தங்கடவுளர்களாகக் கருதினதோடு யாகங்களிலும் நம்பிக்கை வைத்திருந்தனர். இக் கொள்கை இவர் முன்னோரால் கடியப்பட்டது.

இதுவரையும் ஆரியர் தமிழரோடு கலப்புற்ற வகையினைக் கூறினோம். இனி சனமேசயன் காலத்து ஆரியருடைய நூல்கள் பிரகாசமடைந்த வகையினைக் கூறுவேம். பஞ்சாப்பில் வாழ்ந்த மக்கள் இயற்றிய யாகங்கள் ஆடம்பரமில்லாமலிருந்தன. பெரிய விருந்து கொண்டாடுவதற்காக அசுவயாகங்கள் செய்யப்பட்டன. ஆடம்பரத்தோடு கூடிய யாகங்கள் அரசர் அரண்மனைகளிலும், கங்காநதிப் பள்ளத் தாக்கிலுள்ள நாடுகளிலும் நடைபெற்றன. அசுவமேத யாகம் பாவத்தைப் போக்கி அரச பதவியை அளிக்குமென்று நம்பப்பட்டது. முன்னோருடையவும் தனதும் பாவங்களைப் போக்குவதற்குச் சனமேசயன் யாகங்களைச் செய்தான். யாகங்கள் புரியும் விதிகளைக் கூறும் பெரியநூல்கள் எழுதப்பட்டன. இவைகள் திரட்டப்பட்டு 'பிராமணம்' என்னும் பெயரைப் பெற்றன. 'பிராமணம்' சனமேசயன் காலத்திற் தோன்றியதாகும். மாபாரதமும் இவர் காலத்திற் செய்யப்பட்டது. வைசம்பாயனர் சனமேசயனுக்குப் பாரதப் போர் வரலாற்றைக் கூறினர். பாரதஞ் செய்தவர் கிருட்டிண வியாசர் என்பது நம்பத்தக்கதாயில்லை. வியாசரின் புகழை நிலைநாட்டுவதற்கு அவர் மாணாக்கர் சிலர் அவர் பெயரால் வேதங்களைத் தொகுத்தும் மாபாரதத்தை இயற்றியும் போந்தார்கள் என்று கருத இடமுண்டு. இவ்வாறு செய்தல் அக்கால மரபு. கிருட்டிணவியாசர் என்னும் பரதவகுப்பினர், வேதங்களைத்திரட்டினவரும் மாபாரதத்தைச் செய்தவருமாயிருந்தால் அவர்காலம் மாபாரதத்துக்குப் பிந்தியதாதல் வேண்டும். மாபாரதம் ஒருவரால்

ஒருகாலத்துச் செய்த நூலாகக் காணப்படவில்லை. "பிற் காலத்துப் புலவர்களும் தாம்பாடிய பாடல்களைப் பாரதத் துட் சேர்த்து அதனைப் பெருப்பித்திருக்கின்றனர். பிற் காலத்தைய ஒவ்வொரு கொள்கைக் குரியோரும் தங்கொள் கைகளை நூலிற் புகுத்தியிருக்கின்றனர். "குருபாஞ்சால யுத்தத்துக்குப் பிற்பட்ட கிருட்டிணவணக்கம் புகுத்தப்பட் டிருக்கின்றது" என தத்தர் கூறியிருக்கின்றனர்.*

மாபாரதம் எழுதப்பட்டது மாத்திரமல்லாமல், வேதங்களின் தொகுப்பும் சனமேசயன் காலத்தில் நிகழ்ந் திருத்தல் கூடும். இத் தொகுப்புகள், ஆரியர் சிந்துநதி தீரத்திற் குடியேறியது முதல் யாகங்கள் ஆடம்பரமாகச் செய்யப்பட்டது வரையிலுள்ள காலத்தைக் குறிப்பிடுகின் றன. தமிழர் கடவுட் பூசைகளிற் தோத்திரப் பாடல் களைப் பாடுதல் மரபு. ஆகவே ஆரியருடைய யாகசாலைகளி லும் துதிபாடும் முறை கொண்டு வரப்பட்டது. இருக்கு வேதத்தினின்றும் தெரிந்தெடுத்த பாடல்களோடு சில பாடல்களையும் சேர்த்துத் தொகுத்துச் சாமம் என்று பெயரிடப்பட்டது. இருக்குவேதத்தினின்றும் எடுக்கப் பட்ட, கிரியைகளிற்படிக்கும் மந்திரங்களோடு சிலவற்றைச் சேர்த்துத் தொகுத்து யசுர் என்று பெயரிடப்பட்டது. இவ் விரண்டும் இருக்குவேதத்தோடு சேர்த்துத் 'திரயம்' என்று வழங்கப்பட்டன. சாமவேதத்தை ஓதும் இசை வகுப் புக்கு ஆரியர் தமிழ் இராவணனுக்கு மிகவும் கடமைப் பட் டவர்களாவர்.

Ancient India P. 130.

* தமிழர் மந்திரவித்தையிற் திறமை யடைந்திருந்தனர். அவர் கள் இதனை ஆரியருக்குக் கற்பித்தனர். பழங்காலந்தொட்டு மலை யாளம் மந்திர வித்தையிற் சிறந்த நாடாகக் கருதப்பட்டது. அருச் சுனன் பாரதப் போரில் வெற்றியடைந்தது இவ்வித்தையினாலேயே.

அதர்வம் அல்லது கடைசியாகச் சேர்க்கப்பட்ட வேதம் பலமந்திரங்களின் தொகுப்பை யுடையது. அம் மந்திரங்கள் இந்தியாவின் பல பாகங்களினின்றும் திரட்டி ஆரியமொழியில் எழுதப்பட்டனவாகும். சனமே சய னுடைய தந்தை பரிச்சித்து சர்ப்பந் தீண்டி இறந்தான். சர்ப்பங்களை முற்றாக ஒழிக்கக் கருதிய சனமேசயன், இந்தியா முழுமையிலுமுள்ள மந்திர வித்தைக்காரரை அழைத்து அவர்கள் வாயிலாகச் சர்ப்ப யாகஞ் செய்தான். அக்காலத்தில் அதர்வண வேதமென்பது நூலாகச் செய்யப் பட்டது. இத்தொகுப்பு நூல் பிற்காலத்தில் ஒரு வேத மாகக் கொள்ளப்பட்டு, வேதங்கள் நான்கு என்னும் வழக்கு உண்டாயிற்று. கி. பி. முதல் நூற்றாண்டு வரையிற் செய்யப்பட்டதென்று கொள்ளப்படும் மனு நூலில் வேதம் மூன்று என்றே கூறப்படுகிறது. இவ்வாறு சனமேசய னுடைய ஆட்சியில் ஆரியர் இலக்கியங்களுக்கு மதிப்பு ஏற் பட்டது.

சனமேசயனுடைய ஆளுகை பாரதப்போருக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டது. ஆரியர் கங்காநதி தீரத்திற் குடி யேறி ஒரு நூற்றாண்டுக்குள் அவர்கள் மிகுந்த முன்னேற்ற மடைந்தனர். அக்காலத்திற் கட்டுப் பாடான சாதி வேறு பாடு உண்டாகவில்லை. மனுவின் நீதி நூலும் தோன்ற வில்லை. மக்கள், இராசாயனர், வைசியர் என்னும் இரு பிரிவினரா யிருந்தனர் இராசாயனர் இராச்சிய மாள்பவர்

ஒவ்வொரு வீரனும் மந்திர வித்தையிற் பயின்றிருப்பது பழைய நாள் வழக்கு. தேவாஸ்திரங்கள் என்று சொல்லப்பட்டனவெல் லாம் மந்திர வித்தையாற் செலுத்தப்பட்ட அம்புகளேயே. அதர்வண வேதத்தில் பகைவரை அழிக்கும் மந்திரங்கள் காணப்படுகின்றன. இவற்றைச் சிலர் அருமையாக மறைத்து வைத்துக்கையாளுகின் றனர்.

களாயிருந்தனர். இவர்கள் ஒரு காலத்தில் அசுரர் என்று அழைக்கப்பட்டனர். பஞ்சாப்பில் வாழ்ந்த பழைய ஆரியர் மொழியில் அசுரர் என்பதற்குப் பிரபுக்கள் என்பது பொருள்; இவர்களல்லாத மற்றவர்கள் வைசியரென்றழைக்கப்பட்டனர். பஞ்சாப்பில் குடியேறிய எல்லோருக்கும் இது பொதுப் பெயராயிருந்தது. புதிய காரணங்களால் மக்கள் புதிய கடமைகளைச் செய்யும் அவசியம் நேர்ந்தது. ஆகவே ஆரியருக்குள் பல வகுப்புகள் தோன்றின. பிராமணங்களில் நன்கு பயின்றோரும் யாகக்கிரியைகளைச் செய்யும் திறமையுடையோரும் பிராமணர் எனப் பட்டனர். பிராமணர் யாகக்கிரியைகளைப் புரிந்தனர். அதனால் அவர்கள் ஏராளமான பொருள் பெற்றனர். அரசர்களும் செல்வரும் தமது செல்வங்கள் எல்லாவற்றையும் யாகம் என்னும் பெயரால் இக்கூட்டத்தாருக்கு இறைத்தனர். பிராமணங்களின் அறிவைக் கொண்டு அவர்கள் மிகுந்த பொருள் திரட்டிய போதும், பயனற்ற இக்கிரியைகளாற் திருப்தியுறாமற் பலர் உண்மை ஞானத்தைத் தேடிப் பெற முயன்றனர்.

சனகனுடைய அரண்மனையிலேயே சதபதப்பிரமாணம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழருடைய பழைய கதைகளும், சமயக் கொள்கைகளும், ஞானமும் சலப்பிரளயத்தோடு சம்பந்தப்பட்ட திராவிட அரசனாகிய மனுவின் வரலாறும், மறுபிறப்புப் பேரின்பம் முதலிய உண்மைகளும் இதனிடத்துக் காணப்படுகின்றன. இவை எல்லாம் ஆரியர் அறியாத கருத்துக்கள். இவை முதன் முறையாகச் சதபதப் பிராமணத்திற் காணப்படுகின்றன. சதபதப்பிராமணம் யாக்ஞவல்கியராற் செய்யப்பட்டது.

காசி அரசனாகிய அயதசத்துரு சனகனைப் போலக் கல்வியறிவுடையவனும் கல்வியை ஆதரித்தவனுமாவ

னென்று கோசிதகி உபநிடதம் கூறுகின்றது. கிரகபாலகி என்னும் கல்வியறிவுடைய பிராமணன் அயதசத்துரு விடம் வந்து "நான் உனது மாணாக்கனாக வரட்டுமா" "எனக் கேட்டான் அரசன், " இராசாயனனுக்குப் பிராமணன் மாணாக்கனாயிருத்தல் முறையன்று. வேண்டியவற்றைக் கேள் விளக்குகின்றேன்" என்றான். யாக்ஞவல்கியரைப் போல் மதிக்கப்பட்ட பிராமணருள் கௌதமர் அல்லது உடலகர் என்பவர் ஒருவர். இம்முனிவர் ஆரியஞானி களுள் சிறப்புடையவரெனக் கருதப்பட்டனர். இம்முனிவர் இராசாயனரிடமிருந்து நேர்மையாகவும் உறுதியாகவும் ஞானத்தைக் கற்றாரென்று உபநிடதங்கள் பலவிடங்களிற் தெளிவாகக் கூறுகின்றன. உபநிடதங்களின் பல பகுதி கள், இராசாயனர் அல்லது தமிழர் ஞானமுள்ள குரவர்க ளென்றும் மதிநுட்பமுடையவர்களென்றும் கூறுகின்றன. பிராமணர் இவர்களிடமிருந்தே ஞானத்தைப் பெற்றனர். சாந்தோக்கிய உபநிடதத்திற் காணப்படும் பின்வரும் வரலாறு இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. மேலே கூறப்பட்ட கௌதமர் இராசானுச பிரவாகனனால் வினவப்பட்ட ஐந்து கேள்விகளுக்கு விடை அறியாது பிரவாகனன் வாயி லாகவே விடைகளைப் பெற்றனர். பிரவாகனன், விடை யளிக்கும்போது உனக்குச் சொல்வதன் முன் இந்த ஞானம் பிராமணன் எவனுக்கும் போதிக்கப்படவில்லை. அதனைப் போதிக்கும் உரிமை இவ்வுலகம் முழுமையிலும் இராசாயன வகுப்பினருக்கே உரிய குருநாட்டிலும், வென்று கைப்பற்றிய கோசலை நாட்டிலுமே பெரும்பாலும் ஏற்பட்டன. கங்காநதி தீரத்திலிருந்த தமிழரசர்களின் அரண்மனைகளில் பிராமணரின் எத்தனங்கள் பயனளிக்க வில்லை. அங்கு பிராமணரும் பிராமணங்களும் கவனிக்கப் படவில்லை.

முற்காலத்தில் ஒவ்வொரு தமிழரசனது அரண்மனையிலும் அறிஞர்களின் சபை ஒன்றிருந்தது. அக்கால இலக்கியங்கள் தமிழரசரின் அரண்மனைகளிலிருந்த அறிஞர் சபைகளைப் பற்றி அடிக்கடி கூறுகின்றன. முதன்மையாகக் காசி அரசன் அயசத்துரு, பாஞ்சால அரசன் பிரவாகனன். விதேக அரசன் சனகன் முதலியோரின் சபைகள் கூறப்படுகின்றன. இவர்களுள் இராசாயனனாகிய சனகனது அரண்மனையிலிருந்தவர்களே முதன்மையானவர்கள். சனகன் சாத்திரஞான முடையவனும் ஆசாரியனுமாவன். தமிழர்களுடைய உண்மையான தத்துவ ஞானங்களடங்கிய உபநிடதங்களுக்குப் பெருமை அளித்தவர் இவராவர். வேறு நாடுகளிலிருந்தும் பல அறிஞர் இவனது அரண்மனைக்கு உண்மை ஞானத்தை விசாரித்தறியச் சென்றனர். அவருள் யாக்ஞவல்கியர் என்னும் ஓர் பிராமணர் இங்கு குறிப்பிடத் தக்கவராவர். சனகர் இவருக்கு உண்மையான தத்துவ ஞானத்தைப் போதித்தார். யாக்ஞவல்கியர் பிராமண மதத்திலிருந்து தர்க்க முறையான தமிழ் மதத்துக்குத் திருப்பப்பட்டார்.

யாக்ஞவல்கியர் இரண்டு பிராமணர்களுடன் சனகனிடஞ் சென்றார். சனகன் அக்கினி கோத்திரம் செய்யும் முறை யாதென வினவினான். யாக்ஞவல்கியரின் மறுமொழி கிட்டத்தட்டச் சரியாயிருந்தது; முற்றும் சரியாயிருக்கவில்லை. மற்று இருவரும் கூறிய விடை பிழையாயிருந்தது. அதன் மேல் சனகன் அக்கினி கோத்திரத்தைப்பற்றி விளக்கினான்; விளக்குதலும், யாக்ஞவல்கியர் தன் குருவாகிய பிருகுவின் உபதேசங்களிற் திருப்தியடையாதவராய் அவரிடம் கற்ற எல்லாவற்றையும் சத்தி எடுத்தார். அவர் சத்தி யெடுத்தது கிருஷ்ணயசுர்வேதத்தை. பின், தன் குருவை விட்டு நீங்கிச் சூரியனை யடைந்து சுக்கில யசுர்

வேதத்தைக் கற்றார். இவ்வாறு சதபதப் பிராமணங் கூறு கின்றது. சூரியனென்றது தமிழாசிரியனைக் குறிக்கும். இத னால் ஆரியர் பல தெய்வக் கொள்கையை விட்டுத் தமிழருக் குரிய ஒரு தெய்வக் கொள்கையைப் பின்பற்றினர் என்று விளங்குகின்றது. கடவுள், உயிர் என்பவற்றின் இயல்புகள் எவை என்று எவ்விடங்களிலும் விவாதிக்கப்பட்டன. கட வுள் எங்கும் நிறைந்திருக்கிறா ரென்பது தமிழர்களின் கொள்கை. இறைவன் எல்லாப் பொருள்களிலும் செறிந் திருக்கின்றா னென்றும் அவனுக்குள்ளே தோற்றம் ஒடுக் கம் ஆதியன நிகழ்கின்றன வென்றும் கூறப்பட்ட உண்மை, கடவுள் எல்லாப் பொருளும் ஆகின்றாரென்றும், ஒவ் வொரு பொருளும் கடவுளின் பகுதி யென்றும் பிற்காலத் துத் திரிபுபெற்றது.

தமிழரின் ஞானத்தை எடுத்துக் கூறும் உபநிடதங்கள் அக்கால ஆரியர் நூல்களுட் சிறந்து விளங்கின. உபநிடதங்கள் தோன்றிய பின் பிராமணருடைய நூல்கள் மங்கத் தொடங் கின. இதற்கும், ஆரியர் தமிழர் மதத்தைத் தழுவுவதற் கும் காரணமாயிருந்தவர் சனகரே யாவர். இவர் அரசருக் கெல்லாம் அரசனாக விளங்கினார். இதற்கு அவரது உண்மை ஞானமே காரணம். அவர் அரசாண்ட காலம் இன்னதென்று நினைவில் வைத்திருத்தல் நன்று. இவர் சகே தாவில் அரச பரம்பரையைத் தாபித்த இரகுவின் பேர னாகிய தசரதன் காலத்தவர். சனகன் காலத்தில் பரிச்சித் துவின் பரம்பரை மறைந்து விட்டது. ஆனால் அவ்வமிசத் தைப் பற்றிய ஞாபகம் மறைந்து விடவில்லை. யாகங்கள் வாயிலாகப் பரிச்சித்துவின் வமிசத்தவரின் பாவங்கள் போக் கப்பட்டன. இது சனகன் காலத்தில் ஆச்சரியப் படத்தக் கதும் தர்க்கத்துக்குரியதுவுமா யிருந்தது.

யாக்ஞவல்கியரின் எதிர்க்கட்சியினர் ஒருவர் யாக்ஞவல்கியரை நோக்கிப் பரிசித்துக்கள் சென்றுவிட்டார்களோ? என்னும் கேள்வியைக் கேட்டார். அவர்களின் அஸ்வமேதம் இப்பொழுது எங்கே போய்விட்டது? என்று யாக்ஞவல்கியர் மறுமொழி கூறினார். பரிசித்துக்கள் என்றது அவர் காலத்து நூல்களை. இதனால் பிராமணங்களின் காலம் உபநிடத காலத்துக்கு முற்பட்டதென விளங்குகின்றது. சனகன் பிராமணரை ஆதரித்த சனமேசயன் காலத்துக்குச்சில ஆண்டுகளுக்குப் பிற்பட்டவனெனக் கூறலாம். பாரத யுத்தத்துக்குப் பிற்பாடு பரிசித்துவுக்குப் பின் வந்தவன் சனமேசயன். ஆகவே இவன் காலம்* கி. மு. 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். ஆகவே சனகன் கி. மு. 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவனாவன். சகேதாவை ஆண்ட ஆரிய அரசருள் தசரதன் கீர்த்திவாய்ந்தவன். கங்காநதி தீரத்தில் ஆட்சி புரிந்தவர்களுள்ளும் இவன் விசேடமானவன். இவன் சனகனாகிய தமிழரசனோடு சம்பந்தப்பட்டவனென்று அறிகின்றோம். தசரதனின் புத்திரன் சனகனின் ஒரே புதல்வியை மணந்ததால் தமிழர் ஆரியர் என்னும் இரண்டு வம்சங்களுக்

---

* மாபாரதம் 5000 வருடங்களுக்கு முற்பட்ட நிகழ்ச்சியென்று சொல்லப்படுகின்றது. ஆராய்ச்சிகாரரெல்லாம் இது கி. மு. 14-ம் நூற்றாண்டில் நிகழ்ந்ததென்று கூறுகின்றனர். இது கிட்டத்தட்டச் சரி என்று சொல்வதற்குரிய ஆதாரங்கள் சிலவுண்டு. மகத நாட்டரசனாகிய பிம்பசாகரன் புத்தர்காலத்தவன். இவன் பாரத யுத்தத்திற் கலந்துகொண்ட யுரசந்தாவுக்குப்பின் 52-வது அரசனாவன். புத்தர் காலம் கி. மு. 5-ம் நூற்றாண்டு. 51-அரசரின் ஆட்சிக் காலத்துக்கும், ஒவ்வொருவருக்குச் சராசரி 20 வருடங்களை வைத்துக் கணக்கிட அது பாரதப்போரைக் கி. மு. 15-ம் நூற்றாண்டிற் கொண்டு போய் விடுகின்றது. எவ்வகையிலாவது பாரதப்போர் கி. மு. 14-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்று எனச் சாதிக்கலாம்.

கும் உறவு ஏற்பட்டது. குலகுருவாகிய வசிட்டரின் அனுமதியைப் பெற்ற தசரதன் தனது புதல்வன் இராமனை விசுவாமித்திரர் † என்னும் தமிழ் முனிவரிடம் ஒப்பித்தான். கோசலம் விதேகம் என்னும் இரண்டு இராச குடும்பங்களின் இணைப்பு பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குமுன்

† விசுவாமித்திர வசிட்ட குடும்பங்களுக்கிடையில் நீண்டபகையிருந்ததென்பதற்குப் பல கதைகளுண்டு. விசுவாமித்திர குடும்பத்தினர் ' பரதரின் புதல்வர் ' என்றும் ' பரதரில் விசேடமுள்ளவர்கள் ' என்றும் வேதங்கள் கூறுகின்றன. விசுவாமித்திர குடும்பத்தினர் விரித்தசடை யுடையவர்களென்றும், வசிட்ட குடும்பத்தினர் வலப்பக்கத்தே முடிந்த கொண்டையுடையவரென்றுஞ் சொல்லப்படுகின்றனர். வசிட்டர் ' ரிற்றஸ் ' என்னும் ஆரிய வகுப்பினராயினும் அவர்கள் சூத்திரர் என்று சொல்லப்படுகின்றனர். வசிட்ட குடும்பத்தின் முன்னோராகிய ' ரிற்றஸ் ' என்னும் வகுப்பினர் ஆரியரில் உயர்ந்தவர்களா யிருந்தபோதும் வசிட்ட குடும்பத்தினர் சூத்திரரென்னும் படியான கீழ்நிலையை அடைந்தனர். பிற்காலப் புராணங்கள் விசுவாமித்திரரைச் சத்திரியரென்றும் வசிட்டரைப் பிராமணரென்றும் கூறுகின்றன. சத்திரியன் பிராமணன் என்னும் பதங்கள் முறையே தமிழரையும் ஆரியரையும் குறிக்கின்றன. வசிட்டர் பிராமணரின் நட்பைப் பெற்று அவர்களாற் பாராட்டப்பட்டார். அவர்கள் வணக்கங்கூறி அவருக்குப் பலபெருமைகளைக் கொடுத்தனர். அவர்களிடத்திற் றரும சிந்தை கிடையாது. அவர்கள் விசுவாமித்திரர் மீது பல பழிகளைச் சுமத்தினர். விசுவாமித்திரர் அவர்களுடைய சத்துராதியாக விருந்தார். இது உண்மையன்று. விசுவாமித்திர வமிசத்தவர்கள் பிறப்பிற்றமிழர் அல்லது பரதர். வசிட்ட குடும்பத்தினர் ' ரிற்றஸ் ' வகுப்பினர். அக்காலத்திற் றமிழரசர் கூடிய அதிகார முடையவர்களா யிருந்தனர். ஆகவே பிறப்பினாலும் படிப்பினாலும் விசுவாமித்திர வமிசத்தவர்கள் ஆரியர் வீடுகளிலும் வணக்கத்தோடு போற்றப்பட்டனர். இது வசிட்ட குடும்பத்தினரின் பொறாமையை மூட்டியது. இப்பொறாமைகளால் ஒருவர் ஒருவர்மீது பழிகளைச் சுமத்தினதுமல்லாமல் அடிதடிகளிலு மிறங்கினர். கல்வியினாலும் உடல் வலியினாலும் விசுவாமித்திர குடும்பத்தினர் வசிட்ட குடும்பத்தினரிலும் அதிக வலிமையைப் பெற்றனர். ஆகவே தசரதனது அரண்மனையில் விசுவாமித்திரர் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர்.

ஒரே மயமாய்விட்டது. ஆரியர் பஞ்சாப்பிலிருந்து வந்து குடியேறியபின், பஞ்சாப்பிற்குக் கிழக்கு, சோணை ஆற்றுக்கு மேற்கு, ஆராவலி மலைக்கு வடக்கு அதன் கிழக்கேயுள்ள 'பிரியற்ரு' (Pryatra) முதலிய எல்லைகளுக்குட்பட்ட நாடுகளில் இரண்டு சாதிகளுக்கு மிடையில் ஒரு வேற்றுமையுமில்லாமல் மறைந்துவிட்டது. மேற்குறித்த எல்லைக்குட்பட்ட நாட்டைப்பிற்காலத்தார் ஆரியவர்த்தமென்று அழைத்தனர். இக் கலப்புச் சாதியார் மிகுந்த சீர்த்திருத்தமடைந்த பின்பு ஆரியர் முதன்முதற் குடியேறிய நாடாகிய பஞ்சாப்பை முற்றாக மறந்துவிட்டனர். ஆரியவர்த்தம் என்பதில் பஞ்சாப் சேர்க்கப்படவில்லை. ஆரியர் குடியேற்றத்தின்பின் தோன்றிய இரண்டாவது கால நூலாகிய பிராமணங்கள் ஆரணியகங்கள் உபநிடதங்கள் ஆரியவர்த்தத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

ஆரியர் இவ்வாறு தமிழ் மயமானபின் உபநிடதத்திற் கூறும் தத்துவஞான ஆராய்ச்சியில் ஆவல் கொண்டவர்களாய் ஞானத்துக்குப் பிறப்பிடமாகிய தென்னிந்தியாவுக்கு யாத்திரை செய்தனர். இவர்கள் தமிழ் அறிஞராலும் அரசராலும் வரவேற்கப்பட்டனர். ஆகவே அவர்கள் தமிழ் அரசரின் அரண்மனையை அலங்கரித்த அந்தண ஆசாரியர்களிடமிருந்து தமிழ் ஞானத்தைக் கற்றனர். ஆரியர் தமிழரோடு இவ் வகையான உறவு வைக்கத் தொடங்கிய பின்னரே 'சூத்திர'[1] இலக்கியங்கள் எழுதப்பட்டன. அவ்விலக்கியங்கள் பலவற்றின் பிறப்பிடம் தென்னிந்தியாவாகும். இதுவரையும் வசன நடையில் எழுதப்பட்ட ஆரியரின் இலக்கியங்கள் இப்பொழுது செய்யுள் நடையில் எழுதப்படலாயின. இம் முறை தமிழரைப் பின் பற்றிச்

1 சூத்திரப்பாவினாற் செய்யப்பட்டவை.

செய்யப்பட்டதென்பதைச் சூத்திர இலக்கியங்களைப் பார்த்தறியலாம். வடக்கே உள்ளவர்களுக்கும் தெற்கே உள்ளவர்களுக்குமிடையில் கி. மு 10-ம் நூற்றாண்டு முதல் இவ்வகையான உறவு ஏற்பட்டதை அறிகின்றோம். தெற்கே வந்த பிராமணரிற் பெரும்பாலோர் தமது நாட்டுக்குத் திரும்ப விரும்பவில்லை. ஆகவே அவர்கள் தென்னாட்டிற் றங்குவாராயினர் தமிழ் அந்தணரின் மாணாக்கராகத் தென்னாட்டிற் றங்கிய ஆரியப் பிராமணர் அந்தண வகுப்பினரோடு கலந்தனர். தென்னிந்தியாவிற் காணப்படும் பிராமணரிற் பெரும்பாலோர் தமிழர் என்பதிற் சந்தேகமில்லை.

தெற்கே முதன் முதல் அடி எடுத்து வைத்த ஆரியன் இராமனென்று நாங்கள் படிக்கின்றோம். இக்கொள்கை ஆட்சேபத்துக்கு இடமானது. இராமன் சனகன் காலத்தவனாயின் அவன் கி. மு. 13-ம் நூற்றாண்டில் விளங்கியவனவன். இராமாயணம் கி. மு. 8-ம் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்குமிடையில் எழுதப்பட்ட நூலென்பதிற் சந்தேகமில்லை. தென்னிந்திய பழஞ் சரித்திரம் ஒன்றை எடுத்துக்கொண்டு அதனோடு கோசலதேசத்து இராமனையும் பிணைத்து இராமாயணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது. அந்நூலாசிரியர் வடக்கே இருந்த தசரதனையும் சனகனையும் ஒரே காலத்தவர்கள் ஆதலை வைத்துக்கொண்டு, தென்னாட்டு இராவணன் அகத்தியர் முதலியோர் காலங்களையும், இடங்களையும் கவனியாது நூல் செய்திருக்கின்றார். அகத்தியர் ஆரியர் சிந்து நதியின் மேற்குக் கரையில் வந்து குடியேறுவதன் முன் வாழ்ந்தவராவர்.

ஆரியர் வந்து பஞ்சாபிற் குடியேறிய முதலாம் குடியேற்ற காலத்துத் தமிழரும் ஆரியரும் கலந்து ஒன்றுபட்டனர். கங்கா நதி தீரத்திற் குடியேறிய இரண்டாங் காலத்தும் இரு சாதியாருங் கலந்து ஒன்றுபட்டனர். ஆகவே இரண்டு சாதியாருக்குமிடையில் வேற்றுமை காணமுடியாத கலப்பு ஏற்பட்டது. தற்கால மக்களின் மொழியையும் சமயத்தையும் ஆராய்வதால் தமிழருக்கும் ஆரியருக்குமிடையில் எவ்வளவிற் கலப்பு ஏற்பட்டிருக்கின்றதென்பது விளங்கும்.

முதலிற் பஞ்சாபிற் குடியேறிய ஆரியர் எப்படித் தமிழரோடு கலந்து கொண்டார்களென்று சரித்திர சம்பந்தமாக அறிந்து கொண்டோம். இரண்டாவதாக இவர்கள், பல காரணங்களாற் கிழக்குத் திசையாகச் சென்று கங்கா நதிப் பக்கங்களில் வாழ்ந்த தமிழர் அல்லது பரதரோடு எப்படிக் கலந்தார்களென்று அறிந்தோம். சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சியை விட்டு இனிச்சமயம் மொழி என்பவற்றை ஆராய்வோம். ஒரு சாதியாரின் பழைய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு சமய, மொழி ஆராய்ச்சிகள் நம்பத்தக்க ஆதாரங்களாக இருக்கின்றன.

இரண்டாவது குடியேற்ற காலத்தில் கலப்பு ஆரியர், தமிழரின் நியாய முறையான சமயத்தைத் தழுவினார்களென அறிந்தோம். அவர்களின் சமயமாற்றம் சடுதியாக ஏற்பட்டதன்று. அக்கால நிலைமைக் கேற்றபடி சிறிது சிறிதாய் ஏற்பட்டாலும் உறுதியாகவிருந்தது. தமிழருடைய மதம் ஞாயத்தைத் தழுவியிருந்தது. ஆரியருடைய மதம் கற்பனையைத் தழுவியிருந்தது. பஞ்சாபில் ஆரியர் குடியேறிய காலம் முதல் வேதபாடல்களில் தமிழ்க்கொள்கைகள் நுழைந்திருக்கின்றன. இருக்கு வேதத்தில் பழைய தெய்-

வங்களும் வருணனும், இந்திரனும், (இரவும் பகலும் அல்லது இருண்டவானமும் ஒளியுடையவானமும்) காணப்படுகின்றனர். ஆரியர் இந்தியாவை அடைவதன்முன் வாழ்ந்த பூர்வ ஆரியநாட்டில் இத்தெய்வங்கள் வழிபடப்பட்டன. பழைய ஆரியர் வானத்தையும் அது அடையும் பல மாறுதல்களையும் பல தெய்வங்களையும் வழிபட்டனர். இந்தியாவை யடைந்த ஆரியர் தமிழரின் ஒரு தெய்வ வழிபாட்டைக் கண்டனர். கண்டு இந்திரனை எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனாகக் கொண்டனர். இந்திரன் எல்லாக் கடவுளருக்கும் தலைவனாகவும் கொள்ளப்பட்டான். இந்திரன் என்னுஞ் சொல் இறைவன் என்னுந் தமிழ்ச் சொல்லின் உச்சரிப்பு வேறுபாடாயிருக்கலாம்.

அவர்கள் தாங்கள் புதிதாகப் பழகிய பரதர் அல்லது தமிழரிடமிருந்து சூரியவணக்கத்தையும் கைக்கொண்டனர். சூரிய வணக்கத்துக்குரிய காயத்திரிப்பாடல்களைச் செய்தவர்கள் பரதரில் விசேடமானவர்கள், எனப்பட்ட விசுவாமித்திரர்களே. பஞ்சாபிலுள்ள 'மல்ரன்' (Maltran) என்னும் நகரில் சூரியனுக்குப் பழைய கோயிலொன்று இருந்ததெனை அறிகின்றோம். ஒளரங்கசீப் என்னும் மகமதிய மன்னனின் கட்டளையால் அவ்வாலயத்திருந்த தங்கச் சிலை உருக்கிக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. மல்ரன் என்னும் இடம் மல்லர் அல்லது மள்ளர் வாழ் இடமாயிருந்தது. இந்தியாவின் மேற்குப்புறத்தில் மள்ளர் பிரதானமான சாதியாராவர். தமிழரின் ஒரு பிரிவினராகிய இவர்கள் மல்ரன், மர்வ மல்வ என்னும் எல்லைக்குட்பட்ட நாடுகளிலும் இராசபுத்தானாவிலும் காணப்பட்டனர். பள்ள என்பது மள்ள என்பதன் உச்சரிப்பு வேறுபாடு. சௌராஷ்டிரத்தில் வாழும் சாதியினருக்கு

இப்பெயர் வழங்கும். அங்கு சூரிய வழிபாடும் அவ்வழி பாட்டுக்குரிய பலகோயில்களு மிருந்தன.

ஆதிகாலந் தொட்டுத் தமிழருக்கிடையில் சிவ வணக்கத்தைப் போலவே சூரிய வணக்கமும் இருந்தது. தத்துவ ஞானத்தைப் பெறுவதன்முன் அவர்கள் சூரியனையே வணங்கினார்கள் எனக் கூறலாம். எலலம் அல்லது அக் காட்டிலுள்ள கட்மிரு (Cadmira) என்னுமிடம் தமிழரின் குடியேற்ற நாடாகும். பேபெல் (Babel) என்னும் இடம் சூரியன் கோயிலுக்குப் பேர்போனது. பேபெல் என்பதற்குக் கடவுளின் வாயில் என்பது பொருள். ஆகவே கட்மீரா என்னும் நகரம் பேபெல் என்னும் பெயரைப் பெற்றதோடு பேபெல் என்னும் கோயிற் பெயரிலிருந்து, எல்லம், பபிலோன் என்னும் பெயரைப் பெற்றது மேல்நாட்டறிஞர் கட்மீரா என்னும் பெயர் துரானிய உற்பத்திக்குரியதென்றும், பேபெல் செமட்டிய உற்பத்திக்குரியதென்றுங் கூறுகின்றனர். ஆனல் பேபெல் என்னும் பொருளே கட்மீரா என்பதற்கும் என்று அவர் கூறுகின்றனர். அவர்கள் இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருள் கொண்டாலும் அவற்றின் உற்பத்தியைக் கூறும் முறையில் பிழை விடுகின்றனர். கட்மீரா என்பது கதிரவம் என்னும் தமிழ்ச் சொல்லின் உச்சரிப்பு வேறுபாடு எனக் கூறலாம், பேபெல் என்பது பகல் என்னும் அடியாகத் தோன்றியது. வாய் என்பது வாயிலை உணர்த்தும். ஆகவே பகல்+வாய் சூரியனின் வாயில் என்னும் பொருளைத்தரும் 'பேபெல்' என உச்சரிப்பு வேறுபாட்டால் திரிபடைந்தது.

தமிழர் இரண்டு சாதியராகப் பிரிவதற்குச் சமயமே காரணமா யிருந்ததெனத் தெரிகிறது. தங்கள் உற்பத்தித் தானத்தினின்றும் பிரிந்துவந்து தென்னிந்தியாவிற் றங்கி

ஞோர் சிவவழிபாட்டினர். வட இந்தியாவிற் றங்கிஞோர் சூரிய வழிபாட்டினர். தெற்கே இருந்து அகத்தியர் வடக்கே சென்று காசியில் அல்லது வாரண வாசியில் சைவ சமயத்தைப்பரப்பும் வரையும் வடக்கே சூரிய மதமே யிருந்தது. ஐரோப்பாவிற் போலச் சமயம் தெற்கிலிருந்து மேலே பரவிற்று. வடக்குப் பிரிவினருள் மதுரை பாஞ் சாலம் குரு முதலிய நாடுகளிலிருந்தவர்கள் சிவ வணக்கத் தைக் கைக்கொண்டனர். ஆற்றின் மறு கரையிலிருந்தவர் கள் பழைய கொள்கையுடன் வாழ்ந்தனர். சூரியனை வணங் கிஞோர் சூரிய வமிசத்தினர் எனப்பட்டனர். சிவனை வணங் கிஞோர் சந்திர வமிசத்தினர் எனப்பட்டனர். சிவபெருமான் முடியிற் சூடியிருக்கும் பிறை தமிழரைக் குறிப்பதோடு அதைச் சூடுவதால் அவர் தனது மக்களைக் காப்பாற்றுகின் றனர் என்பதையும் விளக்குகின்றது. இவர்கள் இருபிரி வினரா யிருந்தபோதும், அவர்கள் மனுவின் சந்ததியாகிய பொது உற்பத்திக்குரியவர்கள் என்னும் பழைய வரலாற்றை மறந்து விடவில்லை, கன்னபரம்பரைக்கதைகள் பல வற் றைத் தொகுத்துக் கூறும் புராணங்கள் மனுவென்னும் திராவிட அரசனைப் பற்றிக்கூறுகின்றன. சந்திர வமிசம் பழமை தொட்டுச் சூரிய வமிசத்திலும் பார்க்கப் பெருமை பெற்று விளங்கிற்று. இருபிரிவினரும் கொள்கையில் மாறுபட்டபோதும் ஒரு கடவுள் வணக்கமுடையவரா யிருந்தனர்.

தமிழரின் ஒரு தெய்வ வழிபாட்டைப் பார்த்து ஆரியர் சிருட்டித்த இந்திரன், தமிழர் கூறும் எல்லாம் வல்ல, எங் கும் நிறைந்த கடவுளோடு ஒப்பிட முடியாமலிருந்தமையின் அவர்கள் அதிதி என்னும் பிறிதொரு தெய்வத்தை உண்டு பண்ணினர். இத்தெய்வமும் முதன்மை எய்தியதாக இருக்கு வேத பாடலிற் சொல்லப்படவில்லை. அதிதி

என்பதற்குப் பிரிக்கப்படாதது, முடிவில்லாதது, என்று முள்ளது என்னும் பொருள் வேதத்திற் சொல்லப்படுகின்றது. இந்திரன் வருணன் மித்திரன் சூரியன் ஆதியோர் முடிவில்லாத சத்தியாகிய தாயின் புதல்வர்களென்றும், ஆதித்தர்கள் என்றும் சொல்லப்பட்டனர். அதிதியோடு ஒப்பிடத் தக்க கடவுளர் மற்றைய பழைய ஆரிய வகுப்பின ரிடையே காணப்படவில்லை. இப்பெயர் இந்திய நாட்டிற் றோன்றிய தென்பதற்கு அறிகுறியாக அப் பெயரில் கடவுள் என்னும் சொல்லின் பொருள் தொனிக்கின்றது. கடவுளைத் தாய் அவன், அவள், அது என வழங்கும் முறை தமிழர்களுக்கு மாத்திரம் உரிய தொன்றாகும். வேதங்களில் இவ்வகையான புதிய வழக்குகள் காணப்படுகின்றன. இது இரண்டு சாதியார் ஒருமித்துக் கலந்தமையால் ஏற்பட்டது. இப்பொருள்பற்றி ஐரோப்பிய ஆசிரியர்கள் வேண்டியளவும் எழுதியிருக்கின்றனர். கடவுள், படைத்தல் காத்தல் அழித்தலாகிய இறைவனின் முழு முதற் றன்மை, மறுபிறப்பு, வினைப்பயன் முதலிய கொள்கைகளை ஆரியர் அறியாரென்றும், அவற்றையெல்லாம் பிறரிடமிருந்து அறிந்திருக்கிறார்களென்றும் அவ்வாசிரியர்கள் கூறியிருக்கின்றனர். இதை நாம் ஆமோதிக்கின்றோம். ஆரியர் பூர்வ குடிகளோடு கலந்தபின் தமது பழைய மதத்தையும் நாகரிகத்தையும் கைவிட்டுப், பூர்வ குடிகளுக்குரிய கொள்கைகளைப் பின் பற்றினார்களென்று முன் விளக்கியுள்ளோம். இந்து ஆரியருக்கும் மற்ற ஆரியருக்குமுள்ள சமயத் தொடர்பு அறியமுடியாமலிருப்பது ஆச்சரியப்படத் தக்கதன்று.

ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குவது போலக் கடவுளுக்குச் சிலவற்றைக் கொடுத்துப் பிரதி உபகாரமாகச் சிலவற்றைக் கேட்பதாகிய வழிபாட்டு முறையையே ஆரி

யர் அறிந்திருக்கின்றனர். அவர் கடவுள், உயிர் என்பவற்றின் தத்துவங்களை அறியவில்லை. அவர், இயற்றிப் போந்த கிரியைகளால் இவற்றை அறிதல் முடிவதன்று. தமிழரின் ஞானம் உயர்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாதலின் அசைவில்லாதிருந்தது. இராசபுத்தானத்தில் வாழ்ந்த ஆரியர் தமிழ் மதத்தைத் தழுவி அதன் வளர்ச்சிக்கு அதிகம் முயன்றிருக்கின்றனர். கி. மு. 1000-க்கும் 200-க்கு மிடையிலுள்ள சூத்திர காலத்து பல சூத்திர இலக்கியங்களை அவர்கள் செய்தனர். இராசபுத்திரரின் அதிகாரத்தின் கீழ் பிராமணர் மிகுந்த ஆதிக்கம் பெற்றனர். திருத்தம் என்னும் பெயருடன் இவர்கள் பல கேடுகளைச் செய்தனர். குருக்கள்மாரின் அதிகாரத்தால் பலநற்கருமங்கள் விலக்கப்பட்டன. புராணமதம் ஆரம்பித்தது. புதிய சத்திரியராகிய இராசபுத்திரர் நிலை நாட்டிய புராணமதம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பமாயிற்று. முற்காலத்திற் சத்திரியர் பிராமணரிலும் மேலானவர்களாகக் கொள்ளப்பட்டனர். பிராமணர், சத்திரியரின் மேற் பார்வையின் கீழ் பொருளுக்காக யாகங்களை நடத்தினர். இக் கிரியைகளைச் செய்வதற்காக அவர்கள் மந்திரங்களையும் பாடல்களையும் மனப்பாடஞ் செய்தனர். அநேகர் அம்மந்திரங்களுடையவும் பாடல்களுடையவும் பொருளை அறியார். கல்வி, சத்திரியனுக்கு உரியதாயிருந்தது. சாமானிய பிராமணனிலும் பார்க்கச் சத்திரியன் கல்வியறிவுடையவனாயிருந்தான். சமய உண்மைகளும் ஞானங்களும் சத்திரியராகிய இராசாயனரால் வெளியிடப்பட்டன.

படை எடுத்து வந்தவர்களாகிய இராச புத்திரர் பிற்காலத்தில் இந்தியாவுக்குத் தலைவராயினர். இவர்களுக்குப் பழைய சரித்திரமாவது, சத்திரியருக்குரிய சரித்திரப்

பெருமையாவது இல்லை. இவர்கள் பிராமணரைத் தமக்கு மேலாகக் கொண்டனர்; தாம் சத்திரியர் என்று அழைக்கப்படும் புகழை விரும்பி இராச்சியங்களைப் பெரிதாக்கினர். பிராமணர் தாம் மேல் என்பதை எல்லா விடங்களிலும் நாட்ட முடியவில்லை. வட இந்தியாவில் தங்கள் முதன்மையை நாட்டுவதிலும் நூல்களைத் தம் எண்ணப்படி கையாளுவதிலும் அவர்களுக்கு வில்லங்கம் ஏற்படவில்லை. தென் இந்தியாவில் இவ்வாறிருக்கவில்லை. அங்கு கி. பி. 10-ம் நூற்றாண்டுவரையில் பிராமணர் கீழாகவே கருதப்பட்டனர். ஆகவே அவர்களுடைய வாழ்க்கை சிறப்படையவில்லை. இன்றும் அவர்களைக் குரவர்களாகத் தென்னிந்தியர் ஏற்றுக்கொள்வதில்லை. கி. பி. 8-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டு வரையுமுள்ள காலம் சரித்திரத்தின் இருட்காலமாகும். இராசபுத்திரர் பழைய இராச்சியங்களை வென்று கைப்பற்றியபோது ஒவ்வொரு (Caste) சாதியினரும் முதன்மைக்காகப் போராடினர். இராச புத்திர அரசரின் துணையைக் கொண்டு பிராமணர், சமஸ்தானங்களிற் குருக்களாக அமர்ந்தனர். இராச்சிய சம்பந்தமான கலகங்களெல்லாம் சமயத்தின் பெயரால் நடந்தன. இக்கலகங்கள் நாட்டின் நன்மைகளைப் பலவகையிற் கெடுத்தன. இக்காலத்தில் தமது பெருமையை நாட்டுவதற்குப் புராணங்கள் பிராமணரால் எழுதப்பட்டன. வட இந்தியாவிற் செய்தது போலவே தென்னிந்தியாவிலும் தமக்கு இடையூறு எனக் கண்ட நூல்களை இனி ஒரு போதும் உலவாதபடி அழித்தனர்; மாற்றியும் கூட்டியும் திருத்தியும் எழுதினர். பிராமணரும் பிறரும் முதன்மைக்காகப் போராடிய காலத்துத் தோன்றிய பாடல்கள் பல தமிழிற் காணப்படுகின்றன. சிவவாக்கியர் கொங்கணர் முதலானோர் ஒரு தெய்வக் கொள்கையை வற்புறுத்தியும் பிராமண

ருடைய பல தெய்வக் கொள்கையை மறுத்தும் பாடல்கள் செய்தனர்.

இவ்வாறு தமிழரின் வலிகுன்றிய காலத்துப் பழைய தமிழ் முனிவர்களால் தீது என ஒதுக்கப்பட்ட சாதிக் கோட்பாடு தலை எடுத்தது. சாதிப் பிரிவினையால் தமிழ்ச் சாதியின் வளர்ச்சி குன்றிற்று. இது பிராமணரின் ஆதிக்கம் மேற்பட்ட புராண காலத்தில் ஆரம்பித்தது. தமிழ் நாட்டில் ஒழுக்கமும் தொழிலும் பற்றிச் சில பிரிவுகள் தோன்றி யிருந்தபோதும் எல்லோருக்கிடையிலும் தின்பனவும், மகட்கொடை முதலியனவும் நின்று விடவில்லை. அந்தண மரபினராகிய சுந்தரர், பரவை சங்கிலியார் என்னும் இரு தாழ்ந்தவகுப்புப் பெண்களை மணந்ததும், வேளாளராகிய அப்பர் அடிகளை அந்தணராகிய அப்பூதி அடிகள் உடன் வைத்து உண்டதும் போதிய சான்றுகளாம். 10-ம் நூற்றாண்டு வரையில் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்குப் போதிய பிரமாணங்களுண்டு. 13-ம் நூற்றாண்டில் அந்தணராகிய அருணந்தி சிவாசாரியார் வேளாளராகிய மெய்கண்ட தேவரிடத்திற் தீட்சை பெற்றார். அந்தணராகிய உமாபதி சிவாச்சாரியார் வேளாளராகிய மறைஞான சம்பந்தர் என்னும் குருவின் உண்ட சேடத்தை அருந்தினர்.

அக்காலத்து ஒவ்வொருவனதும் விலை மதிப்புக்குரிய செல்வம் சமயமும் கல்வியுமாக விருந்தது. எல்லா வகுப்பினரும் சாதிபேதமின்றி ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் மூர்த்திகளுக்கருகிற்றடை யின்றிச் சென்று வணங்கினர். அறுபத்துமூவர் எனச் சைவர்கள் போற்றும் அடியார்கள் பலசாதிகளைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். “ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை

வார் சடைக்கரந்தார்க் கன்பராகில்—அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

பிற்கால அரசரால் பிராமணருக்குப் பெருமை ஏற்பட்டாலும் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. பிராமணர் நடந்துகொள்ளும் முறையை மற்றவர்கள் விரும்பவில்லை. ஆகவே அவர்கள் பிராமணரைத் தம்மினின்றும் நீக்கினர். மற்றவர்கள் எல்லோரும் வீடுகளிற்கூடி இருந்து விருந்து கொண்டாடினர். புதிதாகக் கிடைத்த மதிப்பைப் பாதுகாப்பதற்காகப் பிராமணரும் மற்றவர்களின் தொடர்பைவிட்டனர். இதுவே தென்னிந்தியாவில் முதன்முறையாகத் தோன்றிய சாதிப் பிரிவாகும். தென்னிந்திய பிராமணர் தமிழரென்றே முன்னோரிடத்திற் கூறியிருக்கின்றோம். வட இந்தியப் பிராமணருக்கும் தமிழருக்கும் சில சந்ததிகள் தோன்றியிருக்கலாம். கால கதியில் பகைமை ஆற்றுப்போனாலும் இப்பொழுதும் மாறுன நிலைமையே இருந்து வருகின்றது. மற்றவர்களுக்கும் இவர்களுக்குமிடையில் தின்பனவு உண்பனவு பெண்கோடல் முதலியன இன்றும் நடைபெறுவதில்லை. உணவும் தண்ணீரும் கொடுக்க மறுப்பது சாதிப் பிரட்டத்துக்கு அறிகுறியாகும். இவ்வுண்மை மறக்கப்பட்டு, அவை உயர்ந்த சாதிக்குரிய அறிகுறிகள் என்று தவருகக் கருதப்படுகின்றன. கம்மாளர், பிராமணர் வீடுகளில் உண்பதில்லை; இதனுல் அவர்கள் தாம் பிராமணரிலும் மேல் எனக் கருதுகின்றனர். பிராமணன் வீட்டிலும் வேளாளன் வீட்டிலும் உணவு கொள்ளும் வண்ணுன், கம்மாளன் வீட்டில் உண வருந்த மறுக்கிருன். இவை யெல்லாம் அன்னியருடைய பார்வைக்கு ஆச்சரியமாகத் தோன்றும். தமிழ்நாட்டில் ஒவ்வொருவனும் தனது

சாதியைப் பற்றிப் பெருமை பாராட்டுகின்றான். பறையன் கூடத்தனது குலத்தைப் பெருமை பாராட்டி "பார்ப்பானுக்கு மூப்பன் பறையன் கேட்பாரின்றிக் கீழ்ச்சாதியானேன்" என்னும் முதுமொழியை எடுத்துக் கூறுகின்றான்.

சாதிப் போராட்டம் மூன்று நூற்றாண்டுகளாக நடந்தது. கொள்கைகள் எப்போதும் ஒரு மாதிரி இருப்பதில்லை. பிராமணரை ஆலயங்களினின்றும் நீக்கவும் அவர்களுடைய அதிகாரத்தைக் குறைக்கவும் முடியாமல் போகவே ஒவ்வொரு வகுப்பினரும் தமது சமயச் சடங்குகளை இயற்றுவதற்குத் தங்களுக்குள் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஒவ்வொருவரைக் குருக்களாகத் தெரிந்தெடுத்தனர்.

தென்னிந்திய சமயநிலையங்கள் ஒவ்வோர் குருவின் கீழ் இருந்தன. அக்குரு பிராமண வகுப்பைச் சேர்ந்தவராயிருப்பது அருமை. தென்னிந்தியரின் சமயக் கொள்கைகளை அறியாத மேல் நாட்டார் புராண மதமும் சங்கராச்சாரியாரின் மாயாவாதமுமே அவர்களுடைய சமயம் என்று எழுதுகின்றனர். இந்தியாவைக் குறித்து எழுதிய மேல் நாட்டு ஆசிரியர்கள் வட இந்தியாவில் இருந்தே எழுதியிருக்கின்றனர். பிராமணர்களிடமிருந்தே அவர்கள் நூல் எழுதுவதற்கு ஆதாரங்களைப் பெற்றிருக்கின்றனர். இன்னும் சங்கரர் சமக்கிருதத்தில் எழுதிய சமயக் கோட்பாடுகளை மாத்திரம் படித்து அவர்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். சங்கரர் தென் இந்தியாவிலிருந்த போதும் அவரது கொள்கையைத் தென்னிந்தியர் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரிற் பெரும்பாலோர், சித்தாந்த சைவர். அதோடு மாறுபட்ட சங்கரரும் அவர் கொள்கையும் தெற்கிற் கவனிக்கப் படாமையால் அவர் வடக்கே

சென்றார். அங்கு அவருடைய மதத்துக்குப் பெருமை அளிக்கப்பட்டது. இதனால் சங்கரர் செல்வதன் முன் வடக்கே உள்ளவர்கள் சிறந்த மதக்கொள்கை இல்லாம லிருந்தார்களென விளங்குகின்றது. சங்கரர் மதத்தைப்பற்றி ஆராய்ந்து எழுதிய மேல் நாட்டார் இந்தியாவிற் கவனிக்கக்கூடிய மதக்கொள்கை இது ஒன்று மாத்திரம் எனக் கருதினர். இதனிலும் மேலான மதக்கொள்கை ஒன்று தெற்கே உண்டு என்பதை மேல்நாட்டவர்கள் இப்பொழுது தான் உணர ஆரம்பித் திருக்கின்றனர். தென்னிந்தியரின் சிவமதம் அந்நாட்டுக்கே சொந்தமானது. அதன் கொள்கைகள் தமிழ் மதத்தைப் பின்பற்றியன. சாத்திரமும் சமயமும் ஒன்றோடு ஒன்று அணைந்து சென்றன. சங்கராச்சாரியர் தமது மதக்கொள்கைகளை வடக்கே பரப்புவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன், அகத்தியர் காசியில் (வாரணவாசி) பரப்பியதும் பழைய முனிவர்களால் ஆதரிக்கப்பட்டது மாகிய சமயமும் இதுவே. இச்சமய உண்மைகள் ஆகமங்களென்னும் சைவ நூல்களிற் பொதிந்து கிடக்கின்றன. சமக்கிருதத்தில் மொழிபெயர்க்கப்படாத ஆகமங்கள் அழிக்கப்பட்டன. சமக்கிருத மொழிபெயர்ப்புகள் மூலத்தைச் சரியாகப் பின் பற்றிச் செய்யப்பட்டனவோ என்பது சந்தேகத்துக்கு இடம். பிற்காலத்திற் புராணமெழுதியவர்கள் ஆகமம் இருபத்தெட்டெனக் கூறியிருக்கின்றனர். புராணங்களுக்குத் தலைமையான ஸ்கந்தத்தின் ஒரு பகுதியான சூத சங்கிதை ஆகமங்களின் பெயர்களை முதலிற்கூறி அவற்றின் ஆக்கியோன் ஈசுவரன் என்று கூறுகின்றது. அது புராணங்களை மனிதர் செய்தார்கள் என்றும் குறிப்பிடுகின்றது. ஆகமங்கள் சரித்திரகாலத்துக்கு முற்பட்ட பழமையுடையன வென்பது உண்மை. அவை இருக்கு வேதத்தை ஒத்த பழமையுடையன அல்லது உபநிடதங்களுக்கு முற்பட்

டன. ஆரியர் தமிழ் மதத்தைப் பின்பற்றியபோது எழுதப் பட்ட உபநிடதங்களில் ஆகம உண்மைகள் காணப்படு கின்றன.

சிவன் தமிழரது கடவுள் என எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். சிவமதம் அல்லது தமிழ் மதம் தமிழருக் குரியதெனை ஒப்புக்கொண்டால், ஆகமங்கள் தமிழரால் தமது மொழியில் எழுதிய நூல்கள் என்று ஒப்புக்கொள்ள ஏன் பின்னிற்கவேண்டும். மதசம்பந்தமான எல்லாத் தமிழ் நூல்களும் ஆகமங்களையே ஆதாரமாகக் கொண்டன. மத இலக்கியங்கள் மாத்திரமல்ல, பரதநாட்டில் தோன்றிய சம யக் கொள்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் இத் தமிழ் ஆகமங்களிற்றுணுண்டு. திருமூலர், தமது திருமந்திரம், ஆக மங்களின் சாரம் எனக் கூறுகின்றனர். இவர் கி. பி. ஐந் தாம் நூற்றூண்டில் விளங்கியவரென நம்பப்படுகின்றது. இக் காலம் ஸ்கந்தத்துக்கு முற்பட்டது. ஸ்கந்த புராணத்துக் குச் செய்தது போலவே, பின்வந்தவர்கள் திருமந்திரத் திலும் பலவற்றைச் சேர்த்தும் திருத்தியும் மாற்றியும் இருத்தல் கூடுமென்று கருத இடமுண்டு. திருமந்திரத் தாலும் புராணங்களாலும், புராணகாலம் மட்டும் ஆகமங் கள் இருந்தன என்று கருத இடமுண்டு. புராண மதத்தில் நம்பிக்கை பரவத் தொடங்குதலும், அக்கொள்கைகளுக்கு மாறுயிருந்த ஆகமங்கள் இறந்தனபோலும்.

மேல்நாட்டாசிரியர்கள் ஸ்கந்தம் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டில் எழுதப்பட்ட நூலெனக் கூறுகின்றனர். பேராசிரியர் பண்டால் (Prof Bandall) கி. பி. 6-ம் நூற் றூண்டில் எழுதப்பட்ட பிரதி ஒன்று தமக்கு நேபாளத் திற் கிடைத்ததெனை அறிவித்திருக்கின்றூர். இதனுல் புரா ணங்கள் கி. பி. 6-ம் நூற்றூண்டில் இருந்தன என்பதிற் சந்

தேகமில்லை. தென்னிந்திய ஆலயங்களைப் பற்றியும் தென்னிந்திய சமயக் கொள்கைகளைப்பற்றியும் புராணங்கள் கூறுகின்றமையின் அவை தென்னிந்தியாவில் எழுதப்பட்டனவே. இவை புராணம் என்னும் பெயர் பெற்று வடக்கே செல்ல இரண்டு நூற்றாண்டுகளாவது பிடித்திருக்கும். ஆகவே புராணங்கள் கி. பி. நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்கள் எனக் கூறுதல் நியாயமாகும். அவை ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு வரையும் பலரால் எழுதிச் சேர்க்கப்பட்ட பலவற்றைக்கொண்டு பெருப்பிக்கப்பட்டனவாகும். நேபாளத்திற் காணப்பட்ட புராணம் சங்கராச்சாரியரால் எழுதப்பட்டதாகுமெனக் கருதுகின்றேம். டெலாங்(Mr. Telang) என்னும் ஆசிரியர், சங்கராச்சாரியர் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்தாரென்பதற்குப் பல ஆதாரங்கள் காட்டியிருக்கின்றனர்.* கி பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஹர்சவர்தன என்னும் நேபாள அரசன் சங்கராசாரியரின் மாணவனானான், இவன் தன் மகனுக்குச் சங்கரவர்தான என்று பெயரிட்டான். சிவ புராணங்களும் ஸ்கந்த புராணமும் ஆகமங்களை விட ஸ்மிருதிப் பிரமாணங்களைப் புகழ்ந்து ஆரிய வேதங்களுக்கு முதன்மை கொடுக்கின்றன. புராணங்களின் பெயரால் இவ்வாறு கூறும் பகுதிகள் சங்கராச்சாரியரால் அல்லது அவர் மாணவராற் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும். சங்கராச்சாரியரும் அவர் மாணவரும் சைவசமயத்தவராயினும் அவர்கள் ஸ்மிருதிகளைப் பிரமாணமாகக் கொண்டனர். அவர்கள் சாதனை ஆகமங்களுக்கு மாறாகவிருந்தது. ஆகமங்களைக் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கும் வேதங்களை மேல் நிலையிலுள்ளவர்களுக்குமாகக் கடவுள் அருளிச்செய்தாரென அவர்கள் நம்பினார்கள்.

---

* Indian antiquary Vol XIII P. 95.

ஆகமக் கொள்கையாகிய தமிழ் மதத்துக்கும் வேதக் கொள்கையாகிய ஆரிய மதத்துக்கும் போராட்டம் இருந்த தெனப் புராணங்களைக் கொண்டு அறியலாம். இவ்விரண்டையும் சந்துபடுத்தவே புராணங்கள் எழுதப்பட்டன. புராணங்களை எழுதினோர் ஸ்மார்த்தராகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஆகமங்களிற் பற்றில்லாமற் போனதோடு, கடவுளைப் பற்றிய உண்மைகளை வேதங்களில் மாத்திரம் காணலாமென்றும் ஆகமங்களாற் பெறப்படும் ஞானம் பயனற்றது என்றும் துணிவாக எழுதியிருக்கின்றனர். இவ்வாறு சூதசங்கிதையிலும் சொல்லப்படுகின்றது. இக்கொள்கை மறுக்கப்படாமலிருக்கவில்லை. "கடவுளைக் கண்டு கொண்டும் வேதங்கள் தேடுகின்றன" என்று தமிழ் முனிவர்கள் கூறினர்.

புராணக் கதைகள், புராணங்கள் எழுதப்பட்ட காலத்து நிகழ்ச்சிக ளல்ல. புராணம் என்பதற்குப் பழைமை யுடையது என்று பொருள். புராணங்களில் தமிழரின் பழைய கன்ன பரம்பரைக் கதைகள் காணப்படுகின்றன. தமிழருக்கும் அவரின் பிரிவினராகிய அக்கேடிய சாலடியர்களுக்கும் பொதுவா யுள்ளவற்றுள் சலப்பிரளயம், உலக சிருட்டி, உகம் முதலிய வரலாறுகள் சில. இக்கன்ன பரம்பரைக் கதைகளோடு கட்டுக் கதைகளும் பொய்க் கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

பிராமணரின் பெருமையை விளக்குவதற்காகவே புராணங்கள் எழுதப்பட்டன. கடவுள் விவாகஞ் செய்து மக்களைப் பெறுதல், ஐயனார் பிறத்தல், முருகனின் இயற்கைக்குமாறான பிறப்பு ஆதியவற்றைக் கூறுதல் புராணமெழுதியவர்களின் மனோபாவனையைப் பொறுத்ததாகும். புராணமெழுதியவர்கள் சில சமயங்களிற் கடவுளைப் பசாசு

களுக்கும் கீழான நிலையிற் கொண்டு வந்து விட்டிருக்கின்றனர்.

ஆரிய வேதங்களைச் சூத்திராவது பெண்களாவது தொடுதல் ஆகாது. சூத்திரர் அல்லது எந்த வருணத்துப் பெண்ணாவது வேதங்களை வாசிக்கவும் கேட்கவும் கூடாது. ஆகவே பெண்களும் சூத்திரரும் மோட்சத்துக்கு அருகரல்லர். தமிழருடைய சமயம் ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி எல்லோருக்கும் பொதுவானது. பிரதிபலனை விரும்பாத அன்பே தமிழர் சமயம். யாகங்கள் வாயிலாகக் கடவுளருடைய பசியையும் தாகத்தையும் தணித்தால் அக்கடவுளர் பிரதி உபகாரமாகச் சில நன்மைகளைப் புரிவார்கள் என்று ஆரியர் கருதினர். தமிழரின் கடவுள் அன்பே:—

> " அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
> அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே "

எனத் திருமூலர் கூறுகின்றனர்.

முற்காலச் சைவத்துக்கும் இக்காலச் சைவத்துக்கும் வெகுதூரம். தமிழர் ஆரியர் கலப்பும், பொய்யும் புளுகும் புனைந்து பிராமணராற் கட்டிய புராணங்களுமே இதற்குக் காரணம். முற்காலப் பிராமணர் உண்மை ஞானத்தில் ஆர்வங் கொண்டிருந்தனர். அவர்களின் பிற்சந்ததியார் ஞானமின்றிப் பிறப்புரிமையைத் தமது பெருமைக்கு அடிப்படை எனக்கொண்டனர். பிறர் குற்றங் காணுவார்கள் என்னும் பயத்தால் தம்முன்னோர் மறைத்து வைத்திருந்த வேதங்களையும் பிராமணங்களையும், பிற்போக்குடைய இவர்கள் ஆதரிப்பதோடு தாம் தமிழரிடம் கற்றுக்கொண்ட ஞானங்களும் வேதங்களில் உண்டு எனக் கூறினர்.

இடியையும் முழக்கத்தையும் உண்டு பண்ணும் பயங்கரமான உருத்திரனைச் சாந்தமும் அன்பும் வடிவாகிய சிவன் என்று கூறினர். பின் விட்டுணு பிரமா என்னும் இருவரோடும் சிவனைச் சமனாக வைத்து இழிவு படுத்தினர். இவ்வாறு மும்மூர்த்திகள் எனக்கொண்டு சிவனுக்கு அழித்தற்றொழிலை உரிமை யாக்கினர். சிவனே ஐந்து தொழில்களையும் செய்கின்றார் என்று * இன்றும் தமிழர் கொள்கின்றனர். அவர் மும் மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டவரென்று முனிவர்கள் பாடியிருக்கின்றனர்.

"அரியுமல்ல அரனுமல்ல அயனுமல்ல வப்புறம்
கருமை வெண்மை செம்மை கடந்து நின்ற காரணன்
பெரிதுமல்ல சிறிதுமல்ல பெண்ணு மாணுமல்லவே
துரிதமுங்கடந்து நின்ற தூர தூரமே."

எனச் சிவவாக்கியர் கூறுகின்றனர்.

தமிழர் அன்பைக் கடவுளென்றனர். அன்பினின்றும் பிரிக்கவொண்ணாத அருளைச் சத்தி உமை அல்லது அம்மை என்றனர். உருத்திரனைச் சிவனெனக் கூறினது மல்லாமற் பயங்கரமான துர்க்கை அல்லது காளியைச் சிவனது மனைவியாகவும் புராணகாரர் எழுதிவைத்தனர். துர்க்கை, காளி முதலிய பெயர்கள் அக்கினியின் ஏழுநாக்குகளுக்குப் பெயராக வேதங்களிற் சொல்லப்படுகின்றன. அங்கே சொல்லப்பட்ட உருத்திரன் அக்கினியாவான். அன்பும் அருளுமெனத் தமிழர் கொண்டமுறை புராணங்களுக்கும் பிராமணருக்கும் விரோதமாயிருந்தது. ஆகவே அவர்கள் சத்தியென்பது வேறு பெண்தெய்வமெனக் கருதினர். சிவபெருமானின் மனைவியைப்பற்றி அவர்கள் விநோதமான கதைகளைக் கற்பித்திருக்கின்றனர். "சதபதப்பிராம

* படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்.

ணத்தில் பார்வதி யாகஞ் செய்தாள் என்று சொல்லப்படு கின்றது. ஆனால் சிவனுடைய மனைவியும் தக்கனுடைய மகளுமாகிய பார்வதி யாகத்தில் உயிர் விட்டாளென்று புராணகாரர் சேர்த்து எழுதியிருக்கின்றனர். கேனோ உப நிடதத்தில் உமாஹய்மாவதி இந்திரனுக்குப் பிரமனுடைய தன்மையைக் கூறுகின்றார். இந்த உமா ஹய்மாவதி இமய மலையிற் பிறந்தாளென்று புராணங்கள் கூறுகின்றன. இவையெல்லாம் புராணகற்பனை.*

பழைய சித்தாந்த முறையாற் கடவுளை விளக்குவதற்கும் பிராமணருடைய புராண முறையாற் கடவுளை விளக்குவதற்கும் உள்ள தூரம் மிகப் பெரிது. கடவுள் 'அம்மை அப்பர்' என்னும் தன்மையரென்பது சித்தாந்தத்தின் துணிபு. புராணமதத்துக்கு முன் இதுவே தமிழர் கொள்கையாயிருந்தது. தமிழர்களின் மனம் உண்மை நெறியை நாடுவதா யிருந்தது. எல்லா உலகங்களும் கடவுளின் ஆணையால் நடைபெறுகின்றன வென்றும், அவை எல்லாம் அவரிடத்தில் ஒடுக்கம் என்றும் தன்னய மற்றிருத்தலினால் மோட்சம் கைகூடு மென்றும் மற்றவர்களுக்குத் தருமஞ் செய்தல் வேண்டு மென்றும் தமிழர்கள் நம்பினார்கள்.

ஆரியருடைய பிராமணங்கள் அல்லது பிற்காலப் புராணக் கொள்கைகள் தமிழருடைய நியாய முறையான கொள்கைகளைத் தமிழ் நாட்டினின்றும் அகற்ற முடியவில்லை. ஆரிய மதக் கலப்பினால் தமிழர் சமயம் நிலை குலைந்தது. அப்பொழுது புத்த சமயந் தோன்றி அக்காலத்துக் கேற்றவாறு பொய்யான கொள்கைகளை எதிர்த்தது. ஒரு ஆயிரம் வருடங்களுக்குப்பின் பிராமணர் அதை நெருப்

* Ancient India p. 651—R C Dutt.

பாலும் வாளாலும் போராலும் இந்தியாவினின்றும் துரத்தினர். இம்மதத்தை எதிர்த்த மதங்கள் சீவனைப் பெற்றன.

புராண மதந்தான் சரியான இந்துமதமென அயல் நாட்டவர்கள் நினைக்கின்றனர். அதில் தமிழருடைய கொள்கைகள் முற்றாக இருக்கின்றனவென்று கூறமுடியாது. இப் புராண மதத்தை முனிவர்கள் எதிர்த்தார்கள். ஆயினும் அறியாமையுடைய மக்களின் உள்ளத்தில புராணக் கொள்கைகள் பதிந்து விட்டன. பிராமண மதத்தினாற் கெடுதியுற்ற போதும் தென்னிந்திய ஞானம், சித்தாந்தம் என்னும் பெயரோடு இன்றும் வழங்குகின்றது.

சித்தாந்த சாத்திரம் மெய்கண்ட தேவரால் 13-ம் நூற்றாண்டிற் செய்யப்பட்டது. அச்சாத்திர ஞானம் ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டது. இந்தியாவில் எவ்வகையான சமயந் தோன்றினும் அதற்கு அடிப்படையாயுள்ளது தமிழ் ஞானத்தைக்கூறும் ஆகமமே. ஆகமங்கள், தமிழ் ஞானத்தையும் தெக்கணாமூர்த்தியாயிருந்து தம்மை அருளிச்செய்த கடவுளைப் பற்றியும் கூறுகின்றன. தெக்கணாமூர்த்தி என்பதற்குத் தென் தேசத்துக் கடவுள் என்பது பொருள். ஆகமங்களைக் கடவுள் மகேந்திரமலையிலிருந்து சொன்னார் என்று ஐதீகம் உண்டு. மகேந்திரமலை, திருநெல்வேலிக்கும் திருவாங்கூருக்கு மிடையில் மேற்குக் காறாடிமலையிலுள்ள பொதியமலையிலுள்ளது. மூல ஆகமங்களில்லாமையால் இது சம்பந்தமாக அதிகம் கூறமுடியாமலிருக்கின்றது. இப்போது கிடைத்திருக்கும் விபரங்களால் ஆகமங்கள் பல இருந்தன வென்றும் அவற்றுள் இருபத்தெட்டுப் பிரதானமானவை என்றும் அறிந்து கொள்ளல் ஆகும். அவை எல்லாம் காலத்தின் வாய்ப் பட்டு மடிந்தன. இரண்டொரு சைவ ஆகமங்களைத் தவிர

வேறு கிடைக்கவில்லை. அவ்வொன்று இரண்டும் சமக்கிருத மொழி பெயர்ப்பாயுள்ளன. மற்றவை மொழி பெயர்க்கப்படாமலே இறந்தன. பலநூற்றாண்டுகளாகச் சைவத்தை எதிர்த்த மதமே கிடையாது. சரித்திர காலத்துக்கு முன்தொட்டு ஆகமஞானத்தைத் தழுவிய மதமே இந்தியாவில் இருந்தது. புத்த சைன மதங்கள் தோன்றித் தெற்கே சென்று சைவசமயத்தை நசுக்கத் தொடங்கினதினாலும், புராண இலக்கியங்களாலும் உண்மையான சைவம் தனது பரிசுத்த நிலையை இழந்து கட்டுக் கதை அளவில் நிலவத் தொடங்கிற்று. அப்போது தமிழருக்குத் தமது மதக் கொள்கைகளை நாட்டிப் பிற மதங்களைக் களைவது அவசியமாயிற்று. அப்பொழுது ஆகமஞானங்கள் திரட்டப்பட்டுச் சித்தாந்த நூல்கள் எழுதப்பட்டன. இவற்றின் தொகை பதினநாலு. அவற்றில் பிற்காலத்திய பல சமக்கிருத சொற்கள் காணப்படுகினறன.

புராண கால ஆரம்பத்திலிருந்து சமக்கிருதத்துக்கு மேன்மை ஏற்பட்டது. இம்மேம்பாட்டால் சமக்கிருதம் கடவுட்டன்மை உள்ளதென்னும் மூடக்கொள்கையும் எழுந்தது. அம்மொழியில் எழுதப்பட்ட வேதங்களில் எல்லாவகையான ஞானமும் உண்டென்னும் நம்பிக்கையும் ஏற்பட்டது. இடைக் காலத்தில் இலாத்தின் கிரீக் முதலிய மொழிகள் ஐரோப்பாவில் எப்படி மதிக்கப்பட்டனவோ அப்படியே வடமொழி, தமிழிலும் சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டது. கிரேக்க இலாத்தின் மொழிகளைப்போல வடமொழி சமய மொழியாகவும் வந்தது. தமிழ் ஞானத்துக்குச் சித்தாந்தம் என்னும் பெயர் இடப்பட்டது நூதனமன்று. சித்தாந்த சாத்திரத்தில் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மை கூறப்படுகின்றது. தமிழ

ருடைய ஞானமுதிர்ச்சியைத் தேவார திருவாசகங்களைக் கொண்டறியலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் விளங்கியவரென்று கருதப்படும் திருமூலர் இச்சாத்திர உண்மைகளைத் திருமந்திரத்தில் விளக்குகின்றார். திருமூலர் கூறுவது போலத் திருமந்திரம் ஆகமங்களின் சுருக்கமாகும். ஆகவே ஆகமங்கள் திருமூலர் திருமந்திரகாலத்தும் சித்தாந்த சாத்திரங்கள் செய்தவர்கள் காலத்தும் இருந்தனவென்று தெரிகிறது. பழைய தமிழர் சமயஞானத்தைக் கூறும் நூல்களின் தொகைகள் ஆகமங்களெனப்படும் அத்தகைய நூல்களை எழுதியவர்களின் பெயர் மறந்து விடப்பட்டன. மனிதர் பிழைவிடும் இயல்பினர் என்னும் எண்ணத்தினலேயே முன்னோர் அவை கடவுளால் அருளிச் செய்யப்பட்டன என்று கருதினர். வேத பாடல்களைச் செய்த ஒவ்வொரு முனிவரின் பெயரும் காணப்படுகின்றது.

வடக்கே வாழ்ந்த தமிழர் சூரியனை வணங்கினார்களென்றும் தெற்கே உள்ளவர்கள் சிவனை வணங்கினார்களென்றும், அகத்தியர் வடக்கே சென்று சைவத்தைப் பரப்பினரென்றும் முன் ஓரிடத்திற் கூறினேம். ஆகவே சைவத்தைப் போலவே ஆகமங்களும் தெற்கே மகேந்திரத்தில் தோன்றின என்று கருத இடமுண்டு. *

* திருவாசகத்திற் பல விடங்களில் ஆகமங்கள் மகேந்திரத்திற்றோன்றின என்று சொல்லப்படுகின்றது. "மன்னுமாமலை மகேந்திரவெற்பன்" "தென் பாண்டிநாட்டான்". மகேந்திரமலை மந்தரமலை எனவும்படும். அதற்குக் "குருவாய்" என்றும் பெயர். குருவாய்க்கு எதிர்கரையிலுள்ளது அலைவாய். இங்கு குமரன்கோட்டமிருக்கிறது. செந்தில், திருச்செந்தூரென அதற்கு மறுபெயர்கள்.

குருவாய் சிவனுக்கு இடமென்று கருத இடமுண்டு. இதனையே சமக்கிருத புராணகாரர் இமயமலைச்சிகரம் ஒன்றெனக்

வேதம் பசு என்றும் ஆகமம் அதன்பாலென்றும்சிலர் கூறுவதுண்டு. ஆராய்ச்சி முறையில் வேதமும் ஆகமமும் நேர் விரோதமுடையன வாய்க்காணப்படுகின்றன. வேதங்கள் பல தெய்வ இயற்கைப் பொருள் வணக்கங்களைக் கூறுகின்றன. ஆகமங்கள் ஒரே கடவுளை முழு முதலாகக் கொண்டு வழிபடும் முறையைக் கூறுகின்றன. ஆகமங்கள் வேதங்களுக்கு விரோதமானவையென்றும் ஆகமஞானம் வேத அறிவைவிட மிகமேலான தென்றும் எம். நாராயணசாமி ஐயர் கூறுகின்றனர்.

புராணங்கள் வேதங்களைப் புகழ்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. புராணங்கள் தமிழ்க் கொள்கைகள் சிலவற்றோடு வேதக் கொள்கைகளையும் கலந்து எழுதப்பட்ட நூல்களாகும் புதிய மக்களுக்கு வேதங்கள் ஆதாரமாயின. புராணப் போக்குக்கு ஆகமங்கள் இடங் கொடாமையால்அவர்கள் ஆகமங்களிலும் வேதங்களே பிரமாணமெனக் கூறினர். வேதங்களுக்கு முன் ஆகமங்களுண்டென்றும் உண்மை ஆராய்ச்சியாற் பெறப்படுதலின் வேதத்தினின்றும் ஆகமம் பிறந்ததென்னுங் கொள்கை பொய்யாகின்றது.யாகங்களைக் கூறும் ஆரியர் நூல்கள் இறந்தன. ஆலயவழிபாட்டைக்

கொண்டனர். மனுவின்பேழை தங்கியதாகச் சதபதம் பிராமாணம் கூறும் வடமலை பொதியில் அல்லது ஸ்ரீபருவதமென அறியக்கூடாமலிருக்கின்றது. தென்னாட்டுக் கதைகளை வடநாட்டார் பார்த்தெழுதிவிடத்துத் தென்னிந்தியாவில் நிகழ்ந்தவற்றை எல்லாம் வட நாட்டில் நிகழ்ந்தனவாக எழுதியிருக்கின்றனர்.

* " From the little I have seen of them they (the Agamas) seem to be opposed to the Vedas and almost aspire to arrogate to themselves position much superior."

கூறும் ஆகமங்கள் தமிழராலும் தமிழ் மதத்தைத் தழுவிய ஆரியராலும் கைக் கொள்ளப் பட்டன.

வேத பாடல்களில் ஆலயவழிபாடு கூறப்படவில்லை. ஆலயங்களும் ஆலயவழிபாடும் ஆரியருக்குரியவையல்ல. பழையநாள்தொட்டுக் கடவுளின் இருப்பிடமாகிய ஆலயங்களிருந்த தென்னிந்திய, அசீரிய, பபிலோனிய ஆலயங்களின் அமைப்பு ஒரே வகையாகக் காணப்படுகின்றன. தமிழரின் சரித்திரத்தை அறியாமையால் மேல் நாட்டாசிரியர்கள் தமிழர் கட்டிடமமைக்கும் முறையை அசீரிய பபிலோனியரிடம் கற்றார்கள் எனக் கூறினர். புத்த சமயத்துக்குப்பின் தான் தமிழர் கட்டிடமமைக்கும் முறையைப் பயின்றார்கள் என்னும் ஐரோப்பிய ஆசிரியர்களின் கூற்று முற்றும் பிழையானது. மாபாரதம் சிவாலயங்களைப்பற்றிக் கூறுகின்றது. அருச்சுனன் சிவபெருமானைக் கைலாயத்திற் சென்று வழிபட்டான். கைலாயமென்பது குருக்ஷேத்திரத்துக்குப் பக்கத்தில் ஓர் குன்றின்மேலுள்ள ஆலயமாகும். யுத்தகாலத்தில் ஓர் இரவில் அருச்சுனன் கிருட்டிணனோடு கைலாயத்துக்குப் போய்த் திரும்பிவந்தான் என்று சொல்லப் படுகின்றது. கைலாயம் என்பது கோயில் என்பதன் திரிபு ஆதல் கூடும்.

பிராமணர்களின் தமிழ் வெறுப்பு, தமிழ்மொழி குன்றுதற்கும் தமிழ் நூல்கள் பலவற்றின் அழிவுக்கும் ஏதுவாயிருந்தது. தமிழ் நாட்டின் பலபகுதியை வாய்ப்படுத்திக் கொண்ட கடல் பல நூல்களையுங்கொண்டது. கி. பி. 10-ம் நூற்றாண்டிற் பிராமணராலும் 14-ம் நூற்றாண்டில் மகமதியராலும் அநேகம் நூல்கள் அழிக்கப்பட்டன. "அரசரின் பரிபாலனத்தின் கீழ்த் தோன்றிய நூல்கள் காணப்படவில்லை. அந்நூல்கள் 14-ம் நூற்றாண்டில் மகமதியரால்

அழிக்கப்பட்டன" என்று வின்ஸ்லோ பாதிரியார் கூறியுள்ளார்.

"பிராமணர் தாம் அழிக்கமுடியாத நூல்களைச் சிதைவு படுத்தினர். வெள்ளத்தாலும் நெருப்பாலும் நேர்ந்த கொள்ளையில் இது மேலானது. தமிழ் நூல்களை எடுத்து சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துப் பல கேடுசெய்திருக்கின்றனர். பிழையான வழிகாட்டியிலும் வழி காட்டியில்லாமலிருப்பது நன்று என கோவர் (Gover) என்னும் ஆசிரியர் கூறுவர். முண்டகோப உபநிடதத்தில் "சிவன் என்னும் நாமத்தைக் கூறுகிறவன் புலையனாயினும் அவனோடு உண் இரு" என்று வரும் பகுதி மாக்ஸ் முல்லரின் மொழி பெயர்ப்பிற் காணப்படவில்லை என்று காசிவாசி செந்திநாதையர் கூறியிருக்கின்றனர். இவ்வாறே நூல்களில் மாற்றங்களும் இடைச் செருகல்களும் நுழைந்தன.

---

*

சில குறிப்புக்கள்

* "மொகஞ்சதரோ அரப்பா என்னும் இடங்களிற் கிடைத்த ஆயிரத்து எண்ணூறு பட்டையங்களிற் பொறிக்கப்பட்டுள்ள வைகளை வாசித்தபின், இவ்வாசிரியர், மத்திய தரைச் சாதியினரே இந்திய நாட்டில் வந்து குடியேறினார்கள் என்னும் கருத்துத் தவறான தென்றும், இந்திய மக்களே மத்தியதரை நாடுகளிற் சென்று குடியேறினார்கள் என்றும் துணிகின்றார்"

—ஹெரஸ் பாதிரியார்

§ "நாங்கள் எல்லாவற்றையும் ஆரிய அல்லது பிராமணக் கண்ணாடியைக்கொண்டு பார்ப்பதைத் தவிர்க்கவேண்டும். எழுதப்பட்டுள்ளன வெல்லாம் ஆரிய அச்சுக் கூடாக வந்துள்ளன. பிராமண எழுத்தாளர் பழைய நிகழ்ச்சிகளையும் குடும்ப உற்பத்திகளையும் பிறவற்றையும் மனம்போல எழுதியுள்ளார்கள். ஆகவே அவை பழங்கதை அளவில் மாத்திரம் நிலை பெறுகின்றன. ஆரியரல்லாத மக்களைப் பற்றிய செய்திகள் கூறாது விடப்பட்டுள்ளன அல்லது அவர்கள் இருபிறப்பினரால் வெல்லப்பட்ட அரக்கர், அல்லது மிலேச்சர் எனக் கூறப்பட்டுள்ளார்கள்.

—பாடின் பௌவெல்

---

* Journal of Indian History Vol. XII-P. 431.

§ At any rate we may be on our guard against ·king at everything through Aryan or Brahmanical ectacles.........that almost everything has passed .to written form has been cast in an Aryan mould. or real histary the Brahmanic writers never cared

வட இந்தியாவில் ஒருகாலத்தில் திராவிட சாதியினரே பரந்து வாழ்ந்தார்கள் என்பதற்குரிய சான்றுகள் உள்ளன.

‡ எச். ஆர். ஹால் என்பவர், செமித்தியரின் வருகைக்கு முன் பாபிலோனியாவின் நாகரிகத்தை முற்று வித்த சுமேரியர் திராவிடர்கள் எனக் கூறியுள்ளார்...திராவிடமொழிகள் சமக்கிருதத்தினின்றும் பிறந்தனவல்ல. பழமையைநோக்கிச் செல்லச் செல்லத் திராவிட இலக்கியங்களில் சமக்கிருதச் சொற்கள் அருகிக் காணப்படுகின்றன. கிரேக்க வாணிகரின் எழுத்துக்களைக்கொண்டு, திராவிடமொழிகளில் சென்ற இரண்டாயிர மாண்டுகளாக மாற்றமுண்டாக வில்லை என அறியலாம். இதற்குச் சான்று இன்னும் மிகப் பழங்காலத்திற் காணப்படுகின்றது. சாலமன் மயிலைக்குறிக்க அறிந்திருந்த பெயர் தமிழ்.

—எல். ஜே. றிச்சர்ட்ஸ்.

---

anything: early events and family origins invariably assume a mythic guise, and everything about non-Aryan race is either omitted or only noticed the conquest of the 'twice born' over the 'demons' and 'barbarians'.—The Indian village community P. 91. B. H. Baden Powell M.A. C.I.E.

‡ Side lights of Dravidian Problem.

F. J, Richards I.C.S. M.A. M.R.A.S. F.R.A.I.—Quarterly Journal ol Mythic Society Vol. 6. No. 3.

Printed at the Sri Magal Vilasam Press, G. T. Madras.